சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

கல்லிடை நகர் சாமிநாத கவிராயர் இயற்றிய

# பொதிகை நிகண்டு



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies



"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தமிழுக்குக் கொண்டுவர வேண்டும். இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

புரட்சித் தலைவி

அம்மா அவர்கள்

கல்லிடை நகர் சாமிநாத கவிராயர் அவர்கள்

இயற்றிய

# பொதிகை நிகண்டு

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்

தமிழ்த் தாய் 67 - வெளியீடு

பதிப்பாசிரியர்


முனைவர் **கோ.விசயராகவன்**

எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்.,பிஎச்.டி.

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# நூல் விவரக் குறிப்பு

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : பொதிகை நிகண்டு |
| நூல் ஆசிரியர் | : கல்லிடை நகர் சாமிநாத கவிராயர் அவர்கள் |
| வெளியீட்டாளரும் பதிப்புரிமையும் | : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை - 600 113. |
| தொலைபேசி எண் | : 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : 870 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : 2015 : முதற்பதிப்பு : |
| பயன்படுத்திய தாள் | : 16 கிகி டி.என்.பி.எல்.வெள்ளை |
| நூலின் அளவு | : 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : 11 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : 304 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : 1200 |
| விலை | : ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) |
| ISBN | : 978-93-85165-25-2 |
| அச்சகம் | : ராஜ் எண்டர்பிரைஸஸ்<br>திருவல்லிக்கேணி<br>சென்னை - 600 005. |

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பிஎச்.டி.
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை 600 113**

## அணிந்துரை

பழங்கால அரியநூல்களையும் சுவடிகளையும் பாதுகாக்கும் வகையில் 2014ஆம் ஆண்டு நிறுவனத்தில் 34 **இலட்சம் மதிப்பீட்டில் சுவடிகள் பாதுகாப்பு மய்யம் மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது.** அவ்வகையில் நாடெங்கினும் உள்ள அரிய நூல்களை, சுவடிகளைத் திரட்டும் பணி தொடங்கப்பட்டு, கண்டறியப்பட்டுள்ள நூல்களைத் தமிழ்த்தாய் 67 - பெருவிழா, பிப்ரவரி 2015இல் வெளியிடும் திட்டத்தின் கீழ், 1934 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள இந்நூல் இப்பொழுது மீட்டுருவாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்படுகிறது.

செந்தமிழ்மொழி இலக்கிய வளத்தால் இமயத்துக்கு மேலும் வளர்ந்துள்ளது. அதுமட்டுமன்று சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்து சொல்புதிது சுவைபுதிது பொருள்புதிது எனப் புகலும் அளவுக்கு சொல்வளம் மிகுந்த செழிப்புடையது. காலப்பழைமையும் கருத்துச் செறிவும் சிந்தைக்கு விருந்தாக அமைந்து அடிச்சொல்லும் வேர்ச்சொல்லும் பாடிக்களிக்கும் பல சொல்லும் அமைந்த சிறப்புடையது. அதனால் ஒரு சொல்லுக்குப் பலபொருளும் பல சொல்லுக்கு ஒரு பொருளும் ஏராளமாகப் பயின்றுள்ளன. இடத்தால், காலத்தால், சூழ்நிலையால், வாழ்க்கை நிலையால், பண்பாட்டுக் கலப்பால், பிறசமய வழக்கால், பிறமொழி வழக்கத்தால், சொல்லும் பொருளும் மிகப் பலவாய் விரிந்தன. அவற்றைப் பட்டியலிட்டு வரையறுத்து வகைப்படுத்தி உரைப்பதுதான் நிகண்டு. இன்றைய நிலையில் அதனை அகராதி என்கின்றனர். வேறு எம்மொழிக்கும் இல்லாத சிறப்பு யாதெனின் அது தமிழ் நிகண்டுகள் கூறும் தெய்வப்பெயர், மக்கட்பெயர், விலங்கின்பெயர், மரப்பெயர், இடப்பெயர், பல பொருட்பெயர், ஒலிப்பெயர், பெயர்ச்சொல், உரிச்சொல் என்பன போல் வகைப்படுத்தி உணர்த்தும் அற்புதம்.

அத்தகைய சிறப்புக்குரிய நிகண்டுகளில் ஒன்றே **பொதிகை நிகண்டு**. இது விருத்தப் பா தொகுதிகளாக முதல் பகுதியாகவும், அகர வரிசைப்படி இரண்டாம் தொகுதியாகவும் அமைந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைநகர் சாமிநாத கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டுள்ளது இந்தப் பொதிகை நிகண்டு. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் லெக்சிகன் பதிப்பாசிரியராக இருந்த எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்ளால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரிய நூல் ஒளியச்சு மூலம் மீண்டும் வலம் வருகின்றது.

தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினை எப்போதும் பாராட்டுவதில் முதன்மையானவர் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆவார். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி** அவர்களுக்கு நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம்** இ.ஆ.ப. அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் என் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

பொதிகை நிகண்டின் ஆசிரியராகிய சாமிநாத கவிராயரைக் குறித்து ஒரு சில செய்திகளே அறியக் கிடக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவைச் சார்ந்த அம்பாசமுத்திரந் தாலுகாவில் கல்லிடை நகரில் இவர் வாழ்ந்தவர். இந்நிகண்டு நூலேயன்றி ஐவகை இலக்கணங்களையும் உணர்த்தும் சாமிநாதம் எனப் பெயரிய நூலொன்றும் இவர் இயற்றியிருக்கின்றனர். சாமிநாதத்திற்கு விருத்தியுரை யொன்றும் உள்ளது. இவர் தனயராகிய சிவ சுப்பிரமணியக் கவிராயர் தாம் இயற்றிய பூவைப் புராணத்தைக் கொல்லம் 985-ம் ஆு-ல் (கி. பி. 1810) அரங்கேற்றியதாகக் கூறுகின்றார். ஆகவே இவரது காலம் சுமார் 150 ஆண்டுகளுக்குமுன்பாகும். பொதிகை நிகண்டின் ஏட்டுப் பிரதியொன்றில் '984-ம் ஆு தைமீ 8உ பிள்ளையன் தளவாய் வாசித்து வரும் ஏடு முற்றும்' எனக் காணப்படுகின்றது. அக்காலத்துத் தானே இப்பொதிகை நிகண்டு பிரசாரத்தில் வந்துள்ளமை அறியத் தக்கது.

1930-ல் யான் வெளியிட்ட நாம தீப நிகண்டின் பாயிரத்தினின்றும், அந்நூலாசிரியரின் தந்தையாகிய சாமிநாத கவிராயர் பொதிகை நிகண்டெனப் பெயரிய ஒரு சொற் பல்பெயர்த் தொகுதி நூலொன்று இயற்றியுள்ளாரென்று தெளிந்தேன். இந்நிகண்டின் கடிதப் பிரதியொன்றும், ஏட்டுப் பிரதியிரண்டும் எனது நண்பர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் சில வருடங்களுக்குமுன் அன்புடன் உதவினார்கள். இந்நிகண்டு நூற்பாவினால் இயன்றது.

பின்னர் ஆழ்வார் குறிச்சி திருவாளர் எம். பி. எஸ். துரைசாமி முதலியாரவர்கள் வேறு இரண்டு பிரதிகளை அனுப்பி யுதவினார்கள். இப்பிரதிகள் ஒரு சொற் பல் பெயர்த் தொகுதியேயன்றிப் பிற தொகுதிகளையும் உடையனவாயிருந்தன. சூடாமணி நிகண்டின் முறையே இவற்றில் மேற்கொள்ளப்பட்டது. தொகுதிகளெல்லாம் விருத்தயாப்பினால் இயன்றன. இயற்றியவர் முற்கூறிய சாமிநாத கவிராயரே. இரண்டு பிரதிகளும் மிக்க குறைப்பாடு உள்ளன. ஒன்றில் முதலாறு தொகுதிகளும், பிறிதொன்றில் முதலொன்பது தொகுதிகளும் இருந்தன. இந்நூலின் பூரணமான பிரதியொன்று பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பெரிதும் முயன்றேன். வெகுகாலம் வரை கிடைக்கவில்லை. முடிவில், நாகர் கோவில் வித்துவான் திரு. க. சுவாமிநாத ஆச்சாரியாரவர்கள் அவ்வூர் வாசியான சுப்பிரமணிய பண்டிதரிடமிருந்த ஓர் பிரதியைப் பெற்றுத் திருவனந்தபுரம் அரசர் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள் மூலமாய் அனுப்பினார்கள். இதன் கண்ணும் பதினோராவது தொகுதியில் ழகர வெதுகை வரையே காணப்பட்டது.

திருவாளர் நமச்சிவாய முதலியாரவர்கள் தந்த கடிதப் பிரதியைப் பெயர்த் தெழுதி யுதவிய நண்பர் திருவாளர் P. R. மீனாட்சி சுந்தர முதலியாரவர்கள். பெயர்த்தெழுதிய பிரதியைக் காலஞ்சென்ற திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் வீட்டிலிருந்து கிடைத்த ஓர் கடிதப் பிரதியோடு ஒப்பு நோக்கிக் கொண்டேன்.

சென்னையிலிருந்து பிரசுரிக்கப்படும் கலாநிலயப் பத்திரிகையில் இந்நூல் தொடர்ச்சியாய் வெளியிடப் பெற்றது.

சூடாமணி நிகண்டின் முறையை அனுசரித்து இயற்றிய நூலை முதற் பகுதியாகவும், நூற்பாவினால் இயன்ற ஒரு சொற் பல பெயர்த் தொகுதியை இரண்டாம் பகுதியாகவும், இப்பிரசுரத்தில் அமைத்துள்ளேன்.

இந்நூலை அச்சியற்றுதற்குப் பிரதிகள் முதலியன கொடுத்தும், பிறவாறும் உதவிபுரிந்த அன்பர்களனைவர்க்கும் எனது நன்றி யுரியதாகின்றது.

சென்னை
10—2—1934

S. வையாபுரிப் பிள்ளை,
தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்.

# தற்சிறப்புப் பாயிரம்

பூமாது புவிமாது போற்றுமுமை மாதும் [தோன்
பொன்மலைவில் லியுமீன்ற கைம்மலையின் றுதித்
மாமாது குறமாது மணவாளன் செந்தூர்
வடிவேல னடிமலரை மனத்திடத்து ணினைத்தே
கோமாது விரிந்தனைய பலநிகண்டும் பார்த்துக்
கும்பன்மகிழ் பொதிகைநிகண் டென்றொருநூல்
நாமாது புகழ்பொருநா நதிசூழ்கல் லிடையூர் [பகர்ந்தான்
நதிகுலன் சுவாமிகவி ராசசங்க நிதியே.

தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி—௩

கல்லிடை நகர்

சாமிநாத கவிராயர்

இயற்றிய

# பொதிகை நிகண்டு

சென்னை சர்வகலாசாலை

தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்

S. வையாபுரிப் பிள்ளை, B. A., B. L.,

பரிசோதித்தது.

காபிரைட்] 1934 [விலை ரூ. 1-4-0

# பொதிகை நிகண்டு

## காப்பு

பொன்பூத்த வெள்ளிப் பொருப்பனும ளேன்மணியு
முன்பூத்த வேழ முகத்தானே - யின்பூத்த
பூவணியல் போலப் பொதிகைநிகண் டைப்பாடப்
பாவணிய லீய்ந்துகாப் பான்.

## நூல்

## I. தெய்வப் பெயர்த் தொகுதி

சங்கர னுமாபதி பிரானம்பன் யோகி
 சயம்பிறை சதாசிவன்கங் காளன்மா னேந்தி
அங்கணன்பே யோடாடி சருவஞ்ஞன் ஞானி
 யமலனர னீலகண்டன் பித்தனித்தன் சோதி
மங்கைபங்கன் சம்புமகே சன்வாம தேவன்
 மாதேவ னிமலன்விடை யோன்கொன்றை சூடி
கங்கையணி வோன்பரசு தரனுதி கிரியன்
 காலகா லன்கயிலை யாளிநிகம் பரனே. 1.

பரமனரி யான்றாணு நந்திபுலித் தோலான்
 பாண்டரங்க னக்கனுருத் திரன்மூர்த்தி யீசன்
சிரதரன்பிஞ் ஞகன்காம தகனனழ லேந்தி
 சித்தனனு பமன்சூல னசஞ்சலன்க பர்த்தி

யரவணி சானனழ லாடியண்ணல் பெருமா
னந்திவண்ணன் கண்ணுதலெம் முகன்பூத நாதன்
வானனகன் புனிதன்முருந் தாபங்கன் பகவன்
மத்தனத்தன் றத்துவா தீதன்மறை முதலே. 2.
முதல்வனீ சுரனடனன் சிற்பரன்க பாலி
முக்கணன் புராரிசிம்பு ளாயினோ னனந்தன்
மதகரியை யுரித்தவன்பெம் மானீமத் தாடி
வயிரவன்பி ஞகியா லமர்கடவுள் சடையோன்
சுதனபோச னன்பிச்சா டனன்விமலன் மெய்யன்
றும்புருசா தன்சாம தாற்பரியன் புயங்கன் [லான்
விதுவணிவோ னெண்குணனெண் டோளன்மலை வில்
வெண்ணீற்றன் பசுபதிநாற் றொன்றுசிவன் பெயரே.
சிவையிமைய வல்லிபரை யந்தரிப வானி
தேவியுல காயிசத்தி காமக்கோட் டத்தி
கவுரியறம் வளர்த்தசெல்வி சுந்தரியீச் சுரிபூங்
கணைக்கிழத்தி யருளேழை சாம்பவிதாய் வாலை
புவனை திரி புரைவாமி யபிராமி யன்ன
பூரணியா ரியையமலை யீசனிடப் பாகி
தவசதா னந்திமா தாநாரி யையை
சங்கரியம் பிகையுமைபார்ப் பதியையேழ் காணே. 4.
காளிகாத் தியைபாலைக் கிழத்திபண்ணம் பணத்தி
கன்னிநா மினிவிமலை பஞ்சமிமா தங்கி
யாளியூர் பவள்சவுரி பகவதிவாட் கையா
ளாயிகலை யூர்தியயி ராணியா மளைவே
தாளிபயி ரவிமாரி சூலிசக்ர பாணி
சாமுண்டி நீலிதுர்க்கை சண்டிகைகொற் றவையெண்
டோளிவிந்தை கங்கைநா ரணிவீரி யோகி
சூரிமயி டாரிதா ருகவிநா சனியே. 5.

சமரிசெயை [கங்காளி [மாலினிய கோரி
தமருகியர் தரிவிசையை சுந்தரிமுக் கண்ணி
யமரியா னோடாடி காமினெடுங் காத்திரி
யையைகோ மளை மாயை மதுபதிக பாலி
குமரியல கைக்கொடியாள் வல்லணங்கா ரணிமா
கோரியறு பதங்காளி துர்க்கைபொதுப் பேரா
மிமைவலவை வஞ்சனிசூர் மாயவள்சண் பணியோ
டிடாகினி சாகினிசன்மினி யோகினியா கினவே. 6.

* ஆகுவா கனிலம்போ தரன்சூற்ப கன்ன
ஞானமுகன் கணபதிமுக் கண்ணன்விக்கி னேசன்
ஏகதந்த னைங்கரன்பா சாங்குசன்க யாரி
யேரம்பன் வக்கிரதுண் டன்விநா யகன்பேர்
வேகமிகு முக்கிரன்செந் நிறன்சிம்பு ளானோன்
வில்லிகட்க தரன்சடையன் சிறுவிதி மகாரி
மோகமுயர் பத்திரைக்கு நாயகன்கு ரோதன்
முக்கணன்பத் தாம்வீர பத்திரன்பேர் மொழியே. 7.

மொழிபுலவன் வேலன்சேய் குகனமரர் தளவாய்
முருகன்காங் கேயன்வேள் சூர்ப்பகைம யூரன்
குழகன்மான் மருகன்கார்த் திகைமகன்வி சாகன்
குமரனா றிருகரன்சண் முகன்சடாக் கரத்தான்
அழகன்சே வலங்கொடியோன் கடம்பன்வெற்பன்சுவாமி
யமணைழித்தான் குறிஞ்சிமன்கற் பகவெறிந்தோன் சேந்
எழிலிளையன் செட்டிவள்ளி தெய்வானை கேள்வன் [தன்
ஈசன்மகன் சரவணப வன்கந்தன் பேரே. 8.

---

* ஆகுவாகனன் மூத்தோ னைங்கரன் விக்னேசன்
அரன்மகன் விநாயகன் பாசாங்குசன் முக்கண்ணன்
ஏகதந்த ஞானமுகன் கயமுக சங்கார
னேரம்பன் குமரன் முன்னோன்கணபதிக் கீரேழ்பேர்
(பி - ம்)

பேருலகி லாறுதலத் திறைவனுமை சிறுவன்
பேசருத்தி ராயுதத்தா ஞாதசி னேகன்
தாருகசங் காரியவு ணரைக்*கடிந்தோன் குரவன்
சங்கரா சாரிதிருப் புகழன்வெறி யாட்டான்
சீருறுகீ ரனைக்காத்தோ னருணகிரிக் கருள்வோன்
செங்கிடா யூர்தியயற் சிறைபுரிந்து விடுத்தோன்
மேருவசைத் தோனிலக்கத் தொன்பதின்மர் முன்னோன்
† வேடனென்றே டைம்பதுஞ்சுப் பிரமணியற் காமே.

ஆனைவா கனன்முடுவ லாளியா ரியனே
டரிகரபுத் திரன்புறங்காப் பானற்ப சனத்தன்
சானுறுகுத் திரதேவன் சாதவா கனத்தான்
கடல்வண்ணன் காரிதவ ளக்கண்ணன் பூதன்
ஏனையகோ ழிக்கொடியோன் பூரணைபுட் கலைசே
ரிறையோகி தண்டதர னறங்காப்பான் கையன்
பானலணி வான்சாத்தன் வனமூர்த்தி நீண்டோன்
பரியூர்தி யையன்பே ரிருபான்முத் தொகையே. 10.

முத்தன்கேத் திரபாலன் சட்டையன்க பாலன்
முடுவற்சே னையன்வடுகே னிருவாணி காரி
சித்தன்கா லனையூர்ந்தோன் றமிழ்க்கிழவன் குமரன்
திரிசூலன் கருங்குதிரை யாளிபிள்ளை நக்கன்
வித்தகன்ஞா ளியையூர்தி வயிரவன்பத் தொன்பான்
விளங்குபெய ராம்வடுகேன் றுய்வடுகி மோடி
‡ குத்திரிவெங் காடுகோள் மாரியொடு $ கொற்றி
கொடியையமூ தணங்குபெய ரெட்டெனவிண் டனரே.

விண்டரியச் சுதன்கண்ணன் கரியவன்கோ பாலன்
விட்டுணுநா ரணன்வாசு தேவன்கா குத்தன்

---

* கடந்தோன் (பி-ம்) † வேடனுட னைம்பதுஞ் (பி-ம்)
‡ கொற்றிபெருங் (பி-ம்) $ சூரி (பி-ம்)

கொண்டல்வண்ணன் கருடகே தனன்கருடா ரூடன்
கோவிந்தன் மால்மதுசூ தனனனந்த சயனன்
வண்டுருவ ளரசிங்கன் வாமனன்மு ராரி
மாயனெடி யோன்றிரிவிக் கிரமன்வன மாலி
தண்டனுபேந் திரன்பகவன் சங்குசக்ர பாணி
சம்புபிரான் படியிடந்தோ னுந்திபூத் தோனே. 12.

பூவளந்தா னவநீத சோரனிரை மேய்த்தோன்
பூமகள்கோன் றிருமார்ப னுலகுண்டோன் வலவன்
காவலன்ரு மோதரன்மா தவன்வாம னேமி
காளிகா மர்த்தனன்கே சவன்சார்ங்க பாணி
தேவகிசேய் மதன்றந்தை யயன்றந்தை முகுந்தன்
சீதரன்ச னர்த்தனன்பேய் முலையுண்டோ னனந்தன்
கோவலன்ரா கவன்ராமன் கடற்றுயின்றோ னயன்
குவடெடுத்தோன் கடலையடைத் தான்புருடோத்
தமனே. 13

தமன்விசைய சாரதிபத் தவதார னுதி
சகடுதைத்தா னைம்படையான் பாண்டவர்ச காயன்
உமைதுணைவன் பின்னைமன்பீ தாம்பரன்வ ராகன்
உயர்பதும நாபனறி துயிலனந்த பாலன்
கமலலோ சனன்ருச ரதிபெருமா ளெண்பான்
காமபா லன்பலபத் திரன்முசலி வெள்ளை
யமர்நீலாம் பரனேர்குண் டலனிரே பதிம
னனந்தனலா யுதன்பனந்தா மன்பலதே வனுக்கே.

தேவர்முது வோன்ஞானி வரன்சதா னந்தன்
றிசைமுகன்மா லுந்திவந்தோன் ருதாவி தாதா
மேவுமெண்க ணேன்வேதன் பரமேட்டி குரவன்
விரிஞ்சனிர ணியகெற்ப னயனன்ன மூர்தி

தாவில்படைப் போன்விதிமண் பொதுத்தந்தை ருதன்
  * சம்புகம்மர் தணன்கமல யோனிபிதாப் பகவன்
பூவிருந்தோ னனக்கொடியோன் கலைமகண்ம ணாளன்
  போதனிறை சதன்பிதா மகன்பிரமன் பெயரே. 15.
பெயர்பெறுபொன் பொறிவிமலை மாவாக்க மிளையாள்
  பெருந்திருப்பூ மான்சலசை கமலையரிப் பிரியை
பயவுததி மகள்விந்தை யிந்திரைதாக் கணங்கு
  பதுமைசீ தேவிசெய்யாள் செல்வியிலக் குமிபோர்
நயவாணி பாரதிபா மகள்வாக்கி கலைமான்
  ஞானிபுரா தனியுலக மாதாவெண் கமலை
† சுயபனுவ லாள்பூர வாகனிகா யத்ரி
  ‡ சொற்சாவித் திரியிசைமான் பிராம்நா மானே. 16.
மானதன்வே ளிரதிகண்ப னுருவிலம னோபு
  மாரன்மது சகன்சம்ப ராரிதென்றற் றேரோன்
வேனிலான் மதனழகன் மோகன்வில்லி மால்சேய்
  மீன்கொடியோன்மதிக்குடையோன் பெண்படையோ
ஆனமனோ சன்கரும்ப னங்கசன்கந் தற்பன் [ன்வசந்தன்
  அனங்கன்பூ மகன்சேய்சித் தசன்பஞ்ச பாணன்
$ காணிறைபூ வாளிகிளிப் பரியனிருட் களிற்றோன்
  கடன்முரசன் காமன்மனோ பவன்மதனன் பேரே. 17.
மதத்தசுர வயிரியரி மருத்துவன்கோ சிகன்மால்
  வச்ரதரன் புருகூதன் போகிமுகி லூர்தி
சதக்கிருது புரந்தரன்வா சவன்மகவான் புலவன் [தன்
  சக்கரன்பொன் னகர்க்கிறையா யிரங்கண்ணன் வேந்
னதுச்ச பன்கோ பதிகாரி வேள்விமன்னன் கரியோ
  னமரர்கோன் சசிகேள்வன் மருதநிலத் ததிபன்

---

* சம்பிறையர் (பி-ம்) † சயபனுவ (பி-ம்) ‡ சாவித்திரி (பி-ம்) $ கானுறுபூ (பி-ம்)

கதிப்புரோ கிதன்பாக சாதனன்வ லாரி
காமனயி ராபதனுச் சிரவாவுக் கிறையே. 18.

¶ இறையாகண் டலன்சம்ப ராரிபஞ்ச நிதியோன்
இந்திரன்சு னாசிதே வேந்திரன்முப்பா னென்பேர்
அறைசசிபு லோமிசைசுந் தரியிந் திராணி
யயிராணி பேராகு மரம்பைதிலோத் தமையோ
டுருவசிமே னகைசசியும் பஞ்சவே சையராம்
உயர்தருச்சங் குடன்பதுமஞ் சுரபிசிந்தா மணியுங்
குறைவிலைந் து நிதிமகவா னேவல்கேட் பதுவாங் [ரே.
கொண்டவின் னாட்டிறைகொடிதானிடியெனப்பேசுவ 19

சுவற்க ரும்பர் விபுதருயர் நிலையர்வரர் வானோர்
சுரரமரர் கடவுளர்புத் தேளிரையர் மெய்யர்
தவத்தரண்ட ரமுதர்விண் ணோர் மேலோரா தித்தர்
தானவர்பண் ணவர்பகவ ரதிதிசுதர் தீர்த்தர்
அவிப்புலவர் புங்கவர்பட் டாரகரி லேகர்
ஆத்தரிமை யோரவுணா ரியர்தேவர் முப்பா
னவக்கடவுள் இயவுள்புத்தேள் சூரணங்கு தேவு
நல்லதெய்வந் தேவதமெட் டென்பர்பொதுப் பேரே. 20

பொதுநாமந் தெய்வமின்னோர் தமக்கணங்குஞ் சூரும்
புத்தேளிர் பெண்கள்பெய ராமகளி ராகு
* மூதியள்கெட லணங்குதவ்வை கலதிசீ கேடி
மூகடிகொடித் துவசிகர வாகிசேட் டையின்பேர்

---

¶ இறைசயந் தன்றந்தை சம்பு (பி-ம்)
* மூதுசேட்டை சிறப்பில்லாள் கலதி சிகேடி
மூகடிகெட லணங்குதவ்வை கேட்டைதிரு மூத்தாள்
மதியேக வேணிகாக்கைக் கொடியாள் கழுதை
வாகனி மூதேவிபேர். திரிபதகை கங்கை
சதிவிமலை பகிரதி மந்தாகினி தீபவதி
சனுவி நதிசகத்திரமுகி தீர்த்திகையா பகையே (பி-ம்).

மதிதடினி துனிவிமலை திரிபதகை கங்கை
வராநதி பவதிமந்தா கினிபகீ ரதிவா
னதிசனுவி யுந்திசிந்து தீர்த்திகைநீர் மடந்தை
நளினிசகத் திரமுகிதுாய் தாக்கியா பகையே. 21.

பகுமரக்கர் தயித்தியர்தண் டாரவுண ரசுரர்
பண்ணவர்மாற் றார்நிருதர் திதிமைந்தர் யாதர்
தகுவர்நிசி சரர்பிசிதா சனர்வக்ர தந்தர்
தானவரி ராக்கதர்மெய் காப்போர் கார்வண்ணர்
மிகுகடங்க டாமிராக்* கதரசுரர் பொதுப்பேர்
விஞ்சையர்கோ சரர்சேடி யோருடன் சேணியரும்
ககனவித்தி யாதரர்பேர் கந்திருவர் யாழோர்
காந்திருவர் கிம்புருடர் கின்னரராம் பாரே. 22.

பாரிடஞ்சா தகஞ்சாதங் கிருத்திமமே கூளி
பலிகவரும் குறளாறும் பூதப்பே ராகும்
சூரலகை கணமண்ணை கூளிவெறி பாசஞ்
சோகுமயல் கடியழன்பி ரேதம் வேதாளஞ்
சாரிணங்கன் கழுதுகுண பாசிசவங் குணபஞ்
சாவுநிசி சரம்வெள்ளை யீமசம் பசாசு
கூருமருள் வியந்தரம்வெங் கால்கிரகஞ் சங்கை
குணங்குபிண மறிவிலிமுப் பாவென்றும் பேயே. 23.

பானுவழ லங்கியெரி தழல்கனலி தபனன்
பாவகனங் காரகன்றீ வசுத்தூம கேது
தீனிசுடர் தகனனனல் ஞெகிழிசித்ர பானு
சிகிதேயு வாரலரி சோதிதென்கீழ்த் திசையோன்
ஆனதனஞ் செயன்சுபலன் சுசிசாத வேதா
வழனம்வன்னி ஊளரிகனல் பகவன்வா யுசகன்

* கதரவுணர் (பி-ம)

ஊனெழுநாக் கொல்லியச ரூர்தியுதா சனனே
யுதிரனெருப் பக்கினிநாற் பாவனென்றாய்க் காட்டே.
காட்டழல்கா வகந்தாவ மாகும்பா வகன்றீக்
கடவுளாங் கடையனலுத் தரமடங்கல் வடவை
மூட்டுவட வாக்கினியூ ழித்தீயா மனையார்
மூள்சுதைசு வாதாவாஞ் சுவலைதீ நடையாம்
ஆட்டுபொறி புலிங்கமா முற்கைதீக் கொள்ளி
யரணிஞெலி தீக்கடைகோல் புகைகுய்வு வெடிகுய்
பூட்டரிதா ளிப்பாவி நறைதூம மொன்பான்
புகையுறையொட் டுறைகிரா லம்பனமூன் றரிதே. 25.

அரிமடங்கல் கால்கூற்று நடுவனிமன் சூல
னறவன்மால் சமன்மறலி யந்தகன்றென் றிசைக்கோன்
தருமனமன் றென்னவன்செங் கோற்கடவுள் பாசன்
சண்டன் ஞமன் கணிச்சியன்கா ரானூர்தி காலன்
கரியன்வைவச் சுதன்றண்ட தரனிருபத் தாறுங்
காலன்பேர் குத்தனுஞ்சித் திரனுமவன் கணக்காம்
வாநதிமன் பாசதரன் குடதிசையன் பெருக்கன்
வலையாளி சலபதிசு ரூமன்வரு ணனுக்கே. 26.

வருணமறல் மழையலர்புட் கரமாரி புவனம்
வாரிகார் வாருதகம் வனங்கமலம் பவனம்
இரதமஞ்சம் பரம்பயசு சலிலங்கீ லாலம்
எரிகயம் பானீயம் புனலால நாரங்
கருவியயம் பதமளக மம்புகோ வனிகம்
கவந்தஞ்சீ வனஞ்சிந்து பயஞ்சலமம் புதங்கம்
பரமுத மங்குசமப் புடனகிலந் தோயம்
பாணிவெள்ளங் காண்டம்வா ருணநீரைம் பானே. 27.

பாயுங்கால் வளியுலவை நீழல்சமீ ரணன்கம்
பவமானே கோடைகொண்டல் பரிசனன்மா லுரவோன்

சாயுரக வர்த்திகந்த வாகனன்ப்ர வஞ்சன்
சலனனுயி ரொலியூதை கோதையரி கூதை
வாயுமருத் துயிர்ப்பனிலங் கந்தவகன் புலனே
மாலிகந்த னாசுகஞ்சட் கோணன்மா ருதமே
* யாயுசகன் வாதம்வந்து கூதிர்வங் கூழ் வேற்ற
லாம்பவனம் வாடைசதா கதிகாற்றே ழாறே. 28.

ஆறுதென்றன் மலையக்கால் வசந்தன்மந்தா நிலமே
யருஞ்சிறுகா லிளங்காறென் காறென்றி மென்கான்
மீறுமந்த மாருதம்பத் தாங்கோடை மேல்கால்
மிகுவடந்தை வாடைவட கால்கொண்டல் கீழ்கால்
தேறுயிர பானனுதா னன்சமன்வி யானன்
றேவனு கன்கூர்மன் றனன்கிருதன் றசக்கால்
சூறைசா ரிகைசுழல்கால் கூதிருமூ திருமே
சொற்பனிக்கா லூழிக்கால் சண்டமா ருதமே. 29.

உதியரசன் புருடவா கனனியக்கர் வேந்த
னொருதனத னிருநிதியான் மரகதன்வி மானன்
பதிசிநேகி தன்கனகன் மந்திரிபுட் பகத்தான்
பாக்கியன்பிங் கலன்கின்ன ரேசனள கேசன்
நிதியிறைவன் முட்கரன்வச் சிரவணன்பொக் கிஷனே
நிறைசெல்வன் சிவிகையன்மூன் றேழ்குபே ரன்பேர்
மதியருக்கர் பன்னிருவ ருருத்திரர்பன் னொருவர்
வசுக்களெட்டு மருத்தரிரண் டனைத்தும்வா னவரே. 30.

வானம்வெளி மங்குலண்ட மம்பரங்கோ வனந்த
மாகம்விசும் பாசினிமீ வான்கெதியந் தரங்கம்
தானமும்பர் நபங்காயம் விண்டலம்புட் கரம்விண்
சார்வியோ மங்ககன மாதிரங்குண் டலந்தோ

---

* யாயுள்சகன் (பி-ம்)

தானமிலாக் குடில்வேணி யாகாச முப்பா
 னொருபெயரா மண்டகடா கங்கடக மோடு
மேனிலைபித் திகைதோடு கடமதற்கேழ் பேராம்
 ‡ மேருவின்றென் பால்வடபா லயனமிரு கதியே. 31.

கதிரவனென் றருணனா மலரிசுட ரிரவி
 கனலிதின கரன்பருதி தரணியினன் சண்ட
னுதையனரி பானுதிவா கரன்வேந்த னழலோ
 னொளிபதங்கன் பாற்கரன்றீ விரன்வெய்யோன்சவிதாப்
பிதிரனலி யெழுபரியோன் பகல்சோதி விசையன்
 பேசுபனிப் பகைவிரோ சனனெல்லி தபன
னிதையனண்ட யோனிதின மணிசான்றோன் மாலி
 யிருள்வலிவித் தகன்சூரன் விண்மணியா தவனே. 32.

ஆதித்தன் ஞாயிறு யிரங்கிரணி பகலோன்
 அருக்கனெல்லை சம்புதிமி ராரிவிருச் சிகனே
யோதுற்ற வலஞ்சுற்றி கண்ணன்மார்த் தாண்ட
 னுலகவிளக் கோராழி யான்கமல பாந்தி
சூதற்ற மித்திரன்செங் கதிரறுபா னிரண்டுஞ்
 சூரியனும் பருதிவட்டம் விசையமு மண்டிலமும்
வேதிக்கு மொளிர்கிரணங் கரங்கிளர் தீவிரமாம்
 வெயிலென்றா மாதவமூர் கோள்வட்ட நிலையே. 33.

நிலவுபிறை மதியமுத கதிர்திங்க ளாலோ
 னிசாபதியம் புலிகுமுத நண்பனிந்து களங்கன்
கலையன்முயற் கூடுசசி குரங்கிபசுங் கதிரோன்
 கலாநிதிநி சாசரன்சு தாகரன்கு பேரன்
அலவனிம கரன்சாந்தன் குளிரியல்லோன் வேந்தன்
 அரிகுடோ தயன்மானி யுடுபதிதண் சுடரே

‡ விளம்பியதென் (பி-ம்)

நலவிதுதா னவன்சோமன் சந்திரனே மைந்தா
நன்னிலாச் சந்திரிகை நிலவின்பே ரறியே. 34.

அறிவோனங் காரகன்வக் கிரன்பவுமன் குருதி
யரத்தனில மகனனலன் குசன்பூம ஞரல்
பிறதாபன் வளவனழல் மங்கலன்சே யுதிரன்
பெருந்தீக்கோண் மேடன்விருச் சிகன்செவ்வாய்க் கிருபா
னெறிமால்பண் டிதன்கணக்கன் மதிசேய்தேர்ப்*பாகன்
நிபுணனனு வழிசாமன் வாக்கிபுத்தி புலவன்
செறிதுத னருணனறி வோன்சவுமன் பச்சை
சிந்தைகூ ரியன்மேதை புதன்பதினொன் பதுமே. 35.

பதிபிரகற் பதிபீதன் குருச்சிவ னரசன்
பகர்வேந்த னந்தணன்பொன் சுரரமைச்ச ஞசான்
முதியசிகண் டிகன்வேத ஞண்டளப்பா னெனும்பன்
மூன்றும்வியா ழப்பெயரோர் கண்ணன்வெள்ளி சுங்கன்
றுதிகவிகாப் பியனுசன்பாற் கவன்பளிங்கு மழைக்கோள்
சுகன்புகர்சல் லியன்சிதன் போதிபுயல் காணன்
மதியசுர குருத்திங்கள் பிரசுரனெள் ளியனும்
வகுத்திருபான் சுக்கிரன்பேர் தொகுத்தனர்கா ரணரே.

காரிகதிர் மகன்சவுரி காக்கைவா கனத்தான்
கரியனேய் முகனீலன் முதுமகன்பங் கந்தன்
மூரிமேற் கோள்சந்திற் சாவகன்கீழ் மகனே
முடவன்மந்தன் கலியன்விசி சனிபதினொன் பான்பேர்
சீரியரா குவின்பெயரே தமங்கரும்பாம் பாகுஞ்
சிகிமதியின் பகைகேதுச் செம்பாம்ப தாகும்
கூரில்சனி மகன்மாந்தி†குளிகன்முப்பே ராகும்
கோளேழுந் தொடுத்தநாட் கிழமையும்வா ரமுமே. 37.

---

* பாசன் (பி-ம்) † குளிகனது பெயராம் (பி-ம்)

மேடமதற் காட்டின்பே ரிடபம்விடைப் பேரா
மிதுனந்தா ரணங்கலவைனான் றணைடியா ழிரட்டை
பாடல்விழாச் சயமகள்பா டலவையாங் கற்கடகம்
பயில்சேக்கை ஞெண்டின்பேர் புலிசிங்கப் பேர்கள்
கோடுசிங்கப் பேர்பெண்கள் பேர்கன்னிப் பேராங்
கோல்சீரை துங்கல்செட்டி வாணிகன்கட் டளைதுலாக்
காடுநிறை துலைதுலாந் தொடர்மணிபற் பனுந்தேட்
காம்பெயரும் விருச்சிகம்விற் பெயர்தனுசா*மகளே. 38.

மகரமது கலைபுல்வாய் சுறமானென் றுரைப்பார்
வருபாண்டப் பொதுப்பேரே கும்பமதா மீன்பேர்
பகருமீ னப்பெயரா மோரையில்லி ராசி
பவனமுமா முதற்றொட்டு மூன்றுவட்ட மாகப்
புகுநந்தை பத்திரையே சயையுடனே யிருத்தை
பூரணையாந் திதிபக்க மாமிருக்கந் தாரை
பகுசிதந்தா ராகணநா ளுற்கைசுக்கை சோதி
பம்புமீன் கணந்தினம்பன் மூன்றுநக்கேத் திரமே. 39.

திரமுதனா ளேறிரலை மருத்துவனைப் பசியாழ்ச்
சென்னியுடன் பரிப்பேரு மச்சுவதி நாமம்
பரணிகிழ வன்சோறு கங்குன்முக்கூட் டடுப்புப்
பகல்காடு தாழிதார் சோடுதா சிதாதி
தருமனுட் பூதமிவை பதினாலு மதற்காம்
சாற்றவகி ருலாரல் வாணனங்கி யளக்க
ரிருவையறு வாயறுமீ னாடனா விதனே [வைத்தனரே.
டெரிநாட்கார்த் திகைப்பேர்பன் னிரண்டென

வையமுருட் பிரமனாட் ‡சகதேதி பண்டி
மானம்பார் தேரூற்று லைமீ னுரோணி

---

* மகனே (பி-ம்). ‡ சகடுதிதி. (பி-ம்)

மொய்யுரோ கணியதின்பேர் மதிநாட்பே ராளன்
முழ்மீனிக் திரன்பாலே கரிப்புறமார் கழியாம்
வெய்யவன்மான் றலேமாழ்கு மதியுமக சிரமாம்
வியன்சிலேயா ழிறைசெங்கை மூதுரையா திரைப்பேர்
பொய்யில்கழை கரும்புபிண்டி யதிதிநாட் பாலே
புணர்தமா வணம்புனிதம் புணர்பூசங் கொடியே. 41.

கொடிறுகுரு நாள்வண்டுநீஜைதமதிபாற் குடங்கர்
குளம்பூசம் பாம்பாயில் கவைபணிநா ளன்கு
மிடுவுதா யிலியப்பேர் சென்னுமலி வாய்க்கா
லிசைவேள்வி கொடுநுகமுற் சனிபிதிர்காண் மாசி
படியும்வேட் டுவெனென்பான் மகமெலிநா விதனே
பகவதிநாட் கணைதுற்கை யிடைச்சனியும் பூரம்
கடையில்வரு சனிநெய்த்தோர் புயனட்கு ரியனட்
காணுந்தி பாற்குனியங் குனியேழுத் திரமே. 42.

உத்தமக்கைம் மீன்கன்னி கவுத்துவங்கா மரமே
யுடன்களிறு நீகாவே விரனவ்வி யெண்பே
ரத்தமதாஞ் கவைபயறு துவட்டனு ணடுநா
ளக்குநெய்மீன் புலிதச்ச னுடைப்பேர்சித் திரைக்கா
மெய்த்துளக்கு மீன்மாக்கால் காற்றினுள் விளக்கு
வீழ்க்கைவெறு நுகம்பதுமங் தீபமெட்டுஞ் சோதி
*முத்தில்விளே நாட்சுளகு காற்றினுள் சேட்டை
முறம்வைகா சியும்விசா கத்தனேப்பன் ‡னுவரே. 43.

பனேப்பெயர்தேண் மித்திரனு னனுடநாட் கிசைப்பார்
பாழியிக்த்ர னட்சேட்டை வல்லாரை வேதி
†யனற்பெயருங் கேட்டைகுரு கானிதேட் கடைவில்
அசுரனு னன்றில் கொக்கா மேழ்பெயரு மூலம்

---

§ கைமதிபார்க் (பி-ம்). * முற்றில் (பி-ம்) ‡ னுகவே (பி-ம்). † யனேப்பெயருங் (பி-ம்)

புனற்றினமே யுடைகுளமுற் குளமாம்பூ ராடம்
பூமிநாட் கூவன்மணி முடியானி யாடி
தொனித்தகடை குளம்விசுநா ளுத்திராட மோணஞ்
சோணமுக்கோன் மாயவனு ளுலக்கைசிர வணமே. 44.

வண்கொடிப்பேர் பறவையா வணிநன்று வசுநாள்
வயிரமா மவிட்டப்பேர் வருணனுட் சுண்டன்
பண்குன்று செக்குப்போர் சதையப்பேர் நாளி
பாதநாண் முற்கொழுங்கோல் மிசையுநாட் புரட்டை
பெண்களிற்பூ ரட்டாதிப்¶பேர்நீப முரசு
பிற்கொழுங்கோ லரசறிவ‡னுத்திரட்டா திப்பேர்
நண்கடைமீ னிரவிநாட் டொழுப்பெருநாட் சூல
நாவாய்ப்பேர் புருடநா ளிரேபதிக்காஞ் சால்பே. 45.

சாலியருந் துதிவடமீன் முப்பெயராந் தினமே
சமையமெல்லை யுடுக்காலா னியந்திவாத் திவச
மேல்வைநாட் பகல்வைக லல்கலும்பன் னிரண்டாம்
எல்லைகால் பதம்போழ்து கொன்பொழுது வேலை
காலைசெவ்வி யாமமமை யம்பாணி யெல்வை
காலம்போ தீரேழ்நா ழிகைநாழி கடிகை
மேலிருத்தை பதங்கன்ன ளுடிநா ழிகையாம்
விகலைகலை காலநுட்பந் துடியுடனுங் கணமே. 46.

கணமிறைமாத் திரைலேச மொல்லைசிறு வரையே
காலவிரை வாரொடியும் வல்லையுமற் றதற்காம்
பணியுநெடும் போதுநீட் டித்தனெ டித்தல்
பாணித்த னெடுநாட்பேர் பானுளே யரைநாள்
அணிதிவா வெற்பகற்பே ரெல்லிநிசாக் கங்குல்
அல்வியா பரிமாலை சாமநத்தம் யாமம்

¶ (பி-ம்) நாமமா ‡ னுத்திரட்டாதி (பி-ம்)

உணருகிசி யாமினியி ராக்கருக்க லிரவாம்
உச்சிமத்தி யானகலேப் பகலேகன் பகலே. 47.

நன்புலரி விடியல்வைகல் வைகறைப்போ தாகு
நவிலுதையங் காலேப்பேர் யாமமதாஞ் சாம
மின்பழுது சந்தியந்தி சாயமாலேயின்பேர்
இருணிலந் துணங்கறல்கச் சவந்தமந் திவாந்தம்
வன்பினந்த காரமரி கருத்திமிர மாயை
மாசுமாம் பூரணேராச் சிலிவாலி யாகு
மன்பமரா ரக்குகுவா மமவாசி சுடர்க் கூட்
டமையுமாம் பவ்வமுவாப் பூரணேப்பேர் வருமே. 48.

வருடமா யனஞ்சாமஞ் சமையாண்டப் பித்தம்
வற்சரப்பே ராளுகு மயனமதிற் பாதி
பருவமிரு தானியமா மதிதிங்கண் மாதம்
பல்லூழி மடங்கலுக முடிவயனுட் கற்பம்
பெருவயதா யுகமாயுள் வாணுளென் ருகும்
பின்றைபிற்றை பின்னேபின்பு பிந்திபின்னு ளாகும்
நெருநன்முன்பு முன்றைமுற்றை முன்னேமுந்தை முந்து
நேற்றுநென்ன லொன்பானு முன்னுட்கா ரிகையே. 49.

கார்கூதிர் முன்பனிபின் பனியொடிள வேனிற்
கடுவேனி லாறுமா வணிமுதலீ ரிரண்டாய்ச்
சேராடி வரைகிரையாய்ப் பெரும்பொழுதென் ருகுஞ்
சிறுபொழுது காலேயுநன் பகலுடனெற் பாடு
மோர்மாலே யாமமும்வை கறையுமென வாறு
யுதித்தைந்து கடிகைமுத லொவ்வொருபத் தாகுங்
கூர்மாதப் பிறப்புவிசுச் சங்க்ராந்தி யாகுங்
கோடைவே னிற்காலஞ் சுறற்கால மழையே. 50.

மழைபரம்வின் கந்தமமை கொண்டன்மஞ்சு சில
மால்விளைவு முகில்கருவி சீமூதஞ் சீதம்
பொழிகனஞ்செல் வார்குயிற்கொண் மூத்தாரா தாரம்
புயன்மங்குல் சீமூகம்ப யோதரமம் புதங்கம்
எழிலியம்பு புகைவிசும்பு சலதரங்கார் மாரி
யிளைகுளிரி ககனம்விண்டப் பிரம்வான்கந் தரமை
யமழமேக நாற்பதென்றும் விடியொலிசென் மடங்க
லசனியுரு *மிகுளிவிண்ணே றனலேறு மிடியே. 51.

இடிசவலை தடிதடித்துச் சஞ்சலைமின் சம்பை
யிலங்குகன ருசிமின்னல் வித்துருவோ டொன்பான்
வடிதிவலை துளிதூவல் சொரிசிதறி றறன்
மாரிபிதிர் வானஞ்சி கரம்வருடம் பெயலே
†குடியுததி யாலிசிக ரந்தூற்றன் மலைழயாங்
கொடுஞ்சோனை பணித்தல்விடா மழையாமா சாரம்
நெடியமழை தலையல்மழை விடுதலிமந் துகினம்
நீகரமூன் றும்பனிப்பேர் சிகமெனவு முறுமே. 52.

உறைதளிசீ கரந்தலையல் சிதர்தூவ வாலி
‡யுளிதிவலை துமிபெயல்பன் னொன்றுகுந் துளிப்பேர்
நிறைகஞே பலமாலி யெனுமாலாங் கட்டி
§நீண்டிடுமிந் திரதனுவான் சிலைபச்சை வில்லா
மறைமுனிவர் கருடர்தயித் தியரியக்கர் சித்தர்
வானவர்கிம் புருடர்படர் கின்னரர்கந் தருப்பர்
பொறைநாக ருடுப்பேய்விஞ் சையர்மாக வாசர்
போகர்சா $தகரரக்கர் கணம்பதினெட் டுக்கே. 53.

முதலாவது தெய்வப்பெயர்த் தொகுதி முற்றும்.

---

* மிகுளம் விண்ணே (பி-ம). † குடியுதகி (பி-ம.) ‡ யுளி (பி-ம) § நீண்டவான் சிலையிந்திர தனுப்பச்சை வில்லா (பி-ம) $ ரதரரக்கர் (பி-ம.)

## இரண்டாவது

### மக்கட் பெயர்த் தொகுதி.

அடிகளிரு டிகள்பெரியோ ருறுவர்தவர் முனைவோ
ரறவர்தபோ தனர்துறவோர் முனிவர்வல்லோர் நீத்தோ
படிவரிலிங் கிகள்யோகர் புலன்வென்றோர் தடிந்தோர் [ர்
பண்ணவரந் தணர்முதியோர் பற்றில ரகாமர்
சடைமுடியோர் மாதவர்தா பதரறிஞர் ஆயோர்
சார்பில்லோ ருயர்ந்தவர்மோ னிகளையர் மெய்யர்
ஒடிவில்கனி மூலசா காசனரெண் ணான்கோ
டொன்றுமருந் தவர்நாமமென்றுசொல்லுந் தமிழே. 54.

தமிழ்முனிவன் கும்பனுருத் திரசமனன் பொதிகா
சலன்பொருனைத் தலைவன்வா ருதியுண்டோன் குறியோ
அமர்விந்தம் பிலம்புகுத்தோன் லோபாமுத் திரைமன் [ன்
னரிமதகா சனன்வில்வ லாரியகத் தியன்பே
ருமிழ்சமியர் திகம்பரர்கா ளாமுகர்பா சுபதர்
யோகர்சைவர் மால்சமைய முனிவர்பா கவதர்
திமிரருகர் சாவகர்மா சிவர்புத்தர் சமணர்
தேரர்சா ரணர்பவுத்தர் சாக்கியர்சீ வரரே. 55.

வரமுனிவர் தொழுகுலத்தோர் மேற்குலத்தோ ருயர்ந்தோ
மறையோர்வே தியர்வேதர் முப்புரிநூன் மார்பர் [ர்
இருபிறப்போர் பூசுரர்நா லோராதி வருணை
ரெரிவளர்ப்போர் விப்பிரராய்ந் தோர்சடங்கர் பார்ப்பார்
விரியறவோர் மெய்யர்முத்தீச் செல்வரந்த ணாளர்
வித்தமா லையர்வேத பாரகர்வேள் வியினோர்
பெரியரைய ரந்தணர்பிராமணர்*நா லேழும்
பேர்பிரம சாரிவன்னி யாமெனச்சொல்·லனமே. 56.

---

* மூவொன்பான் (பி-ம்.)

அனக்கொடியுங் கமலமா லையுந் தரும முரசு
மந்தணர்க்கே யாமோத லோதுவித்தல் வேட்டல்
கனத்தின்வேட் பித்தலீ குதலேற்ற லாறு
கருமமவர் தொழிலாகும் பாரத்து வாசி
தனுக்குரவன் கும்பசன்வே திக்கொடியோன் றுரோணு
சாரியன்பேர் பண்டிதர்நல் லோர்சான்றோ ரான்றோர்
வினிப்புலவ ருலகுமே தாவிதக்கோ ருயர்ந்தோர்
மிக்கோரா ரியர்விசா ரிதாறிஞர்க் கவையே. 57.

அவைகலைஞர் மேதையர்கற் றவர்கவிஞர் மூத்தோர்
அறிஞர்கவி காவலர்பா வலர்புலவர் குருச்
சவைவிபுதர் விற்பனர்வித் துவான்முதுவோர் சாடேச்
சாருதிசங் கழுமவர்க்காங் குரவனிறை போதன்
பவமிலுர வோனடிக ளத்தனைய னுண்டோன்
பணிக்கனு சான்சாமி கோமானு பாத்தி
கவையில்பெரு மானதிகன் பதியீச னேச
னுதனு சிரியனு சாரியன்றே சிகனே. 58.

தேசபதி தோன்றல்கோ விறைகோன்மண் டலிகன்
செம்மல்விற லோன்சுகியன் குரிசின்மல்லன் கோமான்
ஈசனர பதிலோலன் கொற்றவன்பார்த் திபன்மன்
வந்தலாண் டகைதுரைபூ.பாலனண்ணல் வேந்தன்
பேசரச னிபுணனரன் விசையன்வழா அன் பொருநன்
பெருந்தகைபி ரானிறைவ னுதன்மன்னன் பெருமா
னேசமுடி யோன்காந்தன் றலைவன்றுட் டிகனே
நிருபனு யகன்கொழுநன் விடலைபூ பதியே. 59.

பதிமுதல்வன் புரவலனு திபன்றீரன் பூயன்
பதிதன்கா வலன்மகிபன் மீளியொடு காளை
யதிபனைம்பத் தாறுபெயர் புவிராசர்க் குரைப்பார்
அடுத்தோத லீதல்படைக் கலம்பயிறல் வேட்டல்

எதிர்பகைமேற் சேறல்புவி புரத்தலவர் தொழிலாம்
எழுபடைகூழ் குடியமைச்சு நட்பரணு றுடைமை
விதியினறம் பொருளின்பந் தலையறத்தான் மறத்தா
னிருமித்த *லரசரிய னெறிநடத்தல் முறையே. 60.

முறையரிச்சந் திரனளன்பு ரூரவாச் சகரன்
முசுகுந்தன் கார்த்தவீ ரனுஞ்சக்கர விருத்தர்
திறைகொள்விரா டன்காரி †நிருதிதுந்து மாரி
செம்பியனே சகரனளன் முதல்வள்ள லேழாம்
அறிகன்னன் சிசுபாலன் சந்திமான் சந்த
னந்திமான் வக்கிரனக் குரனிடையேழ் வள்ளல்
பெறுமலைய னெழிலிநள்ளி பசுந்தொடையன் பாரி
பேகனோ ரியுங்கடையேழ் வள்ளன்மூ வகையே. 61.

வகுத்தபா ரதர்குருகோத் திரர்கவுரர் பவுரர்
வழிப்பேராம் பனைக்கொடியோன் சரவணையிற் படுத்
பகுத்தகாங் கயன்பிரம சாரிவீட் டுமன்பேர் [தோன்
பாண்டுகுந்தி சேய்முரசுக் கொடியனுதிட் டிரனே
தகைப்பொறையன் குவளைமா லையன்றருமன் பேராஞ்
சற்பதுசன் காந்தாரி திருதிராட் டிரன்சேய்
தொகுத்தவனங் காமுடியன் வலம்புரிமா லிகையான்
சுயோதனனெந் தாந்திரியோ தனன்பெயர்கன் னிகையே..

கன்னனங்கர் கோன்கச்சைக் கொடியோன்கா னீனன்
கதிர்சேய்குண் டலனுமா ருதிபிருகோ தரனே
மின்னிடும்பி ‡மன்கையுரன் சிங்கதுசன் றண்டன்
வீமன்பேர் காண்டிபன்பற் குனன்சைவ சாசி
தன்னனுமக் $கொடியனல்லற் குருப்பார்த்தன் விசையன்
றனஞ்செயன்சு வேதவா கனன்மகவான் பாலன்

---

* லாசிரிய (பி-ம்.) † நிருபிதுந்து (பி-ம்.) ‡ மனகயுரன் (பி-ம்.) $ கொடியனவலற் (பி-ம்.)

பன்னும்விவற் சுனன்காண்டா வனப்பகை கிரீடி
பாசுபதன் கிருட்டிணனர்ச் சுனன்பெயராய் மதியே.

மதிகுலத்தான் மீனவன்கை தவன்வேம்பின் றாரான்
வழுதிவரை குணன்மாறன் செழியன்வைகை நதியான்
பொதிகையினான் றமிழ்நாடன் கொற்கையன்கூ டலினான்
பூழியனுக் கிரன்குமரிச் சேர்ப்பன்மீன் கொடியோன்
சிதைவில்கவு ரியன்முடியோ டுதித்தவன்பஞ் சவனுந்
தென்னனும்பாண் டியன்மூவேழ் புலிக்கொடியோன்
[பொன்னி
நதியுடையான் செம்பியன்கோச் சூரியன்மால் வளவன்
நற்கோழி வேந்தனார் மாலையனே ரியனே. 64.

நேரிவெற்பன் கிள்ளிசென்னி புனனாட னபயன்
நிகழ்சோழன் பதினைந்தாங் கொல்லிவெற்பன் கோதை
கேரளன்குண் டகன்கோனன் வில்லவன்வஞ் சியினான்
கிரிப்பொருநைத் துறைவன்பூ ழியனுதியன் குடகன்
சேரலன்குட் டுவன்வரம்பன் மலையமான் குடக்கோ
சேரமான் பொறையன்வா னவன்கொங்கன் போந்தின்
றாரினன்மூ வேழ்பெயருஞ் சேரன்பேர் வேளிர்
தருகுறும்ப ரரிட்டர்புரோ சருங்குறுமன் னவரே. 65.

மன்னியசூழ் வோருழையர் நூலரெண்ணர் துணைவர
மாத்தியர்மூத் தோர்முதுவோர் தேர்ச்சியரே னாதி
பொன்னமைச்ச ராவிரிவை மந்திரிக னாமம்
பொருநர்படைத் தலைவர்சே னேசர்தள வாய்பேர்
நன்னிமித்தி கன்சாக்கை வள்ளுவனுள் ளப்போ
னாமமாங் காவிதியர் கணக்கரபி தானர்
துன்னுபரி யாளர்முறை யோர்பரிவா ரப்பேர்
தோற்றுகா ரியக்காரர் கருமரெனும் பரிசே. 66.

பரதவரெட் டியர்நாய்கர் கவிப்பரிளங் கோக்கள்
பரதர்சீ ரகத்தாமர் கோவலர்கோ வளிப்போர்
பொருள்வேச ரதருழவ ரொட்டியர்முத் தொழிலோர்
பொன்னீட்டர் தேசிகரிச் சியர்வணிக ரிப்பர்
தருமமன்னர் செட்டியர்கோ வர்த்தனர்சி லேட்டை
தனவசியர் கோவசியர் பூவசியர் பொதுப்பே
ருரையோதல் வேட்டல்பசுக் காவலுப கார
முழவுவா ணிபம்வசியர்க் காகுமறு தொழிலே. 67.

தொழிலாளர் வெள்ளைவட்டர் காராளர் களமர்
சுரநிகு லேசர்கார்ப் பிணையர்மே ழியினோர்
உழவர்பூ பாலர்குவ ளைத்தாமர் சதுர்த்த
ருயிர்வளர்ப்பார் வேளாள ரயன்பதத்தி லுதித்தோர்
விழைவிளைஞர் பதினைந்துஞ் சூத்திரர்பே ரிவர்க்கு
வியன்கல்வி யுழவீதன் மூவர்தொழின் முடித்தல்
வழிபாடு வாணிபமா மறுதொழிலென் றுரைப்பார்
வகுத்தநாற் குலத்தைவழி படுவோர்மற் றவரே. 68.

மற்றவயித் தியர்பிடக ராயுள்வே தியர்மா
மாத்தியர்வா கடர்மருத்தர் பண்டிதர்பே ரேழாம்
வெற்றியரை வனர்துவட்டர் தபதியர்கண் ணுளர்
வினைஞர்கொல்லர் சிற்பியர்தட் டார்முனைவர் சொன்ன
ருற்றறிவார் மண்ணீட்டர் கஞ்சர்கலர் கன்னார்
ஓவர்தச்சர் கம்மியர்பேர் பதினெட்டா மோதர்
சித்திரரோ வியர்பேராந் தோற்றன்னர் பொல்லர்
செம்மார்பே ராரியர்மி லேச்சர்மிலைச் சருக்கே. 69.

சரிதையுறு யோனகர்சோ னகர்யவன ராகுஞ்
சங்கீர்வார் வளைபோழ்ந ரூன்விற்பார் குனர்
ஒருநூலர் கைக்கோளர் தந்துவாயர்த் தருமா
முமணரே யளவருப்பு வாணிகர்பேர் சிற்பி

மருளுவச்சன் பேர்குயவன் வேட்கோபி வேளான்
மட்பகைசக் கிரிகும்ப காரகன்கு லாலன்
றரிகுசவன் பேர்குனர் பொல்லர்துன்னர் சாலி
றைதப்போர்பேர் காரோட ருறைகாரர் மானே. 70.

மானியே ஞுதிசீ மங்கலிமஞ் சிகனே
மயிர்வினைஞன் நீர்த்தஞு விதன்பேர்சண் டாளர்
ஈணர்கன கதர்களைஞர் கொலைஞர்மா தங்கர்
இழிஞர்வங்கர் குனுங்கர்கவுண் டரும்புலையர் பேராந்
தேனிசையர் வயிரியர்பண் ணவர்சூத ரோவர்
சென்னியர்வக் திப்பர்செயி ரியர்மதங்கர் பாணர்க்
கானபேர் சக்கிரியு நந்தியுஞ்செக் கான்பே
ரடிதுாச னேகாலி யீரங்கோ லியனே. 71.

கோலியகா ழியர்வண்ணார் பேராம்பா சீகர்
கூலியர்பண் ணியர்பாகர் பாசகரே மடையர்
வாலுவரு மவர்க்காகுந் தமிழ்க்கூத்தர் பேரே
வாயிலோர் கழைக்கூத்தர் பேரேவே ழம்பர்
தோல்வினைஞர் பேர்பறம்பர் பாடினிபேர் பாட்டி
சொல்விறலி மதங்கியாங் கஞ்சுகிமெய் காப்பான்
சால்வலவர் பண்ணுவார் வாதுவர்மா வலர்மாச்
*சானியர்பேர் மதயானைப் பாகாதோ ரணரே. 72.

தோராத தேர்ப்பாகன் வலவன்சா ரதியுஞ்
சூதனுமாங் குனுங்கர்சவுண் டிக்ரியவர் குழலர்
எரிரு நரம்பர்குயி லுவர்மேழர் யவன
ரிசைப்போர்பேர் படுவர்சவுண் டிகர்பழையர் பிழிஞர்
ஓராய்கள் விலைஞர்பேர் கிழவனூரி யோன்பேர்
உல்லியரே கூவநூ லோர்பேர்கீ காமன்

---

* சாணியர்போ (பி-ம்.)

வாராரு மீகாமன் மீவான்மா லுமியு
மரக்கலன்பேர் *நீகான்பேர் நியவனென விரும்பே. 73.

விருத்திதொறுத் தொண்டடிமை சேடர்தொதுத்தொத்
மீண்கிணைகர் தாசர்தொழும் பாஞ்சேட ருக [தாள்
†ருரித்தர்களண்பர் சிலதர்துணை வோர்தோழ ரிணங்க
‡ரொண்பாங்கர் பேரேடா முன்னிலையாஞ் சிலதி
திருத்திகுழை தண்டிப்பெண் ஞுசிபாங்கி தோழி
சேடிபேர் முன்னிலைதா னேடியெ லாளாம்
வருத்துழைய §ரேவலரே பரிசனர்பேர் விளையில்
வழியினிற்பண் பினிலுரைப்போர் தூதரென்றொத்
தனவே. 74.

ஒற்றருசாச் சாரணர்வேய் வேயரென நான்காம்
ஓர்வெறியாட் டாளன்வே லோன்படிவன் முருகன்
றெற்றுகோ மரன்றேவ ராளிபெய ராகுந்
தேவராட் டியின்பெயரே சாலினியென் றோதும்
மற்றைவழிச் செல்வோரர்பேர் பதிதராம் புதியர்
வம்பரதி திகளுமா $கொதுமலர்வம் பலரே
துற்றயலோ ரேதிலராங் கம்மியரே தொழுவர்
தொழிற்செய்வோர் பேர்வியவ னேவுவான் கூற்றே

கூத்தரவி நயர்பொருநர் நிருத்தர்கண்ணு ளாளர்
கோடியர்நட் டுவர்நடத்தார் வயிரியர்நா டகர்பேர்
பூத்திடுகோ டங்கிருத்தி நடனியலங் காரி
¶போர்மையளாங் கூத்திகள்பேர் வந்திகவி கற்றோ
|| ஞர்த்தவண்டர் கடிகையர்பே ரியவுள்புக ழோன்பேர்
அருளன்கா ருண்ணியன்கிரு பாலுதயா லுவின்பேர்

---

*நீசன் (பி-ம்.) †ரிருத்தர் (பி-ம்) ‡ரெண்பாங்கர் (பி-ம்) § ரேவல்புரி (பி-ம்) $ கொதுமலரம் (பி-ம்) ¶ போர்மைகளாங் (பி-ம்) || ஞர்த்தர் (பி-ம்)

துர்த்தரிடங் கழிபோகர் பரத்தர்விடர் படிறர்
துர்ச்சனர்பல் லுவர்விடமர் காமியர்பேர் விதியே. 76.

விதரணனு தாரிதேயி கொடுப்போன் வியாழன்
வேளாளன் வள்ளியோன் புரவலனே கேள்வன்
உதவுவோ னீகையான் ருதாத் தியாகி
யுபகாரி வள்ளலளி யோன்கொடையா ளியின்பேர்
இதவசனன் பரிசிலான் யாசகனல் கூர்ந்தோன்
ஏழைதரித் திரன்றீன னிலம்பாட்ட னேற்போன்
கதியிலா னொற்கனு துலன்மிடியன் கிஞ்சன்
கலியன்வறி யோனுறுகண் ணாளனிர வலனே. 77.

வலவைவல்லோன் வல்லுநன்மாட் டார்பேர்கூர்ப் பிலன்
மந்தனு நாகரிகர் சதுரர்கா முகராம் [பேர்
குலமிலர் குலீனரா மழிலன்பண் ணையாங்
குருடனந்த ராளனுடன் சிதடனுமந் தகன்பேர்
அலிபேடி நபுங்கிஷம்பெண் டகஞ்சண்டங் கிலீப
மாகுங்கூன் சினகோடி கோணவாங் குஞ்சம்
உலைவில்வா மனஞ்சிந்து குறளாகு மூங்கை
யூமைகுணி மூகையுமாம் வெதிர்செவிடென் றறியே.

அறிவிலன்யா தன்பேதை மடனேழை மூகன்
அஞரிமுழை யண்ணையஞ்ஞை சிதடன்முழு மகனுஞ்
சிறியர்நல மிலர்கயவர் மூடர்கலர் சுமடர்
தீயர்நசிர் கனிட்டர்கள்வர் கலகர்புல்லர் மூர்க்கர்
பொறியிலர்கு னவர்சீத்தை நபண்டிதர்சிற் றினரே
புள்ளுவர்கீழ் மையர்மூசுண்டர் பல்லுவரு லோபர்
நெறியிலர்கல் லார்பதகர் முறையிலரோ டதமர்
நீசர்கையர் தீக்குணரு மீனர்பேர் முடிவே. 79.

முடங்குபங்கு குனிசிதைவு முடவர் பேராகு
முழுச்சவனர் வேதிகர் நிசாதர்வஞ்சர் பேராம்

கடும்படிறர் தீனர்கர விடர்திருடர் சோரர்
கள்வர்புரை யோர்கபடர் தேகர்கள்ளர் பேராம்
தொடர்ந்தவர்புல் லுவர்வேட்டர் காதலர் சிநேகர் [தோ
சூழ்நல்லோ ரார்வலரொன் றினர்நயந்தோர் விழைந்
ருடன்பசைந்தோர் கள்ளுநர்சேர்ந் தார்பெட்டார் கூட்டுந்
ஓட்டினர்வல் லுநர்புரிந்தோர் மித்திரர் மேவினரே.

மேவலர்சார் பிலரரிகள் பரர்கெலிஞர் சேரார்
வேண்டார்பற் றார்பகைவர் கருதலர்வில் லங்கர்
தாவிகலர் கிட்டலர்கூ டலர்சேரா ரெண்ணார்
தரியார்செற் றார்நிகரா ரடையலார் திருந்தார்
ஏவுவணங் காரமரார் பொருநருள்ளார் நள்ளார்
எதிர்ந்தார்வெய் யோரிரிஞ ரமடர்மன்னா ரொன்னார்
வாவுதெவ்வ ரமித்திரரொட் டார்மருவார் மானர்
மாற்றலர்போற் றலர்சேயர் சூரர்வட்கார் கேளார்
தூவுமின்னா தார்முனைந்தோ ரண்டர்விட்டார் நண்ணார்
துன்னார்மண் டினரொல்லார் செறுநருஞ் சத்துருவே.

துரிதமிலாக் கேள்குடும்பஞ் சார்புசூழ் நட்டார்
துணைகூளி யிகுளைநட்புக் கிளைவிருந்து கடம்பு
பரிசனம்பா சனந்துடர்மித் திரருற்றோர் கேளிர்
பற்றுறவு பந்தநண்பு தமரொக்கல் சுற்றம்
உரியர்நள்ளி யிருபத்தே ழுறவின்முறைப் பேரா
முட்பீதி சவலைபயத் தான்பீருப் பீதன்
வெருவிசகி தன்பிளிற னச்சமுற்றோன் பேராம்
விளம்புநக்க னென்பநிரு வாணிபாற் படுமே. 82.

படர்மறவர் வாளுழவர் மள்ளர்கதர் வயவர்
படைத்தலைவர் பூரணர்கூ ளியர்மிண்டர் துண்டர்
இடர்வியவர் பூதர்விற லோர்மீளி வண்டர்
திறலோரண் ணியரேசன் னத்தரா யுத்தர்

அடுமுவேழ் வீரர்பெயர் *காதகன் காருகனே [கணிகை
யருத்துதன்கா லனுங்கொலைஞர் பேர்பொருட்பெண்
தொடரும்விலை மகள்வேசி பெறுவகொள்வாள் பரத்தை
சூளையய னிலிதாசி வரைவில்பெண்பேர் குறியே. 83.

குறவர்கா னவர்புனவர் பழிஞர்வெற்பர் குழுவர்
குன்றுவரு மிறவுளரும் குறிஞ்சியர்பே ரதிற்பெண்
சிறுகுறத்தி கொடிச்சியாங் கானகநா டன்பேர்
சிலம்பன்வெற்பன் பொருப்பனும் புள்ளுவரோடெயினர்
மறவர்தெறும் பினரிறுக்கர் பாலையர்பே ரெயிற்றி
மறத்திபல்லி பெண்காளை †விடலையு மீளியுங்கோப்
பொறையிலர் விரோதர்கா தகர்கோபர் வன்பர்
புளிஞர்வன சரர்சவரர் பாவமூர்த் திகளே. 84.

திகழெயினர் பையர்பா தகர்கோளர் மறவர்
சில்லர்கொலை ஞோர்காடர் முருடர்வேட் டுவரே
பகர்வேடர் மாகுலர் கிராதரிவை குறிஞ்சி
பாலைமக்கட் பொதுப்பேராம் பொதுவர் கோவிந்தர்
சுகவமுத ரண்டரா வலர்விந்தர் பாலர்
தொறுவர்கோ வலர்குடவர் கோபால ராயர் [யோ
இகழ்மொழியர் பொறையர்கொச்சையோர்முல்லைத்திணை
ரிடையர்பதி னேழுநடு நிலத்தினர்பேர்ப் பொதுவே. 85

பொதுவிநெய்யின் முடைச்சிநடு நிலத்தியொடு குடத்தி
புன்மொழிச்சி யாச்சிதொறு வியுமிடைச்சி நாம
மதினிறைவன் குறும்பொறைநா டன்கோன்கா ளுடன்
அண்ணலுந் தோன் றலுமாகுந் தொழுவர்மள்ளர் களம
ருதகர்கழ னியர்விளைஞர் பண்ணையர்கம் பளரே
யுழவர்கடை ஞோர்களைஞர் மருதநிலத் தவர்பேர்

* காத்தன் (பி-ம்) † விடலை (பி-ம்)

நதியுறுகா வாட்டிகடை சியர்கிழத்தி யுழத்தி
நன்மகிழ்நன் கிழவனூ ரன்றலைவன் பேரே. 86.

தலைநுளையர் பரதர்பர தவர்திமில ரளவர்
சலவாணர் கலவர்மரக் கலர்கழியர் கடலர்
வலைஞரிவை நெய்தனிலத் தார்நாமம் பரத்தி
வலைச்சிகடற் பெண்குழைச்சி நுளைச்சிகுரத் தியுமே
யலைநிலப்பெண் ணாம்புலம்பன் றுறைவன்மெல்லன் சேர்ப்
அரியகொண்கனேம்பேர்நெய்தற்றலைவன் பேராம்[பன்
விலைசெயுமுப் பளத்தார்க்கே யளமரெனச் சாற்றும்
வேண்டியமன் பதைபஞ்ஞீ லிரண்டு மக்கட் பரப்பே.

மக்கண்மா னிடர்மாந்தர் யாண்டையர்மண் ணிலத்தார்
மனிதர்மா னவர்மாக்கள் சனருலகர் மனிடர்
தக்கமனுப் பன்னிரண்டு நரர்பேரா ஞாதி
தாயத்தார் குடிச்சுற்ற மூதாதை பாட்டன்
புக்கபிதா மகன்பேரன் பெரியோன் விதாதாப்
போற்றன்பேர் தந்தைபிதாத் தாதையப்ப னையன்
தொக்கபிதி ரீன்றானம் மானத்தன் பயந்தான்
றெழுமச்சன் பதினொன்றுந் தகப்பன்பே ரனைத்தே. 88

அன்னையனை யாய்தல்லி மோய்தள்ளை யீன்றாள்
அம்மைவயின் பொறையவ்வை யாயிபெற்றாள் புனி
தன்னைபயக் தாள்மாதா வம்மனைபன் னேழுந் [ற்றாய்
தாய்பேர்தவ் வையுமாகும் வளர்த்ததாய் செவிலி
மன்னுகைத்தாய் கோடாய்பா ராட்டுந்தாய் பிற்றாய்
மாமனம்மான் மாதுலனு மாமியத்தை யாகு [ணி
முன்னுதித்தாள் சேட்டைதவ்வை தன்னையக்கை யண்
மூத்தாள்பே ரத்தையக்கா டமக்கையுந் தங்கிடுமே. 89.

தங்கைபே ரிளையாள்கை யாங்கிபின்னை பின்னுஞ்
சட்டகனுஞ் சகலனுமோர் குடியினிற் கொண்டவனும்

புங்கவன்மூத் தோனையன் சேட்டனண்ணு வண்ணன்
பொறையன்முன்னேன் றம்முன்னென் பான்றமைய
மங்கனுட்ட னனிச்சனே பின்னிளவல் பின்னே[ன்பேரா
ஞதரஞ்சேர் தம்பியென்றே யிளையோன்பே ராரும்
செங்கனிவாய் மானனையாய் சோதரரே துணைவர்
சேர்சகோ தரருமுடன் பிறந்தவர்பேர்க் கணிப்பே. 90.

கணவன்வரன் கொழுநன்வேட் டோனுரியன் கேள்வன்
கண்டன்கா தலன்கொண்கன் பதிபிரான் றலைவன்
மணமகன் பிரீதியன்ம ணளனண்பன் காந்தன்
மணவாளன் றவன்மகிழ்நன் வல்லவனே பத்தா
துணைவனு யகன்பேரில் லாள்காந்தை தேவி
துணைவிகா தலிமனையிற் களத்தாரம் பாரி
யிணைமனையாள் வாழ்க்கைவிருந் துரிமைமண வாட்டி
யைகுடும்பி பன்னிமண மகளா நாயகியே. 91.

அகவிளக்கம் பொருள்செம்மல் குட்டன்மூளை யிளவல்
அருளேயன் சிறுவன்கா தலன்மதலை தோன்றல்
மகன்மருமான் சுதன்பாலன் சந்ததிகா லெச்சம்
மைந்தன்மழ வோன்சேடன் புத்திரன்சேய் தனையன்
புகழ்வழிநக் தனன்புதல்வன் குமரனு லேழாம்
புதல்விசுதை புத்திரி குமாரியையை பாலை
நகுசிறுவி தனையைசெல்வி பந்தனையே குட்டி
நந்தனையே மதிப்புமகள் பெண்பிள்ளைக் கியம்பே. 92.

பிள்ளைசிறார் மூளைகுழவி யெச்சமகார் மகவு
பிஞ்சுகுஞ்சு குழந்தையிரு மக்களுக்கும் பொதுப்பேர்
விள்ளுகைமை பெறும்பிள்ளை கோளகன்கோ ளிலியாம்
வேற்றோர்க்குப் பெறும்பிள்ளை குண்டகனும் கன்னிக்
குள்ளமகன் கானீன னுற்குலத்தி னுண்பெண்
ணுயர்பிழியாய்க் கலந்துபெற்ற பிள்ளையனு லோமன்

றென்னுமா ணிழிபும்பெண் ணுயர்புமாய்ப் பெற்ற
சேய்பிறிதி லோமனெனச் செப்பினர்முன் னோரே.
முன்னுரைத்த வனுலோமர் பிறிதிலோ மரிலே
முறைவழா தீன்றபிள்ளை பேரந்த ராளன்
பின்னதின்மா றிப்பிறந்த சேய்விராத் தியனும்
பிறங்கடையே மருகன்மரு மானுன்கு பேரு
மன்னியமின் மருமகன்பேர் காளைமகன் மைந்த
னாடவன்பூ மான்குமர னவன்புருட னாணே
வின்னவுமைத் தனுமாண்பாற் பொதுப்பேரா நம்பி
யென்பதாண் சிறப்புநங்கை பெண்சிறப்பாந் தெரியே
தெரிவைமா னினிநாரி மகள்வனிதை மாது
சிறுமியிளம் பிடிமடந்தை தையல்பிணா மகளே
அரிவைமட வரலணங்கு பேதைமங்கை பெதும்பை
யாடவள்கா ரிகையாட்டி பெண்ணெல்லாள் காந்தை
பிரியைமா யோள்மனிதி நங்கைநா கரிகை
பேடைமட வான்பேதி வஞ்சனியே விரும்பி
வரிசையினங் கன்னிதோகை யாரூறும் பெண்பேர்
வாழுவதி தம்பதியு மாண்பெண்ணிரட் டையரே. 95
இரவிநங்கை நாயகிதாய் சாமியத்தை யடிக
ளிசமாட்டி தலைவியையை கோமான் பிராட்டி
யரசியர சாளிறைவி கண்ணாட்டி குரத்தி
யப்பதினேழ் முதல்விபேர் கன்னிகும ரியின்பேர்
திரள்விதவை யமங்கலிநா லிலிகைமை கயினி
தீர்ந்தகல னழிமகள்பேர் மைமைவந்தி யிரண்டு
முரமவடி பேர்வண்ண மகள்கோலஞ் செய்வாட்
குரியபெயர் விருத்தைமூப் பள்ளவள்பேர்ச் சிறப்பே
சிறுபேதை பெதும்பைமங்கை மடந்தையே யரிவை
தெரிவைபே ரிளம்பெண்ணேழ் பருவமின்னா ரிவர்க்கே

யறுமேழ்பன் னொன்றுபதின் மூன்றேபத் தொன்பா
னையைந்து முப்பானொன் றெண்ணைந்தும் வயதாம்
குறளிகுண்டன் ‡ கூனிதுட்டை யொடுபடுவி தூங்கி
குட்டனியோ டசதியெட்டுந் தொழுத்தைபேர் கூறும்
வெறுமோரை பொய்தல்பண்ணை யவைவாயம் பெண்கள்
விளையாட்டுக் கெடவரலு மாமதற்குத் தானே. 97.

தானைவா கினிகவனம் பரிகர நிதானஞ்
† சனம்பாடி படாதிகந் தந்திரம் பதாதி
சேனைபலங் காந்தாரந் தளம்பகுதி கூடி
திரள்பதா கினிகடகஞ் சோனைதண்டம் யூபம்
வாஹினியம டகமஷிகம் வரூதினிமூ வொன்பான்
வாய்த்தபடைப் பொதுப்பேரொட் டுண்டை*தொக்தே
காலணிசூழ் படைவகுப்பா மணிகைநெற்றி தூசி [யூபங்
கடைக்குழைகூழையதாந்தார் கொடிப்படையாகுமதே. 98

ஆகமுடம் புருவமுடல் புணர்ப்புறுப்புக் குரம்பை
யங்கமுயிர் நிலையூற்கம் விக்கிரக மூர்த்தந்
தேகமவை யவங்காய மாதாரஞ் சட்டை
திருமேனி தாபரமெய் புட்கலஞ் சரீரம்
மானனங் களேபரம்பூ தியம்பிண்டஞ் சடலம்
வடிவாங்காத் திரம்பூட்சி கடம்புதைசட் டகமே
சாய்கைதனு வாக்கைபுரம் படிவமுப்பா னெட்டாஞ்
சவம்பிணங் களேபரம் பிரேதமழன் கழிவே. 99.

கழல்சரணம் பதம்பாத மங்கிரிதாள் சலனங்
காலடியொன் பான்கரண்டை கரடுபர டாகும்
முழுகுகணைங் கால்சங்கங் கணைக்காலாஞ் சானு
முழந்தாமுழங் கான்முட்டாங் குறங்கூரு வாம

---

‡ கூனி (பி-ம்) † சமை (பி-ம்) * கொக்தே (பி-ம்)

மெழுதகவான் சோகமைந்துந் துடையாகுந் துடைவே
  ரிசைவுகந்து கொழுத்துமுட்டுக் கிரந்திசந்து பொருந்
தழுவியதோர் கழுத்துமாங் கடிதடமே நிதம்பஞ் [தாக்
  சகனமல்கு லாம்பக்க மொக்கரை யொக்கலையே. 100.

கலத்தபகம் யோனிகுய்யம் பெண்குறியாம் பூவுங்
  கற்பபுரந் தானுமாங் காமிலிங்கங் கோசம்
புலத்தவாண் குறியாகுங் குறிகாணுந் தலமே.
  பொதுவாகு மிடையுக்க மருங்குநடு நுசுப்பு
நலத்துறுமத் திமமரையா மிதலைசுழி போகில்
  நாபியுந்தி யிலஞ்சிகொப்பூழ் காமமா முதரந்
துலக்குமடி வயிறகடு மோடுகுக்கி சடரந்
  துத்தவமுஞ் சுத்தும்வயி றுரும்பூண் முலையே. 101.

முலைசுவற்கண் கொம்மைகில் கொங்கைதனஞ் சேக்கை
  முகிழ்பயோ தரங்குயங் குரூஉக்கணம்மம் பறம்பாம்
மலைமுலைக்கண் சுதலைசிலீ முகம்பாற்கண் சூசா
  மருமமுர மார்பகல மாகநெஞ்சே யைந்தாஞ்
சொலுநெரிசல் பொறிதேமர் பீர்துத்தி யுத்தி
  சுணங்குவரி திதனிவசந் திகையினந்தி தித்தி
பொலிதிதலை நுணங்கீரேழ் தேமலாம் வாகு
  புயமொய்ம்பு தோளினியற் பேர்பசுந்தோ ளணங்கே
தோள்கரமே புயம்பாணி யத்தமுங்கைத் தலப்பேர்
  தோட்முழங்கை கூர்ப்பரமாங் கிலுத்தமணிக் கட்டா
மாள்குடங்கை யகங்கையங்கை யுள்ளங்கைப் பேராம்
  அங்குலியே விரலாகு நகத்தின்பே ருகிரா
முள்கையொன்ற ராணமதாம் வென்னபரம் பிறகு
  முதுகுபுறங் கோரைவெரின் பிறக்குமாந் தோண்மே
னீள்கயிலோ டெருத்தகிவம் பிடரிபரஞ் செகில
  நிதலமிமில் சிறுபுறமும் பிடரியா மிங்கே. 103.

இங்கிதங்கர் தரங்கண்டங் களமிடறு கழுத்தா
  நிதைக்கிரீ பமுமென்பார் முகம்வதனந் துண்டம்
பங்கயம்வத் திரமைந்து மானனமாந் தட்டம்
  பாலிகையே யிதழோட்ட மதரமுத்த முதடாந்
தங்கியமோ வாய்தட்டந் தாடியாஞ் சதனந்
  தந்தம்பல் லெயிறுகு நகைமுறுவல் மூரல்
பொங்கிழியார்ப் பசியாசம் விடம்பனமுஞ் சிரிப்பாம்
  புகல்சிகுவை நாத்தாலந் தாரமிவை நாக்கே. 104.

நாக்கின்மே லண்ணமண்ணுக் குண்ணுக்கென் றுரு
  நவிலுமண்ண மிடறுகுஞ் சிபுகமண்ண மணரி
யாக்கணலும் கீழ்வாயின் * புறமாங் கபோல
  †மனுக்கதுப்புக் கொடிறுகவுள் கன்னங் கேசமுமாம்
பார்க்கும்விழி நயனநேத் திரமக்கஞ் சக்குப்
  பார்வைதிட்டி திருட்டிலோ சனந்தார நாட்ட
கோக்கம்விலோ சனந்திருக்குத் தெரிசனமம் பகங்கோ
  நுவலாலோ கனந்தாரை யக்கிகண்பத் திரட்டே. 105.

இருவிழியின் விளிம்பிமையா மணிதாரை யாகு
  மிணைநாசி கோணைகிரா ணந்துண்ட மூக்காம்
பிருநுதல் புருரம்பீர் புதல்புதடி பூருப்
  பீருகுடி புருவமதாங் கேள்விவள்ளுக் காது
சொருகு ‡சோத் திரங்கன்ன மைந்துபேர் செவிக்காஞ்
  குழைகுள மளிகம்விலா டம்பனிச்சை பாலம்
பெருகுபண்ட மத்தகமுண் டகநுதலாம் பத்துப்
  பேருநெற்றி யாகுமென்பர் பேரறிஞ ருவந்தே. 106.

உவவிமுண்டஞ் சிரஞ்சென்னி முடிமூர்த்தஞ் சிகரம்
  உத்தமாங் கந்தலைசே கரமுச்சி கம்மே

---

* புறமாகுங் கதுப்போ (பி-ம்) † டனுக்கொடிறு கவிழ் கபோலங் கன்னமாகும் (பி-ம்) ‡ தோத்திரம் (பி-ம்)

நவிரொடுமத் தகம்பதினா லுஞ்சிரசின் பேரா
நவிர்பங்கி யுளைகதுப்புச் சிகைகுஞ்சி குடிலை
தவிர்சுரியல் குழல்கேச மோரிதொங்கல் பித்தை
தலைபிச்சந் தார்சிரோ ருகமுமாண் மயிர்ப்பேர்
கவிசுடிகை சூழிநவி ரஞ்சூட்டி யுச்சி
காண்சிமிலி சிகைசிக்கஞ் சிமைகுடுமி முடியே. 107.

முடிமவுலி குழல்பந்தி சிகழிகைபின் னகமே.
மூச்சிதம் மிலங்கொப்புச் சுடிகைதொங்கல் கொண்
குடையபெயர் சுரியல்குழல் குரலளகங் கேசம் [டைக்
உளைகதுப்புப் பரிசாரங் கூழைகுரு ளோதி
நெடிமைசுருள் பங்கிசிரோ தங்கோதை யைம்பா
னேர்விலோ தங்கூந்தல் கொந்தளமா ராட்டம்
அடுரோமம் பெண்மயிர்ப்பேர் கொந்தளம் விரோத
மளகமயிர்க் குழற்சியெனத் தெளிகுவைநீ மயிலே 108

மயிர்ச்செறிவு ரோமமுஞ் சிரோதமுமாம் வேணி
† மயிர்த்திரள்கோ டீரம்பின் னலுங்கயத்தங் குடில
‡ மியற்சடில முஞ்சடைப்பேர் வாரிவரை பிறங்கோ
டிறைவரியும் பொறியாகுஞ் சரைதிரையாம் பலிதஞ்
செயத்தரைப் பேர்காடி சங்கனை நரம்பு
சிரையாகுங் கழலையின்பே ரலையதாங் காச
மயிர்த்தகபங் கோழையையாங் கச்சைவடுச் சேக்கை
யங்கிதமே வசியுடலிற் றழும்பாயத் திடுமே. 109.

அத்திகளே பரமங்க மெலும்பாங்கங் காள
மாவதே முழுவெலும்பாம் வெண்டலை கபாலம்
மெய்த்தலையி னோடுமண்டை யாங்கவந்தம் யூப [யல்
மெய்க்குறைமட் டையுமதுவாங் கிருத்திமக்தொக் குரி

---

†மயிர்த்திரளே பின்னல்சடிலங்குடிலஞ் சடைப்பேர்(பிம்)
‡ இயற்றுகோடீரமுமாம் (பி-ம்)

சொத்துரிவை யுரியொலிய லதள்பொச்சை சருமங்
குளிர் துவக்குப் புனிறுவட கம்புறணி போர்வை
வைத்தபச்சை தோற்பெயர்சூல் சினைகருப்பம் விந்து
வாலேவயா வயிற்பொறை பீள்*வயல் கருப்பேர் தருமே. 110

தருதசையூன் விடக்குமுடை வள்ளூரம்புண் புனிதக்
தடிபிசிதம் புலவுபுலா லிறைச்சி‡யிற்றி யூத்தை
புரணிபூ தியமூழ்த்தல் மாங்கிஷப்பேர் குருதி
புணணீர்சோ ணிதமுதிரஞ் செம்பால் புலானீர்
எருவை செந்நீர் கறைசுடுவல் சோரிநெய்த்தோர் சோரை
யிரத்தப்பே ரீருளென்ப திரலாஞ் சோரி
வெருவுதுப்பு விழுக்கிழுது நெய்நிணம் வெளுப்பு
விளர்விளிறு கொழுப்பாகும் வழும்பின்பேர் வழுக்கே. 111

வழுத்தருமா சழுக்கூத்தை விட்டைகட்ட மிலத்தி
மலமாகும் பொறிவாயில் குறிகந்தங் கரணஞ்
செழித்திடுமிந் திரியப்பேர் மெய்வாய்கண் மூக்குச்
செவியைந்தும் பொறியாகுஞ் சுவையொளியூ றோசை
யழுத்தியதோர் நாற்றமைந்தும் புலனாகுஞ் சீவ
ஞாதனிய மானணுப் புற்கலன் சேதனனே
யொழித்தபசுப் பிரகிருதி சதசத்துச் சகல
னுயிர்பூமா னவ்வியத்த னுள்ளமான் மாவே. 112.

மக்கட்பெயர்த் தொகுதி முற்றும்.

---

* வயில் (பி-ம்)
‡ யித்தி யூற்றை (பி-ம்)

## மூன்றாவது

## விலங்கின் பெயர்த் தொகுதி

மாப்புலி கராளியரி மாவயப்போத் தறுகு
 மடங்கல்கே சரிநகா யுதமிருக ராசன்
கோப்பின்விலங் கரசுகண்டீ ரவமாளி சீயங்
 கோளரியை முகன்பஞ்சா னனம்பூட்கை வயமா
திப்பொறிநேர் முடங்குளையே வயப்புலி மூவேழும்
 சிங்கப்பே ராம்பூட்கை வாளமே யாளி
காப்பறுகும் யானையா ளிப்பேராங் காட்டாக்
 கவையமா வாமாவென் றியம்பினர் வல்லவரே. 113.

வல்லியம்வன் மாவேங்கை திவிபுண்ட ரீகம்
 வயவரிசித் திரகாயஞ் சாத்தூலம் வயமாப்
புல்லுழுவை மிருகாரி கொடுவரி வியாளம்
 புலிதரக்குக் குயவரி வியாக்கிரம் வியாமி
யொல்லு*வட்ட மிருபான்பேர் பல்லமெலுக் கரடி
 யுளியமே கவிழ்தலை குடாவடியென் றிருளி
பல்லுகமே தலைவிரியு மாமதன்பேர் இருச்சம்
 பாய்ந்தசச முயன்மூன்று முசற்பேர் தனரே. 114.

தந்திபோ தகங்கயங் கராத்திரிவல் விலங்கு
 சாமோற் பவம்பகடு வழுவையிபங் கடிவை
மர்தகுணி மந்தமாக் கோட்டிகரி கருணி
 மருண்மாக்குஞ் சரம்பூட்கை மாதங்க நால்வாய்
சிந்துர மதாவளங்கைம் மாக்களிறு கும்பி
 சிறுகணிதக் தாவள மூவாத்தும்பி வேழ
முந்திரதி துங்கல்கறை யடிபுழைக்கை வயமா
 வொருத்தலே ரம்பமத நிதியெறும்பி யுடனே. 115.

---

* பத்தொன்பான் பெயராம் (பி-ம்)

உடற்றுபுகர் முகங்களப காகமத தீப
முப்பலத்தி கோட்டுமா மாதிரந்தோ லாம்பல்
கடைக்கிரிக ரேணுவா ரணங்களவ ணேழெழ்
நான்காளைப் பொதுப்பேரத் தினிகருணி வடவை
பிடிப்பேர் கரேணுவுமா மதகயத்தோற் கடமாம்
பேர்யூப நாதனே யரசவா வின்பேர்
துடர்க்களபங் கயமுனியே கயர்தலை போதகமுந்
துடியடியும் யானைபெறுங் கன்றதின்பேர் தானே. 116.

தானமதா கடங்கடாங் கம்பமதப் பேராந்
தாலுமத கங்குடமத் தகங்கும்ப மாகும் [டையுமா
யானையின்கை துதிக்கைதொண்டு கொண்டலந் தொண்
மதின் கரடம்†கொடிறிணரி கவுளுமதச் சுவடா
மானமொடு பிருதுகொம்பு நவோம்புட் கரமே
மதக்கைநுனி யாமெயிறு கோடுதந்த மருப்போ
னேயில்கொம் பாம்பூண்கிம் புரியாகும் பட்ட
மோடையாஞ் செவியடிகு ழிகைகதுப்பாங் கடமே 117.

கடைக்கணிரி யாணம்மாம் பல்லடி கரீரங்
காங்கியும்புட் கரமுமாங் கைநீர் விலாழி
தடுக்குமுன்கா 'லங்கிதங்காத் திரம்பின்கா லாரக்
தாலவட்டம் வால்வாலி னுனியேவே சகமாம்
படுத்தமுத்து சேமஞ்சா மதிஞெய்பா கலமாம்
படுகுழிப்பேர் பயம்புகொப்பம் வாரியாங் கூட்டம்
மடிக்கடக மாந்துயிலு மிடமே சேவகமா
மதின்கூடப் பேரோளி வாரி யாலையமே. 118.

ஆலதிகர் தாசிசயிந் தவங்கவனி யிவுளி
யத்திரிகந் திருவமரி கோடையுன்னி பாய்மா

† கோடிணரி (பி-ம்)

வாலியயச் துரகதம்பா டலம்பரிமண் டிலமா
வாசிகொக்கச் சுவஞ்சடிலங் கனவட்டம் வாகங்
கோலவய மாத்துரங்கங் கிள்ளைகுர கதமே
கோடகம்பத் திரிகுக்தங் கொய்யுளையே கோரக்
துலமுறு மட்டம்வே தோற்பவம்வா ரிசமே
துரகமா திகங்கற்கி சத்தியமண் டசமே. 119.

அண்டமர்க்கக் துகம்புரவி கோணங்கோ டரமென்
றூறேழு மிரண்டுமே குதிரைப்பே ரெனலாம்
மண்டுகுரங் குரச்சைகுளம் பின்பேர் விலாழி
வாய்நீராஞ் சுவல்குசைவே சகமுங் கேசரிப்பேர்
கொண்டநடை வீதிய்தா மந்திரமே சாலை
குதிரைநிற்கும் பந்தியின்பே ராதிக மாதிகமே
தண்டுபரி மாற்கமதாம் வானர மயூரஞ்
சரஞ்சசமே மல்லமெனச் சாற்றிடுமைங் கதியே. 120.

கதிசுரபி தொறுத்தேனுக் கபிலையாக் குடங்கோக்
காலிநிரை யான்குரங்கோ மளம்பெற்றஞ் சேதாச்
சுதைபதினேர் தாம்பசுவின் பேர்கபில தேனுச்
சுரபிதெய்வப் பசுவாகும் காலிதொறுக் கோட்டஞ்
சிதகினிரை காலேயம் பசுக்கூட்ட மைந்தாஞ்
செருத்தன்மடிச் சுவைரீன்பை பீனசமு முலைப்பேர்
வதிகிருட்டி பத்திரைவற் சலமீன வீற்று
மலடுவற்சை யார்தன்னம் வற்சமுங்கன் றுமே. 121.

கன்றுத கரையிறல் சேப்புல்லம் பூணி [யான்
காளைகுண்டை விடைபாண்டில் புங்கவங்கோப் பதி
குன்றுத தூர்வகமே றிடபகந்தி கூளி
குத்தந்து ரியம்பாறல் கொட்டியமே மூரி

சென்றோடும் பகடுபெற்ற மெருதுனா லாருந்
திமிலிமிலக் கேழுரிப்பாங் கார்ழுரி மேதி
மன்றூருங் கவரிகா சாமயிடங் கவைத்தாள்
வடவைசவு ரியங்காரா னெருமையின்பேர் பகரே.122.

பகடுமயி டங்கிடா வின்பேர்மை மலடாம்
பள்ளைமறி யொருத்துருவை யயமேடம் வருடை
தகருணை ‡மேழகத்தண் ணகங்கிடாய் வெள்ளை
சகஞ்சாக முதள்கார்வற் காலிதுள்ளன் மோத்தை
யுகழ்புருவை செச்சைமே டகங்கொச்சை யசமை
யுடுத்துருக்கம் பளம்வெறியே ழகங்கொறியாட் டின்
அகழ்சரபம் வருடைவரை யாட்டின்பேர் சோர [பேர்
னணங்குகுட்டன் மறிபறளுங் குட்டியின்பேர் கருதே.

கருமாவல் லுளிகோல மைமாக்கு ரோட்டுக்
களிறுபோழ் மாக்கனலி கோணிவன்றி கான்மா
விருளிபூ தரமுந்தூழ் போத்திரி வராக
மெறுளிசூ கரமோழ லிரணிகிடி கிருட்டி
யரியேனங் கோட்டுமாக் கிருகிடிகே ழலுமே
யடும்பன்றி காலேழ்பேர் சல்லமுணமா மூளவு
தரிசலஞ்சல் லியஞ்சல்லி யெய்முள்ளஞ் சலவஞ்
சல்லவமுட் பன்றியதின் முட்சலலஞ் சலமே. 124.

சலிப்பில்சீ கரஞ்சவரஞ் சமரியன்ன மெகினம்
சவரிமாக் கவரிமா மானமாப் பட்டம்
வலிப்பின்மரை சாமரைப்பே ராவிதங்கான் குதிரை
மரையாகு மருணமறி யுழையேணன் ஞுனன்
குலைப்பில்பிணை சாரங்க மிரலைநவ்வி மிருகங்
குரங்கமே வற்லைசயமான் பன்னிரண்டாங் கருமான்

‡ மேழகத்திண் (பி-ம்)

கலைப்பேராங் கலையிரலை *வற்சையம்புல் வாயசம்
கத்திரங்காத் திரங்கிரி கலிலன்றீர் வையுமே. 125.
வயமூறுமத் திரிகோகு கரங்காள வாயே
வாலேபங் கருத்தவம்வே சரிகமுதைப் பேரா
மியலுறுகோ வேறுகழு தைப்பேர்வே சரியா
மிரவணத்தா சோகநெடுங் கழுத்தல்கன கதமே
யுயருறுமத் திரிகரப மொட்டகத்தின் பேரா
முக்குரோட் டோரிகோ மாயுவொண்ட னிகல
னயருள்ளான்$றாங்கிசம்பு சிருகாலன் †சுண்ட
ஞக்கினிகி தம்பூரி மாவோடி நரியே. 126.
சரமிருகம் பிலவங்க மந்திகவி வாலி
சகையிவா னரஞ்சாகா மிருகங்கோ டரமே
யரிகடுவன் பூகங்கா னவிஞேத ஞக
மாடும்வலி முகமதிச்சங் கீசகமற் கடமே
யுரகிரத்தங் கோகிலங்கா னவன்மூவேழ் குரங்காம்
பூகங்கா ருகமிரண்டுங் கருங்குரங்கா மோரி
கரிமுகன்கோ லாங்கூலங் கலைகூலங் கடுவன்
கள்வனே மைம்முகமெட் டாமுசுவென் றோதே. 127.
ஓதிவிட ருகங்கடுவன் வெருகலவன் பூஞை
யொண்பூசை மார்ச்சாலன் மண்டலி விலாளம்
பாதகஞ்செ யெலிப்பகையிற் புலிபவணம் பாக்கன்
பதினுலும் பூனையின்பேர் மிருகமத நரத்த
மாதுருக்க நானமான் மதமெனும்பே ரைந்து
மருவளர்கஸ் தூரியின்பேர் மறுவிமறி நாவி
மோதியபேர் மூன்றுபுழு குப்பூனைப் பேரா
முசலிகோ தாவுடும்பின் பேர்தடியு மாமே. 128.

---

* வச்சையம்புல் (பி-ம்) $ மாங்கிசம்பு (பி-ம்)
† சண்ட (பி-ம்)

தடுஞமலி கிழ்ச்சென்னி பற்காட்டி நாக்கி
சாரமே யன்பட்டி குக்கல்குரை முகனே
முடுவல்கூ ரன்சுணங்கன் ஞாளியக்கன் சூரன்
முடுகெகினம் பாசிசுன கஞ்சுவாச் சுகினம்
விடுபுரோ கதியிருபா ஞயின்பேர் கொககும்
விருகமுஞ்செந் நாயின் பேர் மூஞ்சூறுசுண்ட
னடுசூறன் சுந்தரியுஞ் சுவவுமா முறுத்தை
யணிற்பேராம் வெளிலும்வரிப் புறமுமாந் திருவே. 129.
திருகல்சாய் மதங்காம ரூபிகா முருகி
சிகிப்பகைதண் டாசமோ *ஞேனுந்தி யோதி
சரடஞ்சா யணங்கோம்பி முசலியோந் தியின்பேர்
சார்கருப்பை யாகிரும்பன் சிகரியெலி வகுப்பாங்
கருவிருட மூடிகமா கிருந்துருத்துர் தளமே
கனகதமும் பெருச்சாளிப் பேர்குரங்கு மாமான்
மிருகம்விலங் கின்பொதுப்பேர் கணங்குலம் வியூகம்
விருந்தஞ்சா லங்கூட்டம் யூகஞ்சே கரமே. 130.
சேகரத்தி லேறும்பல் பகடோரி கலைமாச்
சேவல்போத் தொருத்தல்களி றுதழ்கண்டி மோத்தை
வேகமுற்ற தகர்கடுவன் போதகஞ்சே விரலை
விலங்கினாண் பேர்பிடிபி ணைமந்தி பெட்டை
நாகுபிணை பாட்டிபெடை §பேடுகட மையும்பெ
ணாமமாம் பறழ்பிள்ளை †குஞ்சிகன்று பார்ப்பு
வாகின்மறி குருளையுங்குட் டியின்பேராங் குருத்து
மருப்புலவை சிருங்கங்கோ டைம்பேராங் கொம்பே.
கொம்பிலா மிருகப்பேர் குமரமே மையுமாங்
கூலம்வே சகந்தோகை வாலிலாங் குலமும்

---

* ஞேனுத்தி (பி-ம்) † குழவி கன்று (பி-ம்)
§ பேடுசெட (பி-ம்)

வெம்புவா லதியுமாம் வாற்கீழே பிருட்டம்
வெருகமாம் பீலிமயில் போத்தெழால் சேவ
லம்பறவை யாண்பேராம் பேடுபெடை பெட்டை
யளகுபுள்ளின் பெண்பேராங் குஞ்சுபிள்ளை பார்ப்பு
செம்பறவைக் குஞ்சியின்பேர் தொழுதியதின் கூட்டஞ்
சிறகடித்த லோசனித்த றுழனியொலிந் தாக்கே.

தாக்கியன்புள் ளுவணன்கீர்த் தனன்பறவைக் கரசு
சற்பாரி ககபதிகா காசனனே வயினை
னேர்க்கலுழன் வயினதே யன்கருடன் பேரா
மெகினமோ திமமஞ்சம் விகங்கம்வக் கிராங்கர்
தேக்கன மராளமெழு பேரன்ன மதற்காஞ்
சிம்புள்சா†ழுகம்வருடை சம்பரந்து ரோணம்
மார்க்குமட்ட பதியெண்காற் புள்ளுடன்வா ருண்ட
மவைசரப மாமசுணப் புட்பேர்கே கயமே. 133.

கேகயஞ்சி காவளம யூரமஞ்ஞை பீலி
கேழ்ஞமலி சிகண்டிகலா பஞ்சருணி நவிரந்
தோகைபிணி முகமொகரஞ் சிகிமயிலீ ரேழாந்
தூவிசந்தி ராங்கமணி கூழைதொங்கல் சருண
மேகநிறப் பீலிகலா பந்தோகை சிகண்டம்
வேசகங்கூந் தலுமயிலி னிறகாகு முருந்தென்
றுகுமதன் முள்ளின்பேர் குரலேங்க லகவ
‡லாலவெழா லியன்மயிலாட் டெனகேமித் தனரே.

நேமியா னையிருஞ்சி சக்கரமே கோக
கோரனைக் குருகுகொம்பி சக்கரவா கப்பேர்
காமகா களம்பரபுட் டம்பிகமே பிகத்தி
களகண்டங் கோரகைகோ கிலங்குயிலின் பேராம்

---

† ழுவம்வருடை (பி-ம்)
‡ லாலவய ருதன்மயிலாட் (பி-ம்)

ஊமன்கோட் டான்குடிஞை கௌசிகமே பெரும்பு
ளூலூகலங் கூராளிசா சரிகூகை யதின்பேர்
சோமனிலா முக்கிபோ தகைசகோ ரமதாங்
கூக்கணங் குரீஇசிதக னெனும்பேர்சார்ங் தனவே. 135
சாரங்க மென்பதுசா தகப்புள்ளாங் கரடங்
தனியரிட்டம் பிள்ளைகொடி காரிபுட்டங் காகம்
கூருங்காக் கையின்பேராம் வாயசமூ மதற்காம்
கொண்டகா கோலமண்டங் காக்கைப்பே ரர்க்கங்
காரண்ட நீர்க்காக்கை குக்கில்செம்போத் தாகுங்
காரிபிள்ளை கிரவுஞ்ச மூன்றுமன்றி லாகும்
பாரின்புண் டரமுவணம் பணவைபூ கந்தி
பவணைபா சஞ்சகுந்த மெருவைகழு கிதுவே. 136.
இதற்பூழுஞ் சிரவமுமே கவுதாரி யாகு
மிகற்சேவல் வாரணங்குக் குடஞானி குருகு
புதப்படையாண் டலைகொற்றி துவசஞ்சா மப்புட்
பகுசரணு யுதமகாவா யுதங்கோழிப் பேரா
மதக்கற்கி கஞ்சரீ டங்கிகிணி வயவன்
வலியான்பேர் கஞ்சனம்பா ரத்துவா சமும்பேர்
பிதற்றுவய வன்கயவாய் வஞ்சுளன்கஞ் சனமே
பிள்ளைவயான் காரிகரிக் குருவிப்பேர் பாரே. 137.
பாரசிகை பாறுகங்கஞ் சேனமென மூன்றும்
பருந்தாம்வா னம்பாடி கம்புள்கலிங் கமதாங்
கீரமவந் திகைவன்னி தத்தைசுவா கதமே
கிள்ளையரி சுகஞ்சாரு வொன்பதுபேர் கிளிக்காஞ்
சாரிகையே பூவைநா குணவாய்ப்புள் ளாகும்
சகடம்விகங் கங்குலிங்கம் புலிங்கமூமூர்க் குருவிப்
பேரதுவா முள்ளலுள்ளான் பேராங்கூ னிருடி
பிங்கலைகின் னரமாந்தைப் பேராயுன் னுகவே. 138.

உன்னமொடு இன்னரங்கி ராமகீர்ப் பறவை
    யுக்குரோ சமுமாகுங் காளபதம் புறவம்
பொன்னுறுக ளரவதம்பா ராவதங்க போதம்
    புறவார்ந்து துணைமுமான் கபிலசமே குறும்பூழ்
தென்னுறுகா டையின்பேராந் திகத்திரி$தித் திரியே
    சிரல்கவுதஞ் சிச்சிலிமீன் கொத்திபொன்வாய்ப்புள்ளா
மன்னுசெவ்வற் குருவியின்பேர் சில்லைபகண் டையதாம்
    வருடம்புள் ளோடுசெலாங் கமும்பொய்யாப்.புள்ளே.

புட்கரம்வண் டானஞ்சா ரசஞ்சிகரி தாளி
    போதாப்பி தாக்குருகு காரையின்பேர் குரண்டங்
கட்குருகு பகம்வலா கமுங்கொக்கின் பேராங்
    காதம்பம் பூழான்கா ளுங்கோழிப் பேராம்
வட்குசம்பங் கோழிகம்பு ளார்துரிஞ்சில் வாவல்
    வெளவாலஞ் சலிகையா லாலமுமற் றதற்காம்
வெட்கியவிந் திரகோப மீயன்மூ தாவா
    மின்மினிப்பேர் கைச்சோத¶நித்திலெனவழியே. 140.

அறுபதஞ்சி லீமுகஞ்சஞ் சரிகமா மதுப
    மரிசூதம் புண்டரிகம் வரிகமுது ஞிமிறு
பொறியளியீ மதுகரங்கே சவம்பிருங்கஞ் சரகம்
    புட்பிரசம் பிரமரஞ்சஞ் சாளிகங் கண்ணுசி
துறுமலர்க்கேள் சாரங்கங் கரும்புமந்தி கீதம்
    சுரும்புகே சரங்கண்டந் தும்பிவரிக் கடைதேன்
சிறைவண்டாஞ் சிமிலிசில் லைசில்வீ டுநெடி
    சிதடிசலா பம்பதங்கம்*சில்லிசைவிட்டிலுக்கே. 141.

---

$ திக்திலியே (பி-ம்)
¶ நுளம்பு நித்திலறியே (பி-ம்)
* சில்லிகைவிட் (பி-ம்)

விட்டறுளம் பஞுலமச கந்துள்ளல் சலவல்
வெவ்வொலுங்கு மற்கூற வொடுமொன்னல் கொதுகாம்
பட்டசகுர் தங்குடிஞை குருவிபக்கி விகுரம்
பதங்கம்விகங் கஞ்சகுனம் பிணிமுகம்புட் போகில்
கட்டியபத் திரிவயினம் புலிங்கமே யக்கங்
சகன்குரீஇ பறவையின்பேர் சினைகருப்பீன் வரிட்டம்
முட்டையுடன் கோசமண்ட மாந்துண்டஞ் சஞ்சு
மூக்கலகு சுவவுமாஞ் சச்செனவும் பறையே. 142.

பறைசதனங் குரல்வாசங் கூழைசிறை சேதம்
பத்திரமே தோகையிறை தூவிபிச்சங் கூர
விறகுபக்கஞ் சதஞ்சிறகின் பேராகுஞ் சிகடை
இறும்பழலி யூர்மிருகம் பீலிகைசு†லோக
முறைவிபிலன் கண்மூக்கி யெறும்பின்பே ரொன்பா
னுலூகைகர வான்சிலம்பி சிலந்தியின்பேர் தெறுக்
முறுகுவிருச் சிகந்துட்டன் விடகளிதே ளாகு [கான்
மூகடேமற் குணமூட்டை குடவனும்பன் னுவரே. 143.

பன்னகமண் டலிபோகி யகிமிருக நாகம்
பாந்தள்விட ருகம்புயங்கம் சக்கிரிம ராவந்
துன்னரவு தாசனன்கட் செவிதந்த சூகஞ்
சூரிபவ னாசனங்கஞ் சுகியரிவி யாளங்
குன்னுரகங் காத்திரவே யன்பணி விகாதங்
கூடபதம் விடதரங்கா கோதரமா சுணமே
யன்னியங்கும் பீனசமண் டசம்பணங்கா ரீச
மங்கதங்கா லிவிசர்ப்ப மாறுறும் பாம்பே. 144.

பாம்பினுட்குக் குடசற்பங் குடசற்பம் பறவைப்
பாம்பாமி ராசிலத்துண் டமுஞ்சாரைப் பாம்பாங்

---

† லோப (பி-ம்)

கூம்புகரு வழலையின்பே ரிராசமந்த மாகுங்
கோளகைமண் டலியாகு மூர்க்கனே நாகந்
தேம்பெரும்பாம் பேபாந்தண் மாசுணமாம் விரியன்
சிறுபாம்பாங் கண்கொத்தி மாலுதா சனனும்
தூம்புதட்டம் பைகாறு பற்கட்டா முத்தி
துத்திபொறி பணம்பைபட நாக்கவர்நா னிலத்தே.

நிலவேர்கூழ் நன்னுகம் பூநாக மாகு [கும்
நிரைக்கறையான் ‡சிதல்செல்லா முழுவுசுமெவன் று
பலிதம்பொங் கிற்கோதாக் கோகிலமே புள்ளி
பல்லிகெவு ளியின்பேரா ரெளிவட்டை செழுகஞ்
சிலதுநா கரவட்டை நொள்ளையதா மாழல்
சிதலாகு மீனிநா குணிகிருமி கீட
மூலையுமெலும் பிலிபொட்டுப் புழுவின்பேர் கிளிஞ்சி
லூமையெருந் தேரல்பிண்ட மிப்பிசிப்பிக் குறுமே.

உறுப்படக்கி துளிகூர்மங் கச்சபமே கம—
மொடுங்கியா மையின்பேராங் கரவுகரா விடங்கர்
கறுத்தவன்மீன் கிஞ்சுமார முதலையினபே ரலவன்
கள்வனு மதிநெண்டு கவைத்தாள்கற் கடக
*நிறுத்தகுளிர் ஞெள்ளிநள்ளி யிடுக்கிநண்டின் பேரா
நீகமரி மரைதேரை தளர்நுணன்மண் டூகந்
துறுத்துசரி சபந்தவளை யாம்வட்டி யலகு
சோகிபல கறைகவடி வெள்வரியும் பணியே. 147.

பணிலம்வா ரணநாகு சுரிமுகங்கோக் கரைகூன்
பாலிவலம் புரிகோடு வளைநந்து நத்தை
தணியுமிடம் புரிநத்தங் கம்புவெள்ளை சங்கஞ்
சலஞ்சலமே சங்கின்பே ரிப்பியாயி ரஞ்சூழ்ந்

---

‡ சிதலை செல்லா (பி-ம்)   * நிறுத்துகுளிர் (பி-ம்)

தணியுமிடம் புரியாகு மிடம்புரியா யிரஞ்சூழ்க்
  தத‌னைவலம் புரியென்பார் வலம்புரியா யிரஞ்சூழ்
மணிவளையே சலஞ்சலமாஞ் சலஞ்சலமா யிரஞ்சூழ்
  வளைபாஞ்ச சன்னியமென மொழிவர்கலை ஞோரே. 148

கலைமகர மான்சுறா மீனேறுஞ் சுறவாங்
  கயல்சபரஞ் சேலாங்கெண் டையின்பேர்வ ரான்மீன்
மலையிரு விறலாகுங் கெடிற்றுமீன் கெளிறு
  மலங்கின்பேர் நுறையதா மாரலா ராலாஞ்
சலசரமீப் புழல்வகுலி மயிலைக்ஷீபட்ட மச்சம்
  சவலைசம்பை புழன்மீன மீன்பொதுப்பேர் பத்தாஞ்
செலுமானை மீன்றிமியம் மீனைவிழுங் குவது
  திமிதிமியம் மீனையுண்ணுந் திமிங்கிலஞ்சக் ததமே. 149

மூன்றாவது விலங்கின் பெயர்த் தொகுதி முற்றும்.

## நாலாவது

### மரப் பெயர்த் தொகுதி

சந்தான தருவுமரி சந்தனமும் பாரி
    சாதமுமந் தாரமுங்கற் பகமுமெனத் தருவோ
ரைந்தாகு மலயசஞ் சந்தாரமே சந்த
    மாகுதிதண் வாசிலே பனம்பூசல் சாந்தம்
* பந்தான சாந்தொடேசந் திரதிலகஞ் சாந்துப்
    † படிவிரைய டீரமுஞ்சந் தனமரப்பேர் ‡பிசினங்
கந்தார்செஞ் சந்தனமா மகிலகருப் பூழிற்
    காகதுண்ட மாந்துருக்க மரவமுங்குங் குமமே. 150.

குமைதருமோற்§பலங்குயரு பிணிகன்னி காரங்
    கோங்கின்பேர் பிணருமாம் வகுளங்கே சரத்தோ
டமையிலஞ்சி மகிழ்மரப்பேர் பாடலம்புன் காலி
    யவையிரண்டும் பாதிரியாஞ் சண்பகஞ்செண் பகமாங்
கமழ்சிறுசெண் பகஞ்சாதி மாலதியென் றிரண்டாங்
    கருமுகைபித் திகையாகுந் திலகமஞ்சா டியதாம்
சமிகலிச நெருப்புவன்னி குலிசமுமா மனிச்சந்
    தருப்பலம்புன் காலியாங் குருந்துகுந்த மாமே. 151.

ஆமலக நெல்லியின்பேர் கடுவேபத் தியமு
    மரிதகியு மாந்தான்றி கலித்துரும மாகுங்
காமரம்வா ஞேங்கிபழு மரநியக்கு ரோதங்
    காணுநெடு வீழிவடந் தொன்மரமே கோளி

---

* பிந்தாத (பி-ம்)    † பேசுமப (பி-ம்)
‡ பிசனங் (பி-ம்)    § பலங்குயரு பிணிகன்னி (பி-ம்)

யேழுறுமா லம்பூத மாவின்பேர் பத்தா
  மிறவிசுவி$யிரத்தியிக் திரியுமித்திப் பேராக்
தேமாசு சுவலைசரா சனமச்சு வத்தந்
  திருமரம்பிப் பிலம்போதி கணைபணைவ மதற்கே. 152.

அதமதவு கோளியுதும் பரமத்தி நான்கா
  மாரமார் சல்லதிதா தகியாத்தி நான்காம்
இதழியாக் குபதக்தா மங்கடுக்கை மதலை
  இணர்ப்பாசு பதமாறும் கொன்றையின்பே ராகும்
வதரிகோற் கொடிகோல்குல் வலியிரந்தை யாகு
  மற்றிரந்தைக் கனிகோலங் கொண்டையென லாகுங்
கதகமே சில்லமில்லக் தேருகும் பூவை
  காசையச்சி யஞ்சனிநாற் பெயர்காயா மரமே. 153.

மருதின்பே ரருச்சுனமும் † பூதவமு மாகும்
  வாசந்தி குருக்கத்தி நாகரிமா தவிப்பேர்
குருகதிமுத் தகமுமாம் ¶வைதேகி பனசங்
  கூழையா சினிசக்கை வருக்கைநத்தை யாகல்
தருபலாப் பலவின்பேர் நேரோடு நாவல்
  சம்புநவ்வ லாங்குழிநா வற்பேர்சா தவமா
முருகருணஞ் சம்பிரமம் புலிலிகுசம் ராச
  மோகிசத பலமெலுமிச் சேழ்பேர்சொன் னாரே. 154.

நாரநா ரங்கநா ரத்தையே நரந்த
  நாரலுமாம் வாகைப்பேர் பாண்டில்சீ ரிடமாம்
பூரணிசன் மலிபொங்க ரிலவின்பேர் தாளி
  புற்பதிபட் டிகைகள்ளன் போந்துபுல்லு நெடுவை

---

$ யிரத்தி யிரக் (பி-ம்) † பூதலமு (பி-ம்) ¶ வைதேசி

அதிமதுர மதுகமட்டி யதிங்கமுமா கீலி
யவுரியா கறவிலிப்பே ரலியாங்கோத் திரிகை
மதுரசமுக் திரிகையாம் வானீரம் புள்ளி
வஞ்சுளமும் வஞ்சியின்பேர் முழிஞ்சில்முன்னை யாகும்
கதலியிலை மரகவிரை திரணபதி செகுலி
காயரம்பை வாழைமரு கேமகர வாழை
விதமாகுஞ் செம்மரத்தஞ் சிவமந்தா ரமுமாம்
விருந்தம்வனம் குல்லைதுழாய் துளசிதுள விணுக்கே.

துளிரும்வலம் புரிநந்தி யாவட்ட மாகுந்
துடியாஞ்சி யேலமதாம் புனமுருங்கை புன்காந்
தளவுமா கதிமவ்வ லூதிகைகற் பைந்தூந்
தளிர்த்தமுல்லைப் பேருழிஞை சிறுபூளை யாகுங்
குளிர்குளவி பனிச்சைமலைப் பச்சையா மிசங்கு
குண்டலிமுத் தாம்பலுமாம் பானுவருக் கெருக்கா
மளிபயிலும் பலினிஞா ழலின்பேர்பா லிகையே
யடம்பாகுஞ் சித்திரமே ரண்டமா மணக்கே. 163.

மணத்தமா லதிமவ்வல் புருணமனங் கமுமே
மல்லிகைப்பேர் ‡ புட்டில்பசு நாய்ப்பிராய் புக்காங்
கணப்பீரம் வச்சிரமா விருட்சம்வச் சிராங்கம்
கள்ளியின்பே ரிந்திரகு ரியஞ்சிந்து வாரந்
துணுக்குறுநிர்க் குண்டிநொச்சிப் பேராந்து ரோணந்
தும்பையாம்§குருஞ்சனஞ்சிற் குருமுருங்கை யாகுங்
குணத்துடிகூ தாளங்கூ தாளிகூ தளமாங்
கோதிகோ தும்பையதாம் பாயசம்பாற்சொறியே.164.

சொறிமூலி கண்டூரங்காஞ் சொறியாகு மத்தந்
தூர்த்தூர மதுமத்த மருணமத்து மத்தா

‡ விட்டில் பசு (பி-ம்) § குருஞ்சினஞ்சிக் (பி-ம்)

நறுமருப்பாத் திரகமல்ல மிஞ்சியாக் தேறு
நன்னிசிபீ தகங்கதலி யரிசனங்காஞ் சனியே
செறிமஞ்சட் பேர்சுண்டி¶வேர்க்கொம்பு சுக்காந்
திட்சண மரீசங்கோ ளகந்திரங்கல் கமறி
கறிமிரியல் கலினைகா யமுமிளகாம் பத்தல்
காசைகொறுக் கச்சிசர வணஞ்சரநா ணலுமே. 165.

நாணியமா கதிகலினி பிப்பிலியே செற்ப
நாசினிகா மன்கடுகி திப்பிலிப்பே ராரும்
பூணுபகும் பிடிதகரம் பச்சிலை தமாலம்
புல்லகண்டங் கழைவேழ மிக்கிரசு தாளி
வேணுவொடு கன்னலா லையுங்கரும்பென் றாகும்
வேரிவசு வாசிபீ தகமூல கந்தங்
காணுவிரை மூலமிரு வேலிப்பேர் கவிரங்
கணவீரங் கரவீர மலரியின்பேர் மரபே. 166.

மருக்கொழுந்து தமனகமா மிருவாட்சி யனங்க
மயிலையுமாங் குல்லைகஞ்சம் பங்கிகஞ்சா வாகும்
பருத்தியின்பேர் காற்பாசம் பன்னலும்பஞ் சியுமாம்
பகன்றிகிலு கிலுப்பையின்பேர் குன்றிகுஞ்ச மாகும்
மிருக்கரிகத் தரிவங்கம் வழுதிலையின் பேரா
மிதற்குவழு துணையுமாங் காரவல்லி கூரம்
விரைத்தபா கலின்பேர்கக் கரிப்பேர்வா லுந்தி
வெள்ளரிப்பே ருருவாரம் வெள்ளைகா ளிகமே. 167

காளவாபூத் தும்பிபிறக் கொடிசுரையாங் கொற்றா
னந்தையென்றாக் திரிபுரிசா றடைப்பேர்மஞ் சிகமே
தாளியின்பேர் புலிதுடக்கி யிண்டிகை யீங்கை
தானீஞ்சி லாம்பகண்டை சிவிதைசிவே தையுமாங்

¶ வேற்கொம்பு (பி-ம்)

கோளூறுமா டாதோடை வாசையாம் விரலி
  கோடைகர மலரியிலாங் கலியேகார்த் திகைப்பூத்
தாளூறுகாந் துகந்தோன்றி கோடல்காந் தளின்பேர்
  சகுடஞ்சேம் பாகும்பா விரிபசிரிக் கடைவே. 168.

அடகொடுசிக் குருவுமிலைக் கறியாகுஞ் சிலந்தி
  யமுதவல்லி சீந்திற்பேர் கமதாயந் தானே
துடருசில வாகைப்பேர் தாடிமமே சந்தஞ்
  சூட்டுசெத்திக் கொடியாகும் புட்டில்பீர் பீர்க்காம்
படலிகையு மாந்தூர்வை யிளம்புல்லே *சற்பம்
  பதம்விடா ரியுமறுகாஞ் சுருளிலைதாம் பூலங்
கொடிதிரையன் மெல்லிலைதின் னிலைநாக வல்லி
  குறித்தபா னடைக்கொடியும் வெற்றிலைப் பேர்க்
கியம்பே. 169.

இயலவையா டகம்யாம முதிரையொடு தோரை
  யேல்மிலவை துவரையாங் கடலைமஞ்சு ரமதாம்
பயறுழுந்து மாடமா முற்கமே பாசிப்
  பயறுசிறு பயறுகுந் தட்டையிதை கூலங்
கயவுறுகா ராமணியாங் குலத்தமே கொள்ளுக்
  காணமாஞ் †சிற்கடிமுற் கம்போகு சிம்பை
லியனவரை யாங்குரால் சில்லிசா கினியு
  மேகநா தனுங்கீரைப் பேராங்கன் னிகையே. 170.

கன்னிகாக் கணங்கிகிணி கருவிளையின் பேராங்
  கற்றுழை குமரிகன்னி மஞ்சியா ரலையு
மன்னுசச ரியுமாகு முருளரிசி கொற்ற
  மல்லியாஞ் சிவந்தசீ வனிபாலைப் பேராம்

---

* கற்பம் (பி-ம்)
† சிக்கடிமுற் (பி-ம்)

சொன்னகுசை குசக்குமுதங் கூர்ச்சமுந்தொப் பையதாம்
சுண்டிலின்பேர் சமங்கைசுச்சாந் தொண்டை விம்பங்
[கொவ்வை
யன்னகோ வையின்பேரா னுழில்கொடிக் கொற்று
ஞயிடும்வச் சிரவல்லி பிரண்டையெனக் கழறே. 171.

கழல்கழங்கு கச்சூர முழல்கழற்சி யாகுங்
கணமுரிவேத் திரஞ்சாதி சூரல்பிரம் பாகுஞ்
செழிலசுனங் காயமிவை யுள்ளியின்பேர் சுரசஞ்
சிறுகிழங்காங் கருணைகந்தஞ் சேனைகு ரணமாந்
தழைவரிவி ரீகிமணி மூக்கிபயிர் பைங்கூழ்
சாலிபசும்‡புலிதொலியல் சொல்வைபத்து னெல்லாம்
வழுதுவைப லாலம்வைக்கோ லமுதுபடி யரிசி
வளரரிதண் டுலமுமாந் தவிடுமுட்டை முடையே. 172.

முடுகுநொய்யே நொறுங்காகும் பதர்பதடி யாகு
மூட்டுபொழி பொங்கழியுந் தூற்றுநெற் பொலியாம்
வடுவில்போர்க்$குவைசூடு சும்மையென மூன்று
மலைநெல்லின் பேர்தோரை யைவனமாங் குளநெற்
கடுகுநீர் வாரமா மேனல்கம்பு கவலை
கங்கிறடி தினையாகு மேனல்குரல் கதிரா
நமிருவி யருவிதினைத் தாளாகுஞ் சொன்ன
னறுங்கிறுங்கு சோளமதாங் கோத்திரவம் வரகே. 173.

வருத்து மெள்ளுக் குமிகைதில மெண்ணூவு நாற்பேர்
மற்றதின்காய் கவையாம்வே யரிசிதோ ரையதாங்
குருத்தெருவை சூகரிவ ராகிசாய் முத்தங் [தியதாங்
கோரைகொறுக் கையின்பேர்வாட் கோரைசெருந்

‡ புலிசொல்லு வையொன்பா னெல்லாம் (பி-ம்)
$ குவை சூர (பி-ம்)

கரித்தகண்டல் முண்டகமே பூச்சிமுள்ளிப் பேராங்
கல்லார நீர்க்குளிரி யாசெட்டி கிடைச்சு
பருத்தசடை கிடையாஞ்சை வலஞ்சடைச்சி நாரம்
பாசியாங் காளாம்பி யாம்பியுமுண் டியுமே. 174.

முண்டகமம் போருகஞ்ச ரோருகஞ்ச ரோச
முளரிமரை சலசங்கே கயம்பதுமம் விந்தம்
புண்டரிக நளினங்கோ கனகமா லுந்தி
பூநிதிபங் கயம்வனச மம்புசம்வா ரீச
மிண்டைதிரு மனைகமல நாளிகன்னி கேந்திர
மிறும்பிவிரிஞ் சம்பகற்பூச் சகசமர விந்த
மண்டுவிதி யகஞ்சதபத் திரிபுவனங் கஞ்ச
மம்புயமுப்¶பாறுலுந் தாமரைப்பே ரிறுமே. 175.

இறும்பிரா சிலந்தளந்தா மரைப்பூவாம் பொகுட்டே
யேற்றுருட்பூக் கன்னிகைபூங்கொட்டையதாமதின்காய்
மறிந்தவரா டகம்புட்ப ராகம்திென் மணியாம்
வளையந்தாள் கொடிநாள நாற்பேரா நீல
மறிந்தகுவ லயங்கோலங் கல்லாரம் பான
லரத்தமிந்தீ வரங்குவளை காவிகழு நீராய்ப்
பெறும்பெயருற் பலமுமா நெய்தலல்லி யாம்பல்
பெருங்குமுதங் கயிரவநாற் பேரெனப்பேர் தருமே.

தருவடவி நகஞ்சாகி குசஞ்சாதி சாலந்
தாபரம்மா தவம்விருக்க மகலியமத் திரியே
திருமம்பூ தரந்தாருப் பொதும்பர்பொங்கர் பதினேழ்
சொல்லுமரப் பேர்பொழினந் தனவனமுய் யான
மரிதுடவை பூந்தோட்ட மரச்செறிவா ராம
மடவியுத்தி யானம்வன முபவனந்தண் டலைகா

¶ பாறுறுந் (பி-ம்)

முருகிரண்டேழ் சோலைக்காஞ் சகுனமொடு கந்த
மூலமிலை கிழங்காந்தூர் சடைசிவையே ராமே. 170

வேருறுமங் குரம்பொடிப்பு நாறுகான் முளையாம்
விடபங்கோடிபங்கொம்பு பணைசினைகோல் கொம்பர்
தாருவுடன் கவடுலவை கவைபொங்கர் காம்பு
தாழ்புறக்கஞ் சாய்கையுறுப் பிடபங்கோ டரமே
வாருலவு தழைகப்புக் கொப்பின்பேர் நூழில்
வள்ளியிரத் தியிலதை வல்லிகொடிப் பேராஞ்
சேருமரி கலைகாழ்ப்பு கரிகாழா சினியுஞ்
சேகுவயி ரமதாகும் பொந்துபொள்ளல் பொய்யே.

பொய்யாத தலந்தகடு பன்னமடை யோலை
புல்லுலவை சாய்கைசத னஞ்சதம் பலாசு
மெய்யார்பத் திரந்தழைத மாலமிலைப் பேரா
மென்கிசலை குழைகிளைவல் லரிமுறியே யலங்க
லெய்யாத மஞ்சரிபல் லவமும்பூந் தளிர்ப்பேர் [த்தலுமே
இலிர்த்தல்சிலிர்த் தலுந்துளிர்த்தல் கிளைத்தல்குழை
கொய்யாது தளிர்த்தலின்பேர் வனன்பயினே முருந்து
குருத்துமுதற் செறியாணி பிசினுமதன் முகிவே.

முகிழுஞ்சா லகம்போகி னனைமொக்குண் மொட்டு
முகிழ்கலிகை கோரகமே முகைமொக்கை யரும்பா
மகனுமலர் தாமமிணர் துணர்புட்பங் குசும
மலர்போது சுமனசந்தார் வீயும்பூப் பொதுப்பேர்
தருகண்ணி துணர்தொத்து மஞ்சரிபூங் கொத்தாந்
தாதுமக ரந்தங்கே சரங்கொங்கு மலர்த்தூண்
மகரமும்ப ராகமுமா மவிழ்தல்விள்ள னெகிழ்தன்
மலர்தல்வெடித் திடல்விரித லுடைதலலர் தலுக்கே. 180

அலரினல்லி யகவிதழாம் புல்லிபுற விதழா
மயர்பழம்பூத் தேம்பல்செம்மல் சாம்பலுமா மேடு
மலர்தகடு தோடுமடல் பூவிதழாம் பிஞ்சு
வடுக்காய்நீ விளியுமாம் பலன்கனியே பழமாம்
பலனதின்றோல் செதிளாகுங் காழ்கொட்டை பீசம்
பரல்விதைவித் தாங்குச்சம் படுச்சாறு தாறு
குலைகுடும்பு காய்க்கொத்தாம் பலனங்காய்த் ததுவாம்
கொடுமபகே சிகைவடுகு பழிபலனி லாதே. 181.

பலிதமில்பூ வாக்காய்க்கு மரங்கோளி வானப்
பத்தியமா முலர்ந்தமரம் வானமெனப் பேரா
மூலமடவி யாரணியம் வனந்தாவம் புறவ
முயர்தடகி கான்கடறு காந்தார மத்தம்
திலமுளரி சுரங்ககனம் பழுவம்விடர் காண்டக்
தில்லங்கா னகம்வல்லை கானல்கடங் கானக் [களரி
தொலைவில்பொச்சை குறும்பொறைகண் டகங்கல்லி
துருக்கமே கட்சிமுப்பா ளொருபேர்காட் டினுக்கே. 182

காட்டுநிறை தூறுகுன்மம் பஞ்சி செடிவிடபங்
காணரியல் சிறுதூறும் பதுக்கையுற விறலாம்
வீட்டுகுறுங் காடிறும்பாம் வல்லைபெருங் காடாம்
விளையரண்கா வற்காடாம முதையுலுதிர் காடாம்
பூட்டுதிக மிளங்காடாங் கரிகாடு பொச்சை
பொதிசுரமும் பொரிகாடாம் பொச்சைவே லியின்பேர்
கூட்டகக்கா ழாண்புறக்காழ் பெண்ணுகும் வெளிறு
கொடுவேலலி யாங்கடுக்கண் டகமிரண்டு முள்ளே. 183.

முளரியறல் $ சமிதையெரி துரும்புசுள்ளி ஞெகிழி
முடுகுசிரா யிலகுகட்டை யிந்தனமே காட்ட

$ சமிதையரி (பி-ம்)

முளர்முருடு விறகின்பே † ருரையதிங்கங் குளியம்
யோகமூ லியுமருந்து மௌடதத்தின் பொதுப்பேர்
தளர்வறுசல் லியகரணி கருவியின்புண் ணாற்றல்
சந்தான கரணிதுண்டம் பொருத்தலாம் விரணக்
களையொழித்தல் சம்மான கரணியதா மூர்ச்சை
களைந்துயிரீ குதலமுத மமுதசஞ்சீ வனியே. 184.

வனைதாம மலங்கல்சிக ழிகைகண்ணி யணியல்
மாலிகைதார் மஞ்சரிகத் திகைபடலை மிலையல்
புனைகோதை சுக்கைவா சிகைதொங்க லொலியல்
பூந்தெரியல் பிணையலிலம பகந்துடரே சுருங்கல்
நினைவாகுந் தொடையிருபா னிரண்டுமா லையின்பேர்
நீடுமிலம் பகஞ்சூட்டு நுதலணியென் றாகுஞ்
* சினையாகும் வாசிகைப்பேர் படலைசிக ழிகையாஞ்
செயம்பெற்றோ ரணிவதுதான் வாகைமா லிகையே. 18

நான்காவது மரப் பெயர்த் தொகுதி முற்றும்.

---

† ருரையதகங் (பி-ம்) * சினையாரும் (பி-ம்)

## ஐந்தாவது

### இடப் பெயர்த் தொகுதி.

மாலிலா னந்தநில கிருவாணம் வீடு
வாழ்சிவங்கை வலஞ்சித்தி முத்தம்வீப வருக்கங்
காலுமுத்தி கேவலம்பஞ் சமகெதிமீ ளாத
கதியமுத மோக்கமுமோட் சமதாகு முவணே
மேலுலகு கோவில்வா னகம்புவனஞ் சுவர்க்கம்
விசும்பும்ப ருயர்நிலையுத் தேனுலகு கற்பம்
சிலவிமா னமுந்தேவ லோகமதாஞ் சேடி
சேணிவிஞ்சை யூர்பவண நாகருல கதுவே. 186.

அதமதோ கதிபிலம்பா தாளம்பா தலமா
மளறுகும்பி சிறையிருளா விரமூழல் பூதி
* புதவுசுவப் பிரகரகந் திகிரிதுர்க்க நிரையம்
புலவுநார கம்பவர்க்க மள்ளலிவை நரகா
¶ முதுவிசும்பம் பரமுலகு தேர்திசைகோக் ககுப
முகமரித மாசைமா திரம்புலமே காட்ட
மிதுதிக்காங் கிழக்குப்பூ ருவங்குணம் பிராசி
யிந்திரியே குணக்கிரவி யோனிகீழ்த் திசையே. 187.

திசையினிற்சி வேதைதெற்குத் தெக்கணமே வாசி
தென்றிசையா மமுமாம்பச் சிமங்குடக்கு †மேன்மேற்
‡ குசிதமுறு பிரத்திசைவா ருணங்குடமேல் திசையா
முத்தரமு தீசியுதி யுதக்குவட திசையாம்
வசுதைமே தினியுலகு தலம்புடவி தரணி
மண்கிடக்கை தரைபாலம் பிருதுவிகா சினிபூ

---

* புதவசுவப் (பி-ம்)
¶ முதிர் விசும்பம் (பி-ம்)
† மேற்கோ (பி-ம்)
‡ குசிதமுறு (பி-ம்)

அசலைதாத் திரிநகந்த § ராதலங்கோ விபுலை
யம்பரியம் புயகாக தாரையுகம் புவியே. 188.

புவனிதரித் திரிசகமண் டலஞாலம் வையம்
புவனமக விடஞ்சாந்தை மகிநேமி பாரி
பவனம்வசு மதிவிசுவம் பொழில்வேலா வலயம்
பாத்திபம்வை யகமிம்பர் படிதாலம் பொறையே
யவனிதா ரணிபணைசக் கரநிலங்கோத் திரிபா
ரளக்கர்வசுந் தலையிகம்ப ளுதரிதா பரமே
குவலயமா $ திரந்தரைபூ தலந்திணைபூ தியமுங்
குவ்வுமறு பத்தாறும் பூமியின்பேர் காடே. 189.

நாடுகண்ட நீவரமண் டலமேணி தேச
நல்லமுவஞ் சனபதம்பை திரமுலகு பாண்டில்
கூடுசும்மை தண்ணடையே பொழில் *பதினான் காகுங்
குறிச்சிநிலம் பட்டினநி வேசனஞ்சம் வாகம்
பாடிபுரம் பூண்டிவே சனநியமம் பாக்கம்
பதிநகர்வைப் புறையுள்குறும் பகரநொச்சி வேலி
கேடக நிகாயஞ்சோ † பணமுட்டம் வசதி
கிளர்சேரி பூக்கம்பூ ரியம்வாழ்க்கை குடியே. 190.

குடிக்காடு புரியருப்பம் பக்கணங் கிராமங்
குலைகமடம்பம் பள்ளிகோ சர்ங்கற்பம் பாண்டி
படப்பைதா வளநிலையங் குடம்வாசஞ் சரணம்
பாழிசும்மை கறுவடம்பேட் டகலுள்பட்டி யிருக்கை
இடத்தாமங் கடைகரங் குலங்குப்பங் கோட்டஞ்
‡ சேர்வுவாழ் வறுபானென் றுகுமூர்ப் பொதுப்பேர்

§ ராதரங்கோ (பி-ம்) $ திரந்தறைபூ (பி-ம்)
* பதின்மூன்றாகும் (பி-ம்) † பானமுட்டம் (பி-ம்)
‡ சேர்புவாழ் (பி-ம்)

தடக்கிரிசார் குறிஞ்சிசுரஞ் சார்பாலை காடு
சார்முல்லை காடுசார் மருதநெய்தல் கடலே. 191.

கடகமுவ ளகஞ்சால மோதையெயில் வரைப்புக்
காப்பரண்வெண் ணகையகப்பாப் புரிசையிஞ்சி யாரை
தடமதில் வளாகமொச்சி யாரல்சிறை வேலி
¶ தளிவேதி பிரகாரம் வாரியுடன் கோட்டை
துடர்வளையம் §வேங்கைசுற்றின் மதிற்பேர்நா லேழாங்
தோணிவிதப் பெக்திரவகோ சந்தகைப்பு நாஞ்சில்
படர்ஞாயின் மதிலுறுப்பாங் கிடங்கோடை யகப்பாப்
$ பத்வுடுப்பாம் புரிகேணி பரிகமகழ் வாயே. 192.

வாயில்கடை புழைதோட்டி தூம்பொடு வாரம்
வாரியும்வா சற்பேராங் கோபுரநீள் வாயிற்
சேயபெரு வாயிலுமாம் புதவுகுறும் புழையே
இட்டியின்பே ராம்வாசற் * படிகருக்கு ககமாம்
பாயும்வழித் திண்ணையின்பே ரளிந்தமா[illegible]தணம்
பரிகமுழுப் பரிகையகப் பாவுமே டையின்பேர்
சாய்விலர மியநிலா முற்றப்பேர் மானஞ்
சமத்தமும் வேரமுமாகு மண்டபப்பேர்ப் பொதுவே. 193

பொதிமன்றம் பலமன்றம் பொதுசபையாந் தெற்றி
பொற்சாலை யம்பலஞ்சித் திரகூட முப்பேர்
விதிதரணி வேத்தலையத் தாணியரண் மனையும்
வேந்திருக்கை யாங்குலமா ளிகைபவனஞ் சால
மதியதிரு மனைகோயி லரசுரிற்பேர் பள்ளி
யறச்சாலை யறப்புறமு மாந்தளியே சாலை
மதிகோட்டஞ் சேதியஞ்சன் னிதிநிலையங் கோயின்
மந்திரநி கேதனந்தே வாலயப்பேர் சேரே. 194.

---

¶ தழிவேதி (பி-ம்) § வேங்கைசுற்று (பி-ம்)
$ பகவுடுப்பாம் (பி-ம்) * படிசருக்கு (பி-ம்)

சேர்புவயின் பாத்திமா ளிகைமாடம் புக்கில்
செறிவசதி யிடவகைமந் திரமுறையு ளில்லஞ்
சாருமனை யகமில்லென் றீரேழும் வீடாந்
தாழ்குச்சிற் குரம்பைபுரை கூரைசிற்றில் குடிவா
மாருறையுள் கந்தவா ரமுமந்தப் புரமா
மட்டிலடுக் களைபாக சாலையுஞக் கோட்டம்
கூர்மடைப்பள் ளியின்பேர்குட் டிமம்படுத்த பூமி
குறடுதிட்டை மண்ணீடு திண்ணைவே திகையே. 195.

வேதியே யோமகுண்ட மாம்பள்ளி பாழி
வியன்மடந்தா பதங்காண்டை முனிவரிருப் பிடமா
மோதுமிறை * வளவீட் டிறப்பாகும் விடங்க
முகடாமங் கணமுன்றி லின்முனுமுற் றமதாம்
பாதியா ரோகணஞ்சோ பானந்தாழ் வாரம்
படியுமாங் கலனிருக்கை பண்டசா லையதாம்
காதுசுவர் பித்திகைபல் கணிகுறுங்கண் சாலம்
காலதர்வா தாயனமே சாளரஞ்சா லகமே. 196.

சாலமுயர் சலதாரை யங்கணந்தூம் பாகுஞ்
சாட்டுக்கா மரஞ்சுல்லி † குமுதமுக்கூட் டாய்தம்
தூலமுத்தா னமுமடுப்பாங் கலன்கள்சுடு பூமி
சுள்ளையதாந் தக்கசமே சதுர்க்கையதாஞ் சந்து
மூலைமுக்குச் சந்தியின்பேர் கோணமுடுக் காகு
முச்சந்தி யந்திசிருங் காடகாற் சந்தி
கோலியிடு சுருங்கைகன்ன வாசலின்பேர் புகலே
குதிரின்பேர் பாடிபா சறையுமுனைப் பதியே. 197.

பதியுறையூர் கோழியதாங் கஞ்சிகச்சி காஞ்சிப்
பதியாகுங் காளகங்க டாரமாங் கூடல்

* விளவிவீட் (பி-ம்) † முக்கூட்டுக் குமுதம் (பி-ம)

மதுரையாங் காவிரிப்பூம் பட்டினம்பு காராம்
வஞ்சிகரு வூர்வேறு வனசெல்லை யாகு
மிதுலைவிதே கைப்பெயரான் கோசலைசா கேதம்
விநிதையயோத் தியின்பேரா மவந்தியுஞ்சை யாகு
நதியினவி மூத்தம்வா ரணவாசி வார
ணாசிகா சிப்பெயர்சிங் களமீழ நகரே. 198.

நகர்க்கூலம் பீடிகையங் காடியா வணமா
நவின்றசெரே தெருமன்ற மார்க்கநிய மமுமாம்
$ வகுத்தகுறுந் தெருமறுகாம் பக்கணஞ்சி ரேணி
வாடைபூ ரியஞ்சேடி தெருவொள்ளல் வீதி
புகுத்தவா பீனம்வே சனமாகும் பத்தும்
பொதுவீதிப் பேர்செண்டு வையாளி வெளியே
யுகற்றுதிரு முற்றமிவை புரவிவட்ட கான்கா
மடருந்தூள் பூழிபொடி புழுதியின் பேர்த் தரமே. 199.

தரணிகுன்று குவடுவரை பதலைநகஞ் சயிலந்
தாணுமா திரம்விலங்கல் விண்டுவைசயஞ் சிமைய
மிரவிபொருப் படுக்கல்பூ தரஞ்சாரல் பொச்சை
யிறும்புகுறும் பொறைநிகிரி சுரும்புபொருட் டசல
மரிசிகரம் பிறங்கல்வெற்புச் சிகரிசிலை நாக
மத்திரித ராதரஞ்சி லோச்சயம்வே தண்டங்
கிரிதடங்குத் தரம்பொங்கர் மந்தரங்கற் பறம்பு
கேளிதங்கல் லகநவிரங் கனதரமோ திமமே. 200.

உதிபருப் பதம்வீரஞ், சிலம்புபொறை விசைய
*மோங்கல்பொற்றை கோத்திரிசி ராவணமே பீலி
பாதவமென் றறுபதுமே மலையின்பே ரறையே
பாறையின்பேர் கோடுகொடு முடிகூடஞ் சிகர

$ வகிர்த்த (பி-ம்) * மோங்கல்பொறை (பி-ம்)

மீதுயர்ந்த குவடைக்கு மலையி னுச்சிப் பேராம்
விவரமுழை முடுக்கர்விடர் கந்தரமே நிகுஞ்சம்
பேதமுழைஞ் சிலுங்குகைப்பே ரறையின்பேர் *முழைஞ்சு
பிலமுமா மதன்வாச னூழைசுருங் கையுமே. 201.

சுருங்குதடஞ் சாரல்வா ரஞ்சானு நிதம்பஞ்
சொன்னமலைப் பக்கமதாங் கற்பாழி பொறையே
கரண்டைதுறு கல்லாகும் வலஞ்சிலைகல் லுபலங்
கனசிரா வணஞ்சைய முலந்திரண்ட கல்லா
முரம்புபரல் பருக்கையதாங் குவைதிடறு திட்டை
மோடுசுவல் மேடுகுப்பை திடர்படரே வன்பால்
விரிந்தகுவா லவலொதுங்கல் பதுக்கையுமேட் டின்பேர்
விடர்விட்பு கமர்மூன்று நிலம்பிளந்த வடுவே. 202.

வடமலையின் மலைதேவா லயந்துருவா ரூட
மந்தரமுத் தரகிரிபொன் மலைமத்து மலையே
நெடுமலையு மேருவின்பேர் வெள்ளிமலை கயிலை
நீண்டசயி லாதிவிசை யாத்தம்வே தண்டங்
கடதவள கிரியிரச தாசலஞ்சி வாத்திரி
கயிலாச கிரிப்பேர்தென் மலைபொதிகை மலைய
மடர்பொதிசந் தனகிரிதாம் பிரபேதி தமிழ்வெற்
பகத்தியா சலந்தென்றற் கிரிபொதிய மலையே. 203.

மலையாகுங் குடமலைவல் லியங்கொல்லிக் கிரியாம்
வட்டவரை யுவளகஞ்சக் கரவாள கிரியா
மொலியல்வரு புனறடினி குடிலைதுனி யோணை
முந்திதுறை சிந்துநதி யாற்றின்பே ருயவை
கலுழிகான் யாற்றின்பே ருவகையரு வியின்பேர்
காகந்தி பொன்னிகா வேரிகா விரிப்பேர்

* முரஞ்சு (பி-ம்)

சலமிகுதக் கனகங்கை கடாநதிதன் பொருனை
தண்பொருந்தம் தாம்பிரபன் னியும்பெரியா றெனுமே.
ஆற்றினிற்கோ தாவிரிப்பேர் விருத்தகங்கை வையை
யாற்றின்பேர் வேகவதி கவுதமைப்பேர் கோதை
மாற்றுகன்னிப் பேர்குமரி*யோடைகால் கால்வாய்
† வாய்க்காலின் பேர்குரம்பு குலைசேது வரம்பு
‡தேற்றுமணை செய்கரைப்பேர் கோலநீர்க் கொழுந்தாந்
தெளிந்தநீர் சலசலமா முந்நீர்ச் சுழியா
மூற்றின்பே ருறவியாங் கூவலே $கூவ
மொடுபூவ லசும்புகிண றுமெனச்சொல் வாரே. 205.

வாரியரி நேமிநதி பதிபவ்வங் குரவை
வாருணஞ்ச வேந்திரியன் னவமளக்கர் கார்கோள்
நீருவரி சலநிதிதீ கரந்தநீ ரலைமுன்
னீர்தரங்கி திரையுததி யுவர்வேலா வலயம்
வீரைமக ராலயமம் பரமத்தி யோதம்
வெள்ளம்பா ராவாரம் வேலையே சலதி
பாருடைசக் கரம்புணரி கடலம்பு ராசி
பரவையுப்புச் சலராசி யாழிசா கரமே. 206.

கரைநரலை யார்கலிவா ரணஞ்சிந்து பெருநீர்
கழிச்சிரந்தி ஞெகரம்வா ருதிசலவட் டமுமென்
றுரைதருனைம் பதுபேருஞ் சமுத்திரத்துக் காகு
மோரமலை வாய்தீரந் தடம்வாரந் திமிரி
வரையணைகூ லங்கோடு பாரநீர்க் கரைப்பேர்
வளர்வேலை பாரியம்பா ராவாரங் குவடும்
விரைகடலின் கரையாங்கல் லோலமலை தரங்கம்
விசிகரஞ்சீ கரங்குமிழி நீரறலுந் திரையே. 207.

---

* டாகுங்கால் (பி-ம்) †வாய்க்காலோடைய தாஞ்சேதணை குரம்புவரம்பு (பிம்) ‡ தேற்றுகுலை (பி-ம்) $ கூப (பி-ம்)

திருகுபுவ்வம் புற்புதமா ஞசமொக்குள் கொப்பூழ்
*செறிபுரையுங் குமிழியின்பேர் நுரைபேன மாகும்
குரைகலங்க னீர்கலுழி யாவிலமாங் கூவங்
†கும்பீரங் கயக்தொடுகுண் டமூக்தகழ காத
கிரலுறுமா ழமூநீந்து புனலாம்வ ளாறு
கிறைநீர்பி ராறுமதா முவர்நீர்ப்பே ருறையா
மிருணமழ னிலமூழ்வர்த் தலமாகுங் காய
லிடுங்கானன் மூரம்பென்னு மிம்மூன்றுங் கழியே. 208.

கழிமுகந்தோ ணுமுகம் தோமுகமே போந்து
‡கயவரி புகாருமழி முகமுமென ¶வேழா
மழிவிலுவ ளகமனக்கர் கழிகிலமுப் பளமா
மரங்கமாற் றிடைக்குறையா மிலங்கைதுருத் தியுமாம்
குறையளக்க ரசறுதொய்யில் செதும்பளறு சகதி
குழம்பசும்பங் கணம்பொகுட்டுக் கொள்ளல்பங்கம்பூழி
§யளறுதெளி மயசுசெய்யல் வரிதோணி காலா
ழுளுறுமசு பாகமள்ளல் சேதகமுஞ் சேறே. 209.

சேறதனிற் குமிழ்பொகுட்டாம் வெண்மணல்வா லுகமாந்
தீயகரு மணலறலா மதரயிரி மணலாம்
பாறில்புளி னந்துதி மணற்குன்றாந் தரிசு
பாழ்கிராம் பின்பேர்புற் றரைசாட்டு வலமா
மூறிலஞ்சி பொய்கைவன தரம்வட்ட மெல்வை
யுவளகங்கோட் டகந்தங்கல் கயம்பயர் தடாகங்
கூறுசுனை சூழிபல்வ லகிடங்கு மலங்கல்
குண்டமூ ருணிபண்ணை யேரிபங்கம் படுவே. 210.

படுகர்குளஞ் சலந்தரநீர் நிலைகளினி யோடை
பட்டமிலஞ் சகமாவி யலக்தைகுட்டங் கேணி

---

* செறியுரையுங் (பி-ம்) † கொம்பீரங் கயத்தொடு (பி-ம்)
‡ கயவுரி (பி-ம்) ¶ வாரு (பி-ம்) § யளறுகெளி (பி-ம்)

மடுவொடுபெட் கரணிதடம் பூவிமுப்பா னெட்டும்
வாவியின்பே ரிந்திரவா விகளிலவர் திகையார்
தடிபுலஞ்செய் மாக்கழனி பணையால வாலந்
காழ்பழனம் பானல்செறுக் கைதைபண்ணை யகணி
கொடிவரப்புன் வயல்கண்டம் விளைநிலப்பேர் புன்செய்
குண்டில்பாத்தியுமிவைமுப் பேர்சிறுசெய் யாமே. 211.

செய்வரம்பு மாசிபரம் பொடுகுரம்பாம் வரம்பிற்
சேருகு கங்கெனவா முழவின்பேர் துடவை
தொய்யிலுமாஞ் சாலேயஞ் செந்நெல்விளை நிலமாந்
துதிக்குமுரு வரையென்ப †பலவிளையு நிலமா
மொய்கடவு துடவைகொல்லை படப்பையுந்தோட்டப்பேர்
முதையல்பழங் கொல்லையின்பேர் புதியகொல்லை
பொய்புறவன் மீகமளை புற்றுகுங் குரும்பு [யிதையாம்
புற்றஞ்சோ றுந்துச்சி லொதுக்கிடப்பே ரளவே. 212.

அளவுதருஞ் சாந்தமொரு வந்தம்வே றிடமா
மரங்கமா யுதங்கூத்துச் சூதுபயில் களமாம்
வளர்கழகங் களங்கிடைகல் லூரியென நான்கு
மகிழ்கல்வி பயிலிடப்பே ரமர்க்களம்போர்க் களமே
களரிபொருங் களம்யுத்த களமிரண களஞ்செங்
களங்கடவை படுகளமா கவபூமி மடவை
தளருமடு களமிறுக்கை செருக்களஞ்செம் புலமே
தடவைபறந் தலையொடுஞாட்பகஞ்சமர்செயிடமே.213.

இடுகாடு சுடுகாடு கானவனஞ் சுடலை
யெரிவனந்துறு காடுபிண வரைபுறங்கா டிமம்
படுகாடு பிதிர்வனமே சுடுநில மயானம்
பன்னிரண்டாங் குயிலாயங் குடம்பைகட்சி கூண்டு

† தலவிளையு (பி-ம்)

தடுகூடு பஞ்சரமு †மாம்பாழி பாயல்
சட்டகங்கண் படைபடுக்கை யமளிபள்ளி சேக்கை
விடுசயன முறையுள்கட்சி துயிலிடமாம் பொத்து
மென்பண்ணை சேக்கைபட்டம் விலங்குதுயி லிடமே.

துயிலிடம்வெம் பரிகரிக்குக் கண்டஞ்சே வகமாந்
தொழுவேயா னிலையசுவின் புரையாகு மருப்ப
முயருமா ரிடமழுவ மழுக்கிடமா ஞெள்ளல்
உவளகங்குப் புறல்பயம்பு தாழ்வுகுழி படுகர்
பயவிழிவு கிழக்கவல்கீழ் பள்ளமதாங் கோழிப்
பறவையிடங் கிரவுஞ்சம் யோசனைப்பேர் புகையாம்
குயிலுஞ்சா மார்த்தங்கா வதங்காத மாகுங்
கூப்பிடுதூ ரப்பேர் குரோசமென வருமே. 215.

வரியிடவை யடிசெப்பங் கிறியியவை வாரி
‡வருக்தொழுக்க நடைதாரி வதிசெலவு பாதை
சரிகடறு வயவைநெறி யதரிகுவை பயணந்
தாரையத்தங் கால்பதவை யாறுவங்கி *ரயனந்
தெருநடவை பதமாற்கஞ் சுரம்வட்டை பட்டஞ்
சேர்வழிப்பே ரேழைந்தா மருநெறிப்பேர் தூம்பு
சுரமத்தங் கடங்கடறுங் கவலைகவர் வழியாஞ்
சுருங்கைசோ பானமா ரோகணங்கற் படியே. 216.

படியளக்கர் பெருவழியாம் விடங்கர்சிறு வழியாம்
பணைவரம்பின் வழிப்பேர் மரீசியாம் வழிபா
லிடைவயின்கண் குலமுதலுட் பதியகந்தேம் பக்கம்
இடன்களஞ்சார்§கடை முனைமேல் வாமங்கீழ் சூழல்

---

† மாம்பள்ளி (பி-ம்) * ரயணம் (பி-ம்)
‡ வருந்தொழுக்கு (பி-ம) § புழைதிணைமேல் (பி-ம்)

புடைவலம்பின் பாடுபெட்டி வாய்வைப்புத் தேயம்
புறமருங்கு நிலந்தான முழிதலையிற் பாங்கர்
கடைமுகம் வளாகமய லுறைதெவவு முன்கால்
கைபுலநாற் பானேழு மிடப்பெயரின் பாலே. 217.

பால்புடை *பாரிச மருங்குபுறஞ் சார்வு
பாங்கர்சிறை ஞாங்கருழி யாங்கர்பக்க மாகும்
சால்பிரமங் கூழைநனக் தலையொத்த லணுசாச்
சமன்மைய மாதனமத் திமகள்ளு நாப்பண்
எலிடைபு நடுவாகு வீண்டிவணே யிம்பர்
இவ்விடப்பே ராண்டவணவ் விடமும்ப ருவணை
மேலுடனஞ் ஞாங்கர்தலை யன்னர்முன்றூண் முதலாம்
வினவுமெங்கி யாங்கெவண்யாண் டெவ்விடமத்
தனையே. 218.

ஐந்தாவது இடப்பெயர்த் தொகுதி முற்றும்.

---

* பாரிசம் பாங்கு புறஞ்சார்பு மாடு (பி-ம்)

# ஆறாவது

## இயற்கைச் செயற்கைப் பலபொருட் பெயர்த் தொகுதி

அத்தமிர ணியமாழை வங்காரங் காண
மாசைபொலன் செந்தாது மாசையுரை சாமி
பத்திரம்பூ ரியங்காரஞ் சாதகும்பம் புதையல்
பண்டங்காங் கேயமுத லுறைவசுமா டனந்தம்
வித்தமா டகமீகை பொருள்பூரி செங்கொல்
வெறுக்கையரி பீதஞ்சா மீகரஞ்சாம் புனதங்
கைத்துரிதி சந்திரங்கூழ் மித்திரையே யேமங்
காணிகாஞ் சனந்தங்கம் வேங்கைசொன்னந் தனமே.

தனியீழம் பிங்கலத்தே சிகஞ்சாத ரூபங்
தமனிய நிதானம்பீ தகமாடை தொடுக்கங்
கனகமப ரஞ்சிதிர வியஞ்சுவண மருத்தங்
கல்யாண முகரிசெம்பொ னறுபதோ டிரண்டாங்
தொனிதார மிரசதங்கா வுதங்களத புதமே
சுல்லுவெள்ளி வெண்பொன்னுந் திருமேனி யெருவை
செனிவடுத்தாம் பிரஞ்சிக்க முதும்பரமே சுற்பஞ்
செம்பாகு மீயம்வங்கஞ் சீருளுஞ்சொன் னதுவே.

சொன்னல்கருந் தாதகிகொல் லயங்கரும்பொ னிரும்பாஞ்
சொன்னவை யைம்பொன்னுந் தராமதுக மாகு
மின்னுறையுங் கஞ்சமும்வெண் கலமாமுன் னைந்தோ
டிவையுந்தா தெழுலோகங் காரீய நாகம்
பின்னுவங்கந் தானுமா யாபுரியார் கூடம்
பித்தளையா மிவைகூட நவலோக மாகும்

உன்னியவங் காரமே தகணமொடு மாழை
யுலோகமதன் கட்டிகள்சம் பகமிரும்பா ணிகளே. 221

இரும்புணியே காந்தப்பேர் சந்திரகாந் தப்பே
ரிந்துசிலை சூரியகாந் தஞ்சலா கையதாந்
தருஞ்சூத மிரதம்விந்தாங் கெந்தகப்பேர் காறி
சத்தியுமாஞ் சாதிலிங்க மிங்குலிக மிலிங்கம்
* பொருங்குலிங்க மர்குமரி தாரப்பேர் பழுப்பாம்
பொரிகார மிடங்கணமாங் காயமிங்கென் றுகுந்
திரும்புருசி சயிந்தவமே லவணமுப்பின் பேராஞ்
சீதாரி குக்குலியங் குங்குலுக் குலுவே. 222.

குலவுமா ணிக்கமுத்து மரகதமே நீலங்
கோமேத கம்பதும ராகமே வயிரஞ்
சிலைவில்வயி டூரியமே பவளநவ மணியாஞ்
செம்மணிமா மணிமாணிக் கப்பேர்முத் தாரம்
அலர்தரள மவுத்திகநித் திலமுத்தம் பச்சை
யரியுமர கதமாகு மணிநீல மாகுங்
கலியில்கோ மேதகப்பேர் மேதைபற்ப ராகங்
கவுத்துவமாம் வச்சிரமென் பதுவயிர மாமே. 223.

வயிடூ ரியம்வால வாயமாம் பவளம்
வருதுவர்துப் பொடுதுகிர்வித் துருமமரத் தமும்பே
ரயிர்பிரவா ளமுமாங்கர் சிரற்றினங்கன் மனவோ
டரதனஞ் சலாகைமணிப் பொதுவக்கு மனவு
பயிலுருத்தி † ராக்கமும்பேர் வளைமணிக்கு மாகும்
பளிங்குபடி கம்பளிங்காங் காரிகமுந் தாதுஞ்
சுயகாவிக் கல்லாகுஞ் சிந்துரஞ் சிலேகஞ்
சுடிகைசுட்டி திலதம்பொட் டிவைதிலகப் பெயரே. 224

* பொருங்குலிக (பி - ம) † ராக்கயிப்பேர் (பி - ம்)

திலகம்புண் டரநுதலி லிடுகுறியாந் தொய்யில்
சேயிழையார் முலைக்கோல மாஞ்சாந்து களபங்
கலவைச்சே றேவிரைகா லேகவண்ணந் தளமாங்
காசறையே லந்தகர மயிர்ச்சாந்தின் பேராம்
புலிகலவை வட்டிகைபீ தமுநான்கு சாந்தாம்
பூசுபொருட் பேரங்க ராகமாங் கூலம்
பலபொருளே மனவகம்பண் ணியம்பண்ணி காரம்
பரிகாரம் வளந்தாரம் பலபண்ட மிவையே. 225.

பண்டாரம் பொக்கிஷப்பேர் தண்டங்கோ சமுமாம்
பளிதம்பா ளிதஞ்சசிகற் சரங்கனசா ரமுமே
கொண்டார்கற் பூரமெனத் தேய்வைசெச்சை சேறு
குழம்பாமச் சுதம்விந்த மறுகரிசிக் கூட்டாம்
அண்டாத துப்பரத்தங் கொம்பரக்காஞ் செம்பஞ்
சலத்தகமாம் பூளையில ‡ வின்பஞ்சின் பேராந்
துண்டான பருத்திபன்னல் தூலம்பஞ் சாகும்
துய்துடர்சூத் திரந்தந்து பனுவலிவை நூலே. 226.

நூலின்முதற் கயிறுகச்சை குணந்தாமம் பழுதை
நுண்பாசம் வடம்புரிநா ணிரச்சையக்கந் தாம்பாஞ்
சாலம்வலை யாம்வலையிற் கயிறுமா சென்பார்
சாணிதிரு நீறுபொடி சாந்தங்காப் பேமஞ்
சூலிவிபூ தியின்பேராம் பொடிபூழி புழுதி
தூளிசுண்ணந் தாதுதுக ணீற்றின்பே ராகும்
வாலடலை வெண்பலிசாம் பருஞ்§சாம்பற் பேரா
மண்சாந்து சுதைகளபஞ் சுடுசுண்ணந்¶தருமே. 227.

தகர்சின்னம் பிதிர்சிதர் பராகமே பின்னந்
தரணிரே ணுவின்பேராம் *பிசின்பயினென் றாகும்

‡ வம்பஞ்சின் (பி - ம்) § சாம்பலாகு (பி-ம்) ¶ தருமே
(பி - ம்) * பிசின் பயினு மதற்காம் (பி - ம்)

ஞெகிழிதீக் கொள்ளியதாங் கடைக்கொள்ளி முளரி
நீளிரா தமுமலா தமுமாகுங் கந்துள்
பகரிருந்தை நல்லமுமே கரியின்பேர் வெண்டேர்
பாழ்த்தேர்பொய்த் தேர்கானல் பேய்த்தேரின் பேராம்
மகிழ்விதைகென் மணியலகு பலகறையும் பரலாம்
வாய்த்ததுணை யறைதூக்குச் சல்லியெனும் பொருளே.

பொருவுபுன்கம் பாளிதம்பா லடிசிலுணுப் புழுக்கல்
போனகந்துற் றூண்டிமிசை மடையயினி பொம்மல்
சருமிதவை கூழசனம் போசனம்பாத் தமலை
சாதமோ தனமன்னம் புகாமிரல் மூரல்
பருகுவல்சி புவனகந்துப் பமுதுசொன்றி கவளம்
பட்சணமூண் பதமுப்பாளு றுஞ்சோற் றின்பேர்
சுரருணவு பலிசருவோ டவியாமாற் றுணவு
தோட்கோப்புப் பொதிசோறு கட்டனத்தின் பேரே.

பேருணவு பெருப்பாகும் பாயசம்பாற் சோறும்
பிழைமிச்சில் சேடமிகு பொருளெச்ச மிகையாம்
ஒருமெச்சி லுச்சிட்ட மாங்கருணை பொரியற்
குறும்பேர்பால் பாகரக்கு மோலைகூழ் காடி
யாருறுகஞ் சியின்பேராம் வெந்தையகு குல்லி
யாவியுக்கா ரியின்பேர்பிட் டரிலருப்ப மொடிதாம்
பூரிகமண் டகைதோய்வை யடைநோலை யூபம்
புதுக்கஞ்சம் லட்டுகமோ தகங்களப்ப வகையே. 230.

வகையாம்பிண் ணாக்குலொச்சை வறையல்மலா வகமாம்
மாவின்பே ரிடிநுவணை பிண்டியென மூன்றும்
புகையாணந் தியல்குழம் பிலைமூன் றுங் கறியாம்
புளிங்கறிப்பேர் துவையாகும் பாளிதமே புல்லர்
தொகையான கண்டயிரே கண்டமென வைந்துந்
தூயகண்ட சருக்கரையா மக்காரம் விசையம்

நகைகன்னல் கட்டிகுளி மைந்துசருக் கரையா
நறும்பால்கீ ரம்பயசு பயமமுத நான்கே. 231

அமுதமைய நவநீதங் கவினம்வெண்ணை நாற்பேர்
ஆகார மவிகிருத மாச்சியந்துப் பிழுது
தமிநேய மேழுநெய்ப்பே ரளைபெருகு ததியுந்
தயிராமோ ரருப்பமுசர் தக்கிரங் கலாயங்
கமழதிக மற்சிகையா மமரிசுதைமருந்து
கனியமிழ்த மமுதப்பேர் களங்கரளங் கான
மூமிழ்கடுவா லங்காலங் காரிசிங்கி நஞ்சா
முணவூட்டங் குளகிரைதீ னுறைவிலங்கூண் பாலே. 232

பாலிபடு விழிவிசுளி யிக்காணங் கஞ்சாப்
பாடலி சுயோகிவே கினிமருட்டங் கவ்வை
மாலிமா தவம்பானஞ் சூலிசூந்தி விசுனி
வடியரிட்டஞ் சாயனஞ்சு லோகிசிக்கர் மோலி
யாலிமடம் பேதைபிழி சுவிகைசுரை சூரை
யறிவழிமுண் டகமேதை விளம்பியம்பி தணியல்
சாலியா வசத்தோப்பி நாளிதொண்டி சேறு
சாறும்பல் ஞமலியா † துவமறவி மதியே. 233.

மதுரையுடன் மாரிசுமா லினியைம்பா னிரண்டு
மயக்குகள்ளின் பேராகு நனைநறவு தேறன்
முதுபிரச மதுகரங்கள் வேரிமக ரந்த
முருகுநறை மட்டுமெதுத் தேன்பேர்பன் னிரண்டாம்
இதுகளுமக் கள்ளினுக்காம் வெள்ளில்பா டையின்பே
ரிறுங்காடு சோதனி துரானரலே சிக்குச்
சிதள்மயலுஞ் செற்றையின்பேர் சுடுபுசுமை சும்மை
சோடைசும் மாடைந்துஞ் சுமட்டின்பேர்ப் பரப்பே. () 234

---

† துவமறவி (பி - ம்)

பாசகுளிர் கணிச்சிதழ ணவியமழுத் தண்ணம்
பாலமுமா மூவிலைவேல் சூல்காளஞ் சத்தி
‡ வெருளுறுமுத் தலைக்கழுவே கழுமுளுஞ்சூ லப்பேர்
விட்டேறு சத்திமதங் கயிலெஃகம் ஞாங்கர்
அரணமுடம் பிடிகுந்த மொன்பதும்வே லின்பேர்
அடற்கைவேல் கப்பணந்தோ மரமாகு நேமி
யொருபருதி சுதெரிசனம் வளையெஃகந் திகிரி
யொளிவட்ட மாழியெட்டுஞ் சக்கரப்பேர் தனக்கே.

தனுசரா சனஞ்சிந்து வாரங்கோ தண்டங்
தடிசிலைது ரோணங்கார் முகஞ்சார்ங்கஞ் சாப
முனிதவர்க்காண் டிபம்வேணு கொடுமரம் பிநாக
மூவைந்தோ டொன்றும்வில்லாஞ் சார்ங்கமால்வில்லாம்
அனகன்விற் பிநாகமதாம் பூரிதொடை நாரி
யாவம்வடங் குணப்பூட்டுச் சிஞ்சினிநா ணரம்பும்
வினையநா ணியின்பேராம் பற்றுக்கை பாசம்
விற்கட்டாம் விற்குதைப்பேர் குலையாம்பத் தினியே. 236

பத்திரம்போத் திரஞ்சிலீ முகந்தொடை யுரோபம்
பகழிமாற் கணங்கங்க பத்திரங்கோல் பாணம்
அத்திரஞ்சா யகம்புங்கந் தோணிவண்டு கதிரம்
ஆசுகம்பத் திரிபூதை ககம்விசிகம் பல்லந்
தத்துகணை வாளியேச் சரமம்பின் பேராஞ்
சரக்கட்டுக் குப்பிகுலை புதைபுழுக்கா முடுவே
இத்தரமாங் குதைபகழி புங்கமதா முடுவீர்க்
கிறகுகாம் பாமொட்டம் புதண்டமா வனவே. 237.

ஆவநா $ழிகையாகுந் தூணியம்புக் கூடாம்
அசனிசத கோடிவச்சி ராயுதப்பேர் சம்பம்

---

‡ வெருளறுமுத் (பி - ம்)   $ ளிகையாவந் (பி - ம்)

பூவயிரங் குலிசமுமாங் குயங்கொடுவா ளரிவாள்
புன்னமுமா மசிகவிர்ங்காந் தகங்கட்கங் கோண
மாவசிமட் டாயுதந்து வத்திவஞ்ச ‡ முவணி
வள்ளோதி கரவாளங் குறும்பிடிவாட் சுரிகை
மேவுகண்டங் கண்டகம்பத் திரசாட்ட முசண்டி
வேணுவிரு பானிரண்டுங் கத்தியின்பே ரெழுமே. 238

எழுக்கணையம் பரிகமுமாங் கழுக்கடைமுட் கழுவா
மிகல்வட்டஞ் சுழல்படைபா ராவளைய மாகுங்
கொழுத்ததண்டு பீலியெஃகம் பிண்டிபா லமதாங்
குந்தந்தோ மரங்கொந்த மீட்டிவிட்டே றைந்தும்
பழுச்சவள மாமுலமுக் கரிகருவி குளிராம்
பருகவியங் கோடாரிப் பேர்குடா ரமுமா
மூழிப்பெயரே தறிகைகணிச் சியுமாகு மீர்வா
ளூரக்கரபத் திரமும்வே தினமுமுரைத் தாரே. 239.

தாரொடுகப் பணங்கோல மிருப்புமுண்ணு ராசஞ்
சலாகையாஞ் சுவர்களையுங் கருவிகன்ன மாகுஞ்
சீர்கதைதண் டெறுள்வயிரங் குணில்குறண்டேழ் தடிப்
தேருசங்கு கூத்திலைகாத் திரிமட்டி முட்டம் [பேர்
போர்முசண்டி முற்கரமாம் பறளைபற ளிகைகற்
பொறியல்லி யள்ளைந்தும் பற்றிரும்பாங் கவணின்
பேரொடிசில் கவணைகுளிர் குணிலுமா மூசிப்
பேர்சூசி யதின்றுளைப்பேர் பாசமாந் துடரே. 240.

துடர்துவக்குச் சங்கிலியா மிடங்கணியு மதற்காந்
துடர்சிகளம் †பிணைதளையு மிடங்கணியும் விலங்கா
*மிடலாணி யூசிகண்ட மூன்றெழுத்தா ணியின்பேர்
விடுபடை யத்திரமாம் விடாப்படைசத் திரமாம்

‡ முவளி (பி-ம்) †புணைதளையு (பி-ம்) * மிடரேணி (பி-ம்)

படைக்கருவி தானைகடு முட்சுதனங் கழுமுட்
படைக்கலமெஃகேதிதுப்பு வேலுமா யுதப்பேர்
வடிநிசிலை பூவயிர்வா ளயின்முனைமுட் கூர்மை
வசியுமா நுதிநுனியாம் தடறுபுட்டி லுறையே. 241.

உறழ்பலகை கடர்தகட்டங் கிடுகுசே ‘டகந்தோ
§லுரிச்சிராய் வட்டணங்கட் டியம்வட்டந் தட்டு
மறைபரிசை வேதிசைதோற் பரமுங்கே டகப்பேர்
வன்கோதை கைப்புடைகைக் கட்டியின்பேர் சிரகம்
பறிவில்கீ சகந்தலைக் கிராணப்பேர் பருமம்
பரம்பரண மெய்யுறை சடாரிகச்சை கண்ட
மிறுகியசா லிகையரண மேடகங்கந் தளமா
சீராறுங் கவசப்பே ரெனுங்கரிய குழலே. 242.

கரிமுக படாஞ்சூழி மைந்தனமாம் புரசை
கவுகச்சை தூசானைக் கழுத்திலிடு கயிறும்
பரியபில கடம்பலகா ரங்கரிமேற் றவிசாம்
பல்லணம்பண் படைபருமம் பரம்பரிக்கல் லணையாம்
புரவிவாய் வடம்வற்கம் வடிகயிறு குசையாம்
பொற்கடியா லங்கவினங் கறுள்கவின முட்டாம்
வரிசையங்க வடிமொட்டுப் படிகச்ச மாகும்
மத்திகைகோல் சம்மட்டி யாமுளைகே சரியே. 243.

கேசரப்பிஞ் ஞகமொன்றுந் தலைக்கோலப் பேராங்
கிரீடஞ்சே கரஞ்சுடிகை முடிமௌலி மோலி
மாசில்சூ டிகையேழு மகுடப்பேர் மகுட
மாலிகை கரோடியதா முடியுறுப்பு மகுடம்
ஆசில்கோ டகம்பதுமங் கிம்புரிதா மமுமாம்
ஆரமுங்கண் டிகைமதா ணியும்பதக்க மாகுந்

---

‘கடறு (பி-ம்) § லுருச்சிராய் (பி-ம்)

தேசுறுகன் ஞவதங்கஞ் செவிமலர்ப்பே ருத்தி
திருவாக்தொய் யகந்தலைப்பா ளையின்பேர்புல் லினவே
புல்லகஞ்சூட் டிலம்பகமு நுதலணியாஞ் சுட்டி
பொலன்சுடிகை யாமோடை பட்டமதாங் குழைப்பேர்
சல்லியிரி சிகையொடுகுண் டலமாகும் *தூம்பு
தாடங்கந் தோடாம்வல் லிகைகுணுக்குக் கொட்டை
வல்லகடிப் பிணைகம்பி கடுவடங்கா தணியாம்
வாகுவலை யத்தின்பே ரங்கதங்கே யூரம்
நல்லதோ ளணியாங்கங் கணந்தொடிகண் டிகையே
நற்கடக மாம்பூணு லுபவீதம் பிடியே. 245.

பிடிகஞ்சு டகஞ்சங்கு வளைகுருகு கன்று
பெறுவண்டு தொடிசரியொன் பானும்வளை யலின்பேர்
† படியினிலைச் சிலைவீக மாழிமோ திரமும்
பவுத்திரமும் விரலணியாஞ் சரமாரந் தாமம்
வடமொடுகாழ் சரப்பணிப்பேர் சரிமணி கலாபம்
மனவுதோ ரையுமரைப்பட் டிகைப்பேர்மே கலையே
விடுகாஞ்சி யேகலா பந்தாமம் பதுமம்
விரிசிகையு மணிக்கோவை யாமரைமே லணியே.246.

அரைஞாணே யிரதனங்கிண் கிணிசதங்கை கழலே
யாணணிபா டகம்பாத கடகமொவ்வோர் பேராம்
பரிபுரநூ புரமரவங் குடச்சூலே ஞெகிழி
பரலினரி யகஞ்சிலம்பாம் பரலரியாம் பாத
சரமதின்பேர் பாதசா லந்தான்பூ ணாரஞ்
சங்கிலி மதாணிகைகை வள்ளிகலன் பண்டங்
கருதுபணி யிழையணியா பரணம்பூ டணப்பேர்
கயின்மடையே கடைப்பூணு மயிலனைய கிளியே. 247.

---

* தும்பு (பி-ம்) † படியின்மிலைச் (பி - ம்)

†கிதிசெய்கத லிகை தூக்கந் தொங்கலின்பேர் தாங்கி
நெறிவயிரங் கோளகைகிம் புரிப்பூணென் றாகும்
கொதிதளிகை வள்ளம்பா சனந்தட்டஞ் சக்கங்
கோரந்தா லங்கலமும் வட்டிலின்பேர் கிண்ணந்
திதிகைகா ழிகைவட்டிற் கன்னலுமாந் தறுவி
சிலகமுஞ்சட் டுவப்பேர்நெய் விடுஞ்சருவை சருக்கா
மூதிப்படிக்கம் படியகமா மிந்தளமே தூப
மூட்டிதட வென்பதுமாங் கண்டைமணி யாமே. 248.

கண்டைபட லிகைபரந்த கைமணியாம் பாண்டில்
கஞ்சமுங்கிட் டியுந்தாள மெறிமணிசே கண்டி
கெண்டிகோ டிகங்கடப மாம்பாணி கோயாங்
*கேள்கரகங் கரண்டகங்குண் டிகைகமண்ட லப்பேர்
கொண்டசின்னம் பீலியாங் காளங்கா களமாங்
கோடிரலை யாம்பல்வயிர் கொம்பாகும் பணவந்
திண்டியா னகம்படக மாமிடக்கை யாமந்
திரிலைகுளிர் முழவமாங் கடிப்பின்பேர் குணிலே 249.

குணில்படுமோர் கட்பறைப்பேர் பதலைமொந்தை யாகுங்
குடப்பறைபன் றிப்பறையாஞ் சகண்டமுர சாகுந்
திணியதக்கை சல்லரிதண் ணுமையொடு கிசாளந்
திமிலைபம்பை யாகந்தி துந்துமிபே ரிகையாந் [யாழ்
துணிவின்முரு கியந்துடிதொண் டகங்குறிஞ்சிப் பறை
துடிபாலைக் காம்பம்பை கோட்பறைமுல் லைக்காங்
கிணைமருதப் பறைசெய்தற் பறைப்பேர்சா பறையாங்
கிரிக்கரடிப் பறைதட்டை சிறுபறையா குளியே. 250.

குழிமுழவம் பதலைகடிப் பறைபகுவாய் தவிலாங் [யா
கொடுந்துடிதண் ணுமையுடுக்காம் பரிணமண்மாற் சனை

---

† கிதியமத (பி-ம்) * கேழ்க்கரகம் (பி-ம்)

முழவுதிண்டி முருடுதக்கை பேரிடம்பை பீலி
முரசுதகு ணிதந்தண்ணுந் துந்துமி தடாரி
கழிவில்கோ டணையியமே பணையம்வாத் தியப்பேர்
கவிப்பாத பத்திரஞ்சத் திரங்கவிகை தொங்கல்
அழிவில்பிச்சங் குடையின்பேர் கால்செய்வட்ட முக்க
மாலவட்டந் தாலவிருந் தழுமாஞ்சிற் றிடையே. 251.

சிற்றால வட்டம்வீ சனம்பீலி விசிறி
சிறியசாந் தாற்றியுமாங் கோடிகம்பூத் தட்டாங்
கற்றாய்பீ டிகைகடிப்புக் கோடிகந் துமாணம்
கண்டிகைகாண் டமும்பூண்கொள் கலமாமம் மானை
பற்றாரம் மனையின்பேர் கந்துகமே பந்தாம்
பந்துமட்டத் துருத்திபெருந் தாரைசிறு தாரை
வற்றாத சிவிறியுமாஞ் சீப்பின்பேர் சிக்கம்
மயிர்வாரி கங்கமுமா மாரைபா யினுக்கே. 252.

பாதங்காப் புக்கழறேல் செருப்புப்பா துகைப்பேர்
பாவன்மிதி யடியாகு மதிற்கொட்டை குடையாங்
கோதுஞ்சா ணந்தோட்டி யங்குசந் துறேட்டி
கோணமே கசப்பகையின் பேரடைபட் டடையா
மோதுங்கூ டத்தின்பேர் சம்மட்டி குறடு
முருடுசுட்டுக் கோலுலையா ணைக்கோலாங் கோளென்
றோதும்பேர் கொழுவாமின் னுராடும் பண்ட
மோரையா முலைத்துருத்தி யுதியோடத் திரியே. 253.

அத்துசிவை குருகிரண்டுங் கொல்லுலைமூக் காகு
மாரிதொட்டி *புதவுகபா டங்காப்பு வாரி
தைத்தகத வின்பேர்தாழ் †கடப்புத்தாழ் சீப்பாந்
தறிநிலைகந் தெழுக்கம்பங் கான்மதலை தாணு

* கதவுகபா (பி-ம்) † கடிப்புத்தாள் (பி-ம்)

இத்தனையுந் தூணின்பேர் யூபம்வேள் வித்தூண்
என்பரா ளானம்வெளி லானைத்தூ ணாகு
மத்திகையே கவுசிகந்தம் பழும்விளக்குத் தண்டாம்
வல்லிகையு மதற்காகுங் குறுந்தறிபோ திகையே. 254..

போதம்பா றம்பிபா ரதிதோணி வங்கம்
புணையானந் திமிலிகவ்வு மதலைதொள்ளு நாவாய்க்
கோதகஞ் சதாப்பஃறி பாதையா தனமுவ.
கூறுமரக் கலம்பதினெட் டாமதிற்பா யிதையாஞ்
சேதமறு வஞ்சிவள்ள மோடந்தோ ணியுமே
சிறுகலமாம் படுவையம்பி மிதவைதொள்ளுப் பகடு
பாதையிற்போம் பட்டிகையே புணையெனுமேழ் பேரும்
படிந்ததெப்ப மதின்பேராம் விசியின்பே ரரியே. 255.

அரிகுயவெந் திரம்வையஞ் சயந்தனங்கூ விரியே [பேர்
யகல்கொடிஞ்சி யிரதஞ்செந் தனந்தேரோன் பான்
பருதிசில்லி நேமியுந்தி யுருளுதரி திகிரி
பாரியங்கா லாழிபத்துந் தேர்க்காலின் பேராந்
தெரிகிடுகு தேர்ச்சுற்றுஞ் சார்பலகை பாவாந்
தேர்மொட்டுக் கூம்பாந்தேர்க் கதிரின்பே ராராம்
விரிதட்டுத் தேர்நடுகோப் பணுமாகுங் கொடிஞ்சி
மெய்த்தகூ விரமாகுந் தவிசுதடுக் குரித்தே. 256.

உருள்சகடஞ் சாடுசா காடுவையம் பாண்டி
லொழுகுவண்டி லாம்பாண்டில் கஞ்சிகைவை யமுமே
பரிகள்கட்டு மூர்தியின்பேர் கந்திருசுள் ளிரும்பாம்
பண்டியுமாந் தண்டிகைகஞ் சிகைமணிக்கால் யான
மரசர்வா கனம்வையஞ் சிவிகையின்பேர் பள்ளி
*யணிதழுமாம் பீடிகைவிட் டரந்தவிசு பீடம்

* யணிதழுமாம் (பி-ம்)

வரதிபத்தி ராசனஞ்சிவ் காதனமாம் பாண்டில்
மஞ்சமொடு பரியங்கம் பாரிகட்டி லுறுமே. 257.

†உறிசிக்கஞ் சிதர் தூக்குச் சிமிலியாந் தடியே
யுலக்கைமுச லமுமாஞ்சோ தனிதுடைப்ப மாறு
முறமதைச்சூற் பஞ்சளகு சேட்டைசின்னந் தட்டு
முற்றிலென்பார் குதம்பந்தாங் கிடுகுசட்ட மாகு
மிறவை வட்டில் வட்டிகைகூ டைப்பேராஞ் சேணி
யிறவையே கடவைதட வையுமேணி யாகுந்
தறுகண்ணே ணியின்பேரே மால்பாகுந் தழலே
தட்டைகிளி கடிகருவி யாமெனச்சொல் லினரே. 258

சொற்கழங்கு காசுவல்லுச் சூதாகுங் கவறு
துள்ளாயந் தாயமதாஞ் சாரிகா யாகு
நற்கலனை படைபடைவா ணுகந்தொடுப்பே ரலமே
நாஞ்சிலி லாங்கலப்பை பணவைகழு திதணங்
கற்குலவு பரணின்பே ரம்பணங்கால் குளகங்
கடன்கச்சந் தூம்புமரக் காலின்பேர் நாழி
வற்கமே குஞ்சமதாந் தண்டுகுழா யின்பேர்
மஞ்சுகமஞ் சிகைபேழை மூழிபெட்டி யாமே. 259.

ஆம்பியே பூட்டைகா ராம்பிகிழா ரரியா
மாசே லுஞ்சலூஞ் சலின்பேராம் பெரிய
தாம்பின்பேர் பண்பாகும் பிழாவிடா விறையாந்
தயிர்கடையுந் தறிவெளிலா மூழிமத்த மூழை
காம்புமத்தின் பேர்வகிர்வார் வள்ளாகுந் துணியே
கடிகைகண்டந் துண்டமாங் கஞ்சனந்தற் பணமே
பூம்படிமக் கலனுடி ருகிர்தமொளி வட்டம்
புளகமத்தந் தெரிசனங்கண் ணாடியின்பேர் கூறே. 260.

---

† உறிசிதகஞ் (பி-ம்)

கூறைவே டகம்புட்டங் காளகஞ்சித் திரையே
கோடிகோ டிகம்படாம் பரிவட்டஞ் சீரை
வேறுடையம் பரஞ்சாடி நீவியத்து சாடை
வேதகம்பட் டாசாரங் கலைகலிங்கம் பஞ்சி
யாறுடுக்கை கோசிகஞ்சம் படத்தானை வட்ட
மாபரணஞ் சூடிகம்வத் திரம்வாசம் புடவை
னுறின்மடி மிடையலிலக் கரமறுவை சீலை
*துப்பட்டி வேட்டிசோ மன்றுகிலென் பாரே. 261.

பாரியொடு நாகமுகல் லாடையாங் காம்பு
பாளிதங்கோ சிகம்பட்டு நேத்திரம்பட் டாடைப்
பேரெனலாந் தேவாங்கஞ் சாயச்சீ லையின்பேர்
பிணித்திடுசித் திரப்புடவை பொத்தகமென் றாகும்
போர்வைமீக் கோளாகும் வடகமத்த வானம்
போர்த்தியவுல் லாசமுமா முத்தரா சங்கஞ்
சாருமுத்த ரீகமே யேகாச மாங்கொய்
சகநீவி யாக்தோக்கை மூன்றுனே மெய்யே. 262.

மெய்ப்பைகாஞ் சுகமங்கி காஞ்சிகைகுப் பாய
‡மேல்வானங் கஞ்சுகமுஞ் சட்டையாம் வயிரம்
வைப்பின்வயி ரச்சூழி மயிர்ப்படமாம் விணிகை
வார்வம்பு பட்டிகைவட் டுடைமூலைக்கச் சின்பேர்
கைப்பில்குஞ்ச கர்தலைப்பா வாங்கண்டங் காண்டங்
கஞ்சிகை படாமெழினி யவடிபடந் திரைப்பேர்
ஐப்படங்கு வானிவிதா னமுமேற்கட் டியின்பே
ராகுங்கே வணங்குழிவட டத்தின்பே †ரணையே. 263.

அணைதவிசு தளிமமெத்தை யாகுமுபத் தாண
மடைத்ததலை யணையின்பேர் கம்பலஞ்சிம் புளியும்

---

* துகிலின்பே ராறுஒன்ற குகவுரைப் பாரே (பி-ம்)
‡ மேல்வாளம் (பி-ம்) † ரணுமே (பி-ம்)

பணை யுறுகம் பளத்தின்பேர் கேதனம் பதாகை
படங்குபடாஞ் சத்திவேலோ தனக்தோகை வானி
யிணை துவசம் பெருங்கொடியாஞ் சிறுகொடிகத் திகையா
மேர்வீதிக் கொடிவிடங்க மாகுக்தார் சிதவல்
துணிசிகூ விரமுந்தேர்க் கொடியாமோ வியழுக்
துலங்குறுவட் டிகையோவுஞ் சித்திரப்பேர் மரபே.

மரவுரிவற் கலையிறைஞ்சி சீரையின்பே ராகும்
வளர்பதலை தளஞ்சாடி யகளமுந்தா ழியின்பேர்
உரைகரீ ரந்தடாக் குழிசியா மிடங்க
ருற்றவட்ட நிறைநீர்ச்சா §லாமிடங்கர் குடிகை
பரவுகடந் தாலிகும்பங் குணங்கலசங் குடமாம்
பானைமிடாக் குண்டமதா றுவற்கரிதற் கரியே
கரகஞ்சி கரங்கன்னல் சிரகமதாங் குடிஞை [ங்கே.
கடிஞைபிச்சைப் பாத்திரமாஞ் சுடர்மணிக்கொப் பணை

கொப்புரி கிடாரமொடு தவிசுமதற் காகும்
குடுவைகுண்டு விசனைசட்டி யாங்கலசப் பானை
யப்பெயர்கஞ் சனையாமர் தனிதயிர்த்தா ழியின்பே
ரகில்சராவஞ் சுத்திகையாம் பாண்டிலிடிஞ் சிலுமென்
றிப்பெயரே சுடர்த்தகழி யாம்பாண்டங் கலமென்
றிரண்டுமே கொள்கலப்பேர் மூடைபொதி சுமைப்பேர்
எய்ப்பறு சிலாவட்டஞ் சாணைக்கல் லாகு
மெழுதுகோல் துகிலிகைகோ லஞ்சனக்கோல் வடிவே.

ஆறவது இயற்கை செயற்கைப் பலபொருட் பெயர்த்
தொகுதி முற்றும்.

---

§ லாமிடங்கை (பி•ம்)

## ஏழாவது

## பண்பு பற்றிய பெயர்த் தொகுதி

வடிவளவு வண்ணமொடு காட்சிகருத் தைந்து
  வகைபண்பாம் பருதிதட்டு நேமிகொம்மை வலையங்
கடகங்கோ ளஞ்சிலிலி யாழிமல்லம் பாண்டில்
  கடுந்திகிரி மண்டிலஞ்சக் கரம்விருத்தம் வளையம்
அடிகொள்பா லிகைபதினேழ் வட்டவடி வாகு
  மரியடர்பி யைமைமூன் றேதகட்டு வடிவாங்
குடிலங்கூன் கோண்கோட்டம் வளைத்தல்வணர் வாங்கல்
  குலவல்தட்டுக் கோணல்வளா வலும்வளைவா மவையே.
அவைதொழுதி குழுக்கோட்டந் தோடுசங்கங் கூட்ட
  மடர்சமூகந் திரள்குவிதல் மொய்கண நிகாயஞ்
சவைகுவால் சமுதாயங் *சமூமல்குப்பை கதம்பஞ்
  சமவாயங் கருவிநிவ கங்குவ விராசி
குவைகுழாந் தொகுதிதொகை மூவொன்பா னென்றுங்
  குழல்சுரிர்கள் வேய்நாளி தூம்புபுரை வேணுத்
துவணடி சுரைதுளையே புழல்புழை துவாரஞ்
  சுரிகையடை தமராகுங் கற்றைகதிர்த் திரளே. 268.
திரட்சிகளை குவவுகொம்மை சேர்த்துறுமல் சோகஞ்
  சேடுபுஞ்ச மாழைவட்டுப் பிழம்புமுண்டங் குழிய
முரத்தபந்தந் தொழுதிபிண்டம் பூகமுத்தை குவித
  லுண்டையுமாம் படலைபம்பல் படர்ச்சிபரந் தனவாந்
தரப்புளகங் குமிழ்ப்புமொக்குள் கொப்புளாம் பிணரே
  சற்சரையாம் பயினிசங்கங் குவிதல்கூடு தெலாம்

---

* குழுமல் (பி - ம்)

பரப்பழுவம்*பப்போவல் பரவைபாப் பாவல்
பாய்தல்தா வுதகஞ்செறுமிர்தல் விரிவுவிசா லமுமே. 269.
சாலகனி†கதழ்வதிகம் விதப்பூகம் பெருகல்
தவம்புதுமை மதம்பிறங்க லிறப்பமலே‡பூங்கு
சிலமிகை யலேபூரிப் பான்றல்கூர் கழுமல்
சிறப்புருத்தல் பொங்கலின்பேர் பெருமைமாத் தடங் [கொன்
மால்கருமை பகடேந்தல் பாடிருமை மோடு
வால்குவவு தகைபொழில்பீ டண்ணல்பணை யீடு
மேல்கயவு ளளிபாழி வீறுசெம்மன் மானம்
வியன்மூரி முடலேநா§லேழொன்றுன் னுகவே. 270.
உன்னதமே டொழுக்கமுச்சம் பரிமிர்ப்புப் போக
வுத்துங்க மிசையேந்த லோங்கல்கப்புத் தூங்கல்
மன்னுதலே புரையூக்கம் பிறங்கல்புங்க நிவப்பு
வார்தல்சேண் சிகரமிரு பானிருபே ருயர்வாம்
பன்னமதுப் பருமைபரூஉப் பீனமுமா மகறல்
பாழியர்ப் பாய்வுதடம் வியலகலு ளான்ற
லென்னுமெட்டு மகலப்பேர் கண்ணறைபா ழியுமா
மிருசுசேர் செம்மைசெப்பஞ் செவ்வைசெவ்வ னணங்கே. 27
அணுநுணுக்கங் கூர்முளரி¶நுழைநுவணை நூழை
யாய்தலயி ரோய்தலுயிர் முன்னுணங்கு நுட்பம்
நுணுகுகொசி நுண்மையின்பேர் நுனியுமாஞ் சின்ன
நூலியிறை கன்றுசு கலந்தோகந் தன்னங்
கணம்வறிதிட் டிமைபொட்டீ ராறுமற்ப மாகுங்
கவிதூரஞ் சேண்சேய்மை யாம்வடிதல் போகல்
குணிபொழுகா யதந்தீர்தல் வார்தல்வரி யுறையே
கொடிநேர்பு நெடுமைநெடி னீளப்பேர் முடிவே. 272.

---

*பப்போவில் (பி-ம்) †கதழ்வனிகம் (பி-ம்) ‡யூங்கு(பி-ம்)
§ லேழெனவுன் (பி-ம்) ¶ மைநுவணை (பி-ம்)

முடிவகலம் யாவடங்கல் சமத்தமனைத் தகண்டம்
முழுவதுமுற் றடையமுட்ட மெல்லாம்பன் னோர்பேர்
மிடைவுதுற்றல் செறிபொதுளன் மிண்டல்பம்ப ணிபுடம்
விரளநிரக் தரந்துன்ற லடர்திணுங்கு துதைதல்
சடிலகனி துறைதுறுமல் துன்னனெருங் குதற்பேர்
ததைதலுடன் பதிஞென்பா ஞர்தேய்வு நிரப்பே
யொடிவுதவ லீனமரு குதலஃகல் சிறுக
லோய்வுகுன்ற லீறுசிங்க லூனமெஞ்சல் குறைவே. 273

குறைவில்பூ ரணைந்திளைத்தல் கமஞ்தெவிட்டன் மலிதல்
குளிர்ததும்பல் பரந்துவன்றல் கொழுத்திகழ்த லார்த
னிறைவுபிறங் குதன்முழுத்தல் செகிழன்மல்கல் கழும
னிரம்பலே தெவிழல்பெரு குதலிருபான் பேரா
மறைவில்பங்கு பயல்பாகம் பகுதியத்தங் கூறு
வாரம்பால் பாதியின்பேர் சிர்க்குருஞாட் பதிகம்
பொறைகனம்பா ரமுமாகுந் துவந்துருவந் தோன்றல்
புவியினிற்ற லாயொய்மை யிலகுமொவ்வி லேசே. 274.

இலகுமென்மை சுகுமார மிருதுவா மளவை
யின்மையின்பே ரனர்தமு மபாரமுமா னுமாம்
பலவளவை கடன்கச்ச மளவாமா லம்பம்
பற்றுக்கோ டேற்றந்துக் கந்துதண்ட மாகுந்
தலைமுதலக் கிரமோனை பூருவமுன் னுதி
தாளெழுவா யடியாகுங் கடைமுடிவீ றிறுதி
நலமுகிவு முற்றந்த‡மொல்லையின்பேர் காப்ப
னெள்ளிடைநாச் சமன்பகல்மத் திமத்தின்பேர் வரையே.

வரைவுதுணை தனையவதி தாறளவு காறு
மானமட்டுப் பிரமாண கோகமபு காலை

‡ மொல்லை பின்பேர் (பி - ம்)

பரியந்த மேனிகோ தனங்காடங் கொற்றம்
பதினெட்டா மெல்லையின்பேர் நிரல்பந்தி யோளி
நிரையாங்கூர்ப் புக்கழிப்புள் ளதுசிறத்த லாகு
நீமமரி தெளிர்தயங்கல் காந்திநகல் சோதி
விரியல்வயங் குதல்விளங்கல் மின்னிலவு வெயில்வாள்
வில்வாம நிழலலங்க லொடித்தலில குதலே. 276.

இலங்கலிமைத் திடலொளிர்தன் மிளிர்துளங்கல் பிறழ்த
லெற்கிரண மவிர்தல்சுடர் தேசுநகை தாமந்
துலங்கல்கதிர் மின்னல்பிர காசமுப்பத் தாறுஞ்
சுக்கிலங்கெள ரவங்குருகு வெள்ளிவால் குருத்து
நலஞ்செய்விளர் சிதம்பாண்டு பாலசுவஞ் சுவேத
நரைதவளஞ் சுசிசீதம்$பான்மையப தார
மலங்குபாண் டூரம்விசிதம் வெளுப்புவெள்ளை விளக்க
மருச்சுனஞ்சுப் பிரமிருபா னைந்தும்வெண்மைக்கருனே

அருணஞ்சேய் சேப்பரத்தஞ், செக்கர்துவர் சோண
மரக்குப்பா டலம்பூவல் சேதுதுப்ப ராகங்
குருதியத்துச் சிந்தூர முலோகிதமஞ் சிட்டங்
குறிசெந்து சிவப்பேயிங் குலிகமுஞ் செந் நிறப்பேர்
கருள்காளங் காளகமை களங்காரி கார்மாக்
கறைநீலங் காளிமமா லஞ்சனமே மாய
மிருளசித மீரெட்டுங் கறுப்பின்பேர் களங்க
மிழிபுகறை கசடுமா சிலைமலினப் பசையே. 278.

பசுமையரி தஞ்சாமம் பாசரி*பலாசம்
பைதரித்துச் சாமளம்பை பத்தாம்பச் சையின்பேர்
திரியரித்தி ராபம்பீ தகம்பீதம் பொன்மை
நிறப்பேர்பிங் கலம்பசலை பசப்புமாங் கபிலம்

---

$ பான்மைய (பி - ம்)    * வபாசம்(பி - ம்)

வசிபுகர்புற் கெனல்புன்மை புற்குரா னிறமாம்
வரிபுகர்கேழ் பயப்புவண்ணஞ் சாயல்சந்த மாமை
கசிவருணை மேனியுருக் குருவடிவு நிறப்பேர்
கட்டழகு விசித்திரப்பே ரழகலங்கா ரருமே. 279.
காரிகைபொன் சந்தந்தே சிகஞ்சொக்கு மஞ்சு
காமரொண்மை வாமம்பூத் தகைதளிம மாழை
யாரிகவின் மயம்விடங்கஞ் சுபஞ்செழுமை காந்த
மந்தம்நவ்வி மணிவனப்புக் கோலநன்கு மாமை
யோரணிநல் யாணர்வண்ணம் பொலன்சே டிராம
மெழின்மாதர் குருகுபொற்புச் செவ்விதொட்டி பாங்கு
தோரணங்கு சுந்தரம்பத் திரமம்மே னோக்குச்
சித்திரம ஞோகாமு மழகேழேழ் தருமே. 280.
தருணங்கோ மளங்கொம்மை குழவுவெண்மை நாகு
தகைமழவு குருளைவிண்போ தகம்புருவை யவன
முருகிளைசு பதினைந்து மிளமையின்பேர் விருத்த
முற்றன்மூப் பாமழுங்கல் புல்லெனன்மட் கலுமாம்
உரமறிவு தெளிவுபுந்தி புலன்போத மேதை
யுணர்வுமதி காட்சிஞா பகந்தேறல் சீலந்
தெருளல்சே தனஞ்சைதன் னியஞான மாகுந்
தெளியும்பே ரறிவுமுதுக் குறைவாமென் றறியே. 281.
அறியாமைப் பேரசே தனமாகு மூரி
யடல்கூளி மீளிகோன் முடலையும்பல் வாய்மை
விறலீடு நலந்திரந் திண்மைமைந்து நோன்மை
மெய்யூக்க மிடலாண்மை மொய்ம்புவலி மல்ல
லெறும்மதுகை தானமதஞ் சத்துவந்துப் பாற்ற
லேண்முரா ணுரந்தோற்றந் தாவுதா மானந்
திறல்பாழி முன்புவயம் பலமுகேல் மல்லாய்ச்
செப்புநாற் பான்மூன்றும் வலுவெனச்சொல் வீரே 282.

வீரியம் பராக்கிரமஞ் சவுரியஞ்சே வகமே
வீரப்பேர் வென்றிவலன் கொற்றமுல்லை வாகை
போர்விசையஞ் சயமாடு விறல்புகல்வெற் றியின்பேர்
பொறியாக்கந் திருப்பெருக்க மிடம்வாழ்க்கை விபவம்
சீர்விருத்தி வெறுக்கைமா டியற்கைசெல்வப் பேராஞ்
செழுமைசால் பான்றல்வள மிறைமாண்பு வாய்த்த
னேரமைதி மாண்மாண்டன் மாட்சிமைப்பேர் பத்தா
நிலையழிவு தோல்விதோற் றிடமொருலைவாங் கனியே283
கனிகிருபை தகவிரட்சை போர்வையரு ளிரக்கங்
கருணைதயாத் தயவின்பேர் தூய்மைசுத்தந் தூப்பு
புனிதம்பா வனந்தூய்து வேத்தியர்தூய் சவுசம்
பூதமே பவுத்திரமுஞ் சுசியின்பேர் சாந்தம்
பனியளிதண் மழைசீத நளிர்குளிர்சீ தளப்பேர்
படுங்கடுமை கோரம்வெம்மை யுருமம்வெம்ப லுருப்ப
மனல்கரு மந்தாபம் வெப்பமுமுட் டிணப்பே [மன்றே.
ரடைவளப்பங் கொழுமைசெழு மையுங்கொழுப்பா
அன்பின்பேர் நாரீரம் பரிவார்வ நேய
மளிபாசம் பற்றுணங் காதல்புரி வாகு
நன்பவமேழ் தொடருமன்பே யுழுவலா மகிழ்ச்சி
நகைகடிசம் மகமலர்ச்சி சுகந்தொய்யில் கட்டி
யின்பமுமா னந்தமதா மேமமுமற் றதற்கா
மிறுமாப்பெக் களிப்பேமாப் பபிமானந் தந்து
பின்புமத்தஞ் செம்மாப்பு தருக்குமதர் செருக்குப்
பெருமிதம்வீற் றிருத்தல்பா டவமலர்ச்சி களிப்பே. 285.
களியகமெஞ் சுளமுள்ள மிதையமே யுன்னங்
கருதுசித்த மனத்தின்பேர் சிந்தனை தியானந்
தெளிநினைவிங் கிதங்கருத் துச் சூழ்ச்சியெண்ணங் குறிப்புச்
சிந்தைநாட் டியமுமாம் வலித்தன்முன்ன லூக

முளல்படர்தல் சிந்தித்த னினைத்தலுள்ள லூழ்த்த [தலல்
லுன்னலின்பேர் புகறலெண்ணல் பேணல்சுட்ட னு
வளர்க்குதல்கா ணல்கண்ணல் குறித்திடலெட் டாகும் [யே.
வரையறுத்தல் குணித்தல்கணித்திடலெனவே பொறி
பொறைசகித்தல் சமைநோன்றல் சமித்தல்பொறு மையின்
பொறையின்மைகூரகோறுமை பொறுமையின்பேர்[பேர்
நறுமைநன்கு நயஞ்சேடு விழுமநன்னர் யாணர்
நலமணியுத் தமநன்மை கடவுளொண்மை நன்று
*முறுதியின்பே ருண்மைவரன் முறைநியதி தெய்வ
மூழ்விதிப்பே ருறுநோன்பு தவன்விரதந் தவப்பே
ரறமுதவி தருமமே னுடைமைதன்ம மாகு
மாணையின்பே ரேவலா மமைவாமென் பதுவே. 287.
அதிகமூ தியம்பயப்புப் பயம்பசை யிலாப
மாக்கநந்தல் பலித்தலுமாம் பழமைமுன் புராண
முதுமுறைதொன் றூழ்புரா தனம்பூர்ப்ப முந்தை
மூரிதொண்டு பண்டுதொல்லை யொல்லைபூ ருவமாம்
புதுமைபுனை நூதனம்புத் தேள்விருந்து கோடி
புனிறுவம்பு கடியாணர் நவம்புதிது மாகுந்
திதிதிரமன் னுதருணு துஞ்சனிலை பேருந்
தேறமன்ற நிச்செயந்திர்க் கந்தரிப்பு நிசமே. 288.
நிசப்பிரிய மோகைமா ராயமுவ கையின்பேர்
நீங்காமை தண்டாமை யாறுமை யாகும்
†வசக்கிகுளை கேண்மைதொடர் கேள்நட்பு ‡மறுபே
மறுத்தல்வட்க லுட்கிலச்சை நாண்சமழ்த்தல் வெள்கல்
கசக்கம்வெட்க மாங்கேண்மை புணர்வுகண்ணு கரிகங்
கண்ணோட்ட நயப்புமதாங் கணிதமெண்ண மாகு

---

*முறுதியுமா முண்மைவரன் (பி-ம்) † வசத்திகுளை (பி-ம்) ‡ நாற்பேர் (பி-ம்)

* மகத்தியிலா வழுக்கின்மை யமலம்விம லமுமா
மதிகார முறைமைபா ரம்பரியத் திறமே. 289.
திறத்தினுடன் வகைகூறு பாடுவகுத் தலின்பேர்
திணைகுடியாம் பரியாய முறையாகு மாவே
வெறுப்பறுத்த லொல்லாமை முனையவா வின்மை
வேண்டாமை யுவர்ப்புமாம் விரத்திசார் வறுத்தல்
துறத்தறுற வியின்பேரொற் றுமையொருமை குறிப்புத்
தொட்டிமையாஞ் செய்திசெய லியல்பொழுக்கா சார
நெறித்தன்மரி யாதமுறை கைகடைநி யாய
நீதிநெறி மஞ்சரிகை யறைசாரித் திரமே. 290.
சாரமொடு ‡சேறிரதந் தமிழமுதஞ் சுவைப்பேர்
தனியிலவம் புளிபுளிப்பாக் இத்தகைப் பாகும்
காரமே கரில்கடுகேங் காயங்காழ்ப் பாகும்
கனியினிதின் மதுரத்தித் தெங்குதித்திப் பிணிப்பாம்
பேர்பேரே யபிதான நாமமுமாக் துப்புப்
பின்னேது §வாயில்கா ரணநிமித்தக் திறமே
வார்பொருட்டா முரனூக்க முள்ளமிகு தியின்பேர்
வாழ்வியப்பற் புதமிறும்பூ ததிசெயம்விம் மிதமே. 291.
விம்மிதறை வேறலின்பேர் சயவமாக் துப்பு
விளைவுமல்லன் மங்கலம்போக் கியம்பொற்பு மலர்ச்சி
பொம்மல்பூப் பொலிவொன்பா னமைவுபுல்லல் கெழுமல்
பொருந்தலாம் வெருவிதசா ஞவிதம்பல் விதமா
மும்மையொழி பிறப்பம்மை மறுமைவரு பிறப்பா
மொழியிம்மை யிப்பிறப்பா மொருமையொரு பிறப்பா
மெம்மையெத்தப் பிறப்பாமேழ் பவமேழு பிறப்பா
மிழிதகவு பரிபவமா மெளிமையெண்மை யுரித்தே. 292

---

* மகத்தி விலக்கு (பி-ம்) ‡ சேறிரதமமுதமிவை (பி-ம்)
§ வாயில்சா (பி-ம்)

உரிமையின்பே ருரிபாங்கு *கெழுக்காணி கிழமை
யுரித்தாட்சி தகைதாயம் பாலுடன்பத் தாகும்
விரைமுருகு கந்தமோ தவம்வம்பு நாற்றம்
வெறிகடியா மோதந்தேம் பரிமளங்கான் வசந்த
மருமதுவை நறைவாச மன்றலீ ரொன்பான்
மணமாகு நாறுதல்கந் தித்தல்கமழ் தலின்பே
ரருவருப்புத் துற்கந்தம் பூதியர்ம் பயிர்ப்போ
டருவருப்புக் குச்சிதமார் தூவுமன்னு மிழிபே. 293.

இழுக்குமறல் பொல்லாப்புப் பொல்லாங்கு ழறவி [பேர்
யிகழ்ச்சிபுன்மை கீழ்ச்சேர்வொன் பானுமறத் தலின்
வழுக்குமாங் கரில்பழிபோக் கரில்பிழைதோங் காசு
வடுத்தவறு பொய்பழுது தப்புவசை யேத
மழுக்குமிறை குறையேச்சு கறைகோது நவையே
யாசுமறப் புகர்களங்கந் துகள்கழிப்பு மாசு
கொழுப்பரிப்புச் செயிர்மானம் புரைமுப்பான் மூன்றுங்
குற்றமதாந் தளர்ச்சியின்பே ரேட்டையசாக் கொடியே.

கொடுமையின்பேர் பூதிகண்ட முறைப்புவஞ்சங் கோரங்
$கோடணையுக் கிரங்கலாங் கடுமைசடம் பத்துங்
கடினமுமாங் குறையிலம்பா டொற்கமின்மை மிச்சை
கலிவறுமை குறுவாழ்க்கை கிரப்பல்கல் சிறுமை
மிடியொடுகல் குரவீரா றொன்றுதரித் திரப்பேர்
வெறுமையுமா மரிமுருட்டு தெவ்வுமுரண் பகையா
மடியுமதா முறவியுற வாமடம்பே தமையு
மருட்சியுமா மேதித்த லினைவிரக்கப் பயனே. 295.

பயமடுப்புத் தாருணநாங் கவலைவெறி வீமம்
பனிப்புப்பீர் வெறுப்புருமு வெருவுசூர் பிறப்பே

* கெழுக்கோணி (பி-ம்) $ கொட்டணையுக் (பி-ம்)

யயர்வுட்குக் கோபம்வெடி பேம்புலம்பு விறைகொ
னச்சமதா கும்பிரமச் துரிதமிறை கவன
மூயவழுங்கல் கவற்சிகதி யணங்காய்வு சமழ்த்த
லுயங்கலா குலமோவு கலக்கநொசி மழுங்கல்
வயாவருத்தம் பதினெட்டா மடியிழிவு நந்தல்
வழுவுருங்கல் கயங்கேடு சுதங்கந்தல் சிதைவே. 296.

சிதம்புசித்தி சீரணஞ்சித் தையுங்குணமின் மையின்பேர்
செடியுமதாம் விளம்பிதந்தா மதமாகுஞ் சண்டங்
கதங்குரு ரங்கோப மறம்வெகுளி சீற்றங்
காய்வுளர் கலாம்புகைதல் விடைத்திடல் குரோத
¶முதும்பல்கறுப் புருத்தல்சிவப் பேபுழுங்கல் சீற
லுடற்றறீ வீரமுணவல் கொதித்தல்கன்றல் கனறல்
வெதும்பல்பவ தொக்தமே சலம்வயிரம் வெம்பல் [மே.
வெறுத்தல்செயிர் மறமரிப்பெண் *ஞலொன்றுஞ் சின 297

சினத்தபட ரின்னல்வெறுப் பிடும்பைபுன்கண் கேதஞ்
செல்லல்கோட் டாலையலக் கண்பீழை யரந்தை
பனித்தல்கவ்வை யாதனையின் ஞங்குலைபயு ளேதம்
பருவரலிட் டளமுறுகண் மம்மரல்லல் கரந்தை
துனிப்பிடுக்கண் பீடையலம் வரலல்ல கண்டஞ்
சூர்விழுமங் கையாறு கவலைதுக்கம் பைத
லனுக்கநோய் நடலையெவ்வம் வெய்துறலே பழங்க
லையெட்டுந் துன்பத்தி னபிதான விதமே. 298.

விதிர்ப்புலைவு தள்ளாடல் பொதிர்ப்பசைத்தல் பனிப்பு
விதலைகம்பங் கம்பிதஞ்சஞ் சலஞ்சபலந் துளங்க
லதிர்ப்புவிதர் குலைவுசலங் கலங்கல்நடுக் கமதா
மழுங்கலுமாந் தலையிழிவு சாய்வாகுந் தஞ்ச

---

¶ முதம்பல் (பி-ம்)    * ஞவிரண்டுஞ் (பி-ம்)

மெதிர்த்தன்மை தாழ்வாகு மொழிவிழிவோ டுவர்ப்பே
†யெள்ளனகை நகலொக்ல னிக்லதயின்பேர் குடில
மதிப்பிலிசாட் டியம்படிறு புள்ளுவக்குத் திரமே
மாயைகுய்யம் பட்டிமைகூ டமும்வஞ்ச மெனுமே 299.
என்னெவனெற் றுவோலை யோர்வக்கோ வத்தோ
வேயத்தா வன்ஞெவற் புதழுமிரக் கமதாங்
கொன்வறிது வீதாவீண் பயனிலிகாற் பேராங்
கோணன்மனக் கோட்டமுமவ் வியமுமழுக் காறும்
பின்னம்விப ரிதம்விகிர்தம் வேற்றுமை விரூபம்
பேதம்விள்ளல் விகண்டைவிக டிதம்வீற்று விகட
மன்னியமே திரிவுவிகற் பமும்வேறு பாடா
‡மகமொடுதி யானம்பா வகஞ்செடிபா வினையே. 300.
பாவம்பா தகம்பவத்தி வினையாகு மொற்றை
பலனில்கே வலம்புலம்பு தனிமையே கழுமாஞ்
சோவமா ழாத்துணை ராமைமத்த மிளமை
சோகமிருள் வெருண்மோக முன்மத்தம் பித்தந்
தாவம்பே தனந்தர்கள ளேமமருண் மான்று
சழங்கரிமைந் தேபித்து மயர்கழுமு மாழ்க
ஞெவுமறன் மயன்மயக்க மதாங்கைது வாமை
கொப்புறுங்கை யொழியாமை யாம்பெயர்மை விழியே. 301
மையன்மத னங்காமம் விரகமே மாசை
மால்வேண்டல் வேணவா மாதர்நசை நயப்பு
வெய்யபற்றி ராகஞ்சார் விவறல்பெட்பு வேட்கை
வெப்பநச்சா தரமிச்சை யேட்டையவா நம்பு
கையிரதி பிணைவிழைவு மேவல்வெஃகல் விருப்பங்
காதலார் வங்கவற்றல் வீழ்தல்பெட்டன் மோக

---

† யெள்ளலேநகல்வுக்க (பி-ம்)
‡ மகந்தியா னஞ்செடிபா வம்பாவ வினையே (பி-ம்)

மையிவர்த ருழ்தலவா வாஞ்சைசாற் பதுபே
ராசையாங் கைக்கிளையோர் தலைக்காம மணங்கே. 302.

அணங்குருந்தம் பிணிமடியு ரோகமிழன் மாரி
யாமயஞ்சூர் மங்கல்லைபயுள் புன்கணுகோ யாகுந்
தணந்தசங்கை கடுத்தலையம் விப்பிரம்பி ராந்தி
சந்தேகங் கொல்லனுமா னமுமாகுந் தீங்கு
குணங்குமுட்டுப் பாடந்த ராயத்தி தூறு
கோளேயந் தரந்துட்ட லாபமும்விக் கினமாம்
வணங்கமுங்கன் மடிவலச லாஞ்சிஞான்கல் சோப
மந்தமசை வாலசிய மாயாசஞ் சோம்பே. 303.

ஆயுமழி வின்மைகன்னி குமரிகோ ணையுமா
மடைக்கலப்பேர் கையடையாஞ் சாலூரங் கயவு
சாயலிவை மென்பாடாஞ் செயலறல்கை யறவாஞ்
*சமமிகல்கே ழாங்கன்ன போலென்ன வனைய
†எய்வுபடி ரேர்கதழ்வு தூக்குவீழ் மான
மிணை துணையற் றுறழொத்த னிகர்பொருவ கடுப்ப
‡தீயபுரை யுவமைமலை வொப்பிருபத் தாருஞ்
சிச்சீயே வேயேயெ னிழியிகழ்ச்சி மரபே. 304.

மரபுநீர் பான்மைவண்மை கிழமைபெற்றி தகவு
மரலைபா லியல்புதன்மை தகுதிசந்தக் தகைமை
பரிசின்முறை சால்புவிதி கொள்கையதி காரம்
படிகுணமே நிறமிருபான் மூன்றுபண்பின் பேரா
மொருபலமே தொடிகஃசு காற்பலமா நிறையே
யொருதுலா மிடையரைத் துலாங்காற் றுலாமே

---

* சமமிகல் கேழாங்கெள்ள பாலென்னபடி ரேர் (பி-ம்)
† எய்வனைய கதழ்வன்ன தூக்குவமைமான (பி - ம்)
‡ தீயபுரை துல்லியம் வீழ்மலைவியைவுமொப்பாம் (பி-ம்)

சொரிதுக்கா மொன்றேகம் பிரதமமொற் றையுமாஞ்
சவடுகௌ முபையமிணை துணைதுவமு மிரண்டே. 305.

இரட்டொழிமூ முத்திரிமூன் றுஞ்சதுரும் பாத்து
யிசைநான்கு நாலாகும் பஞ்சமஞ்ச ஷைந்தா
மாற்றுசடஞ் சட்டாறுஞ் சத்தமே ழாகு [தாகுந்
மட்டமெட்டா நவந்தொண்டொன் பானுமொன்ப
தரத்தசம்பான் பதுபத்தா னூறுசத மாகுஞ்
சகத்திரமா யிரமயுத மேபத்தா யிரமா
மூரத்தனூ றுயிரமே யிலக்கமது பத்தே
யுறுநியுத மதுபத்தே கோடியெனுங் கூற்றே. 306.

ஏழாவது பண்பு பற்றிய பெயர்த் தொகுதி முற்றும்.

## எட்டாவது

### ஒலி பற்றிய பெயர்த் தொகுதி.

கூற்றிசைவி ஞக்கிளவி நொடிகாதை வாணி
குயிலியம்பேச் சறைபனுவல் வாக்குரைதோல் புகல்கீர்
மாற்றமொழி கதைதீர்ப்புப் பறைசெப்பஞ் சொல்லாம்
வாசகம்பா சுரம்வார்த்தை நடைவசன நான்காந் [த்த
தோற்றுரையாழ் மொழிபதமா மேத்தன்மெய்ச்சல் வாழ்
றுதிவழுத்தல் புகழ்தல்பர சுதல்பரவல் பழிச்சல்
போற்றலேத் திரந்துதித்த லாமாசில் வாழ்த்தே
புகல்வரா சிலைபலகால் விளம்பன்மீ துரையே. 307

உரைத்தலியம் புதலிறுத்தல் சாற்றலே யாட
லோதல்பக ருதல்குயிறல் புகறல்சொற்றல் மொழி
விரித்தலறைந் † திடல்கரைதல் விளம்பலே கூறன் [தல்
மிழற்றனவி லுதல்பணித்த லிசைத்தலொடு பேசல்
தெரித்தல்செப்ப லேநொடித்தல் சொல்லலெண்மூன்
றிசைச்சொற்றே சிகமாகு மிடித்தல்கழ றலுமே[ருகுக்
மருட்டுறுதிச் சொல்லாகு முல்லாபங் குதலை [ருமே.
மழலைகொஞ்சன் மிழலையந்து மென்சொல்லாய் வ 308

வரநிலைமை பரம்வாய்மை யாணைவே ளாண்மை
வாயுண்மை நிச்சயஞ்சத் தியமன்ற மெய்ப்பேர்
சரதஞ்சா தமுமாகும் வழுதுமிச்சம் பெட்டு
சாதனைவக் கிரம்விகிர்தம் படிறுபொக்கம் வஞ்சம்

---

† திடல்கதைத்தல் (பி - ம்)

நிரவும்வலக் காரமடி யனுசிதமே மாயம்
நிசிதமொடு சடம்பிசிபன் னுறுபொய்யின் பேராம்
பரியாதம் பழிச்சொறீச் சொற்சிறுசொற் பழிப்பாம்
பழிமொழியேச் சலர்கவ்வை யம்பலதாய்ப்படியே. 309

படித்தலத்தி யானம்வா சித்தலோ தலின்பேர்
பாடலுமாம் பிதற்றுதல் விடாதுபே சுதலா
மிடக்கர்கூ கனமறைத்த *சொல்லாகு மேம்பா [லாகுங்
டிசைத்தனெடு மொழிபெருஞ்சொற் பலரறிசொல்
கடைப்பிடியோர்ப் புடன்குறிக்கோ ளிவைதேற்ற மொழி
கடவுதல்வி னுவுதலா மெதிர்மொழியுத் தரமே [யாங்
விடைப்பேர்சல் லாபம்வினு விடைகூடும் பொருளாம்
விரிச்சிகோ ணிமித்தம்வாய்ப் புட்சகுன முதிர்வே.310.

முதுமைபழ மொழிபழஞ்சொன் முதுமுன்சொல் பழமை
மூதுரையே ‡கதையுங்கா ரணச்சொல்லா மசதி
யிதகைது நயச்சொல்லா மனத்தந்தான் பொருளே
யில்லாமை புனருத்தங் கூறியகூ றுதலாங்
குதலையெனும் வாளாகோ ளாபேசா வாகுங்
கூவலா கருடனைவா வெனல்கரைதல் கேத
லுதவகுத்த லகவல்விளித் திடலழைத்தற் பேரா
மூளைத்தலுமா மறைகூவல் போரழைக்குங் குறியே.311

குறளைகொடு வாய்கொண்டி புறங்கூற்றுத் தொடுப்புக்
குஞ்சமொடு பிசினமுமாம் புறத்தோரைப் பழித்த
லறைகூற லாநயஞ்சன் மானமுப சார
மருமைமுக மனுமாமோ டொடுவுமுட னிகழ்வாம்
பெறுமானை வஞ்சனம்வட் டித்தலே சாபம்
பிரமாணஞ் சூழ்சபதம் விரதமுஞ்சத் தியப்பே

---

* சொல்லாந்தன் (பி-ம்)   ‡ மூதுரையும் (பி-ம்)

ருறுதிகலை விச்சைவித்தை யூதியமே சால
மோதிகல்வி கேள்வியுமாங் கற்றல்பயி லுதலே. 312.

பயிற்சிர்த்தி யேற்றஞ்சீ ரிசைதோற்றம் புகழ்மேம்
பாடொளி யியாதமீக் கூறுடு சுவேதம்
வெயிற்பொருசொன் மலைகீர்த்தி யாமோத்துச் § சாகை
வேதமிருக் காதிநூன் மறையெழுதாக் *கிளவி
முயற்சுருதி யாரணமா மறைவழிவை திகமாம்
முதல்வேதம் பவுடிகமோ டிருக்காகு மிரண்டாந்
தயித்திரிய மூன்றாமு தார்த்தானு தார்த்தஞ்
சாமங்கோ சிகநாலா மதர்வணமென் றடக்கே. 313.

அடருமுப நிடதமறை முடிஞான பாகை
யருத்தபா கையுங்கரும பாகையுமப் பொருளாம்
பிடகமாக மம்பனுவ லாரிடந்தந் திரமே
பெருஞ்சமையஞ் சூத்திர னூற் பேரேழாஞ் சருக்கம்
படலமத்தி யாயமிலம் பகமோத்துக் காண்டம்
பரிச்சேத நூன்முடிவாம் புறவுரைதந் துரையே
முடிவினணிந் துரைபதிகம் புனைந்துரைபா யிரமே[யலே.
முகவுரைநூன் முகத்தின்பேர் கணக்கெழுத்தெண் ணி 314

எண்கணிதங் கரணமே கணக்குச்சோ திடப்பேர்
யாப்புப்பாத் தொடர்கவிதை செய்யுளொடு தூக்கே
யண்கவிபாட் டின்பேர்முற் பாவெள்ளை வெண்பா
அகவல்தொகை யாசிரிய முரற்பாவே கலிப்பா
மொண்டவகை யடியம்போ தரங்கமரா கப்பேர் [யாம்
முடுகியல்வண் ணகமாஞ்சொற் பொருளருத்த முரை
பிண்டமது பொழிப்பாகு மரும்பொருண்ஞா பகமும்
பிசியுமாந் தொகுதிசெய்தல் பதிகமென்னு மிதுவே. 315

---

§ சாய்கை (பி - ம்) * கேள்வி (பி - ம்)

இதியாச மிலக்கியங்காட் டுதலுதா ரணப்பே
ரெழுத்துவண்ணம் வடிவுதன்மை யாகுமொற்றே
பதியாய்தம் புள்ளிதனி நிலைபுலித மாகும் [மெய்யாம்
பலதொடரே குளகமொரு தொடரேழுத் தகமாம்
குறிகீத *மணுவழி யிராகங்கத் திருவங்
கொளைவரிகா மரம்பாட்டுப் பாணிபண்கே யமுமாம்
மதிபாலை யாழ்க்குறிஞ்சி யாழ்மருத யாழ்ச்செவ்
வழியாழாம் பண்பாடற் கேற்றகுரல் யாழே. 316.

குரல்துத்தங் கைக்கிளையே யுழையிளியே விளரி
குணிதார மேழிசையா மிடறுநாக் கண்ணஞ்
சிரநுதனெஞ் சொடுநாசி பிறப்பிடமே ழிசைக்காஞ்
சேர்நான்கு நான்குமூன் றிரண்டுநான் மூன்றே
யிருதொகைமாத் திரையவைக்கா நெடிலேழு மெழுத்தா
மிணர்மௌவன் முல்லைகடம் பேவஞ்சி நெய்தல்
விரைவீரை புன்னைமணம் பாறேன்க ளானெய்
வெறியேல மாதுளைவா ழைக்கனியுஞ் சுவையே. 317.

சுவைவண்டு கிள்ளைபரி கரிநுணலான் மேடத்
தொனியேழாம் விசுவாமித் திரன்யமன்முக் கதிரே
கவுதமன்கா சிபனீச ராமந்த வோசை
காகுளிமத் †தந்தக்காமத்திமம்பஞ் சமமே
தவிர்துத்தஞ் சமனிசையாம் வல்லிசையே யுச்சத்
தாரமெச்சாங் கோடபதி விபஞ்சிகலங் கருவி
திவவுறுவல் லரியாழ்ப்பேர் வீணைதண்டு வாரி
சிறத்திடுகின் னரப்பேரா மதினிசை யெழாலே. 318

எழுநரம்பு துயரிகுர ஞூடியுத்தத் திரியாம்
யாழ்வலிக்கட் டேதிவவு மாடகமென் பதுவே

---

* மணிவழி (பி - ம்) † திரத்தக்கா (பி - ம்)

பழகுமுறுக் காணியின்பே ரிசைக்குழல்வங் கியமாம்
பாட்டிரைகோ சனைசும்மை நாதமிடி யோசை
துழனியிசை யுரைபுலம்பு களஞர வாரஞ்
சுருதியா குலமோதை தொனியியங்கோ டனையே
செழும்வெருளி யரவமுழ வேழுமொலிப் பேராஞ்
சிலையொலிப்பே ருழையுமரு மரஞ்சமுமாந் தெளியே.

தெளித்தல்விம்மல் குமிறலிரட் டெலரற்ற லோர்தல்
சிலம்பலியம் புதல்சிதைத்த லிசைத்தலே முழங்கல்
இளித்தலுரற் றுதலுரைத்த லிரைத்தலே யெங்க
லிடித்தல்குளி றுதறுவைத்த லலம்பலே கறங்க
லுழைத்தலமுங் குதறழங்க ஞெளித்தலே கதித்த-
லுலம்பறெவிட் டெல்கனைத்தல் புலம்பலே சிரற்றல்
பிளிற்றல்முக்கல் குருமித்த னரலலே கௌிர்தல்
பிரற்றலே பயிறன்முர லுதலுமொலித் திடலே. 320.

ஓல்லெனன் ஞேரேலெனல்வல் லெனன்மொகே ரன்
[னல்
ஒய்யெனல் வெடேலெனல்பொள் ளெனல்சரே ரென்
கல்லென றிடீரெனலிம் மெனல்விரீ ரென்னல் [னல்
கம்மெனல் படீரெனல்பொம் மெனல்குபீ ரென்னல்
கொல்லெனலம் மெனவிழூஉ மெனலேபொள் ளென்னல்
கொம்மெனலு மனுகரண வோசையின்பே ராகுஞ்
சில்லல்கூப் பிடல்கத்தல் கதறலா முரப்பல்
தெளித்தலதிர்த் திடல்தட்ட லெனக்கடவு தாமே.321

கடகடென்றல்பகபகென்றல்மொளுமொளென்றலுடனே
கலகலென்ற னெறுநெறென்ற னெடுநெடென்றல் கடி
[தாய்ப்
படபடென்றல் மொடுமொடென்றல் சளசளென்றல்
பகபகென்றல் களகளென்றல் திடுதிடென் [பின்னும்
[றலல்லாற்

றடதடென்றல் கொளுகொளென்றன் மொகுமொகென்
சரசரென்றல் பரபரென்றல்கரகரென்றருளு[றல்வேறு
மடமடென்றல் வெடுவெடென்றல் கொடுகொடெ
வருவனவெல் லாம்விரைவி னோசை [ன்றலிவைபோல்
[யெனு மார்ப்பே. 322.

ஆர்ப்புக்கோ சனைகுமிறல் கோடனையே கொழித்த
லாகுலங்கோ வாகால முலம்பலே,கலித்தல்
பேர்ப்பரற்ற லேகறங்க லொடுதமரம் பூசல்
பேரோசை திமிலகுமி லங்கலகங் ‡குமுதம்
போர்ப்புரையப் $படுத்தல்கள களமுழற லைபயம்
போராட்டம் பிறகடமா டம்பரமே சத்தங்
கூர்ப்புளசக் தடியேகம் பலேயடா பிடியுங் [மே.
குரைத்தலுமாமுப்பதும்பே ரொலியெனப்பேர்*தொழு. 323

‡ குமிதம் (பி-ம்) $ படுதல்கள (பி-ம்) * தருமே (பி-ம்).

எட்டாவது ஒலி பற்றிய பெயர்த் தொகுதி முற்றும்.

---

## ஒன்பதாவது

### செயல் பற்றிய பெயர்த் தொகுதி

தொழிற்கருமங் கன்மம்விதி செயல்வினைப்பே ரைந்தாந்
தொழிற்பயில்வு தொறுவாங்கா தரம்வினையின் தொடர்
இழைத்தல்பா ரித்தனிரு மித்தலே குயிற்ற [வாம்
லியற்றலய ருதல்வனைத லாற்றல்செய லெட்டாம்
பழக்குசிட்டி சிருட்டிபிறப் பித்தல்படைத் தலின்பேர்[ரை
பண்ணைகெட வரல்பொய்தல் வண்டலுண்டாட் டோ
யுழக்கிய விலாசனை கிரீடையுப்புக் கேளி [விரிவே-
ரொன்பதொன்றும் பெண்கள்விளை யாட்டின் பேர் 3௨

விரிபொழுது போக்குவிளை யாட்டுப்பா ராட்டு
மெய்ச்சல்விநோ தங்களித்தல் குலவல்கொண்டாடலின்
வரைதல்கடி கைப்பற்றன் மணம்வேட்டன் மன்றல் [பேர்
வதுவைதீ வலஞ்செயல்கல் யாணம்விவா கப்பேர்
முருகுதுணங் கறல்விழாச் சாறுபுத்தேள் சேறு
மூவிரண்டுச் சபத்தின்பேர் மலரடைச்சல் செருகல்
சொருகலாம் வனைவணிவொப் * பனைமலைச்சன் மிலைதல்
சூடல்வேய் வலங்கரித்தல் புனைவுமண்கை செயலே. 32

கைதொடல்போ சனந்தின்றல் பொசித்தறுவ்வன் மிசை
கவ்வல்பா ரணந்துற்ற லுணல்பருகன் மாந்தல் [தல்·
துய்தினலே யமுதுசெய்த லுகர்வயிற லார்தல்
துப்பருந்த லேதுய்த்த லுண்டலெழு மூன்று
முய்துறுங்கல் விழுங்குதற்பேர் துயில்களு வளர்த [தல்·
லுறங்கல்பள்ளி துயிறல்படல் கண்ணடைத்த லனந் 3௪

---

* பனைமிலைச்சல் மலைதல் (பி - ம்)

வெய்துறுகண் படைதுஞ்ச னித்திரை தூங் கலின்பேர்
விடிக்கெழுப்பலெடுத்தலே தெளித்தற்பேர்ப்பொருளே. 326
பொருமல்விம்மல் கசிவுரோ தனமிரங்க லேங்கல்
புழுங்கல்கலு ழுதல்கலக்க மொன்பதழு.தலின்பேர்
தருதல்கொடை வீசல்கடப் பாடிடுதெ விருத்தல்
தானம்வண்மை வேளாண்மை பகுப்புதவல் வேள்வி
அருளலுப காரகல்கல் விதரணந் தியாக
மளித்திட லுதாரம்வழங் குதல்பொழித லீகை
யிரவுபணித் திடனீட்டல் கவிகைசிவி கையுமாம்
வேந்தர்வரை யாதுகொடுத் திடுதல்கொடை மடமே 327
மடக்கல்குத்திமுடக்ககொறில்முணங்கொடுக்கம்பாந்தம்
வலிதடக்கம் பதுங்கலுமாம் † வதிதல்வைக விறுத்தல்
விடுத்தலிறை விசித்தலல்க ருழ்தலுந்தங் கலின்பேர்
விடுத்தன்மோ சனமோக்கந் தீர்த்தலுயிர்த் தலுமாம்
இடுக்கல்பெற்றி யிழிவாமீக் கோளிவரே றுதலா
மிறங்கல்சுத்த மவதாரங் குனிவுகுரங் கலுமா
முடற்றல்சொலித் திடலாம்வீ சுதல்விலங்க விடுத
லோச்சலெறிதலின்பேராம் பூய்த்தல் பிய்த்தல் காணே. 328
காண்டறெரி சனநோக்கல் கண்ணுதலே பார்வை
காட்சிபார்த் தலின்பேராஞ் சிறக்கணிப் பபாங்க
மீண்டுகடைக் கணித்தலாஞ் சரிதையையம் பிடிக
மிரந்தபிண்டம் பலிபாகம பயிக்கமும்பிச் சையின்பேர்
வேண்டல்குறை ‡ கோளேன்றல் வாங்கலிரத் தலின்பேர்
வேண்டாமாற் றுதல்காத்த னிறுத்தன்மறுத் திடலாந்
தோண்டலக ழுதல்கிளைத்த $ ஞெண்டலெருட்டல் பிளிற
லெருடுதல்கிளை றுதலுமாம் பிடித்தல்பற்ற லெருடலே. 329

† வதித்தல் வைக (பி-ம்) ‡ கோளேற்றல் (பி-ம்)
$ னெண்டலெருட்டல் (பி - ம்)

தொடுத்தல்பந்தம் யாப்பசைப்புச் சிமிழ்ப்பார்த்தல் வீக்க
றுறுவிசித்தல் பிணித்தல்கட்ட லொன்பதாங் கதுவாய்
வடுப்படலாம் விளம்பல்யா ரித்தலாம் பிறக்கு
வழுக்கயக்குச் சோர்வாகு மெறிதலெற்றல் குற்றல்
புடைத்தலுமாம் புடைத்தலே தகர்த்தல்குட்ட லாகும்
புதைத்தலே பொதிர்ப்புவீக் கமுமாகும் வதைத்த
லடித்தலே யறைதலெற்றன் மோதலழுத் துதலு
மதுக்கலுமாந் தாய்தாக்கல் சீய்த்தலாந் தெரியே. 330.

தெரித்தல்வரைந் திடல்பொறித்தல் கீறலே தீட்டல்
சிவக்கல்வரித் தலுமெழுத லாங்கணக்கி லேகை
வரித்தவரி பொறியோய ¶ மிலிகிதமா காதம்
வன்னமெழுத் தக்கரமாங் கீழ்த்தல்குற்ற றேய்த்தல்
அரக்கல்சிதைத் தலின்பேர் மஞ் சனந்தோய்தல் குளித்த
லாடல்படி தலுநானஞ் செய்தலின்பேர் தேய்த்த
லுரைத்தலுரிஞ் சலின்பேரா மிமிழ்த்தலே தெவிட்ட
லுமிழ்த்தலுமாம் பறித்தல்குற்றல் களைத்தல் கட்டல்
[வழியே. 331

வழிபடலற் சனையாரா தனையேபூ சனைப்பேர்
மகம்யாகங் கிருதோம மிட்டியெச்சம் யூபம்
பழியில்வேழ் வியின்பேர்வந் தனைவணங்கல் காணல்
பணிதல்வந் திப் பிறைஞ்சல்பணி தாழ்தலுந்தெண்
[டனின்பேர்
தொழுதலுங்கை கூப்புதலஞ் சலியொடுகும் பிடற்பேர்
சுகத்தாடல் சம்போக மைதுனங் கிரீடை
விழைவுபுல்லுக் கலவியாலிங் கனமே கூட்டம்
விழைச்சியைதல் புணர்ச்சிமணந் தழுவன்முயங்குதலே. 332

---

¶ யிலகிதமா (பி - ம்)

முயங்கிடத்திற் கூடியுமே கூட்டமில்லா திருத்தன்
மொய்த்ததொரு புலவியா மனுகாம லினேனோர்
மயங்கவுரை மறுத்தலே யூடலெனு வுரைப்பர்
மகிழ்நர்பிரிந் ததற்பின்னர் வாயிலடைத் திருத்தல்
இயங்குதலில் லாத்துனியும் புலவிநீட் டமுமாம்
இவ்வூட லொழிதலின்பே ருணர்தலொல்ல லாகும்
நயங்கொளும்பா டினிமுதலோர் புலவியொழிந் திடவே
நவின்றுவேண் டுதல்வாயி லென்றுபரிந் துரையே 333.

பரிதலிசித் திடன்றெறிர்த லொடிதலே யிடிதல்
படவிறுத்த லிறுதலொசித் திடலகைத்தன் முறிதல்
முரிதலின்பே ருழ்த்தன்மூ டுதல்கவித்தல் பாத்தல்
மொஞ்சல்மூ சுதலேந்தாங் கூசல்மட்கல் கெடுத
லிரிதலுடை வேதிட்க னெரிதலே ஞொள்க
லிடைவுதொங்கல் சாய்வுசரி தலுமோட லாகும்
அரிதல்சே தித்தல்விடு வாய்கெய்தல் குலல்
அறுத்தல்கொய்தல் கத்தரித்த லீர்த்தலதின் பகுப்பே.

பகுத்தலெற்றல் கண்டித்த றறித்தலே துமித்தல்
பரிதலே தடித்தல்வெட்ட லேழாகும் விரிய
விகுத்தல்பரப் பலின்பேராந் தணித்தல்செம்மித் தலின்
எருக்கல்கா துதல்சவட்டல் மாரணஞ்சட் டித்தல் [பேர்
செகுத்தல்வீட் டுதல்படுத்த லொழித்தலெற்றல் கோறல்
செவிட்டல்முருக் குதல்பன்மூன் றுங்கொலைசெய்
[தலின்பேர்
அகைத்தலுமா மூறணங்கு கோள்வேட்டங் கொலையா
மமர்வேட்டை பற்றியதா மமுக்கன்றெனுமுங் குதலே335.

குதித்தலின்பேர் மிதித்தலுக ளுதல்பாழ்த லுறுக்கல்
குப்புறலா முகைத்தலும்பல் கனுறலோ பொதுங்கல்

கதித்தலே பொலிதல்பாச் சலுமெழுச்சி யதின்பேர்
கதழ்வுவல்லை கதனமொல்லை துரியமொறில் கடுப்பு
விதப்புவிசை கடுகல்சண்ட முடுகல்ஞெள்ளல் கோரம்
வேகஞ்சீக் கிரஞ்சடுதி குத்திரமே கவன
மதிர்த்துனைவு துவறலொடு தாரைவிரை யின்பேர் 336
அறுமூன்று நான்குமெல்கல் தாழ்த்தல்மந்த முறலே.

உறல்பொருந்தல் மருவலண்ணா லிசைவுநண்ணல் யோக
மொல்லலிசைப் பணுகல்சிவ ணுதலல்க லியைவு
பெறலணவல் சார்வுதொட ருன்னல்கூ டலின்பேர்
பிரிவுணர்வு வரைவுவல்லி தணப்பொருவல் துறத்தல்
துறவிகடி நீங்கலொன்பான் குயிறலே தோளல்
துளைத்தல்திளைத் தலுமாந்தா பித்தனிலை செய்தல்
நிறுவரேன் றலுநிறுத்த லாந்தடவல் வருட
னீவலுந்தை வரலுமென மொழிவர்பா வலரே. 337.

வலத்தல்வா ரணமிணைத்த லாணைதட்டல் முடைதல்
மாற்றல்வா ரித்தலொடு தடைதடுத்தல் தகைதல்
விலக்கலின்பேர் நெகிழலொல்லல் குழைவின்பே ரேவல்
வியங்கோளாங் கண்டூதி சொறியிரண்டுந் தினவாம்
பலித்தல்கிடைத் திடல்வாய்த்தல் பயப்பீன்றல் பெறலாம்
பரிசனந்தொட் டிடலூறு துவளல்திவ ளலுமாங்
கலத்திடல் வளாவுத லளாவுதல் துளாவல்
கலம்பகஞ்சங் கீரணங் கலாவலுமென் றியலே. 338.

இயற்றலுத்தி யோகமுஞற் றூக்கந்தா ளாண்மை
யியலுழப்புச் சாயமாள் வினைமுதுமை தாள்வு
முயற்சியதாம் பேராண்மை யருமையிட லோங்கி
முடித்தலூ ராண்மையதா முண்டாதல் பூத்தல்
பயத்தலுமாம் பிறகிடலே பிறக்கிடல்பின் றலுமாம்
பாதீடு பெய்தலளித் திடல்செறித்தல் மூன்றும்

வெயர்த்தலே கசிவுவேர் வாஞ்சுவே தழுமாம்
விற்றல்பக ருதல்மாறல் கொடைவிலைசெப் பகவே
வேயெனுஞ்சொல் லொற்றுகு ஞொள்கல்சிங்கல் போகல்
மெலிவுகிரி சக்தேம்பல் நாம்பலிளைத் தலின்பேர்
காய்தல்வறத் திடல்முனித்த லுலறல்முதி ரலுமாம்
காலலுமிழ்த் திடல்பில்கல்பிளிற்றலுக்கொப் பளிப்பாம்
மாய்தலே வரணமிவை மறைதலாங் தெற்றல்
மாறுயா டாம்பொல்லங் துன்னமாஞ் சங்க
மாயமே யுல்குசாரிகையுமாம் பிணக்கே
யரில்வாரங் துவக்குமற ளுற்பேரா வனவே. 340.

ஆவிவிடல் மாளுதல் சமாதிபெரின்றல் முடித
லவன்றல்யோ க்கந்தபுத விலலிறத்தல் மரணம்
வீவுதுஞ்சல் மாய்வுமுஞ்சல் சாவுமூ வைந்தாம்
விளிவுமாம் பரிகரிவக் கிரமாறல் சேறல்
தாவுமீண் டிடலேங்தாஞ் சம்பிரதஞ் சித்தாங் [லின் பேர்
தரித்தல்பரித் திடல்பொறுத்தல் தாங்கல் சமத்த
வாவரு வுதல்கடத்தல் தாண்டல்தத்த லாகும்
வளைத்தல்சுற்றல் சூழுதல் வளாகமெனத் தெருளே
தெருட்டலுடன் வருட்டலும்வற் புறுத்தலாம் வரன்றல்
தெள்ளல்கொழித் திடலாகும் பூட்கைமேற் கோளா
முருத்தல்பொடித் திடறுறன் முளைத்தலா றுக்க
லூன்றலென்ற லுந்தள்ள லாம்பாது காத்தல்
புரத்தனிலே பெறலோம்பல் திதிநோக்கங் காத்தல்
போற்றலுமா மரண்காவல் கட்டிகத வேம
யிருட்கடியே வேலிசே மமுங்காப்ப தாகு
மிளைதலைகா வற்பெயரென் பார்தமிழ்ச்சொல் பவரே.

பவனிக்கே பேருலாப் போதலாம் வழங்கல்
பயிறலுல வலின்பேராங் தூய்மைசெய்த லுடனே

யுவனித்த லிரண்டுமுவ லாளனத்தின் பேரா
மூவளலசைக் திடறிவண்ட லொசித்தறுவண் டிடலா
மவுனப்பேர் மோனம்வா ளாகோளா வாகும்
வரியிறை கறைகடனுங் கரங்குடியு மிறுப்பாங்
குவிதற்பேர் சாம்பல்கூம் பலுமொடுங்க லாகுங்
குறைதிறைகப் பமுங்தெவ்வர் பாகுடத்தின் கவர்ப்பே. 343

கவர்தலே குடைதன்ஞெலி தலுங்கடைத லாகுங்
கட்டலே சோர்வுபட்டி கரவுகர வடமே
சவுரியமே படிறுதிருட் டொடுகள்ளல் கரப்புச்
சாங்கந்தே யங்களவு தேனுவுமே களவாம்
துவர்தல்கீ றுதல்கீழ்தல் கீண்டல்வகிர் பிளத்த
றுணிகீன்றல் கீறல்போழ்ந் திடல்பீறல் கிழிவாம்
கவிதலவித் திடனதுத்த ஞெதுத்தலுமற் றதற்கா
நாடனே டுதறுருக்கை யரிக்கொளல்தே டுதலே. 344.

தேடுமல மரல்சொரிதல் மறுகன்ஞொட்க றிரித
றெருமரலே பிரமரிஞூர்த் தலுஞ்சுழற லாகு
மோடனீ ளுதனீண்ட னிமிர்பாற னீட
லோராறு நேரோட லாதிவீ தியுமாம்
வாடலில்வெம் பரியோட்ட மண்டிலமே சாரி
மாதிவா ளியுமாகும் பாதீடு தான்பங்
கீடுபகுப் பேபாத்துப் பாகமும்பங் கிடலா
மேற்படலொட் டுதல்வலித்த னேரலுடன் படலே. 345

படர்ச்சியிவ ருதலேக லொதுக்கமில்லல் சேறல்
படர்தலியங் குதல்வழங்கல் *போதலா மிறத்தல்
கடத்தல்விடுத் திடல்பிரிதன் மறுங்கலே தணத்தல்
கழித்தலிகந் திடனீங்க நீர்தன்மூ வேழு

---

* போதல் செலவிறத்தல் (பி - ம்)

நடப்பதாங் கவர்தல்வவ்வல் கொளலும்வா ருதலா
*கறிதாக்கன் முண்டிதமே மழித்தல்சமைத் திடலே
வடித்தலின்பேர் நுடக்கலே துவட்டலா மூட்டன்
மாட்டல்பொத்த லிரண்டாகுஞ் சரணமறை புகலே.
மறனிகல்சல் லிகம்பூச லார்ப்பமர்தெவ் வுடன்றல்
மலைப்பிரணந் தாக்கோறல் கிடைத்தன்ஞாட் பேற்றல்
செறல்முடுகல் போர்பொருத லாயோதக் தும்பை
தீய்த்தல்வினை முரண்கூட்ட மொய்செருநேர் கிட்டன்
முறுகலா கவஞ்சமமே தலைப்படன்மண் டுதலே
முட்டல்சமர் சங்கிரா மஞ்சண்டை யிடற்பேர்
உறவின்மேற் சாராமை தழிஞ்சியாம் பகையை
யொறுத்தல்வள்ளை யாஞ்சுடல்சக் தாபந்து பிதமே
துவலுகுத் திடல்சிதர்த்தல் †சிதர்தலூழ்த் தலுமாந்
துண்டவெய்த லுகைத்தனட வுதல்கடவல் கைத்தல்
எவலுய்த்த லொட்டலூர்ந் திடல்செலுத்தல் பத்தா
மிடைவெட்டா றலையதர்கோன் வழிப்பறியாம் வழியின்
மாவெதிர்ப்பாற் றுப்படையார் தரல்கொடுபோ யிடலாம்
வலியழித்த லாற்றறுத்த லேமடித்த லுழற்ற
லாவதுழக் குதலாகு ஞெகிழ்தன்ஞொள்க லலைய
லாஞ்சியலை சலின்பேரா மென்றுநா டுகவே. 348.
நாடகந்தாண் டவங்கண்ணுள் ‡வாணிநடி நிருத்த
நடநடனம் படிகநாட் டியந்தூக்குத் தூங்கல்
ஆடலா லுதல்பெயர்த லகவனடை நடித்தல்
அசைவேகட் டணையாட்டுக் கூத்துமூ வேழாம்

* கனமழிதாககல முண்டிதமா மாககதல சமைத் திடலே (பி - ம்)
† சிதர்தலுரைத் (பி - ம்)
‡ வாணிநட்ட (பி - ம்)

யாடிலயம் பித்தம்வீ ரட்டானங் கடகம்
பவுரிகர ணம்பரதம் பிரமரியே புரிய
மோடலைப்புள் ளாளங்கூத் தினில்விகற்பாம் பழக
லுழத்தல்பரு யித்தல்சிர மஞ்செய்த னடையே. 349.

நடனமதிற் கொடுகொட்டி தாண்டவம்பாண் டரங்க
நந்திகூத் தாங்கபா லமுமாமால் கூத்தே
குடமல்லோ டல்லியமாம் பாவைசெல்வி கூத்தாம் [கால்
குடைதுடிசேய் கூத்தார்துற் கையின்கூத்து மரக்
கலையமே சசிகூத்தாம் பேடுமதன் கூத்தாங்
கருதுதுடி யேழ்மாதர் கூத்திருக்கை பழுவின்
புடையொற்ற றுணங்கையதாங் குரவைகைகோத் தாடல்
புதுவெறியாட் டணங்குவெறி கழங்கும்வாய்த் தனவே. 350

வாயினிற்கை நீயாற்றட்ட லாவலங்கொட் டுதலாம்
வட்டித்த லொற்றறுத்தல் வட்டணை தட் டலுமாம்
ஆயகுடங் கைகொட்டிக் குவித்தல்கொம்மை செங்கை
யதைக்குவித்துக் கொட்டலாந் தாளவொத்துச் சதிசீ
ரேயதுவாங் குடக்கங்கை கூப்பிமெய்யைக் கோட்ட
லேகபதங் குத்தித்தல் குஞ்சித்த லாகும்
பாயுமசைத் தலின்பேரே துயல்வரலொ டசைதல்
பாழல்சொரி யலுமாகு காற்பெயரொற் றுமையே. 351.

ஒற்றலுடுத் தலின்பேராங் கொட்டலே சாத்த
லுடன்சதுர்த்த லப்பலின்பேர் மூன்றாகும் பூசல்
தெற்றுபுலர்த் துதல்வரித்த லிரண்டாகும் வைத்தல்
தெறுத்தல்செரித் தலின்பேரு மிரண்டாகு மிறுக்கல்
தற்றுதலாங் கொள்ளைகொண் டி குறையா முரோசல்
சார்ந்துராய்ப் போதலுரிஞ் சுதலாஞ் சுவாச
மற்றும்மல் மூச்சாமா வித்தல்கொட்டா வியின்பே
ரலதுமிழ்த்த லூற்காரங் காறல்சத்தி யகல்வே. 352.

ஒன்பதாவது செயல் பற்றிய பெயர்த் தொகுதி முற்றும்.

---

$ யரற்ற (பி - ம்)

# பத்தாவது

## ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதி.

### ககர வெதுகை

அகரமெழுத் தாராகு மகம்வேள்வி நாளா
மகமிடமுன் மனம்பாவ மனைமரங்கள் விலையாஞ்
சிகரமலை முடிகவரி மதிழ்தலைவெற் பலையாஞ்
சிகழிகைவா சிகைமாலை மயிர்முடிமுப் பெயராங்
தகர்விலங்கி ஞனுடைத லாடெனமுப் பெயராஞ்
சகம்பூமி யாடிரண்டா நகந்தருவெற் புகிராம்
புகர்வெள்ளி நிறமாசா மொகரமயி லெழுத்தாம் [ரே-
பொருட்டேகன் னிகைசேற்றிற் குமிழ்வெற்பாய்ப் புக 353

பகங்கொக்குக் கான்கோழி பகுப்புடன்பெண் குறியாம்
பகலொளிதி வாமுகிழ்த்த நடுச்சுடர்நாட் பகுப்பா
முகந்திசைவத் திரமாகு நுகநுகக்கோ லலமா
முகடுவெரின் முகடுயர்வாம் பகர்தல்விற்றல் சொலலா
மிகம்புவியிம் மையுமிருபே ருகநுகம்பார் யுகமா
மிகவலைச்சொ லகறலும்பே ரகியரவோ டிரும்பாம்
ககங்கணைபுட் பொதுப்பெயரா மகிழ்வகுள மகிழ்வாங்
ககனங்கான் படைவிசும்பென் றருமூன்றும் விகற்பே 354

விகடமுயர் விகிர்தமுமாந் தகடிலையம் மையுமா
மிகைகுற்ற மிகன்மேடா நகைநகைதே சுவப்பாம்
பகடுபுணை பெருமைகரி யேறெருது கிடாவாம்
பகவனே தெய்வமுமும் மூர்த்திகளு மாகு.

மகடூவயின் புறகடீ டுதனுள்ளோ டைம்பே
ரகவலா சிரியமயிற் குரல்கூத்தென் றுருகுஞ்
சகடமுரு ளூர்க்குருவி ரோகிணியோ கழுமாந்
தகைபெருமை யழகன்பு தடைபண்பா மகளே. 355

மகரமிற் சுறாக்கொங்காஞ் சுகமின்பங் கிளியரம்
மகரந்தங் கள்ளுத்தேன் மலர்த்தாது முப்பேர்
இகல்பகைபோர் வலிநிகர[ா]ஞ் சிகைகுடுமி கழுகா
மெஃகுருக்கு வேலாழி படைக்கலன்கூர் மையுமாம்
புகல்குதிர்சொல் லுடல்கெதிபக் குவம்அடல்புக் கலுமாம்
புகைபுகையோ சனையாகுந் திகைசணங்கு திசையாஞ்
சிகரிவெற்பு நாரையெலி கோபுரநாற் பேராந்
திகிரிமலை வேயாழி வண்டில்வட்ட நிகழ்த்தே. 356

நிகழ்நிகழ்ச்சி யொளியாகு மகணிவய லுள்ளாம்
ஞெகிழிசிலம் பனலனலின் பொறியறைகொள் ளியுமா
மிகுளைசுற்றந் தோழிநட்பா மகலகற்சி விளக்கா
மிகுத்தல்விளி வீர்தல்கொலை வீழ்த்தலழைத் தலுமாஞ்
சகலமுற்றுந் துண்டமுமா மகலமுரம் விரிவாஞ்
சகுந்தமே கழுகுபுள்ளின் பொதுப்பூக முப்பேர்
சிகிமயில்நூ புரங்கேதுத் தீயெனநாற் பேராஞ்
சிகண்டிமயில் பாலையாழ்த் திறமுமாஞ் சகத்தே. 357

சகுனிநிமித் திகன்புள்ளா மகன்சுதனிந் திரனுஞ்
சகுனமே பறவைகிழங் கொடுநிமித்த மூன்று
மெகினமே புளிகவரி நாயன்ன மாவா
மிகலனரி பகைஞனுமாந் துகள்பொடிமா சிரண்டா
மகலுள்பரப் பூரகல நாடெனநாற் பேரா
மகைத்தல்வே தனையொடித்த லறுத்தலழித் தலுமா
முகரிபொன்னே ராறுகுஞ் சகிதோழி பொறையா
முகைதிரள்பூ மொட்டுமிடா மூன்றெனவா கினவே. 358

ஆகுவே மூடிகஞ்சர் மரையெலிமுப் போரா
மாகமார் புடலாகும் போகில்புட்பூ மொட்டாம்
பாகுபா கன்குழம்பு பாக்குப்பால் பகுப்பாம்
பாகலே காரவல்லி யோடுபலா மரமாம்
வாகுதோ ளழகாகும் பாகமையம் பகுப்பாம்
வாகைமரஞ் செயம்பண்பாஞ் சேகுகாழ் விதையாஞ்
சாகம்வண்டு தேக்காடு சிறுகீரை தாளுஞ்
சாகரஞ்சிந் துறங்காமை யாமிசைக்கோ கிலமே. 359

கோகிலம்பல் லிகள்குயிலா நாகிளமை சங்காங்
கூகையேர் செடிபுள்ளாம் பூகமுண்டங் கமுகாம்
போகிபாம் பிந்திரனும் போகல்கெடில் போக்காம்
போகமே பாம்புடலும் போகவிகற் பமுமாம்
யூகமே குரங்குபடை யுணர்ச்சிதற்க மூவப்பாம்
யோகம்பா வனைகூட்ட முயர்ச்சியுபா யமுமாந்
தோகைமயில் மயிற்பீலி விலங்கினுண் பெண்ணுஞ்
சோகமய லொடுதிரளா நாகரிக மாதே 360

நாகமலை கரிபுன்னை குரங்குவிசும் பரவு
கல்லாடை காரீயஞ் சுவற்கமொன்பான் பேராஞ்
சீகரநீர்த் திவலைகரகந் திவலைசா மரையாஞ்
சேகரமா மரமகுடந் தலைவேர்கூட் டமுமா
மீகையிண்டை கொடைபொன்னு மாகுலகோ யொலியா
மேகமே தனிமையொன்றாங் காகுளியார்ப் பணையாங்
கேகயமோர் பண்கமல மயிலசுண நாடாங்
கிண்டோஃகாஞ்செழுகஞ் சுக்கோரக் கரமே. 361

அக்கென்பு சங்குமணி விடைமுரிப்பு மனவா
மக்கம்விழி மனவிரண்டாஞ் சொக்கழகு மயலா
மிக்கென்ப கரும்புசள்ளாஞ் சுக்கைதா ருடுவா [ழாஞ்
மெக்கல்லுவிந் திடல்சொரிவா மொக்குள்குமிழ் முகி

செக்கென்ப தொருநாளுஞ் செக்குமிருபேராஞ்
சிக்கஞ்சீப் புறிசிகையாந் திக்குவிழி திசையாங்
கொக்கென்ப பகஞ்செந்நாய் பரிமூல மாவாங் [ணையே
குக்கில்செம்போத் தொருமருந்தென் றிருபேர்வக்க 362

வக்கிரமே மடங்கல்வட்டங் கொடுமைபொறா மையுமாம்
மக்கள்சிறார் மானிடரா நக்கலுண்டல் சொரிவாஞ்
சக்கரமே டிலைவண்டில் பெருமைவட்ட மாழி
தரைபிறப்புக் கடலோர்பு ளொன்பதுபே ராகும்
பக்கமே சிறகுநட்புத் திதியருகு நாற்பேர்
பக்கணமூண் வீதியுமாந் தெக்கணந்தெற் குரணுஞ்
சக்கிரிமா லரவிறைவன் மட்பகைசெக் காணுஞ்
சார்ந்தநக்க னிருவாணி சிவனிருபே ராங்கே. 363

ஆக்கமலர் மகள்திருவாம் பூக்கமூர் கமுகாம்
அக்காரம் புடவைவெல்ல மெனவிரண்டு பேரா
மூக்கமே யுற்சாக முயற்சிவலி பொலிவோ
டுள்ளத்தின் மிகுதியென வைந்துபே ராகும்
மேக்குமேற் றிசைமேலாம் பாக்கிடைச்சொல் பாக்காம்
வியந்திடுகைக் கிளையிசையு மொருதலைக்கா மமுமாஞ்
சேக்கைமுலை யுறங்கிடமா நோக்கழகு விழியாஞ்
செழுந்துக்கா ராய்வுநடங் கவிகிறையங் கமுமே. 364

ககரவேதுகை முற்றும்.

---

## ஙகர வெதுகை

அங்கமுட லாறங்க மெலும்புகட்டி லுறுப்பாம்
அங்கிசட்டை நாளெரியாம் பங்கிகஞ்சா மயிராஞ்
சங்கம்வெற்றி சுகங்கணைக்கால் புலவர்சங்கெண் சவையாஞ்
சங்குபடை வளைசங்காங் கங்குதினை பருந்தாம்
புங்கமம்புக் குதையம்பு புடவையுயர்ச் சியுமாம் [பாம்
பொங்கர்மரக் கொம்பிலவாம் பொங்கல்மிகை கொதிப்
வங்கம்வெள்ளி யீயம்வழு துணைபுணையோர் நாடா
மங்குலிருள் கார்விசும்பாம் பொன்பொருமங் கணையே. 365

அங்கதந்தோ ளணிபாம்பு வசைச்சொல்லென் றுகு
மங்கணமோர் பாலமுற்றஞ் சலதாரை சேரு
மிங்கிதமே நயங்குறிப்பாஞ் சங்கையைய மதிப்பா
மிங்கிவண்கா யமுமாகுஞ் சங்கரன்மால் சிவனுஞ்
திங்கள்மதி மாதமதாம் பிங்கலம்பொன் பசப்பாஞ்
சிங்களமே முசகாடாங் கொங்கைகொப்பு முலையாம்
பங்கநற்று சொடுபழுது சேறுபின்ன நான்காம்
பங்குமுடம் பாதிபக்கஞ் சனியாகும் பாங்கே. 366

பாங்குபக்கஞ் சகியழகாம் வாங்கல்கொள்ளல் வளைவாம்
பங்கயம்பார் தாமரையாஞ் சிங்கல்குன்றல் மெலிவா
மோங்கல்வெற்புத் தலைவன்மே டுயர்வோங்கல் வேயா
முரைதூங்கல் சோம்பானை துயில்நடந் தராசா
ஞாங்கர்வேல் பக்கமுன்பு மேலெனநான் காகு
நல்லாங்கவ் விடபிகராங் காங்குசரங் கறுப்பாம்
வேங்கைபுலி பொன்கணியா மூங்கில்வேய் நாளாம்
விளம்புகாங் கேயன்வீட் டுமென்குகனென் றசையே. 367

ஙகரவெதுகை முற்றும்

## சகர வெதுகை

அசிசிரிப்பா யுதம் வாளாஞ் சசிசுத்தங் கனலா
மாசுவிரை வாசுகவி கவசமற்பந் தீதாம்
பிசியுணவு பொய்யாகு மசலைபுவி யுமையாம்
பிசினனே பொய்யனுலோ பன்கோளன் முப்பேர்
வசிகூர்மை வசியம்வா ளேவலும்வீ டியுமா
மாசுகுற்றஞ் சிறுமைமழை யழுக்கெனநாற் பேராஞ்
சசிமதிகற் பூரமிந்தி ராணியென மூன்றாந்
தாசிதா ளடிமையும்வே சையுமாம்பார் மிசையே. 368

மிசையுணவு மேடாகும் பசிபசப்புப் பசியாம்
வீசலெறிந் திடலீவா மூசலூஞ்சல் சளிப்பாம்
அசனமுணு வேங்கையுமா நிசிபொன்மஞ்ச ளிரவா
மாசினி பலாவயிர மரவுரியின் சிறப்பா
மூசலிபல பத்திரனு மூடம்புதா ழையுமா
மூசல்சா மொய்த்திடலாம் பாசுவேய் பசப்பாம்
இசையொலிசொற் புகழ்பாட்டா மசுணமயில் புள்ளா
மெச்சமகங் குறைசேயா மிச்சைமிடி வசையே. 369

வசதியூர் வீடிதமாங் கசிவிரக்கங் கசிவாம்
வாசமிருப் பிடமணம்புட் சிறகுசீ லையுமாம்
அசனியிடி யுண்பான்வச் சிரப்படைமுப் பெயராம்
ஆசைதிசை யன்புபொன்னு மாசுகங்காற் றம்பாம்
பிசிதநீ ரிறைச்சியுதா ரணம்வேப்ப மரமாம்
பிச்சமயிர் குடையின்பே ருச்சியுச்சி முடியாம்
விசையம்வெற்றி சூரியமண் டலங்கிரிசற் கரையாம்
விச்சைவிதை கல்வியதாங் கொச்சைதக ரசடே. 370

அசந்தகருங் குதிரையுமூ வாட்டைநெல்லு மாகும்
அச்சமே பயந்தகடஞ் சவியகத்தி னாற்பேர்

வசந்தமனை மிந்திரன்மா ளிகைதென்றல் முப்பேர்
வாசிவளங் குதிரைதெற்குக் குழலோசை நாற்பேர்
விசும்புபொன்னு லோகமுகில் விண்ணுடனே திசையாம்
விசைதுரியம் பொறியாகுங் குசைகாணல் சுவலாம்
குசந்தனஞ்சம் பிரந்தொட்டி தசும்புமிடாக் குடமாங்
கோசிகமோர் மறையாடை யென்பர்தே சிகரே. 371

தேசிகன்றே சாந்திரியா சான்வணிகன் மூப்பேர்
தேசிகம்பொன் கார்தியழ கோர் திசைச்சொல் கூத்தாங்
கேசரமே மகிழ்மரமும் பூந்தாது மாகுங்
கேசமே மயிர்கவுளாங் கீசகம்வேய் குரங்காங்
காசைகுசை யஞ்சனியாங் காசுமணி மறுவாங்
கச்சையே தழும்புகவ சங்கயிறு மூன்றும்
பாசமுறை யன்பூசித் துளைபேய்பார் கயிறும்
பாசியணி நாய்வருணன் சடைச்சிபற்றுப் பாசே. 372

பாசனமுண் கலன்பாண்டஞ் சுற்றமென மூன்றும்
பச்சைமர கதம்புதன்மா லோர்செடிதோ லம்பேர்
கோசமுட்டை முறைகுறிபண் டாரமதி லுறுப்பாங்
குணிசெச்சை யாடுவெட்சி தேய்வையுமுப் பேராந்
தூசுகலை புரைசைதூ சிப்படை முப் பேராஞ்
சொற்றிடும்வச் சிரங்குலிசங் கள்ளிவயி ரமுமாம்
பேசுநொச்சி யூர்சிந்து வாரமதி லாகும்
பின்வசுப்பொன் வசுக்களான் கன்றனல்வஞ் சியரே.

சகர வெதுகை முற்றும்.

## ஞகர வெதுகை

வஞ்சிகொடி மரம்பாவூர் மேற்செலவு பெண்ணும்
வஞ்சம்வாள் கபடமுமாம் பஞ்சமிடி யைந்தாம்
இஞ்சிமதி லாத்திரமா ரெஞ்சுமன மார்பாம்
எஞ்சல்குறை விழைத்தலுமாங் கஞ்சிகஞ்சி யூராங்
குஞ்சிகுன்றி சேய்மயிர்புட் பார்ப்பொடுசொற் பேராங்
குஞ்சமீ யோட்டிதொங்கல் குறளைகுன்றி படியாங்
கஞ்சனமே கரிக்குருவி கண்ணாடி யிரண்டாங்
கஞ்சனயன் கன்னனட்டுவன்கஞ்ச ணமே. 374.

கஞ்சமரை தாளமப்பங் கஞ்சாவெண் கலமாங்
கஞ்சிகையே யிடுதிரைவத் திரஞ்சிவிகை யாகும்
அஞ்சலிவவ் வாற்றொழுலாம் வஞ்சனைபொய் சூரா
மஞ்சனமை கறுப்பொடுதிக் கானையிலொன் றாகு
மஞ்சரியே பூங்கொத்து மாலைதளி ராகு
மஞ்சுபூண் வனப்புவலி முகில்யானை முதுகாந்
துஞ்சல்வலி நிலைபேறு துயில்சோம்பு சாவுத்
துஞ்சியிருப் பதுமாறுங் கிஞ்சுகவா யணங்கே. 375.

கிஞ்சுகமென் பதுமுருக்கு முதலைசிவப் பாகுங்
கிளர்காஞ்சி மேகலையூர் மரமெதிரூன் றலுமாம்
முஞ்சுதலென் பதுசாவு மொய்த்திடலு மாகு
மொழிஞாஞ்சி லென்பதுவே கலப்பைமதி லுறுப்பாம்
பஞ்சரம்வாட் கோரைபுள்ளின் கூடுசெருந் தியுமாம்
படுங்கஞறல் பொலிவுகுன்ற லெழுச்சியென லாகுந்
தஞ்சமெனு மொழிபற்றுக் கோடெளிமை யாகுஞ்
சாற்றுமஞர் துயரறிவி லோராமிவ் விடத்தே. 376.

ஞகர வெதுகை முற்றும்.

---

## டகர வெதுகை

இடம்வாமம் பொருளிடமாஞ் சடமுடல்பொய் யாறு
மிடபமரக் கொம்பெருதா முடிமகுடந் தலையாங்
குடமூர்தற் கரைகும்ப மால்கூத்துப் பசுவாங்
குடிஞையே கூகைபுள்ளின் பொதுநிமுப் பெயராந்
தடமலை விசாலஞ்சீர் சுனையடிகோண் பெரிதாந்
தடிவயல்வில் லூனுடம்பு தண்டலக்கை மின்னுந்
திடநிசமும் பெலமுமாம் விடநஞ்சு தேளாஞ்
செடிசிதைவு கான்பாவங் குணமின்மை கடனே. 377.

கடம்வழிகான் குடங்கயிறு கடனீதி முழவு
கரிக்கதுப்பு மதமானைத் திரளுடல்பன் னென்றும்
படமுடுக்கை கொடிபாம்பின் படங்கோலக் கிளியாம்
படர்நினைப்பு நடைதுயரம் வீரர்நாற் பேராம்
மடமுனியிற் பேதமையாங் குடைகவிகை குடைவாம்
மடலுலா மடற்பூவி னிதழ்பனையே டாகும்
நடலைபொய்வஞ் சனைநடக்காம் வடமுழுக்கால் கயிறும்
நடைவழியே யொழுக்கநடை செல்வமாங் கொடியே. 378

கொடிறுபூ சங்கதுப்பாம் படிறுபொய்யே களவாங்
கொடிதுவசங் காக்கைவில்லாங் குடிகுலமூர் நுதலா
மடிவயின்சோம் புடைதாழை மடங்குதல்சா வறுபேர்
மடைசோறுங் கடைப்பூணும் புனன்மடையு மாகுந்
தொடிவளைகி லொருபலமாம் படிவகோன் புருவாந்
துடியேலங் காலநுட்பம் பறைமுப்பே ராகும்
வெடிபுகையே யிடிவெடித்தல் வெளிபயமைம் பேராம்
விடர்கமர்கான் முளியிருப்புத் தூர்த்தர்மலை விடவே. 379

விடைவிடலே றெதிர்மொழியாங் கிடைகிடப்புக் குழு
[வாம்
விடங்கமேர் கொடிகொடுங்கை படங்குகொடி வானி

கடைமுடிவங் காடியிடம் வாயில்கடை தலுமாங்
கடிகைதுண்ட நாளிகையோர் குலங்கதவிற் றாழாம்
படைகலனை யாயுதங்கண் படைசேனை யலமாம்
படுவிகுளங் கள்விற்பாள் நொடிபிதிர்வார்த் தையுமாம்
அடையிலைசும் மாடடுத்தல் கணம்வழியப் பமுமாம்
அடர்நெருக்கம் போர்தகடாந் துடர்மாலை துடர்பே. 380

துடவைகொலை யுழவின்பே ரடல்கொலைபோர் வலியாந்
தொடுமெருதந் தோட்டமுமாங் குடுமியுச்சி மலையாங்
கடகமதில் வளைசேனை கரித்திரள்வட் டமுமாங்
கடுவிடமுட் கசப்பரீ தகியுகாற் பேராம்
படிபகைபார் நிகர்குணஞ்சோ பானமங்க வடியும்
பாரமும்வா யிற்படியும் படிவுநா ழியுமாஞ்
சடிலமே சடைகுதிரை செறிவுநெருக் கமுமாஞ்
சடைவேணி வேராகுந் தொடைதார்நாண் வடமே.381.

வடகமுல்லா சந்தோலாம் விடலைமன்ன னுடைவாம்
வடுச்செம்பு தழும்புவண்டா முடுக்கைதுடி யிடையாஞ்
சுடிகையுச்சி முடியணியாம் வடுகிசையாழ்த் திறமாஞ்
சுடரொளிமுக் கதிராகும் பிடிகமையம் வளையாம்
படலிகையோர் மணிவட்டம் பீர்க்குப்பூந் தட்டாம்
படலைபரி மணிமாலை படர்வொருகட் பறையாம்
கடிவடிவு விரைவையங் கூர்மைபேய் விளக்கங்
காலமணம் பயங்காப்புப் புதுமைநீங் கிடலே. 382.

இடைநிறையே நடுமருங்கு லிடமுநாற் பேரா [யூராம்
மிடக்கர்மறைச் சொற்குடமாம் படப்பைகொல்லை
படுதலொலி சொலல்பூத்த லின்மையுண்டா தலுமாம்
படுமரத்தின் குலைகள்ளு நீர்நிலைநண் மையின்பேர்

அடிமுதல்கால் சென்டுவெளி யடிமைகவிப் பதமா
  மடுப்பொருகா ளடுத்தலச்ச மடுப்பொடுகாற் பேராம்
வடவைபிடி யெருமைநீத் திரள்பரிப்பெட் டையுமா
  மடங்கலுக மிமனிடிநீச் சிங்கவோய்ப் பாடே. 383.

பாடுபக்கம் படுதலொலி பெருமைவாய் பாடாம்
  பாடிபா சறையூரா ளாடிகன்னல் கரம்பா
மாடுபுடை செல்வப்பே ராடுவெற்றி தகரா
  மாடமனை யுழூக்தின்பேர் வாடைதெருக் காற்றாங்
கோடிகமே பூந்தட்டுஞ் சீலையுமா மிருபேர்
  குடம்பைமுட்டை கூடாகு முடன்றல்சினம்போராஞ்
சேடுகன்மை பெருமையே யழகுதிரட் சியுமாஞ்
  சேடனோர் குலமனந்தன் பாங்கனுங்கூ டியவே. 384.

கூடமனை மலையுச்சி கவடுசம்மட் டியுமாங்
  கோடுவளை வயிர்குவடு கரைமருப்புக் கொப்பாம்
ஓடைநீர் நிலைக்கிடங்கோர் மரம்பட்டங் கொடியாம்
  உடுவிண்மீன் கிடங்குமரக் கலவிசியம் பீர்க்கா
மீடுவலமை குழைவுவலி பெருமைநாற் பேராம்
  இடங்கர்குடந் தூர்த்தர்சிறு வழிமுதலை காற்பேர்
பீடிகையா சனபீட மாவணந்தட் டாகும்
  பெட்டலிச்சை செறலுமா கட்டகடங் கேடே. 385.

கேடகமே யூர்பலகை பரிசைமூன் றாகுங்
  கிடுகுதேர் மரச்சுற்றுங் கேடகஞ்சட் டமுமாம்
கோடைகாந் துகங்குதிரை மேல்காற்று மாகும்
  கோடரம்வா னரஞ்சோலை குதிரைமரக் கொம்பர்
மோடுமே டுரமதாஞ் சேடியூர் சகியா
  முடங்கல்வேய் முடங்குதனோய் தாழைநாற் பேராம்
ஆடியுத்தி ராடமா தங்கண்ணு டியுமாம்
  ஆடல்கூ டுதல்வென்றி கூத்தெனுஞ்சா டுரையே. 386.

சாடிகோ ளுரைதாழி சிலையுமுப் பேராஞ்
சட்டியக்கம் விசளையுமாங் கட்டிவெல்லஞ் சுகமாம்
கோடிபுதி தெண்கலைப்பே ராடகம்பொன் றுவரை
கோடகமே முடியுறுப்புக் குதிரைபுது மையுமாம்
பாடலம்பா திரிதுரகஞ் சிவப்புமுப்பே ராகும்
பட்டுசகர் சிலையின்பேர் வெட்சிபுதல் புறமாக்
தோடுபனை மடல்கூட்ட மலரிதழ்கா தணியாக்
தோட்டிகத வோடுகெரித் துறட்டியுங்கட் டினரே. 387

கட்டளையே நிறையறித லுரையறித லொப்பாங்
கடவுள்முனி தெய்வமொடு நன்மையென மூன்றுங்
தொட்டலே தொடுதல்தோண் டுதல்கைநீண் டலுமாஞ்
சுட்டல்குறி சுடுதலின்பேர் மட்டளவு கள்ளாம்
நட்டலே நடுதலொடு நட்பியற்றுந் தொழிலாம்
நாட்டம்விழி பண்வானா மோட்டமிதழ் தோல்வாக்
தட்டைகிளி கடிகோல்வேய் தினைத்தாள்முண் டமுமாஞ்
சட்டமே பலகைபள்ளி கிடுகெனவிட் டனரே. 388.

இட்டிகைசெய் திடலாணி யிட்டிகுந்த மகமாம்
இடியுறுதிச் சொல்லிடிகென் மாவிடித்த லுற்பேர்
குட்டநோய் குளங்குறிதாம் பெட்பாசை பெரிதாங்
குட்டன்மகன் மறிபிணியாங் குட்டிமகள் பறழாம்
பட்டிகையே கச்சிரதம் பணைதெப்ப நாற்பேர்
பட்டமே பதவிவழி சவரிசேக் கையின்பேர்
கொட்டமத மொருமருந்தாஞ் செட்டிசெட்டி குகனுங்
கோட்டங்கோண் படப்பைகொட்டில் கோயில்சும்மை
[தட்டே. 389

தட்டசடு கேடகந்தேர் நடுத்தட்டுத் தடையாந்
தட்டல்தடை கிட்டலுமாம் பட்டிகுக்க லூராம்

முட்டெனுஞ்சொ லிடையூறு சங்தெல்லா மாகு
முடலைவலி பெருமைதிரட் சியுமெனப்பேர் மூன்றுங்
கட்டலே தடைகளைதல் பக்தித்தல் களவாங்
கடுத்தலெனுஞ் சொல்லைய மொப்புவே கழுமாம்
புட்கரம்வான் பாண்டமுகம் வாள்குருகம் புயநீர்
புழைக்கைநுனி நிறைவுதீர்த் தம்பருத்தாய் காட்டே.

காட்டியங்கூத் தெண்ணமுமா ஞாட்பமர்பா ரமுமா
நல்லபுட்டம் புடவையே நிறைவுகாக் கையுமாம்
கோட்டியுமை யவள்பிரமை சவைமுப்பே ராகும்
கூறுதிட்டை திண்ணையுரல் மேட்டின்பே ராகும்
வேட்டுவனென் பதுமகநாட் புழுவேட்ன் மூன்றும்
வியன்வட்டங் கலையூர்கோள் பரிசைவட்டந் தாழ்வாம்
பாட்டிதாய் தந்தையையீன் றாள்விலங்கிற் பெண்ணும்
பருங்கிட்டி யோரீற்றுத் தானமா மணியே. 391.

டகரவெதுகை முற்றும்.

---

## ணகர வெதுகை

மணம்வெறிவேட் டுடல்புணர்வாம் பணமகிபொன்மையா
மணியழகு கண்டைகவ மணிகருமை நன்றுங்
கணமுடகோய் துடிதிரட்சி பேய்வலையங் கணமாங்
கணியளவு வேங்கையதாம் புணர்விசைதல் சேர்வாம்
குணமியல்பு கயிறுபண்பு கும்பம்வின்ஞா ணைம்பேர்
குணில்கடிப்புக் குறுந்தடியாந் திணையொழுக்க நிலமாம்
உணர்வறிவு தெளிவூட லொழித்தலென மூன்று
மோணகதி மாயோனு ளாமெனுந்தா ரணியே. 392.

அணியழகு நிரைசெய்யுட் கலனணவல் படையாம்
அணையேசெய் கரைமெத்தை யடுதல்வாத் தியமாம்

பணிகருவி யரவுதொழில் பூண்வார்த்தை பணிவாம்
பணைவயல்வேய் பரிப்பந்தி பருத்தல்மரக் கொம்பாந்
துணிகடிகை சோதியா நுணவைசக்கை மாவாந்
துணையிரட்சை யிரண்டாகுங் கணைதிரட்சி யம்பாம்
``ரகம்புள் மயிலாகும் பணவைபரண் பேயாம்
பட `காடர்பு விலங்கின்பெண் விருப்பமா மணங்கே.
அணங்கும `பழகாசை துயர்கொலைபெண் ணணங்காம்
ஆணமன்பு குழம்பாகு நாணிலச்சை கயிறுந்
துணங்கறலே யிருள்விழவாந் துணங்கைதாள் கூத்தாந்
தூணியம்புக் கூடளவாம் வாணமறை யம்பாங்
குணுங்கர்குயி லுவரிழிஞர் தோற்கருவி யோர்பேர்
கோணலே கோண்வளைவு மாறுபா டாகும்
வணங்கல்பணி வளைந்திடலாங் குணங்குபேய் குணக்காம்
வாணிபா ரதிகூத்து வார்த்தையம்பாங் காணே. 394
தாணநிதி செக்கொருகண் ணோர்பரியூண் கொள்ளாங்
காணியெண்ணோ டாட்சியதாங் கோணிபன்றி முடனும்
பாணமம்பு குறிஞ்சிபட்டாம் வேணிசடை விசும்பாம்
பாணிகைபற் றூசைசீர் நகர்கான்போ தியமாம்
ஆணைமுறை மெய்யேவல் வெற்றிசூள் தடைப்பேர்
ஆணிதான் வயிரமழ கெழுத்தாணி திறனும்
ஏணியெல்லை யுலகிறைவை மான்பழுவே ணியுமாம்
யாணர்நலம் புதிதழகு தச்சரண்ட ராமே. 395.
அண்டரே பகைவர்வா னோரிடையர் முப்பேர்
அண்டம்வெளி முட்டையாஞ் சுண்டனெலி நாளாம
புண்டரமே நுதற்குறியுங் கழுகுமிரு பேராம்
புண்டரீ கம்புலிதிக் *கானகஞ்சம் வண்டாம்
பிண்டமுடல் பெலிபிச்சை யுரைபிரம மறையாம்
பேணல்பே ணுதல்குறிப்பாஞ் சேணீள முயர்வாஞ்

* பிரதி கானகுஞ்சம்.

குண்டலிபாம் பிசங்காகுங் கண்டல்கைதை முள்ளாங்
கொண்கனு யகன்சேர னென்பதுகண் டனரே. 396.

கண்டகவ கண்டம்வயல் கழுத்தாணி கடிகை
கவசமிடு திரைவெல்லங் கரிக்கயிறு துனபாங்
குண்டலம்வான் குழையாகுங் கொண்டல்முகில் காற்றுங்
கொண்டைமுடி யோர்கனியாங் குண்டைசட்டி யேறுந்
துண்டமுக நாசிதுணி சாரைப்பாம் பாகுந்
தொண்டைமிட றுனையின்கை கோவையொரு நாடா
முண்டகமத் தகந்தாழை முளரிமது முள்ளி
முள்ளுடைய மூலமறு பேரெனவிண் டனரே. 397.

விண்டுமலை வெய்காற்று மேகமா லைத்தாம்
விண்முகில்வான் சுவர்க்கமாங் கண்ணிடம்வேய் விழியாம்
வண்டுவளை யளிபூச மம்புபுரி வெண்மை
மாசுவலம் புரிமகளி ராடலொன்பான் பேராந்
தண்டமெறும் கரிவழிதண் டனைபார நான்காந்
தண்டியாழ் தடிபடை குழாயோந்தி யைந்தாம்
அண்டசநண் டுடும்பரவு க[ர]ாவோந்தி தவளை
யானைமீ னுமைபரி பல்லிபுட்பே ருண்டே. 398.

உண்டைதிரள் பிச்சைபடை யுறுப்பாகு முப்பேர்
ஒண்மையறி வொழுங்கழகு மிகுநன்மை யைம்பேர்
சுண்டைமதுச் சுண்டையாங் கண்டகமுள் வாளாந்
தொண்டொன்பான் பழமைசுக்குத் தொழும்புநுழை [வழியா
மண்டலிமண் ணெய்பாம்பு பூனையிறை காற்பேர்
மண்டலந்தட் டேர்கோள்மண் டலஞ்சுதிரை நாடாஞ்
சண்டனலி கால்வெய்யோன் பிண்டிதரு மாவாந்
தண்ணமழு வொருபறையாம் பண்ணமரு மொழியே
பண்ணிசைமாக் கலனையாம் அண்ணல்பெரி திறையாம்
பண்ணைவயல் நீர்த்தாழ்வு மருதஞ்சேக் கையுமாம்

மண்ணணுவொப் பனைமுழவின் மாற்சனைமண் ணென்காம்
வண்மைகொடை வாய்மைவளம் வலிபுகழும் பேராந்
திண்ணநிசம் வலியாடா மெண்ணமிசை யுழைவாஞ்
செண்டுசெண்டு பரிவழியாந் தண்டகங்காண் வகுப்பாம்
எண்ணிலக்க மெள்ளெளிமை கணிதநினை வெழுலாம
ஈண்டேயிவ் விடஞ்சுடுதி யென்பராண் டவரே. 406

ஆண்டவிடம் வருடமாம் பாண்டுவெண்மை நோயாம்
அருந்தாணுச் சிவன்மலைதா ணிலைதறியைம் பேராங்
காண்டநீர் வனங்கலசந் திரைமுடிவம் புடையாங்
காண்டகம்பொற் பணிச்செப்புக் கமண்டலமு மாகும்
பாண்டிலே றூர்திவட்டஞ் சுடர்த்தாள்கட் டிலுமாம்
பசர்வண்ணஞ் சந்தநிறஞ் பண்புமூன் றாகு
மாண்டல்மாட் சிமையிறப்புப் போனதுமூன் றாகும்
வணரழகு வளைவாகு மிணையிரண்டொப் பதுவே.

ணகர வெதுகை முற்றும்.

---

## தகர வெதுகை

அதமிறங்கல் கீழுலகா மதமதர்ப்புக் கடமாம்
அதிர்ப்போசை நடுக்கமா மொதுக்கநடை மறைப்பாம்
மதலைபிள்ளை கொன்றைமரக் கலங்கொடுங்கை தூணு
மதவுபுத்தல் வனப்புவலி யுடன்மிகுதி யைந்தாஞ்
சிதலைபிணி கறையானுங் கதவங்காப் படைப்பாஞ்
சிதனான முடுவெளுப்பாம் புதவுபுல்லுக் கதவாம்
முதலைகராச் செங்கிடையாங் கதழ்வுசினஞ் சிறப்பா
முதலாதி பொருளிறைவ னரசன்பே ரிதுவே. 402.

இதழுதடு மலரேடாம் அதர்வழியாட் டதாம்
[illegible]துவினு வோரிறையாஞ் சிதடன்மடன் குருடாங்

கதலிகொடி காற்றூடி வாழைதே ருருக்
கதுப்போதி கவுளாகும் விதப்புமிகை சடுக்காம்
பதலைவரை தாழியொரு கட்பறை யிடாவாம்
பதமழகூண வரிசைசொற்பேர் தாழ்ச்சிவழி காலாந்
திதிபொருள்பக் கங்காப்பா மதன்வனைப்பு வேளாஞ்
சிதருறிவண் டொடுதிவலை துணிதுகளாஞ்சதமே 403.

சதமிறகெண் ணிலைதிரமாம் வெதிர்செவிடன் வேயாஞ்
சதியுமைகற் பாட்டிரோ கணிதாளங் *கொலையாம்
மிதவைதெப்பஞ் சோறுருங் கதிவிரைவு கெதியாம்
விதிவினைபண பயனுகும் பதியரனூர் தலைனும்
மதியசைச்சொல் விதுமாதம் புத்திமதிப் பாகும்
மதுக[ெ]மட்டி யிருப்பைதரா மதுரம்வண்டு மகிழாம்
பிதிர்கொடிஞா வற்பிதிராங் கதைகதைதண் டுரையாம்
பித்திகையே சுவர்முல்லை கருமுகையா தலுமே. 404.

ஆதனுயிர் பேஷ்தயுமா மேதமிடர் மறுவாம்
ஆதிமுத னேரோடல் மன்மாலீ சனுமாம்
பூதமைம்பூ தங்குறளா விறப்புயிர்காட் சுசியாம்
போதகமே †புனையிளமை யானையின்கன் றறிவாஞ்
சூதன்முனி சாரதியாம் பூதியமபா ருடலாஞ்
சூதமா வண்டிரதந் தோற்றல்பா ரதமாங்
காதல்கொலை யாசையாஞ் சேதுகரை சிவப்பாங்
கதிரொளியம் பிரவிகருங் காலிகுர லோதே. 405.

ஓதிமம்வெற் பன்னமா மோதையொலி மதிலாம்
ஓதிமயி ரோந்திமலை பூனையறி வைந்தாஞ்
சாதிகுலஞ் சண்பகமோர் தருபபிரமபு கள்ளாஞ்
சாதகம்புட் பயிற்சிமுறி செனனம்பூ தமுமாஞ்

* குலையாம் (பி-ம்) † புனையிளமை

சோதியுடு விளக்கிரவி சுடர்சோதி லெனுஞ்
சுதையமுதான் மகள்சுண்ணச் சாந்துசெல்வமைந்தாம்
பூதிசெல்வ நீறறிவு சேறுதுகள் நரகாம்
புதைகணைக்கட் டுடல்புதுமை நிறைபுதைத்தல் மாதே. 406

மாதவமே யிளவேனில் மதுத்தவமூன் றாகு
மதுமயக்க நறவுதேன் வசந்தமசு ரனுமாஞ்
சூதகமா சூசமின்னார் பூப்புச்சூ திடமாந்
தூதுமணற் சந்துரையா மாதிடைச்சொல் பெண்ணும்
பீதகம்பொன் னிருவேலி சாந்துபொன்மை நான்காம்
பீதமெலி பசலைபன்றி பொன்சாந்தச் சமுமாஞ்
சேதகஞ்சே றணைசிவப்பா மேதியம்பு வாளாஞ்
சீதைபடைச் சால்கொடுப்பை திருவாங்கோ தையரே. 40

கோதைகுழற் காற்றொழுங்கு மாலைகைத்தோற் கட்டே
குடகன்மட வாளுடும்பு வில்லுறைன் பதமாம்
மேதைபுத னிறைச்சிதோ லறிவுகள்ளோ டைந்தாம்
வேதிதிண்ணை பலகைவிர வுதல்கேட்டை நாளாம்
பேதையறி யான்குருட னேர்பருவம் பெண்ணும்
பேதியவி டதங்கள்ளு மாறுபா டாகும்
பாதைவழி தோணியாங் கேதுசிகி கொடியாம்
பாதிரியே குதிரைபா டலமெனுமூ துரையே. 408.

மூதுரையா திரைகதையாந் தாதிசகி நாளாம்
முத்தமே பிரியமிதழ் முத்துகக ரியுமாம்
மாதிரந்திக் காகாய மலையானை நிலமாம்
மாதர்வனப் பொதுகாதல் மகளிரிடைச் சொல்லாம்
வீதிதெரு வோடலாம் வீதல்கொலை சாவாம்
வித்தமே பொன்னறிவு பழித்தலென மூன்றாந்
தாதுமலர்த் தாதுடற்றா தைம்பூதஞ் சத்த
தாதுதுகள் காவிக்கல் லாறெனுமிப் போதே. 409.

போதுபோ தலராகுஞ் சாதநிசங் குறளாம்
புத்தன்மால் பவுத்தன்சாந் தகன்புதிய னுன்காஞ்
சீதநீர் குளிர்முகிலாங் கீதமிசை வண்டாம்
சேத்துவமை யுறுப்பலைச்சொல் செம்மையயங் கருத்
வாதைவட காற்றிடராம் வேதைமாற் றிடராம் [தாம்
வரும்பதுக்கை மலைதுறும் பதங்கம்விட்டிற் புள்ளாம்
ஓதமொரு நோய்கடலாம் போதமம்பி யறிவாம்
உத்தரமே மறுவசனம் வடதிசையத் தனையே. 410

அத்தனப்ப னரன்குருவாம் பித்தனரன் மடனும்
அத்தகான் வனம்பாதி யாடிபொன்கை பொருளாங்
துத்தமிசை மருந்துபால் வயிறுசெய்யாழ் நரம்பாங்
தொத்தடிமை பூங்கொத்தாந் தக்கையவ்வை கிளியாஞ்
சித்தமுளந் திடனுகுங் கைத்தல்சினங் கசப்பாஞ்
சித்தறிவு செயமாகுஞ் சத்தமே யொலியாம்
நத்தயிர வூர்வளையாம் பத்திரமே விறல்வாள்
நலஞ்சிறகம் பிலைபடைசிங் காதனஞ்சித் திரமே. 411.

சித்திரம்பொய் கவியழகா மணக்கடவி வியப்பாஞ்
சித்திரபா னுக்கதிரோன் கனலாண்டொன் றுகுஞ்
சத்திரங்கைப் படைகுடைசத் திரங்கருவி மகமாஞ்
சத்தியுமை பெலந்துவசம் வேல்குடைகா றலுமாம்
அத்திரியொட் டகம்பரிவே சரிமரம்வெற் பம்பாம்
அத்திகடலதவெலும்பு கோறல்கரி யைந்தாம்
பத்திரிபுட் காளிபரி யிலைவான மபபாம்
பத்திமுறை யன்பொழுக்கம் வழிபாடுத் தமமே. 412.

உத்தமநன் கழகாகு மித்திரனட் பினன்பேர்
உத்திதிரு வுறுப்பூகம் படப்பொறிதே மலுமாம்
அத்தலைஞாண் சிவப்பலைச்சொல்லிசைப்படுத்த லந்தாம்
அத்தினிபெண் பிடியிரண்டாஞ் சுத்திசுசி சங்காம்

பொத்தகஞ்சித் திரப்புடவை பண்டார மேடாம்
புத்தேள்தெய் வதம்பந்திதாம் பைத்தல்சினம் பசப்பாம்
சுத்திகைதார் சம்மட்டி சுடர்த்தண்டு மூன்ருஞ்
சூழரிதம்ப மல்குல்மலைச் சார்பாஞ்சத் தியமே. 413.

சத்தியமெய் சபதமா மூத்திரநாட் பாவாந்
தைத்தல்செறி குற்றலாந் துத்திபொறி சுணங்காம்
கத்திகைதார் கொடிமரமாம் பத்தொழுக்கந் தசமாம்
சுத்தனிறை சிவனுகுங் கத்திகல்மெய்ப் பொருத்தாங்
குத்தியே மண்ணடக்க மாசாளு யாகும்
கூளுத்தி யுடைமைதா தகிகுடிமுப் பேராம்
வத்திரமே முகங்கலையா மத்தகங்கங் குளமாம்
வாதுவர்தேர்ப் பாகர்பரி†வடிப்போர்கோத்திரமே 414.

கோத்திரமண் குலமலையாந் தீர்த்தம்விழா நீராங்
கூத்தனட னுயிராகு மோத்துநூன் மறையாம்
நேத்திரங்கண் பட்டாடை பாத்திசெய்யிற் பகுப்பாம்
நீத்தம்வெள்ளந் தணப்பாகு மூழ்த்தல்செவ்வி நினைப்
சூத்திரநூற் பாநூலாம் பாத்தடிசில் பகுப்பாஞ் [பாஞ்
சோத்தியநோய் சோர்வாகுஞ் சித்தைமட னிழிவாங்
காத்திரமெய் கனங்கோபங் கிரிகரி யடியாங்
காய்த்தல்சினத் திடல்மரங்காய்த் திடற்பேர்தந்
[திடுமே. 415.

தகரவெதுகை முற்றும்.

---

† யடிப்போர் கோத் (பி-ம்)

## நகர வெதுகை

தந்தநகை கொம்பாகு நந்திசிவ னேறுஞ்
சந்துமுட்டுத் தூதுசந்தா னந்துநத்தை சங்காம்
இந்தனமே யிசைவிறகா மைந்தனூரன் மகவாம்
எந்தைபிதாச் சிவனாகும் வந்திகற்றோர் மலடாம்
கந்தமணங் கிழங்குபொறி கழுத்தடிவெற் பலையாங்
கந்துகமே பரியந்தா மந்தகன்கால் குருடாம்
அந்தரம்விண் முடிவுநடுப் பேதமிட மைந்தாம்
அந்திசந்தி மாலையா மிரவாஞ்சிந் தனையே. 416.

சிந்துமுச்சீர் நதிகடனீர் குறள்தேசஞ் சிதராஞ்
சிந்துரம்பொட் டானைபுளி செங்குடைசெம் மையுமாம்
பந்துகட்டு நீர்த்துருத்தி கந்துகமுப் பேராம்
பந்தமே கிளைகட்டா மந்தன்மந்தன் சனியாஞ்
சந்தநிற மழகுகவி குலமிசைசாந் தாறுஞ்
சந்தானந் தருமகவா நந்தல்கெடல் வாழ்வாம்
விந்தமொரு மலைகமல மெண்ணூர்நாற் பேராம்
விந்துவிதை சோதிதுளி யெழுத்துடன்மந் திரமே. 417.

மந்திரங்கள் கோயில்மனை பரித்திரள்மே லளப்பாம்
மந்தாரஞ் செம்மரமோர் தருநோய்கார் நிழலாங்
கந்திருவம் பண்பரியாந் தந்திழைசாத் திரமாம்
கந்தரமே கழுத்துமுகில் மலைமுழைமுப் பேராம்
சந்தியிசை வந்திவேய் சதுக்கமொழி யுறுப்பாந்
தந்திகரி முயற்சையாழ் நரம்புகணை பதியாம்
அந்திலாங் கசையிடமாங் கந்துதூண் முட்டாம்
அந்தணர்பார்ப் பாரறிவோ ராகுமேக் கிழையே. 418.

எந்தல்கோன் பெருமைமே டிலகுவநாற் பேராம்
எந்திரந்தேர் திரிகைமதி லுறுப்பொடுசக் கரமாம்

காந்தல்காய் வொளிராகுங் காந்தியழ கொளியாங்
காந்தமழ கொளியூசிக் காந்தமொரு கதையாம்
மாந்தலிறத் திடலுணவாஞ் சாந்துசந்தங் குழம்பா
மாந்திமாக் குளிகனுமாஞ் சாந்திபொறை சுசியாங்
கூந்தல்மயிர் பீலியாங் காந்தன்கோன் பதியாம்
குந்தமே குருந்துகண்ணோய் படைபரிகாந் துகமே. 419

காந்தார மிசைகாடு கொடுமையுமப் பேராம்
கருதுசெந்து நரகோரி சிவனுனு நான்காம்
வேந்தாதல் மதியிரவி மகவான்கோன் பொன்னும்
விந்வதிரு வணியாகு மொந்தைமொந்தல் பறையா
மாந்தானுண் ணுன்சுழல்வாஞ் சாந்தைபார் பொறையா
மந்திவண்டு கதிர்குரங்சாங் கந்தைகங்கை துணியாம்
போந்தானே நாகரிகன் சேரன்போ ஞன்பேர்
புகலுந்தி நதிகடல்கொப் பூழுருட்செப் புகவே. 420.

நகர வேதுகை முற்றும்.

---

## பகர வெதுகை

செப்புமொழி செப்பிரண்டா மப்பலப்பல் பொலிவாஞ்
செப்பநடு நிலைநெஞ்சு செவ்வைதெரு நான்காம்
ஒப்புநிகர் கொடைப்பொருளாங் குப்பைசெற்றை மேடாம்
உப்போரை கடலினிமை யுவரோடுப் பாகும்
கொப்புமரக் கொம்பணியாந் தப்பலொழிப் படிப்பாங்
கொப்புழுந்தி நீர்க்குமிழாந் தப்பியம்பொய் யுரையாந்
துப்பாக்கு வலுப்பகைதுய்த் தனுபவநெய் துகிராந்
தொப்பிமது வங்கியெனச் சொல்லுவர்தா பரித்தே. 421

தாபரமெய் நிலைதருவாந் தபுதல்சாக் கேடாந்
தரியூபம் படைகவந்த மகத்தறிமுப் பேராம்

நீபசிமித் தங்கடம்புத் திரட்டாதி யாகும்
நீடுசெபஞ் செபித்திடலுந் துடையுமிரு பேராம்
பூயனிறை யோன்குசனுஞ் சாபம்வில்லுச் சபிப்பாம்
போற்றுதப னன்பருதி செந்தீயு மாகும்
கோபமறம் புழுவாம்வி பூதிசெல்வ நீறுங்
கூறபர முதுகுபிணக் கர்[ம]மென்னும் யாப்பே. 422.

யாப்பிறுக்கல் கவிகட்டா யிபங்கரிகோ டரமாம்
இயலுமபி தானம்வியாக் கியானமகம் பேராம்
நாப்பணடுத் தேர்த்தட்டி யாழுறுப்பு மூன்றும்
நவின்றிடுகப் பணங்கைவே லிருப்புமுள்ளு மாகும்
சீப்பெனுஞ்சொற் கதவிற்றாழ் சீவுறுசிக் கழுமாங்
திகழ்குபே ரன்சோமன் அளகையர்கோ னுகுங்
காப்புவளை திருநீறு கதவுகா வலுமாம்
கண்டிடும்பப் புவமைபரப் பாங்கமலா னனியே. 423.

பகர வேதுகை முற்றும்.

---

## மகர வெதுகை

கமலந்தா மரைநீராஞ் சமனடுக்கா லனுமாம்
கமலைகங்கை திருவூராந் தமமிருளி ராக[ா]ம்
அமலமழ கழுக்கிலதா மமரர்தெவ்வர் சுரராம்
அமலையொலி சோறுமையா ளுமலிகள்நாய் மயிலாங்
குமரிகன்னி காளியழி யாமைகற்றா ழையுமாங்
குமுதமல்லி யடுப்பொலிதிக் கானைதெற்பை யைந்தாஞ்
சிமிலியுறி குடுமிவிட்டில் மூன்றுபே ராகும்
திகழமுத மூத்திபால் சுதைசோறென் றமையே. 424.

அமையமைதி மூங்கிலாங் கமநிறைவு செறிவாம்
அம்மைதா யழகுவரு பிறவியுமை நான்காஞ்

சிமையமலை பொதிகையா நிமிரல்சோ திரிவாஞ்
செம்மைசெவ்வை சிவப்பாகு மம்மசைசீ ரழகாஞ்
சமைபொறுமை* சமையெனலா மமளியணை சினமாஞ்
சம்பிரவி கரிமும்மூர்த் திகள்நாவல் மடிவாங்
கமைதவறு பொறுமையாந் துமிதலரி வீர்ப்பாங்
கம்மயன்வான் றலைவிண்கால் வெண்மைநீர்க் காமே. 425

காமரகா ளடுப்பிசையாஞ் சோமன்வள்ள லிந்தாங்
கம்பலஞ்சிம் புளிபோர்வை செம்படா மூன்றும்
ஏமமிர வின்புவப்பு நீறுபொன்காப் பிணைவா [ராக்
மிமைத்தலொளி யிமைத்தலாஞ் சமழ்ப்பிலச்சை துய
தாமமுடி நகரொளிதார் வடமிதழி சாந்தாஞ்
சாமமறை பசப்பிரவு விலைத்தாழ்வு கறுப்பாம்
வாமமிடப் பாலழகு துடையொளிசிந் துவுமாம்
வாமனந்திக் கானைகுறள் நூலாம்பூ மயிலே. 426.

பூமனிறை யயன்குசனு மோமமக மருந்தாம்
பூமானே யிலக்குமியு நாயகனு மாகும்
காமன்வேள் கணைமகவான் பிப்பிலிநாற் பேராம்
காமமரு ளாசைவிந்தா மூமன்புட் குணியாந்
தேமிடம்வா சந்தேச மதுரந்தே னாகும்
சேமமின்பங் காவலா நாமம்பேர் குறியாம்
மாமன்மா துலன்மாலாம் யாமம்நிசி தெற்காம்
வம்புநீ திடர்மணம்வார் நிலையாமை யம்பே. 427.

அம்புகணை நீர்மேக மூங்கில்கூர் மையுமாம்
அருட்சாமி குருவிறைவி யாழ்முதல் வியுமாம்
தும்புசிம்பு தோடாகு மும்பர்சுரர் மேலாந்
தும்பிகரி வண்டூழை வண்டுயெது வாகுந்

* சமைபெனலாமா (பி - ம்)

கம்புள்சம்பங் கோழிசங்காந் தும்பைதும்பை போராம்
கம்புசங்கு தினைகம்பா மொய்ம்புபெலந் தோளாம்
உம்பல்குல மெழுச்சிவலி யானைவிலங் கைந்தாம்
உறுகும்ப மத்தகமிற் குடஞ்சம்பூ ரணமே. 428.

சம்பரம்புட் கலைநீராங் கும்பிகரி சேறுஞ்
சம்பளங்கொத் தெலுமிச்சாந் தம்பந்தூண பரமாங்
கம்பலைதுன் பொலிநெருக்க மச்சநூற் பாவாங்
கம்பகடுக் கந்துளைங் கிம்புரிபூண் முடியாம்
அம்பணமே மரக்காலு மாமையுமென் றிருபேர்
அடுநேமி வளைகடல்பார் புள்வட்ட மைந்தாங்
கொம்புகொப்பு மருப்பாஞ்சம் பகந்தகரா ணியுமாங்
கொம்மைமுலை யழகிளமை கொட்டல்வட்ட மாமே 429

ஆம்பல்வேய் கள்ளல்லி யிபமொலிவங் கியமாம்
ஆம்பிரமாப் புளிபுளிப்பாஞ் சாம்புபறை பொன்னுங்
காம்புவேய் மலர்த்தாள்கும் புதல்பட்டென் றாகும்
கடியசம்ப மோர்கோழி வச்சிரங்காழ்த தலுமாம்
பாம்புவரப் பரவொலிநீ ரடைப்பொழுங்கைம் பேராம்
பருந்தாம்பு மடைமணிபூண் கயிறுநான் காகுஞ்
சாம்பல்பழம் பூக்குவிவா மாம்பியொலி காளான்
றுணுமம்பரந் தூசு விண்கடலென் றயிரே. 430.

மகர வேதுகை முற்றும்.

---

## யகர வெதுகை.

அயமிரும்பு கடம்பரிநீ ராடிவையைம் பேராம்
அயனம்வழி யிறப்புச்சோ றுண்டினிற்பா தியுமாம்
மயல்செற்றை மால்பேயாம் வயலேசெய் வெளியாம்
மயிலைமீ னிருவாசி கடைராசி முப்பேர்

கயமடுக்கீழ் பெருமைதேய் வாளையா ழமுமான்
  கயினியத்தங் கைம்மையாம் வயநீர்புள் வலியாம்
பயமமுத நீரச்சம் பால்பயன்பே ரைந்தாம்
  பயிரொலிபைங் கூழ்பறவைக் குரல்பயிறற் பெயரே.
பெயர்பெருமை நாமமிசை பெயர்ச்சியுநாற் பேராம்
  பெயலிழிதன் மழையாகுஞ் சயமடல்சற் கரையாம்
நியமநெறி நிசநியதி நகர்கோயி லைந்தாம்
  நெய்கிருத நிணமாகும் பைபடம்பை பசப்பாம்
இயமொலிசொல் மேளமாம் வயினிடம்வீ டகடாம்
  இயல்சாயல் நடைதமிழாம் பயன்பெறல்சொற் பொரு
வயவன்வலி யான்வீரன் கணவன்மூன் றுகு [ளாம்
  மயர்வுயிர்ச்சி பொருந்தாமை மயக்கமுமாங் குயிலே.
குயிலுரைகோ கிலமேகந் துளையொடுநாற் பேராங்
  குயிறல்குடைந் திடல்பண்ணல் *சொறிதல்கூவுதலாம்
கயில்பிடரி யணிப்பூட்டாம் வியல்பெருமை விரிவாங்
  கையிடமொப் பனைதங்கை குணம்படைலகை சிறிதாம்
அயிலுணவு முனைவேலா முயிராவி காற்றும்
  ஆயஞ்சூ தியற்றல்சங்க மாதாயஞ் சவையாஞ்
செயிர்சினங்குற் றமுமாகுஞ் செயலொழுக்கந் தொழிலாஞ்
  தெய்சொலைதெய் வமுந்தாள முறைப்பயில்வு மாமே.
பயல்சிறுமை பள்ளமதாம் பயம்புகொப்பந் தாழ்வாம்
  பாயல்மெத்தை குதிப்பாகுஞ் சாயலழ கெழலாம்
அயிரிமணல் மீன்கறியாங் குயமுலைவாள் குழகாம்
  அய்யன்மூத் தவன்சாத்த னப்பன்வே தியனும்
வயிரமொரு மணிகுலிசஞ் சினஞ்சேகு வாளாம்
  வயமாக்குஞ் சரம்பன்றி பரிசிங்கம் புலியாம்
உயவைகாக் கணமுல்லை கான்யாறென் றுகு
  உரைசெய்யல் தொழில்காவல் சேறுழுங்கா மெய்யே

---

* சொரிதல் (பி - ம்)

மெய்யுடம்பு மெய்ம்மையாம் பொய்சடம்பொர் தாகும்
வேய்துளையொற் றணிதலுமூங் கிலுகாற்பே ராகும்
ஐயிடைச்சொல் லழகிருமை லரசனிற்சா மியுமாம்
ஐயையுமை துர்க்கைசுதை தவப்பெண்ணு சாளாம்
மையிருள்மை மலடாடு மேகமழுக் காரும்
வையத்தே ரேறுரோ கணிபுவியூர் தியுமாம்
வெய்யவன்வெய் யோனிரவி விருப்பினன்றூப் பேராம்
வியனதிகம் பெருமையதி செயமெனமொய்த் திடுமே

மொய்செருக்கு வண்டானை திரட்சிநாற் பேராம்
முழுநெய்த லாம்பல்பறை திணைநெய்வு நான்காம்
வையயில்வைக் கோனெல்லாஞ் செய்வயலே வலுமாம்
மாயம்வஞ்சம் பொய்யாம்ப யோதரங்கார் முலையாஞ்
சையமலை யணையாம்வி யாழமகி புலியாஞ்
சாயனமகள் ளோந்தியாக் நியனல்தீங் காகும்
தொய்யில்சே றுழவுதுயர் மகிழ்ச்சிநாற் பேராஞ்
சொல்குய்வு கறிகரித்தல் புகையாஞ்சே யிழையே. 436.

சேயிளமை சேண்குசன்வேள் மகன்றூரஞ் சிவப்பாம்
தேயமே கழிநாடாந் தூய்தூய்மை யுணவாம்
ஆய்தலே கொய்தல்நுணுக் கந்தேர்ச்சி மூன்றும்
ஐயமனு மானம்வழுச் சங்கைபிச்சை யோடாம்
காயமுட லங்காயங் கறிகரித்தல் விண்ணுங்
காணும்வாய் குழலிடமெய் வாய்வாய்த்த லம்பேர்
நேயமே நெய்யெண்ணெ யன்புமூன் றாகும்
நிகர்மாயன் மால்கறுப்ப னொழிப்பான்பெண் ணரசே.

யகர வெதுகை முற்றும்.

## ரகர வெதுகை

அரசுமன்ன னொருமரமா மரபுதொன்மை முறையாம்
அரசனிறை சிகண்டிகனுஞ் சுருதியொலி மறையாஞ்
சிரசுதலை மேம்பாடாங் கரில்பிழைகாழ்த் தலுமாஞ்
சிரகம்வட்டில் கமண்டலமுந் $தலைத்திரா ணமுமாம்
புரசுபலா சிளமகவாம் பிரசந்தேன் வண்டாம்
புரநகர முடம்பாகுஞ் சிரநெடுகோட் சிரசாம்
இரசம்பா ரதமினிப்பா முரண்வலியே பகையாம்
இரலைகலை யசுபதிபுல் வாய்கொம்பாந் தரமே. 439.

தரமுவமை தலைதரிப்பா மரமறுத்த லரமாஞ்
சரல்சரலே மழைநாளாந் துரம்வலியுச் சமுமாம்
பரமுடிவு கெதிகவச யானையின்பின் காலாம்
பரணிதுடி கலனுளாம் புரணிதோல் வயலாம்
இரவிமலை வெய்யோனும் வர்ணயன்கோன் சிவனும்
இரவுநிசி யாசகமுமாம் விரவுகொடை கலப்பாம்
பிரமமறை மகந்தீமந் திரமாலா டிரவி
பிரமனரன் முனிவர்முத்தி மதியிரண்டா யுரித்தே.

உரம்வலிமார் பூக்கமருந் தெருஞான மாரும்
உரியளவு தோலுரித்தாஞ் சரிவளைபா தையுமாங்
கரம்விடங்கை குடியிறைவே சரிகிரண மைந்தாங்
கரகமா லாங்கடி கமண்டலநீர்த் துளியாங்
குரலிசையாழ் நரம்புகதிர் கூந்தலிற கைந்தாங்
குரமுளைஞ்சில் பரிக்குளம்பாம் வருணநிறங் குலமாம்
இரதமரை ஞாணிரதஞ் சுவைபுணர்ச்சி தேராம்
இரதிபிடி யிரதியிச்சை பித்தளையாய்ப் பரவே. 441.

$ தலைக்கிரா (பி - ம்)

பரவைதிருக் கடத்துநதி பரப்பொருபெண் ணான்காம்
பரிசுமத்தல் வேகங்காத் திடல்வருத்த மாகும்
அரவமொலி பாம்புடனூ புரமிவைமூப் பேராம்
அரலையே கழலைவிதை மரல்கனிநாற் பேராம்
குரவைவா யொலிகடலாங் கிரகமனை கோளாங்
குருநிறைநோய் புலையாசான் பாரம்வியா ழமுமாம்
சுரநெறிகான் சுரமாகு மருகல்குன்றல் சார்வாஞ்
சுரைபசுவின் முலைதுளைகள் ளனமுப்பேர் கருதே.
கருவிதுளை யியங்கவசம் யாழீட்டந் தொடர்ச்சி
கலனைதுகில் புயல்கூட்டம் படைவிளைகச் சையுமாம்
அருவிமலைச் சாரரா றுதினைத்தாளு மாகும்
அருணன்சூ ரியனருணன் புதன்சிவனாற் பேராம்
முருகிளமை மணமெழுச்சி வேள்விழா மதுவா
முரசொருநாட் பறையாகுந் தரளமுத்துத் திரள்வான்
குருகுவளை புள்ளிளமை நாரைவெள்ளை மூலங்
கோழிமா தவியுலைமூக் கொன்பதுபே ருரையே. (443)
உரைமொழிதேய் தலுமாகுங் கரைகரைசேர் தலுமா
முருவடிவு நிறம்பயமட் டையுமுருப்போ டலுமாம்
நரைசவரி பரிநாரை வெள்ளைநந்தி யைந்தாம்
நரம்புவட நாடியுமாங் குரம்பையுடல் கூடாம்
விரைமணந்து பஞ்சாந்தாம் வரைதல்கொள்ளல் விடலாம்
விருத்தம்பா வினைவட்ட மூப்புமலை நான்காம்
அரையிடைபா தியுமாகும் வரைமலைவேய் வரிப்பேர்
அருள்கருணை புலமையாகு மிருள்நரக மிருளே. (444)
இருசுபண்டி யுள்ளிரும்பு செவ்வையிரு பேராம்
எருவைசெம்பு கழுகிரத்தங் கோரைநா ணலுமாம்
அருணமா னெலுமிச்சுத் தகர்சிவப்பு நான்காம்
அரணம்வேல் மதில்காடு கவசங்கா வலுமாம்

குருதிசெந்நீர் குசன்சிவப்பாஞ் சரிகுவிதல் பிடாரங்
குரங்குகோண் கவிவிலங்கா முருந்துவெள்ளை முருக்
பருதியூர் கோளிரவி நேமிவட்ட முருளாம் [தாம்
பரிகமம்பு மதில்மேடை கிடங்கெனக்கோ சரியே. 445

சரஞ்சரித்தல் வடஞ்சரமூச் சம்புகா ணலுமாந்
தருணம்போ திளமையுமாஞ் சரணந்தாள் புகலாம்
அரம்பைசூர் கதலியுமா மருந்தலுணல் குறைவாம்
அரங்கமாற் றிடைக்குறைகூத் தாடிடமம் பலமாம்
நரந்தநா ரத்தையுங்கஸ்த் தூரியுமென் றாகும்
நார்பரிவு கயிறிரண்டாம் வேர்மரவேர் வேர்வாம்
விருந்தமே கிளைதுளசி விலங்கின்கூட் டமுமாம்
வெருகலவ னோர்செடியா னொரலோசை விரைவே.

விருத்திதொழி லாதாயம் வளர்ச்சியடி மையுமாம்
வீரமலை சேவகமாம் வீரைதுயர் கடலாம்
கிருத்திமம்பொய் தொழில்பூதந் தோலெனநாற் பேராங்
கிருட்டியோ ரீற்றுவும் பன்றியுமென் றிரண்டாந்
துருத்திதோ லரங்கநீர்த் துருத்திதுட்டை நான்காஞ்
சுருங்கையே நுழைவாயில் கரந்துசெய்கற் புடையாம்
அருப்பமூர் மோர்மதுக்கா னேய்துற்க மரூக்காம்
அரத்தமே குருதிசெம்மை குவளைகடம் பரக்கே. 447.

அரக்குமெழு கொடுசிவப்புக் கள்ளின்விகற் பமுமாம்
அரற்றலொலி யழுதலுமா முருத்தல்சின முளைப்பாம்
இரத்தமுதி ரஞ்சிவப்பா மருத்தநிதி பகுப்பாம்
எருக்துரா லுங்கிளிஞ்சிலுமா மருங்கிடைபக் கமுமாம்
நிரப்புமிடி யிகல்குன்றல் சமைநோயைம் பேராம்
நேர்மிகுதி சமநேர்மை நிகருடன்பா டனுவாந்
துருக்கமே யரண்செடிகுங் குமங்கஸ்த் தூரியுமாஞ்
சூரன்சூர் தீயிரவி விறலோனு யரியே. 448.

அரிகடல்காற் றிந்திரன்மால் காந்திமலை பரிபொன்
ஞடரிசி யுவாதேரை நிறமதிதீ யடல்வா
ளிரவுகுரங் கரவுபுகை கிளிகணைவே யரித்த
லிமன்கூர்மை பறைசோலை புகர்விசிசே கரிதல்
கருவிபகை பன்றிசிங்கர் தேர்தகடு நேமி
கண்வரிநெற் கதிர்பசுமை வண்டுமதுப் பாயல்
பரிபுரத்தின் பரலிவைநாற் பானேழென் றாகும்
பரிவெனுஞ்சொல் லன்புதுன்ப மின்பமுமாம் புரே.

பாரமிறை பார்கவச மரபுபொறை பாரம்
பரிகலனே தோணிநீர்க் கரைகமுகும் பத்தாம்
வாரமலைச் சார்கிழமை கடல்கரைபங் கன்பாம்
வரிகடல்வேய் நெற்பசலை யெழுத்திசைவண் டிறையாம
ஆரமழை பதக்கமுத்த மாத்திசந்தந் தாடையாம்
அருச்சுனமென் பதுவெண்மை மருதமா மிரண்டாந்
தாரமிசை நாமனைவி வெள்ளிகண்பண் டமுமாந்
தரித்திரிபார் மிடியனுமென் றுரைத்தனர்கா ரிகையே.

காரிகைபெண் ணழகுகலித் துறையொருபா லாகுங்
கரியவனிந் திரன்சனியன் கண்ணன்சாத் தனுமாஞ்
சாரிகைசங் கொடுமை சுழல்காற்று மூன்றாஞ்
சாபம்வரை யாடுபுள்ளா மருதமரந் திணையாம்
ஆரிகத வழகாகுஞ் சூரணந்தூள் கிழங்காம்
ஆர்தலுண்டல் நிறைவாகு மாரைமதில் பாயாந்
தூரியமே யெருதெழுதுங் கோலியஞ் லையுமாஞ்
சுரிகைவாள் கவசம்வலம் புரியாங்கூர் விழியே. 451.

கூடல்குழற் சிறகாகுங் கூர்மிகல்லை கூர்ப்பாங்
கூர்மமா மையுமோர்பு ராணமுங்கோ பமுமாஞ்
சாரலே மலைப்பக்க மலையொருசார் மழையாந்
தாருகா ரிப்பெயரே சண்முகன்கா ளியுமாம்

ஆரல்குசன் கார்த்திகை தீ யாஹுறுப்போர் மீனும்
அரிதமே பசுமைதிக்காங் திருமாச்சீர் சிறப்பாம்
மூரலன நகைபல்லாஞ் சார்பிடம்பற் றூதும்
மூரம்புகா யலுமேடும் பாறையுமுப் பேரே. (452.)
பேர்பெருமை நாமமுமாம் பீர்பசலை நீர்க்காம்
நீருவே யச்சமுற்றோன் புருவமுமென் றிரண்டாம்
போர்சதைய காளமர்செற் சும்மையுமுப் பேராம்
பூருவமுன் கிழக்குமா மீரமன்பு குளிர்வாம்
வார்நெடுமை நீர்வானங் கசசனிக மொழுங்காம்
வாரணஞ்சங் கானைதடை க .ல்தோழி பரமாஞ்
சீர்தடிநேர் திருப்பாங் தாளசொத்துப் புகழாங்
தீர்த்தனே சிவன்குருவாங் தீர்த்தம்விழா °ரே. (453.)
நீர்குணமோர் காட்புனலா மார்வமன்பு நரகா
கிரைபந்தி பசுவாகு மிரையுணடி யிருப்பாம
பார்புவிபார் பாரமுமாங கீ ம்பால் கிளியாம்
பாரிவள்ளல் கட்டில்புவி துகில்மனையாள் கனமாம்
எருழவா னழகாகு மோரைபொய்த லில்லாம்
எரிகுளம் பிடரியுமாம் வாருணைநீர் மேற்காங்
கார்சினநீர் தகர்புயல்போ திருள்கறுப்புக் கூந்தல்
கருங்குரங்கேர்ப் பருவமும்பத் தெனும்பேர்வைத் தாரோ
தார்கொடிபூப் படைதொடைகிண் கிணிக்கோவை யொ
சாரவகஞ் சாதகப்புள் வணடுமான் மூன்றுஞ்[ழுங்காஞ்
சூர்துயர்நோ யணங்குபயஞ் சூரனஞ்சா மையுமாஞ்
சூரைசெடி பிரம்புமாங காரைசெடி நீரும்
ஆரிரதத் துறுகதிரு மாத்திகூர் மையுமாம்
அரிட்டநோய் கொடிமதுவா மருககமெஞ்ச லெருக்கா
பாரதிகா மகள்புனையாம் பூரணிகா யிலவாம் ம்
பாராவா ரம்பூடு கடலாகா ரியரே. (455.)

காரிஇலை காணறவு பெண்பன்னு டையுமாம்
காரமன்பு சைவலநீர் காரத்தை நான்காம்
வாரிவழி கதவுமதில் கடல்சீபபுச் செல்வம்
வங்கியநீர் கரிக்கூடம் வெள்ளம்வர வெனலாம்
மூரிமுரண் சோம்பெருமை விடைபெருமை நெரிவாம்
முருடுகட்டை யறிவிலதாங் கிரியணையாள் மூன்றாங்
காரிவிடஞ் சனிவடுகன் சாத்தன்வள்ளல் மகவான்
கருக்குருவி கருமைகொடி யென்றனராய்ந் தோரே
தோரைதான் மணியின்வடம் விரைவுவே யரிசி
துவரையுகை வரையுமலை நெல்லுமென வாரும்
மாரிநோய் புயலாணை நமன்றூதர் வடுகு
மழைபொழிதல் மாய்வுமது வென்றிவையெட் டாகும்
ஓரியோர் வள்ளன்முசு நரிமயிர்நான் காகும்
உயர்பொருந ரேபாணர் கூத்தர்மன்னர் கோவாங்
கோவரைகொறுக் கையுமுதுகுங் காளியுமூன் றாகும்
கூராவேகூ கையுகிரமு மென்பார்ந்யரே 457
ஆர்யர்நகை லோர்கலரா மார்ப்பொலிபோர் நகையாம்
ஆரில்பிணக்குத் துருசரம் பொருள்பொருட்சே யுரை [யாம்
தாரைவழி கண்மழைபா ருடுக்கூர்மை யாறுந்
தரண்பார் யலைகதிரா மரைகமலம் விலங்காம்
போர்வைமீக் கோள்கவசத் தோலினுக்கு மாகும்
புலரமறுசேர் துளையுயர்வாம புரிகயிறுர் புரிவாம்
ஊர்நடத்த லூராகு மோரறித வெண்ணு
மோதிரா சியம்யோனி மறைவுட னிராவே. 458
இராகமிச்சை நிறமிசையாங் கருமைநிறம் வலியாம்
இயற்கரட மானைமதச் சுவடுகாக் கையின்பேர்
அராகமிசை சிவப்பொடுவண் ணமுப்பே ரென்பார்
அறுமருமான் மருமகனும் புத்திரனு மாகும்.

பிராணனுயி ருயிர்க்காற்று மரக்கால்கூடத் தளவாம்
பெருங்கரண்டை நீர்க்காக்கை யணிகலச்செப் பாகும்
கரீரமே யகத்தியிடாக் கரியின்பல் லடியாங்
கரிசேகு சான்றுகர்தி யிருந்தையும் பராவே. 459.

பராகமலர்த் தூளனுவாம் பரசுமழுத் துதியாம்
பகர்கரணை கடங்கலவி கணித்தல்கா ரணமாம்
துரோணமே சிலைபதக்குத் தும்பைசிம் புட் கொடியாம்
சொற்றிடுங்க ராம்புயா ழோர்மருந்து மாகும்
கராளமே தூன்மாற்கஞ் சுஞ்சமிரு பேராம்
கடுங்குரோட் டென்பதுவன் றியுசரியு மாகுங்
கிராணமே கிரணமூக் கொடுகிரிகைத் தனுமாங்
கிளர்க்குஞ்சா ரசனாரை யினிப்பென்னுந் தலமே. 460.

ரகர வெதுகை முற்றும்.

---

## லகர வெதுகை

தலமிலைபா ரங்கையுமா மெலிபூர மெலியாந்
தலையிடம்வின் சிரமுதலாங் கலகமொலி துயராம்
வலம்வலங்கண் பெலமாகு கலகன்மை தேளாம்
வலவன்வெற்றி யான்வலியன் றேர்ப்பாகன் மாலாம்
புலவனு வலனறிவன் புதன்றேவ னன்காம
புலம்பொலிதுன் பிரங்கலச்சந் தனிமையுமைம்பேராம்
உலகமிசை புவிதிசைவின் னுயர்ந்தோரு மாகும்
உலவைகொப்புத் தழைமருப்புக் காற்றுமரக் குலமே.

குலமனைமே பதிகோவில் சாதிகூட் டமுமாங்
குலையேசெய் கரையம்புக் குலைகாய்க்கொத் தாகும்
அலவன்மதி வெருகுநண்டா மலைவணிபோர் மலைவாம்
அலர்மலர்நீர் பழிமூன்றும் வலவைவல்லோன் சூராங்

கலமிழையுண் கலந்தோணி மண்கலன்யா ழெண்ணுங்
கலிவறுமை யொலிவாரி யுகம்வலிவீ ரமுமாம்
புலமறிவு பூமிவய லேம்புலன்பொன் னிடமாம்
புலிசார்ந்து புலியாகும் பலிதகரை பலமே. 462
பலநிறைகாய் கனிசேனை யாதாய மைந்தாம்
பலிபூசை பிச்சைதிரு நீறுதெய்வ வுணவாம்
அலகொளிவெற் கதிர்சோகி யெண்மா றுளம்பாம்
அலரியழ கிரவிகுளங் கண்வரிபூச் செடியாம்
திலமடவி மஞ்சாடி யெள்ளுடன்மூன் றாகும்
திலகநுதற் குறியுயர்வு மஞ்சாடி தானும்
புலவுதசை யொருமரமா நிலவுமதி யொளியாம்
புலிக்கழூர்க் குருவிதீப் பொறியெனுநூற் கலையே.
கலைமதிப்பங் குடையிரலை கல்விநூல் வயிரங்
காலநுட்பம் விலங்கினுண் மகரமாக் கவடாஞ்
சிலையொலிகல் லுருவில்லா மொலிதொனிகாற் றடியாஞ்
சிலம்பொலிநூ புரங்கிரியாம் விலங்கல்வெற்பு விலக்
துலைநிறையுந் தூரமுமா மிலையகட யிறப்பாங் [காங்
தோல்பலகை கரிவனப்புத் தோல்வியதன் மொழியாம்
மலையன்பாண் டியன்சேரன் வள்ளல்பொருப் பனுமாம்
வல்[லை]வலி விரைவுதுருக் கங்கான்வல் லவனே. 464
வல்விரைவு வலிசூதாஞ் செல்விடிகார் சிதலாம்
வலம்புரியோர் மரகந்தி யாவட்டம் வளையாம்
அல்லிரு ளிராவாகுங் கல்லொலிகல் மலையாம்
அலங்கலே தளிர்மாலை யிரங்கலசை வொளியாம்
வில்லொளிமூ லஞ்சிலையா மல்லல்வலி வளமாம்
வேலிமதி லூர்காப்பாம் வேலயில்கூர் மரமாம்
இல்லிடம்வீ டில்லென விராசியில்லாள் சாவாம்
எல்லிகழ்ச்சி பகலிரவி யொளியெனச்சொல் லுகவே.

சொல்லுரைநெற் புகழ்சூதா மில்லமனை தேருந்
தொல்லைதுயர் பழமையுமாம் புல்லகிற மெருதாம்
மல்லடல்மா யவன்கூத்து வளமுகட்டு மல்லாம்
வல்லிகொடி தளைவரைவாய்ப் பாடிவள்ளி பெண்ணுங்
கொல்லசைகொல் லுதலையம் வருத்தமே வலியாங்
குல்லைவெட்சி துளவுசித்த மூலிமூன் றாகும்
புல்லனுடம் புணர்ச்சிபுன்மை புலிபனைபுற் குறையாம்
பொல்லேபொல் லாங்கு பீறுதலாம்பல பெயரே. 466.

பல்லமே கரடியொடு கணக்குப்பா ணமுமாம்
பாலியல்பு திசைபகுத்தல் வெள்ளைபக்கம் பாலாஞ்
சில்லிதே ருருள்வட்டங் கீரைசில்வீ டாகுஞ்
சில்லைசினஞ் சில்லிகைமுட் காடுபகண் டையுமாம்
அல்லியக விதழாம்பல் காயாமுப் பெயராம்
அலநாஞ்சி லன்மொழியாஞ் சலனங்காற் றடியா
முல்லைவென்றி நிலங்கற்புத் தளவுநாற் பெயரா
மூலமுதற் கிழங்கேது நாளெனச்சால் புறமே. 461.

சால்புகுண மாட்சிமைபபேர் பாலமழு நுதலாஞ்
சாலியருந் ததிகள்ளு நெற்பொதுவு மாகுங்
கால்வனங்காம் படிமரக்கால் மகவுதறி யூற்றங்
காலன்காற் றங்குரந்தே ருருளிடம்வாய்க் காலாம்
வால்வெளுப்பு மிகைதூய்து வாலுதிநாற் பெயராம்
வாலிநீர்த் துளியனந்தன் கிட்கிந்தைக் கிறையாங்
கோல்கணைவா ளீட்டிதுகி லிகைதுலாங் கோடு
கோலிரந்தை யாழ்நரம்பஞ் சனக்கோல்செங் கோலே.

கோலம்பீர்க் கழகுபன்றி பாக்குநீர்க் கொழுந்து
குவளையுட னிரந்தையிரந் தைக்கனியு மாகுஞ்
சாலஞ்சா லேகம்வலை சவைமதிலோர் மரமாஞ்
சாலையறப் புறஞ்சோலை பரிப்பந்தி மூன்றாம்

ஆலம் வடவிருக்க நஞ்சுநீர் நான்காம்
ஆலசையோர் மாமாகும் மேலிடம்விண் மேற்காம்
நீலந்தான் பனைகொடுமை யுற்பலநீ னிறமாம்
நீலியே பயலவுர் நீலிமா லினியே. 463.

மாலிமதுப் பருதியுமாம் ஆலலொலி யாட்டாம்
மால்புதன்கார் மயல்காற்றின் திரன்பெருமை யரியாஞ்
சூலிசிவன் காளிசூற் கொண்டைபெண்ணு மாகுஞ்
சூலமொரு காண்மிகையா நூல்பிடக நூலாங்
காலிலிசற் பழுங்காற்று மருணனுமுப் பெயராங்
கலிங்கமூர்க் குருவிகலை கம்புளோர் நாடாம்
பீலிமயில் மயிற்றோகை யாலவட்டங் கிரியாம்
பிலவங்கந் தேரைகுரங் காம்புவியின் பாலே. 464.

பாலிகைவா ளுதடுமுளைப் பாரிவட்ட நான்காம்
பாலைமக ணிலமரமா மேல்வைகுளம் பொழுதாம்
கூலம்வரம் பாவணைநீர்க் கரையண்டம் பாகல்
குழல்கடியே விலங்கின்வா லுடனெண்பே ராகும்
ஏலமயிர்ச் சாந்துதுடி யோசையுமுப் பெயரா
மிலம்பகமா லிகைசருக்க நுதற்சூட்டு மூன்றும்
வேலைகடல் கடற்கரைசெய் தொழில்பொழுது மாகும்
விலங்குகாற் றளைமிருகம் விலக்காம்வேல் விழியே.

வேலன்வெறி யாட்டாளன் குமரனிரு பெயராம்
வேலாவலையம்பூமி கடலிரண்டு பெயராம்
மாலையே யிரவந்தி யொழுங்குமா லிகையாம்
மல்லிகைதீ பிகைத்தட்டுத் தீபமவ்வல் மூன்றும்
ஆலயமூர் கரிக்கூடங் கோயிலுமுப் பெயராம்
அலிப்பேர்பே டனந்தனும் வலித்தல்சொல்லல் வளை
சாலகஞ்சா ளரமரும்பாஞ் சாலுமுஞ்சால் சாலாம் [வாஞ்
சலஞ்சினம்பொய் நீர்நடுக்க மெனும்புலவர் நூலே.

நாவோர்மர் திரிபார்ப்பார் கவிப்புலவர் மூன்றும்
நுவல்குலிங்க மூர்க்குருவி குதிரையிரு பெயராம்
கீலால மேயுதிரங் காடிபுன லாகும்
கிளரிலாங் கலிகலப்பை தென்னைகாந் தளுமாம்
காலேகஞ் சாக்திலொன்றும் பசுத்திரளு மாகும்
கலுழிகலங் கியநீருங் கான்யாறு மாகும்
வாலாமை யருவருப்பு மாதர் ,ப் பாகும்
மலர்தல்விள்ளல் தோன்றல்விரி வாந்தால மிசையே

தாலமே பனை ூமி யுண்கலநாக் காகுந்
தலையலே மழைபெய்து விடலொடுநீர்த் துளியாம்
காலமே பொழுதொடுவை கறையுமென விண்டாம்
கலினையே மிளகுகுதி ரையின்கலனை யிரண்டாஞ்
சூலைநோய் பத்திரையாஞ் சூல்குலங் கருவாங்
துறுஞ்சிலீ முகம்வண்டு கணைமுலைக்கண் ணாகும்
ஓலைகுழை யேடாங் கலாங்கொடுமை சினமாம்
ஒலியல்கலை நதிதொடைதோற் பெயருலா விடுமே.

உலோகந்தா னுலகமுமா முலக்கைதடி நாளாம்
ஒல்லைசிறு வரையடுத்தல் விரைவுதொன்மை யாகும்
கலாபமே தோகைமயில் மணிவடஞ்சீ லையுமாம்
கருதுமல்க லேசுருங்கல் வைகுதல்நா ளாகுஞ்
சலாகைநா ராசமணி சவளம்விடு பேயாக்
தாழிலஞ்சி மகிழ்மரமாங் குளம்கொப்பூ ழாகும்
விலோதமே கூந்தலும் பதாகையுமென் றிரண்டாம்
வெளிறியபல் லேபலது நகையுமாம் புலிக்கே. 469.

லகரவெதுகை முற்றும்.

## வகர வெதுகை

புவனநீ ருலகமா றவணை நுண்மை மாவாம்
பூவைபுள்ளுக் காயாவாஞ் சீவனுயிர் குருவாங்
கவனங்கான் கலக்கம்வெம்மை பரிக்கதியுட் கருத்தாங்
கவிபுலவன் வெள்ளிவா னரங்கவிப்பு நாற்பேர்
யவனர்சித் காரர்சோ னகர்கண்ணு ளருமாம்
இவறல் சென்ம மாசையாந் தவல்பெருமை குறைவாம்
பவனங்காற் றவனிமனை கோயிலர வுலகாம்
பவஞ்செனனம் பாவமாந் தவம்பொலிவு தவசே. 470.
தவிசு தனி வழிதடுக்கு மெத்தைபுல ஞன்காஞ்
சவிவனப்புக் காந்திமணிக் கோவைசெவ்வி யாகும்
நவி மலை குழலுச்சி புன்மையா ழிசையாம்
நவிரிசையாழ் குழலாரு மவிர்பீற லொளியாம் [ணைங்
கவிகைபிச்சங் கொடுத்தலுமாஞ் சுவடிணையோ ரெண்
கவடுவஞ்சம் புரசைகப்பாங் குவடுசலங் கோடாஞ்
செவிலிதவ்வை வளர்த்தவளாந் தவர்தவத்தர் சிலையாஞ்
சிவங்குறுணி முத்திநலஞ் சிவனுமலைக் குவடே. 471.
குவலயம்பார் குவளையுமாந் துவர்பவளந் துவர்ப்பாங்
குவவுதிரள் குவிதலுடன் பெருமையுமுப் பேராம்
இவர்தலேர்ந் திடலேற லெழுச்சியா சையுமாம்
எவனம்வினு விளமையுமாஞ் சுவலையர சழலாங்
கவலைதினை வழிகவலா மவதியெல்லை யிடமாங்
கவசமங்கி காப்பாகு மூவர்கடலோர் நிலமாந்
துவரையா டகமூராஞ் செவிசெவிகேட் பதுமாஞ்
சுவல்பிடர்கொய் யுளைமேடு கரிச்சுவல்பே சுவரே. 472.
சுவவுசுண்டன் சுவற்கமொடு புள்ளின்மூக் காகும்
துவக்குத்தோல் சங்கிலியெத் தனிப்புமூன் றாகும்

நவமழையின் காலமொன்பான் கேண்மைபுது மையுமாம்
நவியமழுக் கோடாரி கடிவாள மாகும்
உவணமது பருந்தெருவை க[ரு]டனுயர்ச் சியுமாம்
உவளகமு ருணிமதிலோர் பக்கமவல் கரையாம்
அவலெனல்சிற் றுணவுபள்ள நீர்நிலமுப் பெயராம்
அவியமுதம் பெலியவிதல் செய்யாம்பா வையரே. 473.

பாவெனல்சொற் பானற்பாப் பரப்புப்பா வுதலாம்
பாவகநே மகம்பவமாம் நாவுநடு நாக்காம்
மாவெனல்வண் டழைதல்வெறுப் பிவுளிசெல்வந் திருமா
மால்விலங்கு கருநிறமா மரம்பதினோர் பேராம்
கோவெனல்கண் பசுத்திசைநீர் கிரணம்பார் மலைகோன்
குலிசம்விண்ணம் புரையிரங்கல் சுவற்கமீ ரேழாம்
காவெனலே சோலைதுலாங் காப்புத்தோட் சுமையாங்
கவுசிகம்பண் கூகைசுடர்க் கால்பட்டா வனவே. 474.

ஆவிக்கம் பசுவியப்போ டிசையாச்சா மரமாம்
ஆவியுயிர் குளநாற்றம் புகைமூச்சைம் பேராம்
தாவருத்தம் பகைதாண்டல் வலிகொடென்ற லைந்தாம்
சவுரியமே களவுவீரியமிரண்டு பேராங்
காவிகள்ளுக் காவிக்கற் குவளைமூன் றுகுங்
கவந்தம்பேய் தலைக்குறைதண் ணீர்மூன்று பேராம்
நாவிதன்மஞ் சிகன்பூரங் கார்த்திகைமுப் பேராம்
நவ்விமா னழகுதோ ணியுமாமோ வியமே. 475.

ஓவியர்சித் திரகாரர் சிற்பநூ லோராம்
ஓவிரக்க மோடுநீர் தகைநீக்கங் கதவாங்
கூவிரந்தேர் தேர்மொட்டாந் தாவமிட ரூராங்
கோவையபொன் சினமாகுஞ் சேவெருது பரியாம்
வாவலெனு மொழிதாவல் வவ்வா லு மாகும்
மவுலிமுடி சடைதொடையாஞ் சவலையெய்ப்பு மின்னும்

ஆவரணங் கலனுடை சவட்டைதடை மறைவாம்
ஆவணநாள் வீதியுரித் தெனமொழிநீ வியந்தே. 476.
ஈவிதுடைத் திடலாடை கொய்சகமுப் பேராம்
நீண்டசிலை யுமைமரவோர் கொல்லுலையோ ரியுமாம்
ஏவல்வியங் கோளாணை வறுமைமூன் றாகு
மியம்புகலை யெள்ளிளங்காய் சவர்வழிதுன் ப[மு]மாஞ்
சீவனியே யோர்மருந்து செவ்வையாழ்த் திறமாஞ்
சேவல்புள்ளி னாண்காவல் சேறுகோ ழியுமாங்
கேவலமென் பதுதனிமை மூத்தியுமென் றாகும்
கிடைத்தசவு ரியன்வீரன் சனியெனுமவ் வுரையே.
அவ்வைதா யவ்வையுமாஞ் செவ்விபொழு தழகாம்
அறைந்தசே வகம்வீர மாணையின்கூ டமுமாம்
பவ்வமரக் கணுவாரி குமிழியுவா நான்காம் [லாங்
பகர்தெவிட்ட னிறைத்தலொலி யடைத்தல்கான் றிட
தவ்வைதாய் முன்பிறந்தாள் சேட்டைமூன் றாகும்
சவுரிமா லயன்சனியோர் நதியுநான் காகுந்
தெவ்வுபகை யமராகுஞ் சிவப்புநிறஞ் சினமாஞ்
செப்பவந்தி யூர்கிளியென் றியம்புதிநீ யுவந்தே. (478.)
உவாவெனுஞ்சொ லிளையோனும் பவ்வமுந்தந் தியுமாம்
உவப்புமே டுவகையுமா மிவப்புயர்ச்சி மேடாங்
கவானெனுஞ்சொ லுயர்ச்சிதுடை மேடுதிரட் சியுமாங்
கவுசிகனே யிந்திர னு மொருமுனியு மாகுஞ்
சுவாமிபொருண் முதல்வன்செவ்வேள் மூன்றுபெயராகுந்
துவைபிண்ணாக் குடனிறைச்சி யொலித்திடலு மாகுஞ்
சிவேதைதெற்கு மருந்தாஞ் சுவேதம்வெண்மை வெயர்
[வாஞ்
செழிக்குமா வலம்வாய்கொட் டுதலிலைழக்கும் வளமே.

வகர வேற்றுமை முற்றும்.

## * ளகர வெதுகை

வளம்பதவி யெழில்வளமாம் வளமைமாண் கொழுப்பாம்
வாளியம்பு மண்டிலமாங் காளிதுற்கை பனையாங்
குளகைகரும்பின் கட்டிநுதல் குட்டமுமுப் பேராங்
குளிர்குளிர்ச்சி நண்டுகவண் கருவிமுழா மழுவாந்
தளம்படைபூ விதழ்சாந்தஞ் சமதலந்தா ழியுமாந்
தளைவிலங்கு துடர்ச்சிசிலம் பாண்மயிர்தா ளைந்தாம்
களங்கறுப்பில் லவள்கழுத்துக் களரிடமபோர்க் களமாம்
களபமா னையின்கன்றுங் கலவையென்றுவ கிளத்தே.[4]
கிளர்கிரணங் கோட்டுமலர் கிளர்தல்பூந் தாதாம்
கிளைகிளைத்தல் மூங்கில்சுற்ற மேழிசையி லோர்பேர்
உளர்தல்சித றுதல்தடவல் கிண்டுதலு மாகும்
உளைமயிர்மாக் குசைமயிராம் விளைவயல்கா டீரண் [டாம்
களரிகள ரிடங்கருமை சவைபோர்செய் யிடமாங்
களகமே பெருசசாளி கல்விகூ ரிடமாம்
மூளரிதீக் கான்விறகு சிறுமைதா மரையாம்
மூளையாணி வேய்முளைத்தல் சேயெனவும்‡விளம்பே.
விளர்கொழுப்பு வெளுப்புரித்தாம் விளவுகமர் மடமாம்
விளரியாழ் யாழ்நரம்பு வேட்கையிள மையுயாம்
அளவையெல்லை நாளாகு மளறுபங்க நரகாம்
அளிகொடை தேன் பரிவுவண்டாந் தளிகோயில் துளி [யாம்
இளமையிள மையின்பருவந் தண்மைகா மமுமாம்
இளைகாவற் காடிளமை புயல்வேலி நான்காங்
களிறுதந்தி யத்தநா ளாண்விலங்கு மீனுங்
களிகுழம்பு மதுக்களிப்பாய்க் காணலவெளிப் படுமே.

---

* இவ்வெதுகை ழகர வெதுகையின் பின்னர் வரற்பாலதாயிருப்பவும் பிரதியிற் கண்டபடி வெளியிடப்படுகிறது.

‡ விளம்புகவே (பி-ம்)

வெளிலணில்வேள் வியின்றம்பந் தயிர்கடையுந் தறியா
மீளிவலி திண்ணியனே பெருமைதலை வனுமாம்
பளிதமே கற்பூரங் கணைக்கெண்பல் லமுமாம்
பாளிதமே கண்டஞ்சேற் றொருகுழம்பு பட்டாம்
இளியுரித்த லிறுக்கலிசித் திடவிசையு மாகும்
இளவல்பின்னோ னிளம்பயிராந் தளிமமெத்தை யழகாம்
தளிபெருமை குளிர்செறிவு தேள்பொலிவு திரளாம்
ஞாளிகன்முக் குக்கலுமாம் வான்வசிகூ ரொளியே. 483

ஒளிபுகழ்முச் சுடர்கேட்டை யொளிராறு பெயராம்
ஒளிவட்டங் கண்ணாடிச் சக்கரா யுதமாம்
அளைதயிர்புற் றொடுமுழையாங் களவுமரங் கரவாம்
அளகமீர் குழல்வகையாந் துளியாமை துளியாம்
வளைதொடிசக் கரம்புன்னை சங்குமனை யுறுப்பாம்
மள்ளர்கா னவர்வீரர் பள்ளர்மூன் றுகுங்
களவனே கருநிறத்தோ னளைஞெண்டு மாகும்
கள்வன்முசுச் சோரனுமா மள்ளல்வர களாறே. 484

அளித்தல்செறித் திடல்காத்தல் கொடுத்திடலு மாகும்
அளகுகோழித் தொகைகூகை கோழியல்லாப் பெடையாம்
திளைத்தலுறு பயிறல்செறித் திடனிறைக லாகும்
தேளனுடன் றெறுக்காலாம் வேள்குகன்கா மனுமாம்
விளக்குநாள் விளக்கொளியா மிளைப்பிணக்க நோயாம்
வேள்விகொடை நாண்மகமாந் தோள்புயங்கை யாகும்
துளக்கமே யச்சமொடு பிரகாச மாகும்
துளும்பலே திமிறல்துள்ள லென்பர்கேள் வியரே. 485

கேள்விசெவி கல்வியுமாந் தாளடிமுன் முயல்வாங்
கேளிர்பெண்கள் விளையாட்டுச் சுற்றமிரு பேராங்
கோள்வலிபொய் கொலைகிரகங் குணங்கொள்கை யூறுங்
கோளிகொள்வோன் கொழிஞ்சிபூ வாக்காய்க்கு மரமாம்

காளையெரு திளமையோன் பாலையிறை வனுமாம்
காளங்காஞ் சுரைசின்னஞ் சூலகஞ்சு கறுப்பாம்
ஒளியொழுங் குடஞளைக் கூடமிரு பேராம்
உரைகளே பமுடம்பு பிணமாமுன் னதுவே. (486.)

உள்ளல்நினை வுள்ளாறு மெள்ளல்நகை யிழிப்பாம்
உள்ளமுயிர் முயற்சிநெஞ்சாங் கள்ளுமதுக் களவாம்
பள்ளிநகர் துயில்பாயல் கோயில்முனி யிருப்பாம்
பரியகோ ளகைவட்ட மண்டலிபாம் பாகும்
அள்ளுரமே செறிவுகா தயில்வலிபற் றிரும்பாம்
அளக்கர்புவி யுப்பளஞ்சே றுவரிகார்த் திகையாம்
புள்ளவிட்டம் வண்டுபுள்ளாம் வள்ளம்வட்டில் புனையாம்
புளகமே கண்ணாடி குமிழ்ப்பெனக்கொள் ளுகவே. (487.)

கொள்ளைமிகை †கொடுவியாதி பொள்ளலப்பம் பொத்தாம்
கூளிதமர் வாமனப்பேய் குறள்வீர ரேரும்
வள்வலிவாள் முனைகாதாம் வெள்ளமெண்ணீத் தழுமாம்
வள்ளிகொடி யாபரணங் கைவளைவள் ளியுமாம்
வெள்ளைதகர் வெளிறனந்தன் மதுவெண்பாச் சங்காம்
வேளாள னுபகாரி வெள்ளாள னிரண்டாம்
ஞெள்ளலே வீதிபள்ள மென்மைமூன் றாகு
நெடியகா ளகங்கறுப்பூ ருடையாம்வெள் ளையே (488.)

வெள்ளில்விளாப் பாடையுமாம் விள்ளலுரை நெகிழ்வாம்
வேளாண்மை நிசங்கொடுத்தல் முயற்சிமூன் றாகும்
பிள்ளைமக வொடுகாக்கை வயிரவனு மாகும்
பேணுங்கா ளியர்கண்ணு ருறைகார ராகும்
ஞொள்கலிழைத் திடல்சோம்பு நோயச்சந் திரிவா
றுண்களங்கள் வஞ்சகனுஞ் சந்திரனு மாகும்

† கொடுதியாமல் (பி-ம்)

கிள்ளையெனு மொழிகுதிரை தத்தையிரண் டாகுங்
கிளிஞ்சிலெருந் துடன்மலங்கு மீனும்பொற் குழையே.
ளகர வேதுகை முற்றும்.

---

## ழகர வெதுகை

குழைதழை துவாரங்குண் டலஞ்சேறு காற்பேர்
குழலளகந் துளையுடைத்தாம் பொருளிசையின்குழலாம்
கழைகரும்பு புணர்பூச மூங்கில்மூன் றாகுங்
கழல்செருப்புக் கால்கழங்கு காலணிநாற் பேராம்
விழைவுமயல் புணர்ச்சியுமாங் கழுமல்பற்று மயக்காம்
விழிதல்கொடை சாவாகுஞ் செழுமையெழில் வளமாம்
உழையிடமான் யாழ்நரம்பா மழுவம்விரி நாடாம்
[தொழுமே.
ஊழெனுஞ்சொற் பகைமுறைமை வெயில்முப்பேர்
தொழுவுழலை ரேபதியாங் குழவிளமை யழகாங்
தொழுதிகுழுப் புள்ளொலியாம் மழைகுளிர்ச்சி புயலாங்
கழுதுபேய் பரண்வண்டாம் பழமுதுமை கனியாங்
கழங்குபேய் கடங்கழலாங் கொழுந்துதளிர் புதலாம்
இழுதிமை நெய்யாகு மிழுதைமடன் பொய்யாம்
எழில்வள்ளல் புயலாகு மெழிலழகு தொண்டாம்
விழுமஞ்சீர் மையுஞ்சிறப்பு மிடும்பையுமுப் பெயராம்
விழவுவிழா மிதுனமதாங் கிழமுரிமை கிழமே. 491.

கிழமை... ... ...492.

* * *

போதிகை நிகண்டின் பிரதி இதனோடு முடிகின்றது.

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

### 1. அகர வருக்கம்

1 அகந்தருவுங் குறையும் வெற்பு மனையும்
அகமு முள்ளு மான்மாவு மகப்பொருளும்
இடமும் பாவமு மல்லவு மாகும்.

2 அகைத்த லறுத்திடலு மொடித்தலு மீர்த்தலும்
வேதனை யும்மென விளம்பினர் புலவர்.

3 அகப்பாவுள் ளுயர்த்திய பாவு மதிலும்.

4 அகவலோர் பாவுங் கூத்து மாகும்.

5 அக்கர மெழுத்துமோர் நோயு மாகும்.

6 அகலுள் ளூரும் பரப்புகாடு மாகும்.

7 அக்கார மடையும் வெல்லமு மாகும்.

8 அகல மார்பு நீளமு மிடமும்
அகலிட மும்விரித் துரையு மாகும்.

9 அகடு பொல்லாங்கு நடுவும் வயிறும்.

10 அகளந் தாழியு மிடாவு மாகும்.

11 அகிசிலம்பு மிரும்புந் தீயு மரவும்
தொகையு மெனவே சொல்ல லாகும்.

12 அக்கென்பு மிமிலுஞ் சங்கு மணியுமாம்.

13 அங்கி தீயுஞ் சட்டையு மறமீனும்.

14 அங்கமா றங்கமுங் கட்டிலு மாகமும்
என்பு முறுப்பும் வெட்டலு மாகும்.

15 அங்கணஞ் சலதாரையு முற்றமுஞ் சேறும்.
16 அங்கதம் [1]வசைச்சொல்லும் பொய்யு மார்பும்
அரவுக்தோ ளணியு மசைப்பெயரு மாகும்.
17 அங்காரகன் றீயுஞ் செவ்வாயு மாகும்.
18 அசிவாளு மம்பு மவமதிச் சிரிப்பும்
ஆயுதங் களுமென் றறைந்தனர் புலவர்.
19 அச்ச மகத்தியு [2]மைம்மையு மஞ்சலும்.
20 [3]அசும்பு வீசுதலு நீரொழு குதலும்
காந்தியு மொற்கமுங் கழற லாகும்.
21 அசோகு [4]சுகமு மசோகு மாகும்.
22 அச்சுதன் மூதிறையு மரியு மருகனும்.
23 அச்சுவங் குதிரையு மக்கிரா மருந்தும்.
24 அசனஞ் சோறு மளவும் பசியும்
வேங்கையுங் கொழுப்பும் விளம்ப லாகும்.
25 அசைசிரை யசையு மசைச்சொல்லு மசைவுமாம்
நேரசை யும்மென நிகழ்த்த லாமே.
26 அசைதல் தங்கலு நோதலு மாகும்.
27 அசைத்தல் கட்டுதலு மசைத்தலு மாகும்.
28 அசனிவச் சிரமு மிடியு மாகும்.
29 அசமே யாடும் மூவாட்டை நெல்லும்.
30 அஞலமே பஞ்ச மணமுஞ் சிங்கமும்.
31 அஞரே துக்கமு மறிவி லாரும்.
32 அஞ்சலி வணங்கலும் வாவற் பறவையும்
பேதையு மென்னப் பேச லாகும்.
33 அஞ்ஞை யழகு மறிவிலா னுங் கிடாயும்.

(பிரதி)—1 இசைச் 2 மன்னையு
3 அசம்பு 4 தகமு

34 அஞ்சன மிருளு மையுங்கண் மருந்தும்
ஓர்தீக் காளையு நீலக் கல்லு
மஞ்சன மும்மென வழங்கினர் புலவர்.
35 அடலே கொலையும் வெற்றியும் வலியும்
சமைத்தலும் பொருதலுஞ் சாற்ற லாகும்.
36 அடியண்ட முதலுஞ் சென்டு வெளியும்
[1]காலுங் கவியடியுங் கழற லாகும்.
37 அடரே தகடு நெருக்கடு மாகும்.
38 அடுதல் கோறலு மட்டலு மடர்தலும்.
39 அடலைவெண் பலியுஞ் சுடுகாடு மாகும்.
40 அடுப்புப் பரணியு மச்சமு மடுத்திடலும்
அடுப்பு மெனவே அறைய லாகும்.
41 அடையப்பமு மிலையு மடுத்தலுங் கனமும்.
42 அணைதலை யணையு மெத்தையு மணையுஞ்
சயனமு மென்னச் சாற்றினர் புலவர்.
43 [2]அணியொப் பனையு மன்புமணி வகுப்பும்
அழகுமலங் காரமும் பூணும் பீடும்
அணிதலு மிலக்கண வணியு மாகும்.
44 அணவல் புல்லலு ந[ணுக]லு மாகும்.
45 அண்டம் விண்ணு முலகமும் முட்டையும்
ஆகாய மும்பிர மாண்டமு மாகும்.
46 அண்டசம் பறவையுந் தேரையு மீனும்
அரணையு முடும்பும் பல்லியு நண்டும்
ஓந்தியு முதலையு மிப்பியு நாகமும்
கச்சப மும்மெனக் கழற லாகும்.
47 அணுமந் திரமுஞ் சிவனு நுண்மையும்.

---

(பிரதி)—[1] காதலுங் [2] அணியேர்ச்சீரு

48 அணங்கே மாதரும் வருத்தலுந் தெய்வமும்
ஆசையு மழகு மச்சமுங் கோறலும்
நோயுஞ் சூரும் நுவல லாகும்.
49 அண்ணமுண் ணாவு மணரியு மாகும்.
50 அணுக்கமே யுரகமுஞ் சாங்கமு மாகும்.
51 அண்ணல் பீடு மண்ணுதலுந் தலைவனும்
புத்தனு மரபும் புகல லாகும்.
52 அண்டர் பகைவருந் தேவரு மாயரும்.
53 அண்ணை பேயு மறிவிலானு மாகும்.
54 அத்திரி யொட்டகமுங் கணையுங் கழுதையும்
பரிதியும் விண்ணும் வெற்பு மாகும்.
55 அத்திரங் கணையும் வீடு மலையும்
குதிரையுங் கழுதையுங் கூற லாகும்.
56 அத்தி யானையுங் [1]கடலு மத்தியும்
புள்ளு மெலும்[பும்] புகற லாகும்.
57 அத்தஞ்சொற் பொருளுங் காடுமெத்த நாளும்
அருநெறியும் பொன்னும் பாதியுங் கரமும்
கண்ணா டியுமெனக் கழற லாகும்.
58 அத்தலைச் சொல்லு மரைநாணுஞ் சிவப்பும்
இசைப்புந் துன்னமு மியம்ப லாகும்.
59 அதர்சிறு கல்லும் புழுதியும் வழியும்.
60 அத்தனே சிவனும் பிதாவு மாகும்.
61 அதம்பா தாளமுங் கீழ்வீழ்தலு மிறங்கலும்.
62 அந்தண ரறவோரும் பார்ப்பாரு மாகும்.
63 அந்தம[ஞ்] ஞானமு முடிவுங் கத்தூரியும்
அழகு மெனவே யறைய லாகும்.
64 அந்தகன் குருடனுங் கூற்றனு மாகும்.

---

(பிரதி)—[1] கட்டிலு

65 அந்தி லரங்கு மிரண்டு மசையும்
இடப்பெய ரும்மென வியம்ப லாகும்.

66 அந்தரம் விசும்பு [1]மிடையு மளவும்
பேதமு மேகமும் பேச லாகும்.

67 அந்தி மாலையும் பாலையா ழோசையும்
இரவு மசையு மியம்ப லாகும்.

68 [2]அந்தரி யுமையுந் துர்க்கையுங் காளியும்.

69 அம்புவேயும் நீரும் விண்ணும்
மேகமுங் கணையும் விளம்ப லாகும்.

70 அம்மைவரு பிறப்புந் தாயு முமையும்
அழகு மெனவே யறைய லாகும்.

71 அமலையம் பிசையுஞ் சோறு மோசையும்.

72 அமரே அமர்தலும் பூசலு மாகும்.

73 அம்பிநீர் மேலோடு வனவுந் தெப்பமும்
நாவா யும்மென நவின்றனர் புலவர்.

74 அமுதம் பாலு முத்தியு நீரும்
அவியும் மேகமும் பெருமையு மாகும்.

75 அம்புயம் [3]பொதியும் புட்டிலு[ம]ம் புயமும்.

76 அம்பல் பழிமொழியு மலர்மொழியு மாகும்.

77 அம்மழகு மசையு நீரு மாகும்.

78 அமரர் பகைவருந் தேவரு மாகும்.

79 அமறல் மிகுதியும் பொலிவும் பீடும்
நெருக்கமு மெனவே நிகழ்த்த லாகும்.

80 அம்பணந் துலாக்கோலுந் தூம்பு மாமையும்
வாயுங் கதலியுந் தோணியு நீரும்.

---

(பிரதி)—[1] மிடமு [2] அக்திரி [3] பொதியம்பும்.

81 அமைதல்சம் மதித்தலும் பொழுது மாகும்.
82 அமுதுபாலுஞ் சோறு மவியு மழையும்.
83 அம்பரங் கூறையும் கடலுமா காசமும்.
84 அம்பட[ல]ம் வெள்ளியு மோடமும் மரக்காலும்.
விண்ணு மம்மியும் விளம்ப லாகும்.
85 அயமிரும்பு நீரும் பரியு மாடும்
தடாகமு மகமுஞ் சேறு மவனியும்
சூதனரும் விழாவுஞ் சொல்ல லாகும்.
86 அய்யன் மூத்தோனுஞ் சாத்தனு மப்பனும்
சுவாமியுங் குருவுஞ் சொல்ல லாகும்.
87 அய்யங் கடினையும் பிச்சையும் பொழுதும்
அனுமா னமுமென வறைய லாகும்.
88 அய்யரந் தணரு முனிவருந் தேவரும்.
89 அயனமே வழியும் பிறப்பு மூனும்
ஆண்டினிற் பாதியு மாகு மென்ப.
90 அயிர்நுண் மணலு மனுவுஞ் சர்க்கரையும்.
91 அயிலிரும்பு முண்டலுங் கூர்மையும் வேலும்.
92 அயிராணி யுமையு மிந்திரன் றேவியும்.
93 அயிரி மீன்முள் ளரிந்திடு கருவியும்
நுண்மண லுமென நுவல லாகும்.
94 அரண்மதிலும் வேலுங் கவசமுங் காவலுஞ்
செருப்புங் காடு மஞ்சலு மாகும்.
95 அருளே சுத்தியுங் கருணையு மாகும்.
96 அரக்குச் சிவப்பும் மெழுகுங் கள்ளும்.
97 அரில்சிறு தூறுங் குற்றமுங் குழலும்
பிணக்கமுங் குரலும் பரலும் வயிரமும்.
98 அரவநூ புரமும் பாம்பு மோசையும்
ஆயிலிய முஞ்சிலே காணு மாகும்.

99 அரசு பூமியு மன்னரும் ராச்சியமும்
அரசு மரமு மறைய லாகும்.
100 அரசர் வன்னியர் வேந்தரு மாகும்.
101 அரிதம் பூமியும் பச்சையுந் திக்கும்
பசும்புல் லுமெனப் பகர லாகும்.
102 அரலை களியுங் கழலையும் வித்தும்
கடலுங் கற்றூழையுங் கழற லாகும்.
103 அரம்பை வாழையுந் தெய்வப் பெண்ணும்.
104 அரங்கோ ரில்லு [1]மிடமு மாகும்.
105 அராகம் பாலைப் பண்ணுஞ் சிவப்பும்
ஆசையு முடுகும் பாவு மாகும்.
106 அருண ஞதித்தன்றேர்ப் பாகனும் புதனும்
ஆதித்த னுமென வறைய லாகும்.
107 அருகல் சாதலுஞ் சுருங்கலு மாகும்.
108 அருகர் சாவகரு நீல்ல[ா]மையுமாம்.
109 அரத்தமுற் பலமும் பொன்னுஞ்செம் [2]பரத்தமும்
நீபமுஞ் சிவப்பும் பவளமு [3]மிரத்தமும்.
110 அரிட்டங் காக்கையுங் கள்ளும் வெற்பும்
பிரவியிற் குற்றமும் பேச லாகும்.
111 அரந்தை துன்பமுங் குறிஞ்சி யாழும்.
112 அரணி கோலும் வேலியுங் கவசமும்.
113 அருணஞ் சிவப்பு மானுமெலு மிச்சும்
ஆடு மெனவே யறைய லாகும்.
114 அரங்க மாற்றிடைக் குறையு மாடிடமும்
வட்டா டிடமும் போரிடமுஞ் சபையும்.
115 அருப்ப மூருங் காடு மரணும்
கந்து கோயுஞ் சோலையு மாகும்.

---

(பிரதி)—[1] மிபமு. [2] மத்தமும. [3] மிரத்தமு மாக்கும்.

116 அரசன் வியாழமும் வேந்தனு மாகும்.
117 அரற்ற லழுகையு மோசையு மாகும்.
118 அருச்சுன மருதும் வெண்மையும மந்துமாகும்.
119 [1]அருந்த லருமையு முணடலு மாகும.
120 அருத்தி யாசையுங் கள்ளு மாகும்.
121 அருக னருகனு நண்பனு மாகும்.
122 அரிவை பருவமு மாதரு மாகும்.
123 அருவிதினைத தாளும் வெற்பு மாறும்.
124 அரணங் காவற்காணுங் காவலும் வேலியும்
மதிலு மஞ்சலுங கவசமுஞ் செருப்புமாம்.
125 அரையோ [2]ரெணணுமோ ருறுப்பு மாகும்.
126 அரியே தேரு மலையு மரித்தலும்
மூஙகிலும் வயிரமும் பறையும் பாம்புமம
அரிசியும் பன்றியு மரிதலும புரையும்
கிளியும் நெற்கதிரும் படைககலமும் பொன்னும்
புகையுஞ் சோலையுங் காந்தியுங கடலும்
கிண்கிணிப் பரலுந் தவளையு மாலையும்
கணவரியும் புகருங குலிசமும் வாயும்
இந்துவும் விசியுங கள்ளுங குதிரையும்
நன்னிறமும் வாளுங குரஙகும் வலியும்
வணடுந் திகிரியும் பகையும் அம்பும்
பாயலுங் காற்று மென்றூழுஞ் சயனமும்
இந்திர னுந்திரு மாலுஞ் சிஙகமும்
ஐமையுங் கூற்று மஙகியும் பசசையும்
கூர்மையுஞ் சேகு மாடுஞ் சுடருமாம்.

---

(பிரதி)—[1] அருத்த. [2] ரெண்ணுமரையுறுப்பு

127 அலியே தீயுஞ் சோறும் பேடனும்
மறலியு மறுவிலியுமென வழங்க லாகும்.
128 அலகுநெற் கதிரும் புள்வாயுந் துடைப்பமும்
பலகறையு மிலஞ்சிப் பரலுமோ ரெண்ணும்
[1] நுளம்பும் ஆயுதமுமென நுவல லாகும்.
129 அலரி தேனீயும் பூவுமோர் மரமும்
அழலுங் கண்வரியு மருக்கனும் வாவியும்
மலர்க்கணை யுமென வழுத்த லாகும்.
130 அலவனம் புலியும் பூனையு நண்டும்
கடக ராசியுங் கழற லாகும்.
131 அல்லிவெள் ளாம்பலுங் காயாவு மலியும்
பூந்தா துமக-விதழும் புகலும்.
132 அல்க லிலம்பாடும் நாளுஞ் சுருங்கலும்
தங்கலு மிரவுஞ் சாற்ற லாகும்.
133 [2] அல்கு தங்கலுங் கங்குலு மாகும்.
134 அலைகடற் றிரையுங் கடலு மாகும்.
135 அலங்கல் பூமாலையுந் தளிரு [3] மசைவும்
இலங்கலு மெனவே யியம்ப லாகும்.
136 அலர்விரி பூவும் புறங்கூறலும் பழியும்.
137 அல்லே யிராவு மிருளுமா தித்தனும்.
138 அவல்சிற் றுண்டியுந் தடாகமுங் கீழும்.
139 அவந்தியோ ரூரும் கிளியுஞ் சேனையும்.
140 அவனி பாரகரும் வேந்தரும் பூமியும்.
141 அவினயங் கூத்து நூலு மங்கமும்.
142 அவிர்த லொளியும் பீறலு மாகும்.
143 அவிதேவ ருணு நெய்யு மாகும்.

(பிரதி)—[1] நுணைபுமாயதமு. [2] அல்குதம்பமுங்.
[3] மாசையும்.

144 அழுவம் பரப்புந் துருக்கமு முரசும்
கடுக்கமு காடு நவில லாகும்.
145 அழனந் தீயும் பிணமு மாகும்.
146 அழுங்க ளேயுஞ் சோம்புங் கேடும்
ஓசையும் கடுக்கமுந் துன்பமு மேங்கலும்.
147 அழுக்கா றுமனத்தின் கோட்டமும் பொறாமையும்.
148 அழகு சர்க்கரையும் வெல்லமு மழகும்.
149 அழுக்கே மாசு மாமையு மாகும்.
150 அளஞ்செறிவுங் கூர்மையு முப்பளமுங் கடலும்.
151 அளையே தயிரு முழையும் புற்றும்
பாழிலு மோரும் பகர லாகும்.
152 அள்ளல் சேறு நரகமு மள்ளலும்.
153 அளகங் கொந்தளமு மோதியு நீரும்.
154 அள்ளே கூர்மையுஞ் செறிவும் வன்மையும்
செவியும் வலியும் பற்றிரும்புஞ் செப்புவர்.
155 அளியன்பும் வண்டுங் கொடுத்தலு மதுவும்.
156 அளவை மரக்காலு நாழியுந் தினமும்
எல்லையு மெனவே யியம்ப லாகும்.
157 அளித்தல் காத்தலுங் கொடுத்தலுஞ் செறிதலும்.
158 அளக்கர் கார்த்திகையும் பூமியுஞ் சேறும்
கடலு முப்பளமுங் கழற லாகும்.
159 அளறு நரகமுஞ் சேறு மாகும்.
160 அறையே பாறையுஞ் சிற்றிலு மறைதலும்
அலையு மொழியு மலேமுழைஞ்சு மாகும்.
161 அற்ற மறைப்பொருளு மவகாசமுஞ் சோர்வும்
நாயுந் துடியுஞ் சற்றுமற் றதுவும்
உண்மையு முடிவு மோத லாகும்.

162 அறல் நீர்த் திரையு நீரும் விழாவும்
நுண்மண லுமென நுவல வாகும்.
163 அறுவை யாடையுஞ் சித்திரை நாளும்.
164 அற்பஞ் சிறுமையு நாயு மாகும்.
165 அறுகு சிங்கமும் புலியும் யானையும்
அறுகம் புல்லும் யாளியு மாகும்.
166 அறுபதங் கையார் தகரையும் வண்டும்.
167 அறிக்கை[1] பற்று வித்தலு மறிதலும்.
168 அன்னே விகுதியுஞ் சாரியையு மாகும்.
169 அன்றி லன்றிற் புள்ளு மூலமும்.
170 அன்னை தாயு மூத்தாளுந் தோழியும்.
171 அனலிபாற் காலனுந் தீயு மாகும்.
172 அனந்தன் மாலு மருகனுஞ் சிவனும்
சேடனுந் தெய்வமுஞ் செப்ப லாகும்.
173 அனந்தம் அளவின்மையும் பொன்னும் விண்ணும்.
174 அனந்தையோர் சத்தியும் பூமியு மாகும்.
175 அனங்க மிருவாட்சியு முல்லையு மாகும்.
176 அனிலம் பவமுங் காற்று மாகும்.
177 அன்னஞ் சோறு மன்னப் புள்ளும்.
178 அனுக்கவுள் முகனுந் தொடர்ச்சியு மாகும்.
179 அனித்திய மில்லாமையுஞ் சந்தனமும் பொய்யும்.
180 அன்னியம் தொதுமலுங் குயிலு மாகும்.
181 [அ] அதிசயமுஞ் சுட்டு மாதியு முயிரும்
[2] துயரு மல்லவுஞ் சொல்ல லாகும்.

அகர வருக்கம் முற்றும்.

---

(பிரதி)—[1] பற்றி [2] துயிரு.

## 2. ஆகார வருக்கம்.

182 ஆக மார்பு முடம்பு மாகும்.
183 ஆகார மூணும் வடிவு செய்யும்.
184 ஆகு கொப்பூழும் பெருச்சாளியு மெலியும்.
185 ஆகுலந் துன்பமு மோசையு மாகும்.
186 ஆக்கஞ் செல்வமுந் திருமகளு மாகும்.
187 ஆங்கசைச் சொல்லு மவ்விடமு மொப்பும்.
188 ஆசினி மரவுரியும் வயிரமும் விண்ணும்
மரமும் பலாவின் விசேடமு மாகும்.
189 ஆசுகம் பகழியுங் காற்று மாகும்.
190 ஆசிடை வாழ்த்துங் [1]கூட்டமு மாடையும்.
191 ஆசு கவியுங் கவசமு மற்பமும்
குற்றமுஞ் சடுதியுங் கரக்கருவியு மா[கு]ம்.
192 ஆசா ரம்பெரு மழையுஞ் சீலமு
மேட்டையும் புடவையும் விளம்ப லாகும்.
193 ஆசான் வியாழமுங் குருவு மாகும்.
194 ஆசை பொன்னுந் திசையும் அவாவும்
பரிவு மன்பும் வாமமு மாகும்.
195 ஆஞ்சி கூத்து மழுங்கலு மாகும்.
196 ஆடு வெற்றியுங் கூத்து மேடமும்
[2]ஆடென் கூர்மையு மானு மாகும்.
197 ஆடிகண் ணாடியோர் மாதமுங் காற்றும்
உத்திரா டமுமென வுரைக்க லாகும்.
198 ஆடை தொங்கலு நோயுஞ் சீலையும்.
199 ஆடகந் துவரையும் பொன்னு மாகும்.
200 ஆடவர் புருடரு மாணிளைஞரு மாகும்.

(பிரதி)—[1] கட்டமு. [2] ஆருங்.

201 ஆடல் புணர்ச்சியும் வெற்றியுஞ் சொல்லும்
கூத்துங் கவிதையுங் கூற லாகும்.
202 ஆணங் குழம்பு மன்பு மாகும்.
203 ஆணி யெழுத்தாணியு மற்றை யாணியும்
சயனமும் பேரழகுஞ் சாற்ற லாகும்.
204 ஆண்டா ருடையாருந் தேவரு மாகும்.
205 ஆணு நன்மையு மிரதமு மாகும்.
206 ஆண்டவ் விடமும் வருடமும் புல்லும்
நெல்லு மெனவே நிகழ்த்த லாகும்.
207 ஆணை மெய்ப்பாடும் வெற்றியு மேவலும்
இலாஞ்சினையுஞ் சூளுந் தடுத்தலு மிசைப்பர்.
208 ஆதன் பேதையு முயிரு மாகும்.
209 ஆதவ ருக்கரும் வேதியரு மாகும்.
210 ஆதிமும் மூர்த்தியு [1]முதலு மொற்றியும்
நேரோட்டலு மருக்கனும் நிகழ்த்த லாகும்.
211 ஆதித்த ருக்கரும் அமரரு மாகும்.
212 ஆதல் கூத்து நூலு மாகும்.
213 ஆம்பல் வேயுங் கள்ளுங் கவ்வையும்
ஊது கொம்பு மியானையு மல்லியும்
ஓரெண் ணுமிசைக் குழலு மிந்துவும்
ஓர்பண் ணும்பே ரொலியு மாகும்.
214 ஆமிடைச் சொல்லு நீருமா மென்றலும்
சூத மரமுஞ் சொல்ல லாகும்.
215 ஆம்பிரந் தேமாவும் புளிமாவும் புளிப்பும்.
216 ஆம்பிகா ளானுஞ் சத்தரு மாகும்.
217 ஆமலகம் நெல்லியும் பளிங்கு மாகும்.

---

(பிரதி)—[1] முதலுமோர் தாளமுமொற்றியும்.

218 ஆயமா தாயமு மகளிர் கூட்டமும்
சூதுஞ் சங்கமு நீளமுந் தோழியும்
மல்லரி யுமென வழுத்த லாகும்.
219 ஆயிர மோரெண்ணு மளவின் மையுமாம்.
220 ஆய்தல் தேர்தலும் நுணுக்கமு மாகும்.
221 ஆய்வு தெரிதலுந் துன்பமு மாகும்.
222 ஆரமித் திலமும் பதக்கமும் பூணும்
பித்தளை யுஞ்சந்து மாத்திய மாலையும்.
223 ஆர்செறிவுங் கூர்மையும் ஆத்தியுஞ் சோதியும்
அவனியும் நிறைவும் பாகுக்தே ருருளும்.
224 ஆரல் செவ்வாயுங் கார்த்திகை நாளும்
மதிலும் ஆரல் மீனு மாகும்.
225 ஆரைபுற் பாயு மாரையு மெயிலும்.
226 ஆரியன் குருவுமோர் தேசமு மறிஞனும்
ஆதித் தனுமென வறைய லாகும்.
227 ஆர்வம் வில்லும் நிரையமுங் காதலும்
ஆர்ப்புதம் அமருமெனவே யறைந்தனர் புலவர்.
228 ஆர்தல் குடித்தலு மணிதலும் நிறைதலும்
உண்டலு மெனவே யுரைக்க லாகும்.
229 ஆர்கலி மழையுங் கடலு மாகும்.
230 ஆருபம் நீங்காமையு மமையா மையும்.
231 ஆர்வலன் கணவனும் நண்பனு மாகும்.
232 ஆர்மை மதிலுங் கூர்மையு மாகும்.
233 ஆரி கதவு மழகு மாகும்.
234 ஆர்ப்பரவம் போருந் தூளியு மாகும்.
235 ஆரியர் மிலேச்சரு மறிவுடை யோருமாம்.
236 ஆலம் விடமு மலர்ந்த பூவும்
மழையு நீரும் மழுவு மாலும்.

287 ஆலவைச் சொல்லும் புனலு மாலும்
ஆமென் பதுவு மல்லவென் பதுவும்.
288 ஆலி யாலாங் கட்டியு மழையும்
காற்று மறலுங் கழற லாகும்.
239 ஆலய மானைக் கூடமு நகரமும்
தேவ ராலயமுஞ் செப்ப லாகும்.
240 ஆல லாடலு மொலியு மாகும்.
241 ஆவல் [1]வளையு மவாவு மாகும்.
242 ஆவியா ருயிரு நாற்றமும் புகையும்
வாவியு மூச்சும் வழங்க லாகும்.
243 ஆவண மங்காடியு மடிமை யோலையும்
பீடிகையும் புணர்தமும் வீதியு முரிமையும்.
244 ஆவரணந் தூசம் பூணுந் தடையு
வானு மாசு மறையு மாகும்.
245 ஆவிய ருழவரும் வேடரு மாகும்.
246 ஆவம் நாழிகையு மம்புறு தூணியும்.
247 ஆழிமோ திரமும் வட்டமுங் கடலும்
நேமிப் புள்ளும் தேராழியுங் கரையுஞ்
சக்கர [2]முமெனச் சாற்ற லாகும்.
248 ஆற்றல் சுமத்தலும் வென்றியு மாண்மையும்
கூட்டுதலும் விதித்தலும் மிகுதியும் வாய்மையும்
ஆற்றுதலும் பொறையும் ஞானமும் வலியும்.
249 ஆறே ரெண்ணும் வழியும் நதியும்.
250 ஆற்றுதலைக் கடையு மாற்றலு மாகும்.
251 ஆனியோர் மாதமுங் கேடும் மூலமும்.

---

(பிரதி)—[1] வழையு. [2] முழமெனச்.

252 ஆனே பசுவு மிடைச்சொல்லு மாகும்.
253 ஆனியம் பொழுதும் காளு மாகும்.
254 ஆனகம் படகமுந் துந்துமியுந் தருவும்.
255 ஆவதி சயமு மிசையும் பசுவும்
வியங்கோ ளுங்கற் பகமு மிரக்கமும்.

ஆகார வருக்கம் முற்றும்.

---

## 3. இகர வருக்கம்

256 இகரமோ ரெழுத்துஞ் சந்தமு மாகும்.
257 இகல னரியு மோரியு மாகும்.
258 இருத்தல் துடைத்தலும் வீழ்த்தலு மீர்தலும்
இளைத்தலுஞ் செகுத்தலு மருந்து வித்திடலும்
[1]அழைத்தலுந் தாழ்த்தலு மிரிதலு மீவும்.
259 இகத்தல் புடைத்தலும் நெருக்கமுங் காழ்த்தலும்
கடத்தலு மியங்கலுங் கழற லாகும்.
260 இகுரி வழக்குந் தோணியு மாகும்.
261 இக்குக் கரும்புங் கள்ளு மாகும்.
262 இகுளை தோழியும் நட்பு மாகும்.
263 இகல்பகையும் வலியும் பொருதலு மாகும்.
254 இங்குப் பெருங்காயமு மிவ்விடமு மாகும்.
265 இசித்தல் ஒசிவு மிறுத்தலு மாகும்.
266 இசையுரைச் சொல்லும் பொன்னும் புகழும்
திசையும் வண்மையும் பண்பும் பாட்டும்
இனிமையு மெனவே யியம்ப லாகும்.
267 இச்சை யாசையும் பொய்த்தலு மிடித்தலும்
அஞ்ஞா னமுமென வறைய லாகும்.

---

(பி-ம்) [1] அவிர்தலும்

268 இஞ்சி கோட்டையு மிஞ்சியு மாகும்.
269 இடிநென் மாவு முறுதிச் சொல்லும்
தகரமுஞ் சுண்ணமு மிடியேறு மாகும்.
270 இடையோ ரிடையு மாயரும் நுசுப்பும்
நடுவு மிடமும் நிறையும் யானையும்.
271 [1] இடபமரக் கொம்பு மேறு மிராசியும்
கிம்புரி யுமெனக் கிளத்த லாகும்.
272 இடங்கர் குடமு முதலையுந் தூர்த்தரும்.
273 இடமிடப் புறமு மிடமுஞ் செல்வமும்
விசாலமும் வாமமும் விளம்ப லாகும்.
274 இடித்த லிடித்தலு முறுதிச் சொல்லும்.
275 இடக்கரே குடமு மறைச்சொல்லு மாகும்.
276 இடைதல் சிலையுந் துன்பமு மாகும்.
277 இணையீ ரோதியு மொப்பும் பனிச்சையும்
இரண்டு மெனவே யியம்ப லாகும்.
278 இண்டை வனசமு மீங்கையு மாகும்.
279 இணர்பூங் கொத்தும் பூவு மாகும்.
280 இதழ்பூ விதழு மேடு முதடும்.
281 இதைபுதுப் புனமுந் தோணிப் பாயும்
காஞ்சிலு மெனவே நவில லாகும்.
282 இதல்கவு தாரியுஞ் சிவலு மாகும்.
283 இதியே பேயு மிறுதியு மாகும்.
284 இந்தன மெரியிடு கனலும் விறகும்
இசையும் புகையு மியம்ப லாகும்.
285 இந்து சந்திரனுங் கரடியும் யானையும்.
286 இபமாக் கோடும் யானையும் வார்த்தையும்.
287 இமிழே யிசையு மினிமையு மாகும்.

---

(பி - ம்) [1] இடபங்.

288 இம்மி [1] பொய்யும் புலமு நுண்மையும்.
289 இமையே யென்குஞ் சிறிய மிமையும்.
290 இயலியலுஞ் சாயலும் நடையுந் தமிழும்.
291 இயவை வழியுங் காடு மூரும்.
292 இயறல் முத்தியும் போதலு மாகும்.
293 இயமீ வார்த்தையும் பறையு மொலியும்.
294 இயம்பல்பழி மொழியுஞ் சொல்லலு மாகும்.
295 இரணம் பொன்னுங் கடனு மாணிக்கமும்
அரவு மிகலு மறைய லாகும்.
296 இருள்கறுப்பு நிசியும் யானையு மையலும்
நரகமு மெனவே நவில லாகும்.
297 இரசதம் வெள்ளியுங் காஞ்சியு மாகும்.
298 இருவி தினைத்தாளு மிருவியு மாகும்.
299 இரலை யூதுகொம்புங் கலையு மசுபதியும்.
300 இராக முடுகியலுஞ் செம்மையு மிச்சையும்
கீதமு மெனவே கிளத்த லாகும்.
301 இருமை பெருமையு மிம்மையு மறுமையும்.
302 இராசியம் யோனியு மறைவு மாகும்.
303 இருசு செவ்வையும் பண்டியு ளிரும்பும்.
304 இரதி பிடியானையும் மன்மதன் றேவியும்
பித்தளையு மாசையும் பேச லாகும்.
305 இரவி சூரியனும் வாணிகமு மலையும்.
306 இரங்க லோசையு மிரங்கலு மாகும்.
307 இரவே யிரத்தலு மிரவு மாகும்.
308 இரதன் கண்ணுங் கிளியு மாகும்.
309 இராடமோர் தேசமுங் கழுதையு மாகும்.

---

(பி - ம்) [1] புலனு முண்மையும்.

310 இரதம் புணர்ச்சியுந் தேரு மின்சுவையும்
சூதமுங் கொள்ளியு மறைஞானுஞ் சொல்லுவர்.
311 இருபிறப் பெயிறும் புலியும் பறவையும்
பார்ப்பா ருமெனப் பகர லாகும்.
312 [1]இலாட மோர் தேசமும் பாலமு மாகும்.
313 இலம்பக மத்தியாயமும் நுதலணியு மாகும்.
314 இலஞ்சி மாவு மகிழும் புன்கும்
எயிலு மேரியுங் குணமுங் கொப்பூழுமாம்.
315 இலயம் கூத்தும் கூத்தின் விகற்பமும்
கேடு மெனவே கிளத்தினர் புலவர்.
316 இலங்கை தருத்தியு மோரூரு மாகும்.
317 இலம்பாடு வறுமையுந் துக்கமு மாகும்.
318 இலாங்கலி கலப்பையுந் தெங்கும்வெண் காந்தளும்.
319 இல்சாவு மிடமு மனையு மனையாளும்
இல்லை யென்றலு மிராசியு மாகும்.
320 இவர்த லாசையு மேவலு மெழுச்சியும்
ஏறலுஞ் சேறலு மியம்ப லாகும்.
321 இவர்வு சேறலு மெழுதலு [2] மாசையும்
ஏறுதலுஞ் செலுத்தலு மியம்ப லாகும்.
322 இவறல் மறவியு மாசையு மாகும்.
323 இழுமென வோசையு மினிமையு மாகும்.
324 இழை யாபரணம் நூலு மாகும்.
325 இழைத்தல் கூற்று மாற்றமுஞ் செயலும்
நினைத்தலு மேவலு நிகழ்த்த லாகும்.
326 இழுக்குச் சோர்வும் பிழைத்தலு மாகும்.
327 இளியாழ் நரம்பு மிசையு மிசித்தலும்
நகையு மினுங்குதலு முரித்தலு மாகும்.

---

(பிரதி) [1] இலாப. [2] மோசையும்.

328 இளை தலைக்காவலும் [1]வேலியும் புயலும்
இளமையுங் கிடங்கு மானு மிருநிலமுஞ்
செய்யாளுங் காடியுஞ் செப்ப லாகும்.
329 இயாளி சிங்கமு மிபமு மாகும்.
330 இளமை தண்மையுங் கோமளமுங் காமமும்.
331 இளவல் பின்றோன்றலு மேந்தலு மாகும்.
332 இளைத்த லிரங்கலு மெய்த்தலு மாகும்.
333 இறையிறை யிறுப்பு மிறைவனுங் கடனுஞ்
சிறுமையுந் தங்கலு மில்லி னிறப்புஞ்
சென்னியுந் தலைமையுங் கையிறையு மயனும்
மேலோரு மீசனும் விளம்ப லாகும்.
334 இ[றை]றவை புட்டிலு மேணியு மாகும்.
335 இறலே முத்தியும் [2] போதலு மாகும்.
336 இறும்பு குறுங்காடு மலையு மதிசயமு
வனச மலருங் கானுந் தகைமையும்.
337 இறும்பூது மலையுந் தகைமையுங் குழையும்
சிறுதூறு [மதிசயமு] மறுபதமும்
காந்தட் பூவுந் தாமரைப் பூவுமாம்.
338 இறுத்த லொடித்தலுந் தங்கலு மியம்பலும்.
339 இறத்தல் கடத்தலுஞ் சாதலு மிகுதியும்.
340 இறப்பு மிகுதியுஞ் சாவும் போக்கும்
இல்லி னிறப்பு மியம்ப லாகும்.
341 இறால் தேன்கூடு மீனு மெருதும்
கார்த்திகை யுமெனக் கழற லாகும்.
342 இனமிருங் கிளையு மமைச்சரு மாகும்.

இகரவருக்கம் முற்றிற்று.

---

(பி - ம்) [1] அறிவிலியும். [2] பெரிதலு.

## 4. ஈகார வருக்கம்

343 ஈகை பொன்னும் [1] வளியுங் கொடையும்
இல்லா மையுங் கற்பகமு மீங்கையும்.

344 ஈடு குழைவும் வலியும் பெருமையும்
ஒப்பு மெனவே யுரைக்க லாகும்.

345 ஈண்டிவ் விடமு மிவ்வாறுஞ் சடுதியும்
ஈங்கையு மெனவே யிசைக்க லாகும்.

346 ஈம மயானமு மெரியிலிடு கலமும்
காட்டமு மெனவே கழற லாகும்.

347 ஈய லிந்திர கோபமுஞ் செ[ல்]லும்.

348 ஈரம் வனப்பு மன்புங் குளிர்ச்சியும்
அறிவுமெலு மிச்சும் பகுத்தலு மாகும்.

349 ஈரே கதுப்பு மீரு மாகும்.

350 ஈழங் கள்ளும் பொன்னுமோர் தேசமும்.

351 ஈறே முடிவும் பயனு மாகும்.

352 ஈன்றான் பிரமனுந் தாதையு மாகும்.

353 ஈமொழியு மெள்ளலும் ஈயு மாகும்.

ஈகார வருக்கம் முற்றிற்று.

---

## 5. உகர வருக்கம்

354 உக முடிவும் பூமியு முரகமும் நாளும்.

355 உக்கங் [2]கோழியுந் தீயு மேறும்
ஆலவட்டமு மிடையும் பக்கமும்
விசிறியு மெனவே விளம்பினர் புலவர்.

356 உகள மிட முடிவு மிரண்டு மாகும்.

---

(பிரதி) [1] வழியுங். [2] கோளியுக்.

357 உச்சி நண்பகலு முச்சியு மொடுக்கமும்.
358 உசிதம் நீரும் வினைதலும் நட்பும்
உசிதமுங் கூப்பிடலு முரைக்க லாகும்.
359 உசாவே கருதலுந் துணையு மாகும்.
360 உளுற்றுற் சாகமு மூக்சமுக் தப்பும்.
361 உடலே பொருளு முடம்பு மாகும்.
362 உடு நாவாயு மோட்டுங் கோலும்
நட்சத் திரமுங் கிடங்கும் விண்ணும்
அம்புங் கழுமையு மறைய லாகும்.
363 உட்கை உள்ளங் கையு [1] முறவும்.
364 உடுக்கை துகிலு மோர்வாச் சியமும்.
365 உடைகுடை வேலுங் கூறையுஞ் செல்வமும்.
முள்ளுடையு மெனவே மொழிய லாகும்.
366 உடைமை தாளுங் கலனையுங் கூறையும்.
367 உட்குத லச்சமும் நாணமு மாகும்.
368 உணவு சோறு மழையு முண்டலும்.
369 உண்டி யுண்டலுஞ் சோறு மாகும்.
370 உண்டை படையுருப்புந் திரட்சியும் பிச்சையும்.
371 உண்டாட்டு விளையாட்டும் பெண்விளை யாட்டும்.
372 உணர்வு ஊடறீர்தலு மறிவுந் தெளிவும்
உணர்ச்சி[யு] மொழிவு முரைக்க லாகும்.
373 உதும்பர மத்தியுஞ் செம்பு மாகும்.
374 உதகம் பூமியும் நீரு மாகும்.
375 உதியன் பாண்டியனுஞ் சேரனு மாகும்.
376 உத்தர மோர்நூலும் வடக்கும் மேலும்
எதிர்மொழி யுமென வியம்ப லாகும்.

---

(பிரதி) [1] முறவும்.

377 உத்தி படப்பொறியுந் திருவி னுறுப்பும்
நுண்மைப் பொருளு மார்கலியுந் தேமலும்.

378 உத்தரி பரியும் யானையும் பாம்பும்.

379 உத்திர மோர்நாளு முத்திரக் கட்டையும்.

380 உத்தர குருபஞ்ச பாண்டவருஞ் சாலியும்.

381 உந்தி கொழுப்பூழும் நீர்ச்சுழியுங் கடலும்
நதியுந் தேருருளு முயர்ச்சியுந் துணையும்
நீரும் நடுவும் மகளிர் விளையாட்டும்
யாழுறுப் புமென நவில லாகும்.

382 உப்பே கடலு மினிமையு முவரு
மகளி ராடலு மிரதமு மாகும்.

383 உப்பள மளமுங் கழிநிலமு மாகும்.

384 உம்பர் தேவரு முயர்நிலமு மேலும்
ஆயரு மெனவே யறைய லாகும்.

385 உம்பல் நற்குலமுந் தந்தியும் விலங்கும்.

386 உமட்டிய ரென்ப வியன்கடற் பிணுக்களும்
உப்புவில் பெண்களு முரைக்க லாகும்.

387 உயவை காக்கணமுங் கான்யாறு மாகும்.

388 உயிரே காற்றுஞ் சீவனு மாகும்.

389 உரமார்பு மூக்கமும் ஞானமும் வலியும்.

390 உரிய பொறிதிரு வுறுப்பு முத்தியும்.

391 உரைபொருளும் மொழியுந் தேய்வு மோசையும்.

392 உருவூ ரட்டையும் நிறமும் வடிவும்
நோயும் நாவாயும் புள்ளு மாகும்.

393 உருப்பு வெப்புந் துக்கமு முதித்தலும்.

394 உருத்தல் கோபமுந் தோற்றமு மாகும்.

395 உரியோர் மூதறிந் தோருமூத் தோரும்.

396 உருத்தி தொழிலும் உரிய கைம்முதலும்
வளர்ச்சியுஞ் செய்தூணும் வழங்க லாகும்.

397 உலகம் பாருந் திக்கு மாகாயமும்
உயர்ந்தோரும் குணமும் வியனும் சனமும்
நாடு மெனவே நவில லாகும்.

398 உலவை மரக்கோடும் விலங்கின் கொம்பும்
காற்றுந் [1]தழையுங் கழற லாகும்.

399 உலகர் பாண்டியரு முலோகரு மாகும்.

400 உலக்கை யுலக்கையுங் கடலு மோணமும்.

401 உலம்பட் டாடையுங் கற்றிரளு நீரும்
துன்பமுங் காற்றுஞ் சொல்ல லாகும்.

402 உவணங் கருடனு முயர்ச்சியுங் கழுகும்.

403 உவளக மந்தப் புரமும் பக்கமும்
நீர்த்தாழ்வு மதிலும வாவியு முப்பளமும்
ஆய ரூரு மறைய லாகும்.

404 உவப்பு மகிழ்ச்சியு முயர்வு மாகும்.

405 உவா விளையோனுங் கடலும் யானையும்
இருவகை யுவாவு மிசைத்தனர் புலவர்.

406 உழையே மானும் யாழிலோர் நரம்பும்
ஒன்று மிடமும் அருக்கன் றேவியும்.

407 உழுவனிலை பெற்ற வன்பும் புணர்ச்சியும்
பெற்றியு மெழுமையும் பேச லாகும்.

408 உழப்பு முயற்சியும் வலியு முற்சாகமும்.

409 உழிஞைசிறு பூளையு மதில்வளைத்தலு மதிலும்.

410 உழுவை புலியு மெருமையு மோதுவர்.

411 உளைசத்த வொலியு மெழுத்தி னோசையும்
பரிமேற் கட்டிய மயிரும் ஓதியும்
ஆண்பான் மயிரும் அஃறிணை மயிரும்
பரிக்கடி வாளத்தின் றளையும் பகர்வர்.

---

(பிரதி) [1] கழையும்.

412 உள்ளலோர் பட்சியும் நினைவு மாகும்.
413 உளர்தல் சிதறலும் நீவலு மாகும்.
414 உள்ள முயற்சியு நெஞ்சு மாகும்.
415 உறையோ ரிலக்கமும் ஒழுகலுங் காரமும்
உள்ளியும் பாலூறு பிரையுந் [1] துளியும்
படைக்கூடு மருந்தும் பொருளுமூவர் நீரும்
வாளுரு மூனும் இடைச்சொல்லும் நீளமும்
வெண்கலமு முறையு முறைதலுங் குறியும்
[2] பீரும் போர்வையும் பேச லாகும்.
416 உறவி யுலக்கனமு முயிரு முறவும்
எறும்பும் நீரூற்று மிசைத்தனர் புலவர்.
417 உறழ்விடை யீடு மொப்புஞ் செறிவும்
புணர்வும் [3] காலமும் பூசலு மாகும்.
418 உறையுள் சயனமும் மனையுமூர்ப் பொதுவும்
காடும் கோயிலும் நவில லாகும்.
419 உறையூர் மருதஞ் சார்ந்த வூரும்
சோழனுறை யூருஞ் சொல்ல லாகும்.
420 உறுகணேயும் துன்பமும் வறுமையும்
பயமு மெனவே பகர லாகும்.
421 உறுதி கல்வியு நன்மையு மாகும்.
422 உறுப்பு படையுறுப்பு முடலு மங்கமும்.
423 [4] உன்னம் நினைவு நெஞ்சு மாகும்.

உகர வருக்கம் முற்றிற்று.

---

(பிரதி) [1] துளியும். [2] பீடொரும் பொருரவையும். [3] காதபமும். [4] உன்னே.

## 6. ஊகார வருக்கம்

424 ஊகம் புலியுங் குரங்கு மையமும்.
425 ஊக்க முற்சாகமும் வலியு முண்மையும்
உள்ள மிகுதியு முயற்சியு மாகும்.
426 ஊசி யெழுத்தாணியுஞ் சூசியு மாகும்.
427 ஊதிய மிலாபமுங் கல்வியு மாகும்.
428 ஊமை கீரியு மூங்கையு மாகும்.
429 ஊரி புயலுஞ் சங்கு மாகும்.
430 ஊர் பரிவேடமு நகரு மாகும்.
431 ஊர்தி சிவிகையுந் தேரும் விமானமும்
பாண்டிலுங் குதிரையும் யானையு மாகும்.
432 ஊர்தல் தடவலுஞ் சிதறலும் நடத்தலும்.
433 ஊழே பகையும் பழமையும் விதியும்
பெற்றியும் வெயிலும் பேசப் படுமே.
434 ஊழி பாருங் காலமு முகமும்.
435 ஊழ்த்தல்தா னினைத்தலும் பதனழிவுஞ் செவ்வியும்.
436 ஊறு தீமையுந் தீண்டலுங் கொலையும்
இடையூ றுமென வியம்ப லாகும்.
437 ஊற்று நீரூற்று மூன்றிய கோலுமாம்.
438 ஊனே யிறைச்சியும் நெல்லு மாகும்.

ஊகார வருக்கம் முற்றிற்று.

---

## 7. எகர வருக்கம்

439 எகினம் கவரி மாவும் நீர்நாயும்
நாயும் புளியு மன்னமு மானும்
புளிமா வுமெனப் புகல லாகும்.
440 எஃகே வேலுங் கூர்மையு முருக்கும்.

441 எக்கர் சொரிதலுங் குவிதலு மிசைக்கும்.
442 எகினி புளிமாவுஞ் சிந்தூ மாகும்.
443 எச்சம் மகனுங் குறைவும் வேள்வியும்.
444 எட்டி காஞ்சிரையுஞ் செட்டியு மியம்பும்.
445 எண்சோ திடமு மெளிமையு மெண்ணும்
விசாரமு மென்னும் விளம்ப லாகும்.
446 எண்டோளி காளியுந் துர்க்கையு மாகும்.
447 எயில் திரிபுரமு மதிலு மாகும்.
448 எய்த்தல் இளைத்தலும் அறிதலு மாகும்.
449 எருவை செம்புங் கழுகுங் கள்ளுங்
இரத்தமுங் கோரையுங் கொறுக்கை யியானையும்
நாணலுங் கோகு நவில லாகும்.
450 எருக்குதல் [1]பரித்தலும் கெட்டுக் கடையும்
கோறலு மெனவே கூற லாகும்.
451 எருந்தே யுரலுங் கிளிஞ்சிலு மாகும்.
452 எல்லே பகலு மிகழ்ச்சியு மொளியும்
இரவியு மிராவு மிருளு மாகும்.
453 எலிகா ரெலியு மதுவு மாடியும்.
454 எல்லை பகலுங் குரோசமு மிரவியும்
அந்தமு மளவு மாகு மென்ப.
455 எவ்வந் துன்பமும் தனிமையு மிசைக்கும்
456 எழினிஇடை யாடையு மிடுதிரையு மாகும்.
457 எழிலே யழகு மிளமையு மாகும்.
458 என்ன னகையு மிகழ்ச்சியு மாகும்.
459 எற்றுதல் புடைத்தலு மெறிதலு மாகும்.
460 எற்று வெத்தன்மைத் தென்றலு மொத்தலும்
இரக்கமு மெறிதலு மியம்ப லாகும்.

---

(பி - ம்) [1] பழுத்தலும்.

461 எறும்வலியுந் தூணுந் தண்டு மாகும்.
462 என்றாழ் வெயிலுங் காற்று மிரவியும்
கோடைக் காலமுங் கூற லாகும்.

எகர வருக்கம் முற்றிற்று.

---

## 8. ஏகார வருக்கம்

463 ஏங்க லேங்குதலு மிரங்கலு மொலியும்.
464 ஏடகந் தெங்கும் பனையுநல் லாடையும்
ஒருரும் பலகையு முரைக்க லாகும்.
465 ஏடு குற்றமுங் கண்ணிமையு முலகும்
பூவித ழும்பனை யேடும் புகலுவர்.
466 ஏணி யுலகமு மெல்லையு மேணியும்
இறைவையு மானு மியம்ப லாகும்.
467 ஏண் வரையறையும் வலியும் நிலையுடைமையும்.
468 ஏதந் துன்பமுங் குற்றமு மாகும்.
469 ஏதி யாயுதமும் வாளு மாகும்.
470 ஏதல் போதலு நாவாயு மாகும்.
471 ஏந்தல் பெருமையு மலையு மேடும்
ஏந்துதலு மிறையு முதலு மாகும்.
472 ஏந்திரந் திரிகையு மிரதமு மதிலும்
ஆலையு மெனவே யறைய லாகும்.
473 ஏமம் சேமமுங் காவலு மின்பமும்
இரவும் பொன்னு மேமாப்பு மயக்கமும்
வலியுங் கலையு மீறும் வகுத்தனர்.
474 ஏரே யழகும் பெற்றமு மாகும்.
475 ஏலமயிர்ச் சாந்தும் ஏலமுந் துடியும்.
476 ஏல்வை பொழுதும் வாவியு மாகும்.
477 ஏவல் வியங்கோளும் வறுமையு மாணையும்.

478 ஏறு அசுபதியு மெருது மிட்டமும்
இடமும் ஆண்விலங்கு மிடியு மோர்தருவும்.
479 ஏற்றல் கோடலு மெதிர்த்து பொருதலும்
ஏற்றலு மெனவே யியம்ப லாகும்.
480 ஏனை யொழிவு மிடைச்சொல்லு மாகும்.
481 ஏனாதி சேனைத் தலைவரு மறவனும்
மந்திரியும் நாவிதனும் வகுத்தனர் புலவர்.
482 ஏனம் பன்றியும் மானும் ஆகும்.
483 ஏனல் செந்தினையுந் தினைவிளை புனமும்.
484 ஏவிடைச் சொல்லுந் [1]தேற்றமும் வினாவும்
ஈற்றசையு மட்டுமிகழ்ச்சியு மாகும்.
ஏகார வருக்கம் முற்றிற்று

## 9. ஐகார வருக்கம்

485 ஐசீலஞ் சாதிக் காயுமில வங்கமும்.
486 ஐயை தவப்பெண்ணுங் காளியுந் துர்க்கையும்
தலைவியும் புதல்வியு மிடைச்சியு முமையும்.
487 ஐப்பசி மாதமு மசுபதியு மாகும்.
488 ஐயிடைச் சொல்லு மழகுங் கோழையும்
இருமலுஞ் சுவாமியும் பதியு மந்தாரமும்
நாதனு மெனவே நவில லாகும்.
ஐகார வருக்கம் முற்றிற்று

## 10. ஒகர வருக்கம்

489 ஒடுக்க முடியச் செய்தலு மொடுக்கமும்.
490 ஒடுக்கல் கைக்கொளலு மொடுங்கலு மாகும்.
491 ஒட்டுப் படைவகுப்பு மொன்றுதலு மாகும்.

(பிரதி) [1] தோற்றமும்.

492 ஒண்மை யொழுங்கு நன்மையு மறிவும்
அழகு மிகுதியு மறைய லாகும்.
493 ஒதுங்கல் போகுதலு மொதுங்கலு மாகும்.
494 ஒதுக்க மறைவும் வாயிலும் வழியும்.
495 ஒத்த னடுவு மொப்பு மாகும்.
496 ஒப்புப் பெ[ா]ருத்தலு முவமையு மெழிலும்
இசைவு மெனவே யியம்ப லாகும்.
497 ஒப்புர விணக்கமு மீகையுங் கடனும்.
498 ஒல்லைசிறு பொழுதுந் தொல்லையும் விரைவும்.
499 ஒலிகாற்று மிடியு மோசையும் மொழியும்.
500 ஒலியல் மாலையு நோயுந் தோலும்
ஆடையு நதியு மறைய லாகும்.
501 ஒருத்தல் விலங்கேறுங் கரடியும் பன்றியும்
யானையுங் குதிரையும் புலியும் மானும்.
502 ஒழுகுத லொழுகு நீர்த்துளியு நெடுமையும்
நேர்மையு மெனவே நிகழ்த்த லாகும்.
503 ஒழுக்கம் வழியு மாசாரமு மொழுங்கும்
உயர்ந்த குலமு முரைக்க லாகும்.
504 ஒளிமுச் சுடரும் ஒளிப்பிடமும் விளக்கும்
புகழுங் கிரணமுங் கேட்டையு மாகும்.
505 ஒளிவட் டஞ்சக் கரமு மாடியும்.
506 ஒள்ளியோன் வியாழனுஞ் சுக்கிரனு மாகும்.
507 ஒற்றே யொற்றனு மொற்றெழுத்து மாகும்.
508 ஒற்ற லொற்றலு நீங்கலு மாகும்.
509 ஒன்று [1] முத்தியு மோரெண்ணு மாகும்.

ஒகர வருக்கம் முற்றிற்று

---

(பிரதி) 1 முற்றியு.

## 11. ஓகார வருக்கம்

510 ஓகை வாவென்றலு முவகையு மாகும்.

511 ஓங்க லோங்கலு மலையும் வேயும்
தோணியு மேடு முயர்ச்சியு மியானையும்.

512 ஓசை பேரொலியும் வாழையு மாகும்.

513 ஓட லோடலு மாவு மல்லவும்.

514 ஓட்ட மேலுதடு மேலுந் தோல்வியும்.

515 ஓடை நீர்நிலையுங் கிடங்குமோர் கொடியும்
யானைப் பட்டமும் பாதையு மாகும்.

516 ஓணம் மாயோ னாளு மாறும்.

517 ஓதிமங் கவரி மாவு மன்னமும்
மலையு மெனவே வழங்க லாகும்.

518 ஓதனம் பெருமறையுஞ் சோறு முணவும்.

519 ஓதி பெண்மயிரும் பூனையு மலையும்
[1] ஓந்தியு ஞானமு மன்னமு மாகும்.

520 ஓதங் கடலுங் கடற்றிரையு மோதமும்
ஈரமு மெனவே இயம்ப லாகும்.

521 ஓதை மேடையும் மொலியும் மதிலும்.

522 ஓரம் சகாயமும் விளிம்பு மாகும்.

523 ஓரியாண் மயிரும் முசுவுமோர் வள்ளலும்
நரியுமாச் சேக்கையு நவில லாகும்.

524 ஓரைபெண் குழுவு மிராசிப் பெயரும்
பெண்கள் கலனும் பெண்க ளாடுதலும்
ஓரியும் கு[ர]வையுந் தோழியு மிடைச்சொல்லும்.

525 ஓல மொலியும் பாம்புங் கடலும்.

---

(பிரதி) 1 ஓற்றியு.

526 ஒளி யொழுங்கும் யானைக் கூட்டமும்.
527 ஓலை கலிங்கிலுறு கதவு நீக்கமும்
இரக்கமும் வாரக்கையு மியம்ப லாகும்.

ஓகார வருக்கம் முற்றிற்று.

---

## 12. ககர வருக்கம்

528 ககமே யம்பும் புள்ளு மாகும்.
529 ககனம் விண்ணும் படையுங் கற்பகமும்
காடும் புள்ளும் கீரியும் காகமும்.
530 கங்குதிப் பொறியுங் கருத்தினை பருந்தும்
வரம்பி னருகும் வழங்க லாகும்.
531 கச்ச மியானைக் கழுத்திடு கயிறும்
மரக்காலுந் துணிவும் வாரு மளவும்.
532 கசந்தான் நீரும் இரும்புந் தாதும்
கங்கமு மெனவே கழற லாகும்.
533 கச்சை கவசமுங் கயிறுந் தழும்பும்.
534 கச்சு மீனு முலைக்கச்சு மங்கியும்.
535 கசடு குற்றமு மையமு மாகும்.
536 கஞ்சம் வெண்கலமுங் கஞ்சாவுந் தாளமும்
வனசமும் வட்டு மப்பமு மாகும்.
537 கஞறல் பொலிவுங் குன்றலு மாகும்.
538 கஞ்சன் குறளனும் வேதனு மாகும்.
539 கஞ்சிகை கூறையுந் திரையு மாகும்.
540 கஞ்சனங் கண்ணாடியும் வலியானு மாகும்.
541 கடலே [1]கடலுங் பசுவு மாகும்.
542 கடறே வழியுங் காடு மாகும்.
543 கடை சோர்வு மிடமும் வாயிலு முடிவும்
கீழுங் கதவும் வீதியு மாகும்.

---

(பி - ம்) [1] கடனும்.

544 கடகம் யானைக் குழுவுங் கைவளையும்
பரிசையுஞ் சாரலு மாயுதமும் வட்டமும்
மதிலுநார்க் கடகமும் வீடுங் கங்கணமும்.
545 கடுமுள்ளும் விடமும் கசப்புங் கடுத்தலும்
கடுக்காய் மரமுங் கழற லாகும்.
546 கட்டுக் குறியுங் காவலுங் களவும்
கண்ணு மிகுதியும் பந்தமு மாகும்.
547 கட்டல் பந்தித்தலுங் கள்ளலுந் தடுத்தலும்
களைதலு மெனவே கழற லாகும்.
548 கடிவிம் மிதமுஞ் சிறப்பு மையமும்
காப்புங் கரிப்புங் கடித்தலும் நாற்றமும்
விளக்கமும் பேயும் காலமும் மணமும்
விரைவு மச்சமும் கூர்மையும் புணர்ச்சியும்
கண்ணிட முஞ்சிறு கொடியும் புதுமையும்
துவசமு மிகுதியுங் குடியும் வரைவும்.
549 கடங்கரிக் குழுவு முழவு நீதியும்
யானைக் கன்னமுங் கயிறு மதமும்
சுரமு முடலுங் கடலுங் குடமும்
கானும் மலைச்சாரலுங் கழற லாகும்.
550 கட்கம் வாகு மூலமும் வாளும்.
551 கட்டளை யுரையறி கருவியு மொப்பும்
நிறையறி கருவியும்...யாற்றலும்
நிறைகல்லுந் துலாராசியு மிட்டிகையும்.
552 கடவுள் தேவு நன்மையு முனியும்.
553 கட்சி காடுங் கூடு மமளியும்
துயிலிட முமெனச் சொல்ல லாகும்.
554 கடுத்த லொப்பு மையமும் வேகமும்.
555 கடவை யேணியுங் குற்றமு மாகும்.

556 கடிப்பம் பூணுஞ் செப்புங் காதணியும்.
557 கட்டி கருப்பு வட்டுறு கட்டியும்
புண்ணு மகிழ்ச்சியும் புகல லாகும்.
558 கடைப்பிடி தேற்றமும் மறவா மையுமாம்.
559 கடிகை நாழிகையுந் துண்டமுஞ் சமயமும்
கதவின் றாழும் வேதமு மாகும்.
560 கணியோர் சாதியும் மருத நிலமும்
வேங்கையுங் கணித்தலும் விளம்ப லாகும்.
561 கண்டம் வாளும் யானைக் கச்சையும்
திரையும் மிடறுந் துண்டமும் வெல்லமும்
பூமியுந் தேசமுங் கவசமு மாகும்.
562 கணிச்சி யுளிக்கருவியுந் தோட்டியு மழுவும்.
563 கண்டிகை பணிச்செப்பும் வாகு வலயமும்
பதக்கமுங் கண்டிகையும் பறையு மாகும்.
564 கண்ணருளும் விழியு மிடமுங் கணுவும்
வேயும் ஞானமுங் கருத்து மிடமும்.
565 கண்டேநி [1]நினைவுங் காஞ்சொறியு மாகும்.
566 கணை பூரநாளும் அம்புந் திரட்சியும்.
567 கண்ணுதல் லீசனுங் கருதலு மாகும்.
568 கணைக்கால நுட்பமுந் திரட்சியும் பேயும்
வட்டமு நோயு முடுவு மலையும்
அற்பமு மெனவே யறைய லாகும்.
569 கணையங் காவற் காடும் பொன்னும்
யானைத் தறியு மெழுவு மாகும்.
570 கண்டகம் வாளு முள்ளுங் காடும்
[2]சுரிகையும் வேலுங் கூர்மையுங் கடினமும்.

(பிரதி) [1] நினையுங். [2] சுரிகையும்.

571 கண்டல் கைதையு மொன்வாளும் வயிரமும்
முள்ளும் நீர்முள்ளியு மொழிய லாகும்.
572 கண்ணி கண்ணியுங் கட்டுங் கயிறும்
தாரும் முகிழமுஞ் சாற்ற லாகும்.
573 கணக்குப் பாவிகற்பமு மெண்ணு மாகும்.
574 கதலி துவசமும் வாழையுந் தேறும்
காற்று டியுமெனக் கழற லாகும்.
575 கதழ்வு வேகமுஞ் சிறப்பு மாகும்.
576 கதிபஞ்ச கதியு மோட்சமு மாகும்.
577 கதுப்பு விலங்கின் கூட்டமுங் கவுளும்
ஆண்பெண் மயிரு மஞ்சளு மாகும்.
578 கதம்பங் கடம்பும் பலபூவு மாகும்.
579 கதிரிரு சுடருங் கதிரு மாகும்.
580 கதவங் காத்தலுங் காவலுங் கதவும்.
581 கதை காரணமுஞ் சொல்லுந் தடியும்.
582 கத்திகை வாசமுந் தொடையின் விகற்பமும்
துவசமு மெனவே சொல்ல லாகும்.
583 கதவு காவலுங் கபாடமு மாகும்.
584 கந்தரம் மேகமும் கழுத்துமலை முழைஞ்சும்.
585 கந்துகங் குதிரையும் பந்துங் கந்துகமும்.
586 கந்திருவங் குதிரையுந் தந்திரரு மிசையும்.
587 கந்தம் பஞ்ச கந்தமுங் கிழங்கும்
நாற்றமும் பொன்னுங் கரணையும் பகுத்தலும்
கழுத்தடி யுமெனக் கழற லாகும்.
588 கந்து பண்டியு ளிரும்புங் கம்பமும்
யாக்கையின் மூட்டு மாதாரமுந் திரட்சியும்
காயமு மெனவே கழற லாகும்.
589 கந்த னருகனுங் கந்தனு மாகும்.

590 கப்பண மிரும்பிற்செய் கெருஞ்சி முள்ளும்
கைவே லுமெனக் கழற லாகும்.
591 கமலம் [1]செம்படாமு நீருந் தாமரையும்.
592 கம்பம் நடுக்கமுந் தூணு மாகும்.
593 கம்பலை துன்பமு மோசையு நடுக்கமும்
அச்சமும் வருத்தமு மாகு மென்ப.
594 கம்பு தவசமுங் கோலுஞ் சங்கும்.
595 கம், புனலும் வெண்மையுந் தலையுங் ககனமும்
விதியும் புத்தியும் முகிலுஞ் செம்மையும்
காற்றுஞ் சுவர்க்கமுங் கழற லாகும்.
596 கம்மியர் கம்மாளருந் தொழில்புரி வோரும்.
597 கம்புள் சம்பங் கோழியுஞ் சங்கும்
வானம் பாடியு மெனவகுத் தனரே.
598 கயந்தெய்வு நீரு நோயுங் குளமும்
மென்மையுங் களிறும் பெருமையுங் கீழும்
ஆழமு மெனவே யறைய லாகும்.
599 கயினி அத்த நாளுங் கைம்மையும்.
600 கயில்பூண் கொக்கியும் பிடரியு மாகும்.
601 கயவு பெருமையு மென்மையு மாகும்.
602 கரணம் அந்தக் கரணமுங் கூத்தும்
காரணமுங் கணிதமும் வாயுங் கலவியும்.
603 கரங்குடி யிறையுங் கிரணமுங் கழுதையும்
கைத்தலமு நஞ்சு மெனக்கழ றினரே.
604 கரிகுஞ் சரமும் பானுவு மிருந்தையும்
கறுப்புஞ் சான்று மெனக்கழ றினரே.
605 கருக்கருப் பொருளு மேடுங் கருப்பமும்.
606 கருவி யீட்டமுங் கலனும் யாழுங்

---

(பிரதி) [1] பெம்படாமு.

துணைக்கா ரணமுங் கவசமும் தொடர்பும்
பல்லிய மும்படைக் கலமுந் தொகுதியுங்
[1]கசையும் பலவினையு முகிலுங் கலணையும்.
607 கரகங் கமண்டலமு மாலாங் கட்டியும்
துளிநீருங் கங்கையுஞ் சொல்லுவர் புலவர்.
608 கரோடி பெருஞ்சுட்டுஞ் சிரமா லையுமாம்.
609 கரிணி பிடியானையும் யானைப் பொதுவும்
மலைமுழைஞ்சு மலையும் வழங்க லாகும்.
610 கருமை பெருமையுங் கறுப்பும் வலியும்
நஞ்சு மெனவே நவில லாகும்.
611 கரைதல் கூவுதலு மொலித்தலு மொழிதலும்
அழுதலு மெனவே யறைய லாகும்.
612 கருமான் பன்றியுங் கருமானு மாகும்.
613 கரேணு கொல்யா னையும்பிடி யானையும்.
614 கரடம் மதம்பாய் [2] சுவடுங் காக்கையும்.
615 கரீரம் யானையின் பல்லடியு மகத்தியும்
முளையு மிடாவு மொழிய லாகும்.
616 கரில்காழ்ப்புங் கொடுமையுங் குற்றமு மாகும்.
617 கரியவன் சனியு மாலு மித்திரனும்.
618 கருங்கை யின்மையுங் கொன்றுவாழ் [3] தொழிலும்
வன்பணித் [3]தொழிலுங் கன்றிய [3]தொழிலும்
எனுமுத் தொழிலையு மியம்புவ தாகும்.
619 கலமே கலமுந் தோணியும் பூணும்
அலமு முண்கலமும் யாழுமோ ரளவும்.
620 கலிவலி யோனும் சனியுங் கலிப்பாவும்
மிகுதியும் வஞ்சமு மோசையுங் கடலும்
கலியுகமும் வலியுங் கழற லாகும்.

---

(பிரதி) [1] காசையும். [2] கன்னமுங். [3] தொழிலினும்.

621 கலைகால நுட்பமும் காஞ்சியும் கல்வியும்
நூலுங் தூசு மந்தியுஞ் சேரும்
[1]கவடுமொரு ராசியு மதியின் கலையும்
மானேறு மென்ன வழங்க லாகும்.
622 கல்பருப் பதமும் ஓசையுங் கல்லும்
அருவியு மவலமு மறைய லாகும்.
623 கலாமே கொடுமையுஞ் சினமு மாகும்.
624 கல்வி யறிவும் பயிற்சியு மாகும்.
625 கலவை சாந்தும் சேறு மாகும்.
626 கலித்த வொலியும் பொற்பு மெழுச்சியும்.
627 கலுழி கான்யாறுங் கலங்கல் நீரும்.
628 கலிங்கம் ஊர்க்குருவியும் வானம் பாடியும்
கலிங்க தேசமுஞ் சீலையு மாகும்.
629 கல்லாரம் மஞ்சளுஞ் செங்கழு நீரும்
நீர்க்குளி ரியுமென நிகழ்த்த லாகும்.
630 கலாப மேகலையு மரைமணி வடமும்
மயிலு மயிற்பீலியும் வழங்க லாகும்.
631 கவடு கப்புங் கபடமும் யானையைக்
கட்டுங் கயிறுங் கழற லாகும்.
632 கவனம் போருங் கலக்கமுங் காடும்
விரைவும் குதிரையின் கதியும் விளம்புவர்.
633 கவுசிகம் விளக்குத் தண்டும் ஓர்பண்ணும்
கோட்டானும் பட்டுங் கூற லாகும்.
634 கவலை துன்பமுங் கவர்த்த நெறியும்
கோயுங் கொடியுஞ் சந்தியுந் தினையும்
அச்சமு மெனவே யறைய லாகும்.

---

(பிரதி) [1] குலைவுமொரு.

635 கவர்தம் பேயு நீருஞ் செக்கும்
பூபமு மெனவே உரைக்க லாகும்.
636 கவ்வை யெள்ளி ளங்காயுங் காடும்
பாம்பும் பழியுங் கட்டுண் பாருமாம்.
637 கவரி சாமரையுந் தேரு மேதியும்
கவரி மாவுங் கழற லாகும்.
638 கவுசி குழைவும் வருத்தமும் பாட்டும்.
639 கவிகை பாட்டு மளித்தலும் பிச்சமும்.
640 கவுந்தி பாண்டவரின் தாயும் பைம்மையும்
641 கவிநீர்க் காக்கையும் புலவனும் வெள்ளியும்
மந்தியுங் கவியு மாவாய்க் கருவியும்.
642 கவையா யிலியமுங் காடுங் கவரும்
எள்ளிளங் காயு மிசைக்க லாகும்.
643 கவசங் கடலு மரணு மாகும்.
644 கழல் காலணியுஞ் செருப்புங் காலும்
கழங்கு மெனவே கழற லாகும்.
645 கழிகழி காலையும் மிகுதியுங் கழியும்
கழிமுக முமெனக் கருத லாகும்.
646 கழை புனர்பூசமுங் கரும்பும் மூங்கிலும்.
647 கழுது பேயும் பரணும் வண்டும்.
648 கழுமல் பற்று மயக்கமு நிறைவும்.
649 கழுமு ளாயுதப் பொதுப்பெயருஞ் சூலமும்
கழுக்கடை யுமெனக் கழற லாகும்.
650 கழனி மென்பாலும் வயலு மாகும்.
651 கழுந்தி முத்துங் கழையு மாகும்.
652 கழிதல் சாதலுங் கடந்திடலு மிகுதியும்.
653 கழங்கணங் காடலும் வேல னாடலும்
இந்திரிய முங்கழற் காயு மாகும்.

654 கழற லிடித்தலும் வார்த்தையு மாகும்.
655 களக்களா மாமு மவையு மிடறும்
கருமையு நஞ்சு நெல்வா ரிடமும்
இல்லாளும் போர்க்களமும் பரப்பு மாகும்.
656 களரி போரிடமுங் காணுங் கருமையும்
கருமஞ் செய்யிடமும் சவையு மிடறும்
கோட்டியுங் களர்நிலமுங் கூற லாகும்.
657 களேபர முடலும் பிணமும் எலும்பும்.
658 கள்ளிள வேனிலும் வாவியுஞ் சோர்வும்
மென்பாலுந் தொடர்புங் கள்ளு மாகும்.
659 கள்வன் முசுவுங் கருநிறத் தவனும்
யானையு நண்டுஞ் சோரனு மிராசியும்.
660 களைகளை பயிருங் களைக்கோலு மாகும்.
661 களபஞ் சாந்தும் யானையுங் கலவையும்.
662 களவன் மரக்கொம்பு நண்டு முசுவும்.
663 களிறு பன்றியுங் கெளிற்று மீனும்
யானையு மத்த நாளுஞ் சுறவும்.
664 களவு களாவுந் திருட்டு மாகும்.
665 களங்கம் அழுக்குங் குற்றமு மாகும்.
666 களகன் மருதநிலமுங் கள்ளுந் தொடர்பும்
பொய்மையு மெனவே புகல லாகும்.
667 களிகள்ளும் குழம்பும் செருக்கும் வடிவும்.
668 கறைகுடி யிறையு முரலுங் கறுப்பும்
இரத்தமும் விடமும் மாசு மாகும்.
669 கறங்கல் வளைதடியும் பேயு மோசையும்
சுழற்றலு மெனவே சொல்ல லாகும்.
670 கறங்கு சுழலலும் வட்டமும் காற்றாடியும்
சத்த வொலியுஞ் சாற்ற லாகும்.

671 கற்புள் ளுயர்ந்த பூமியும் கற்பும்
எயிலு முல்லையு மியம்ப லாகும்.

672 கற்பம் பிரம னாயுளுஞ் சுவர்க்கமுங்
கற்பக தருவுங் கழற லாகும்.

673 கறுப்புக் கருமையுஞ் சினக்குறிப்புஞ் சினமும்.

674 கறியே கறியு மிளகு மாகும்.

675 கன்னல் நாழிகை வட்டிலுங் கரும்பும்
குடமுங் கரகமு நாழிகையுங் காமமும்
சர்க்கரையு மென்னச் சாற்ற லாகும்.

676 கன்னமோர் தட்டுங் காது மாகும்.

677 கன்னி கன்னிகையு மிராசியு மோரையும்
ஆறு மிளமையு மழிவில்லா மையும்
அத்தமுந் துர்க்கையுங் கற்றா ழையுமாம்.

678 கனவட்டங் குதிரையும் பாண்டியன் குதிரையும்.

679 கன்றுத லீதலுங் கன்றலு மாகும்.

680 கனங்காத் திரமும் புயலும் பாரமும்
வட்டமும் பொன்னுஞ் செறிவுமடைக் கொடுத்தலும்.

681 கனையே யொலியுஞ் செறிவு மாகும்.

682 கனவு மையலுந் துயிலுங் கனவும்.

683 கன்று மரக்கன்றும் விலங்கின் கன்றும்
கைவளை யுமெனக் கழற லாகும்.

684 கனலி சூரியனுந் தீயும் பன்றியும்.

ககர முற்றிற்று.

கா

685 காகுளி மூக்கி லெழுந்த ஓசையும்
இசையுந் தவிசு மிசைத்தனர் புலவர்.

686 காசு குற்றமுங் கோழையு மணியும்
காசின் விகற்பமுங் கழற லாகும்.

687 காசை நாணலுங் காயா மரமும்.

688 காசறை மணியு மயிருறு சாந்தும்
கத்தூ ரியுமெனக் கழற லாகும்.

689 காஞ்சிமே கலையுங் காஞ்சி நகரும்
பண்ணும் பூணும் நிலையின்மையு[1] மரமும்
எதிரூன் றுதலும் பெருமையுங் காட்சியும்.

690 காடுபொன் காடு மேனலு மாகும்.

691 காட்டங் குதிரையும் விறகு மாகும்.

692 காடி செய்யுஞ் சோறுங் கறியும்
கூழு மெனவே கூற லாகும்.

693 காட்டி பிராட்டியும் பன்றியு மாகும்.

694 காணம் பொற்காசும் பொன்னுஞ் செக்கும்
பரியூணும் கண்ணு மளவோரு மாகும்.

695 காண்ட மிடுதிரையும் நதியுங் கானும்
முடிவுங் கமண்டலமு நீரு மம்பும்
[2]பணிச்செப்பும் பந்தியும் தூண்டா யுதமும்
தூசுங் கோலுங் காண்டமு நூலும்
திரளு மெனவே செப்ப லாகும்.

696 காணி யிலக்கமுங் காணி யாட்சியும்.

697 காண்டை கற்பாழியுந் தவத்தோ ரிடமும்.

698 காதை சொல்லுங் கதையு மாகும்.

---

(பிரதி) [1] மாகும். [2] புணிச்செப்புப்.

699 காத்திரங் கனமு முடலுங் கோபமும்
கரிமுற் காலுங் கிரியும் பாம்பும்
கூத்து மெலும்புங் கூற லாகும்.
700 காது கொலையுஞ் செவியு மாகும்.
701 காத லாசையுங் கோறலு மாகும்.
702 காந்தாரம் காடுமோர் பண்ணு மாகும்.
703 காப்பு நீறுங் ளாசம் வேயும்
காவலுங் கதவுங் கைவளையு மாகும்.
704 காம மர[ங்]குடியுங் கட்டு மிறையும்
விருப்புங் காமமும் விளம்ப லாகும்.
705 காம்பு வேயு மலர்த்தாளும் பட்டும்.
706 காமன்றிப் பிலியும் வேளும் வண்டும்.
707 காமர மிசையு மத்தமு மடிப்பும்.
708 காமர் கட்டழகும் விருப்பமு மதனும்.
709 காம்பீர முருக்குமோர் தேசமு மாகும்.
710 காயங் காழ்ப்பு முடலும் விண்ணும்
கறியுங் கரிப்பும் முக்காயமு மாகும்.
711 காரியோர் வள்ளலுஞ் சனியு நஞ்சும்
வடுகனுங் கருமையுங் கருமஞ் செய்யிடமும்
சாத்தனுங் காகமும் புரந்தரனுங் கள்ளும்
பூரியருங் கயவாயும் முதுநிலமும் [என்பர்.]
712 கார்கார் காலமு மேகமு நீரும்
கருமையுங் கொச்சையு மிருளு முசுவுஞ்
சினமும் பருவமுங் கூந்தலு மயனம்முங்
கடைமுடியு மளவுங் கழற லாகும்.
713 காரிகை யழகும் பெண்ணுங் கலித்துறையும்
ஒருநூ லுமெனை வுரைக்க லாகும்.
714 காலம் வைகறையுங் காலமு மாகும்.

715 காலே வைகறையு நாரையுங் காலமும்.
716 கால்குறுந் தறியும் வழியுமோ ரெண்ணும்
எல்லையு மிடமு மறலியு மூளையும்
காற்றுஞ் சேயுங் காடும் பாதமும்
மரக்கா லும்பூங் காம்பும் ஊற்றமும்
வண்டிலும் வாய்க்காலும் வழங்க லாகும்.
717 காலிலி சூரியன் பாகனுங் காற்றும்
அரவு மருக்கனு மீனுஞ் சனியும்.
718 காலச மால வட்டமுங் காற்றும்
வட்டமு மெனவே வழங்க லாகும்.
719 காவல் சிறையு நீரு மரணும்
தம்பட் டமுமெனச் சாற்ற லாகும்.
720 காவி கருங்குவளையுங் காவி மண்ணும்
கள்ளுந் துன்பமுங் கழற லாகும்.
721 காழ்பரலுங் கோலும் வித்து மாலையும்
ஒளியும் மணியின் கோவையும் சேரும்.
722 காழகங் கழுதையு மாடையுங் கறுப்பு
சேதகம் முமெனச் செப்ப லாகும்.
723 காழியர் பரதரும் வண்ணரு மாகும்.
724 காளிந்த மேலமும் பாம்பு மாகும்.
725 காளை யேறு மிளையோனு மீளியும்
புங்கவ மும்மெனப் புகல லாகும்.
726 காளம் விடமுங் கருமையுங் கழுவும்
ஊது சின்னமு முரைக்க லாகும்.
727 காறு கொடுமையுங் குற்றமு மளவுங்
காழ்த்தலு மெனவே கழற லாகும்.
728 கான மிசையும் பேதையுங் காடும்
தேரும் வீதியுமெனச் செப்ப லாகும்.

729 கானல் கதிரொளியுங் கடற்சார்பிற் சோலையும்
மலைச்சார்பிற் காவும் பேய்த்தேரு மாகும்.
730 கான்பூ மணமும் பூவுங் காடும்
சாரியை யுமெனச் சாற்ற லாகும்.
731 காவலியுந் துலையுஞ் சோலையுங் காத்தலு
கற்பக முங்கர் வடியும் வயாவும்.

கி

732 கிங்கிரர் தூதரும் ஓர்சா தியரும்.
733 கிஞ்சுகஞ் சிவப்பு முருக்கு மாகும்.
734 கிடையே வேணியு முவமையுங் கிடையும்.
735 கிட்டி தலையீற் றாவுங் கிட்டியுந்
தாளமு மெனவே சாற்ற லாகும்.
736 கிடங்கே யகழும் வாவியு மாகும்.
737 கிம்புரி யானைக் கோட்டின் பூணும்
கேயூரமு முடியு முடியி னுறுப்பும்.
738 கிருட்டிணன் றிமாலும் விசையனு மாகும்.
739 கிருத்திமஞ் செய்தலும் தோலும் பொய்யும்
பூதமு மெனவே புகல லாகும்.
740 கிழிகிழி துகிலுஞ் சித்திரப் படமும்
நிதிபடு பொதியுமென நிகழ்த்த லாகும்.
741 கிழக்குக், கீழுங் குணக்கு மாகும்.
742 கிழமை மூப்பு முரிமையும் வாரமும்
குணமு மாட்சியுங் கூற லாகும்.
743 கிளர்கோட் டெப்பூந் தாது மெல்லும்.
744 கிளைகிளைத் தலும்ஓர் பண்ணும் வேயுஞ்
சுற்றமு மெனவே சொற்ற லாகும்.
745 கிள்ளை குதிரையுங் கிளியு மாகும்.
746 கிறியே வழியும் பொய்யு மாகும்.

747 கின்னர [1] மாக்ஷையும் யாழு மிதுனமும்
கீர்ப்புள் ளுங்கின் னரமு நிகழ்த்தும்.

கீ

748 கீசகந் தூக்கணமுங் கவியும் வேயும்.
749 கீத மிசையும் வண்டு மூங்கிலும்.
750 கீரம் பாலுங் கீடமுங் கிளியும்
காரிப் புள்ளுங் கழற லாகும்.
751 கீலால முதிரமுங் காடியு நீரும்.
752 கீலம் பிசினும் ஆணு மாகும்.
753 கீழ் கிழக்கு மிடமுங் கயமையுங் கீழும்.
754 கீழ்தல் கீண்டலுங் கிழித்தலு மாகும்.

கு

755 குசமை செந்திருக்கம் பூவுமலர்ப் [2] பொதுவும்.
756 குஞ்சங் கூனுமீ யோட்டியுங் குறளும்
குறளைச் சொல்லுங் குன்றியு மாழியும்.
757 குஞ்சரங் குவளையும் யானையு மாகும்.
758 குடம்பை முட்டையுங் கூடு மேரியும்.
759 குஞ்சியாண் மயிரும் புள்ளின் பார்ப்பும்
குன்றியின் புதலுங் கூற லாகும்.
760 குடங்கர் குடிசையுங் கும்பமு மாகும்.
761 குடந்த மஞ்சலியுந் திரட்சியு மாகும்.
762 குட்டமோர் நோயும் குளமு மாழமும்.
763 குடியூருங் குலமும் புருவமுங் குடியும்
கோத்திர முமெனக் கூற லாகும்.
764 குடஞ்சுட் டாவு மெருமையு மாகும்.

---

(பிரதி) [1] மிரக்ஷையு. [2] பொதுளவும்.

765 குடிலைகுடிபுட் பொதுவுங் கூகையு மாறும்
பதியுங் குச்சும் பகர லாகும்.
766 குமெி வில்லும் வெற்றியு முச்சியும்
குவட்டி னுச்சியு மாண்மயிரு மாகும்.
767 குடங்கூத்தும் பசுவுங் குடமு நகரும்
கழைக்கட் டியுமா லாடலு மாகும்.
768 குடை குடையுங் கொடையுங் கல்லையுமாகும்.
769 குண்டம் பன்றியுங் குண்டமு மாகும்.
770 குணுங்கர் தோற்கருவி யோரும் புலையரும்
குயிலுவ ரும்மெனக் கூற லாகும்.
771 குண்டு சிறுசெய்யுங் குண்டு மாழமும்
ஆண்குதிரையுங் கோறலு மறைய லாகும்.
772 குணில் குறுந்தடியுங் கடிப்புங் கவணும்.
773 குணங்கயிறும் பண்புங் கும்பமும் நீர்மையும்
வில்லின் நாணும் விளம்ப லாகும்.
774 குண்டலம் விண்ணுங் குழையும் வட்டமும்.
775 குத்தி மண்ணு மடக்கமு மாகும்.
776 குத்திரம் வஞ்சமு மலையு மாகும்.
777 குதைவிற் குதையும் பசியு மாகும்
778 குத்தல் கொடுத்தலுங் குத்தலு மாகும்.
779 குத்தமோர் [1]நிதியும் கோயும் வேலும்
குருந்தமுங் குதிரையுங் கூற லாகும்.
780 குபேரனம் புலியுங் குபேரனு மாகும்.
781 குமரன் கட்டிளமையு முருகனு மாகும்.
782 கும்பி சேறும் வயிறுங்குஞ் சரமும்
நரகமு மெனவே நவில லாகும்.
783 கும்பசன் குறுமுனியுந் துரோணாச் சாரியும்.

(பிரதி) [1] நதியும்.

784 குமுத மடைப்பு மோசையு மாம்பலும்
நெய்தலுந் திக்கானையு நிகழ்த்த லாகும்.
785 குமரிகற் றாழையுங் கன்னியுங் காளியுங்
கொற்றவையு முமையும் கேரள நதியும்
அணங்கு மெனவே யறைய லாகும்.
786 கும்பம் ராசியுங் குடமுங் கும்பியின்
மத்தகமு மெனவே வழங்க லாகும்.
787 குயிறல் கூவலுஞ் செறிதலுங் குடைதலும்
செய்தலுந் தாண்டலு மாய்தலு மாகும்.
788 குய்வு கறிகரித்தலுங் குளி[ர்]மணப் புகையும்.
789 குய்யம் யோனியுங் குத்திரமு மறைவும்.
790 குயமரி வாளுங் கொங்கையு மிளமையும்.
791 குயில் கோகிலமு மேகமு நிரையுந்
துவாரமு மகவானுஞ் சொல்ல லாகும்.
792 குரையிடைச் சொல்லுங் குதிரையு மோசையும்.
793 குருவி புள்ளு மூல நாளும்.
794 குருகு புள்ளு மிளமையுங் கொலனும்
கோழியு மூலமு நாரையுங் கைவளையும்
வெண்மையுங் குருக்கத் தியுமுலை மூக்கும்
நாகு மெனவே நவில லாகும்.
795 குரம்பை குடிலு முடலு மிசையும்.
796 குருமாத் திரையும் வியாழமு முயர்ச்சியும்
குரவனு நிறமும் பெருமையு நோயும்
குரவமு மெனவே கூற லாகும்.
797 குரல்பல் குரலுங் கூந்தலுஞ் சிறகும்
கதிருந் தினையும் யாழி னரம்புஞ்
சதங்கையும் பாடலமும் வாசிக் கோவையும்
இசையுந் தொண்டையு மியம்ப லாகும்.

798 குரும்பைபுற்[றூஞ்] சோறு மிளநீருங் குரும்பையும்.
799 குரவையோர் கூத்துங் கடலு மாகும்.
800 குரங்[கி] கள்சஞ் திரனு மாகும்.
801 குருட னந்தகனு மழைக்கோளு மாகும்.
802 குரககரியும் வளைவும் விலங்கின் பொதுவும்.
803 குருதி செவ்வாயுங் குருதியுஞ் சிவப்பும்.
804 குரம்வாசிக் குளம்புஞ் சேதாவு மாகும்.
805 குல்லை கஞ்சாவும வெட்சியுந் துழாயும்.
806 குலமி ரேபதியுஞ் சாதியுங் கோயிலும்
கூட்டமு மில்லமுங் கூற வாகும்.
807 குலைசெய் கரையு மம்பின் குதையும்
காயின் கொத்தும் வில்லு மாகும்.
808 குலிங்கமூர்க் குருவியும வாசியு மாகும்.
809 குவடுமலை யுச்சியு மலையுமரக் கொம்பும்.
810 குவலையம் பூமியுங் குவளையு நெய்தலும்.
811 குவவு [1] திரட்சியுங் குவிதலும் பெருமையும்.
812 குவளை விழியு நெய்தற் பூவும்.
813 குவாலே குவிதலு மேடு மாகும்.
814 குழலாண் மயிரும் பெண்மயிரும் துளையும்
இசைக்கரு வியுமென வியம்ப லாகும்.
815 குழியே வயிறுங் குண்டு மாகும்.
816 குழிசி மிடாவும் பானையு மாகும்.
817 குழைகுண் டலமுந் தளிருஞ் சேறும்
துவாரமுங் காடும் படையுறுப்பு மாகும்.
818 குழியம் பர்ர வளையுந் திரட்சியும்.
819 குழையே பாட்டு மிசையு மாகும்.
820 குளங்குளமு நெற்றியுஞ் சர்க்கரையு மாகும்.
821 குளியம் வேங்கையு முருண்டையு மாகும்.

---

(பிரதி) [1] திரைசசியுங்.

822 குளிர்குட முழாவு மழுவு நண்டும்
கவணுங் குளிர்ச்சியு மீனினத் தொழுக்கமும்
இருத்தலு [1] மிலைமூக்கரி கத்தியு மாகும்.
823 குளிரி குடமுழவு நண்டு மாகும்.
824 குறும்பொறை குறிஞ்சி நிலத்தூரு [2] மலையுங்
காடு மெனவே கழற லாகும்.
825 குறிஞ்சிமலைச் சார்பும் யாழுமோர் பண்ணும்
இசையுஞ் செம்முள்ளியு மியம்ப லாகும்.
826 குறளே பூதமுங் குறளருங் குறுமையும்.
827 குற்றல் பறித்தலுங் கோறலு மாகும்.
828 குறுகல் பறித்தலுங் கிட்டுதலு மாகும்.
829 குறடு திண்ணையும் பலகையு மாகும்.
830 குறுந்தடி குணிலும் பொதிப்பெயரு மாகும்.
831 குறுமை யழுங்குங் குறுகினவு மாகும்.
832 குன்ற மலையுஞ் சதையமு மாகும்.
833 [3]குவ்வு புவியும் நான்கா முருபும்.

கூ

834 கூடலாண் பெண்ணொடு கூடுதலுங் குறியு
மதுரையு மெனவே வழுத்த லாகும்.
835 கூடமலை யுச்சியு மறைவும் பொய்யும்
வஞ்சமுஞ் சம்மட்டியுங் கூடமுங் கூட்டமும்
அண்டமும் யானையின் நிலையு மில்லும்.
836 கூட்டங் கூட்டமும் பிண்ணாக்கு மூணும்
குன்றின் முடிவுங் கூற லாகும்.
837 கூத்த னுயிரும் நடனு மாகும்.
838 கூந்தல் பெண்குழலுங் கமுகுமயிற் பீலியும்.
839 கூரல்பெண் மயிரும் [4]புட்சிறகு மாகும்.

(பிரதி) 1 முலைமூக்கரி. 2 மறையுங். 3 குவறம். 4 பட்சிக்கு.

840 கூரே கூர்மையு மிகுதியு மாகும்.
841 கூல நீர்க்கரையும் வரம்புங் குரங்கும்
பாகலு மாவணமும் பசுவுமங் காடியும்
விலங்கின் வாலும் பண்ணி காரமும்.
842 கூவிரந் தேரின் கொடிஞ்சியுங் குவளையும்
தேரு மெனவே செப்ப லாகும்.
843 கூவுதல் கரைதலும் பேசுதலு மாகும்.
844 கூழை புட்சிறகும் பெண்மயிரும் பொன்னும்
படையுறுப்பு நடுவுங் குரலும் பாம்பும்
சேறும் கூழையும் பீலியுங் கூறுவர்.
845 கூழ்பல வுணவும் பயிரும் பொன்னும்.
846 கூளி சுற்றமும் பேயு மெருதும்
பூதமுங் குறளனு நட்புத் தொகுதியும்
வீரனு மெனவே விளம்ப லாகும்.
847 கூளியர் நண்பரும் வீரருங் குறவரும்
பூத வீரரும் புகல லாகும்.
848 கூற்று வார்த்தையும் பங்குங் காலனும்.
849 கூனல்வெண் சங்குங் கூனலு மாகும்.

கெ

850 கெடுதல் சாய்தலு மவிதலு மாகும்.
851 கெழுவுதல் பற்று மயக்கமு மாகும்.

கே

852 கேகய மகுணப் புள்ளுமோர் பண்ணும்
வில்லு மஞ்ஞையும் விளம்ப லாகும்.
853 கேசமாண் மயிரும் பெண்பான் மயிரும்
அஃறிணை மயிரு மறைய லாகும்.
854 கேசரம் வண்டும் பூந்தாது மகிழும்.

855 கேடகம் பலகையும் பரிசையு மூரும்
சிங்கா சனமுஞ் செப்ப லாகும்.
856 கேடம் கிளியு மாறு மாகும்.
857 கேட்டை யசைச்சொல்லுங் கேட்டையு முகடியும்.
858 கேதார மஞ்ஞையு மோருரு மாகும்.
859 கேது செம்பாம்புங் கொடியுமோர் நாளும்
நெருப்பு மெனவே நிகழ்த்த லாகும்.
860 கேவலந் தனிமையு முத்தியு மாகும்.
861 கேழல் யானையும் பன்றியு மாகும்.
862 கேழே நிறமு மொளியு மொப்பும்.
863 கேள்வி கல்வியுஞ் செவியும் யாழும்.
864 கேளே நட்புங் கிளையுங் கணவனும்.

## கை

865 கைக்கிளை யாழ்நரம்பு மொருதலைக் காமமும்.
866 கைத்தல் சினமுங் கசப்பு மாகும்.
867 கைது வாமை கையொழி யாமையும்
படை விகற் பமுமெனப் பகர லாகும்.
868 கைத்துப் பொன்னும் வெறுப்பு மாகும்.
869 கைபடை வகுப்பு மொழுக்கமுங் கரமும்
சிறுமையுங் குற்றமுந் தங்கையுஞ் சார்பும்
ஒப்பனையு மிடமு நஞ்சு மாகும்.

## கொ

870 கொக்குமா மரமுங் குரண்டமு மூலமும்
குதிரையுஞ் செந்நாயுங் கூற லாகும்.
871 கொக்கரை வில்லுஞ் சங்கும் வளையும்
பாணியு மெனவே பகர லாகும்.
872 கொங்கு மலர்த்தாது மணமுந் தேனும்.

873 கொச்சை கொச்சையும் வெள்ளாடு மாகும்.
874 கொச்சி கொச்சியுந் தீயு மாகும்.
875 கொட்புத் திரிதலுஞ் சுழற்சியு மாகும்.
876 கொடுப்பை குன்றருவியுந் தாம்பையுங் குளமும்
பச்சிலை யும்மெனப் பகர லாகும்.
877 கொடிகரும் பிள்ளையும் வல்லியுந் துவசமும்
ஒழுங்கு மெனவே உரைக்க லாகும்.
878 கொடியன் கேதுவுங் கொடியனு மாகும்.
879 கொடிறு பூசமுங் கருவிப் பற்றும்
கதுப்பு மெனவே கழற லாகும்.
880 கொட்டி [1]பார்த்திடு குறியுங் கூட்டமும்
வாயிலுங் கூத்தும் வழங்க லாகும்.
881 கொண்டை மயிர்முடியு மிலந்தைக் கனியும்.
882 கொண்மூ விண்ணு மேகமு மாகும்.
883 கொண்டல் கீழ்காற்று மேகமுங் கூதிரும்.
884 கொந்தளம் பெண்மயிருங் குருளைமயிர்க் கொத்தும்.
885 கொப்பர முன்கையு [2]மல்லடைவு மாகும்.
886 கொம்புவீழ் சினையு முட்டையு மாகும்.
887 கொம்மை கைகுவித்துக் கொட்டலு மிளமையும்
முலையும் வட்டமுந் திரட்சியுங் கொம்மையும்
அழகுந் திட்டையும் [3]வலியு மாகும்.
888 கொல்லை கொல்லையுஞ் [4]சோலையு மாகும்.
889 கொல்கொலைக் கேவலு மசையும் வருத்தமும்
ஐயமுங் கருங்கொலுஞ் செங்கொலு மாகும்.
890 கொல்லியோர் பண்ணுமோர் வெற்பு மாகும்.
891 கொற்றம் வெற்றியு மரசியலு மாகும்.

---

(பிரதி) [1] வார்த்திடு. [2] மல்லடையு. [3] வடையு.
[4] செல்லையு.

892 கொற்றி கோவிளங் கன்றுந் துர்க்கையும்
கொற்றியு மெனவே கூற லாகும்.
893 கொன்பய னில்லாச் சொல்லும் பொழுதும்
பெருமையு மச்சமு மிடைச்சொல்லு மாகும்.

கோ

894 கோகிலம் பல்லியுங் குரங்குங் குயிலும்
துவாரமு மெனவே சொல்ல லாகும்.
895 கோசமாண் குறியு முறையு முட்டையும்
பண்டா ரமுமதி லுறுப்பும் பகருவர்.
896 கோசிகஞ் சாம வேதமுங் கூறையும்
பட்டா டையுமெனப் பகர லாகும்.
897 கோடகம் புதுமையு முடியு முறப்புங் குதிரையும்.
898 கோடியோ ரெண்ணும் புதுமையுந் துகசும்.
899 கோடைவெண் காந்தளுங் குதிரையும் வேனிலும
மேல்காற்று மென்ன விளம்ப லாகும்.
900 கோடு சங்கு மூதுங் கொம்பும்
கொடுமுடியுங் கரையும் வரம்புங் குன்றும்
மாட்டின் கொம்பும் விலங்கின் கொம்பும்
மரத்தின் கொமபும் வழங்க லாகும்.
901 கோட்ட நீர்நிலையும் படப்பையுங் கோவிலும்
அவ்விய மும்பசுக் கூட்டமு நகரும்
கோடபதியு நாடுங் குரங்குங் கறங்கும்
குரவும் வாசமுங் கோணமுங் குளமும்
உண்கலமும் வயலு முரைக்க லாகும்.
902 கோடிகங் கெண்டியுந் துகிலும் பூந்தட்டும்.
903 கோடல் காந்தளுஞ் சமழ்த்தலுங் கொள்ளலும்
வளைத்தலு மெனவே வழங்க லாகும்.

904 கோடரங் குரங்குங் குதிரையுஞ் சோலையும்
கொம்பு மயிர்ச்சாந்து மரப்பொ தும்பரும்
தேர்மொட்டு மெட்டியுஞ் செப்ப லாகும்.

905 கோட்டி சபையும் கோபுர வாயிலும்
கூத்தின் கோட்டியுங் கூற லாகும்.

906 கோணம் வாளு மூக்குங் குதிரையு
அங்குச முமெனை வறைய லாகும்.

907 கோணல் வளைவுஞ் சிந்துங் கூனு
மாறு கொளலும் வழங்க லாகும்.

908 கோதை கைக்கட்டியு மாதருங் குழலு
மாலையுங் காற்று முடும்புஞ் சேரனும்.

909 கோத்திரம் பூமியும் குலமும் மலையும்.

910 கோபாலர் மாலு மிடையரு மாகும்.

911 கோமான் பன்றியும் மூத்தோனு மாகும்.

912 கோரம்பூ மொட்டுஞ் சோழன் குதிரையும்
கொடுமையும் வட்டிலும் கூற லாகும்.

913 கோல மொப்பனையுங் கொழுந்து நீரோட்டமும்
பீர்க்கு மழகும் பன்றியும் கோலமும்
பாக்கு மிலந்தையு மிலந்தைக் கனியும்.

914 கோல்வாட் கோலுந் திரட்சியுங் கோலும்
ஈட்டியு மிரக்கையுங் குதிரை மத்திகையும்
தந்திரியு மம்புந் துகிலிகையுந் துலாமும்
முட்கோலு மஞ்சனக் கோலுஞ்செங் கோலும்

915 கோவன் வசிட்டனு மீசனு மாகும்.

916 கோழி யுறையூருங் கோழியு மாகும்.

917 கோளி யாலு மத்தியுங் கொழுஞ்சியும்
பூவாது காய்க்கு மரமுங் கொள்வோனும்.

918 கோவிழியும் விண்ணுஞ் சுவர்க்கமும் பசுவும்
அம்பு நீருங் குலிசமுந் திக்கும்
பூமியு மன்னனுங் கிரணமு முரையும்
ஏவலுங் குன்று மியம்ப லாகும்.

கௌ

919 கௌடமோர் கொடியு மோர்நாடு மாகும்.

ககர வருக்கம் முற்றிற்று.

---

## சகர வருக்கம்

### ச

920 சகடம் பேரிலைகையும் பாண்டிலு மாகும்.
921 சகமோ ரெண்ணும் பூமியுஞ் சட்டையும்
சகமும் பாதியுஞ் சட்கோணு மாகும்.
922 சகோரம் சக்கர வாகமும் புள்ளும்
பேராந்தை யுஞ்செம் [1]போத்து மாகும்.
923 சகுந்தம் புட்பொதுவும் பூகமு மாகும்.
924 சகுனம் புட்பொதுவு நிமித்தமுங் கிழங்கும்.
925 சகுனி பறவையு நிமித்தம்பார்ப் பவனும்.
926 சக்கரஞ் செங்கோலுங் கடலும் பிறப்பும்
தேருருளுந் தரணியு மலையும் பெருமையும்
வட்டமு மோர்புள்ளுஞ் சக்கரமு மாகும்.
927 சக்கிரி குயவனுஞ் செக்கானும் பாம்பும்
மாயனு மரசனும் வழங்க லாகும்.
928 சங்க மெனும்பெயர் சபையும் புணர்ச்சியும்
கணைக்கா லுஞ் சங்கும் வளையும் வெற்றியும்
புலவரு மன்புமோ ரெண்ணு மாகும்.
929 சங்கு கைவளையுங் கோழியு மாகும்.
930 சச்சை குழம்புஞ் சட்டையு மாகும்.
931 சசிபுலோ மிசையுங் கடலுஞ் சந்திரனும்
மழையுங் கர்ப்பூரமும் வழங்க லாகும்.

---

(பிரதி.) [1] போரு.

932 சடம்பொய்யு முடலும் வஞ்சமு மாகும்
933 சடையே வேணியும் வேரு மாகும்.
934 சடிலம் நெருக்கமுஞ் சடையுங் குதிரையும்.
935 சண்டம் குரோதமு மேன்மையு மாகும்.
936 சண்டன் பானுவுங் கூற்றும் காலனும்
அலியு மெனவே யறைய லாகும்.
937 சதம் புள்ளினிறகு நூறு முறுதியும்
இலையு மெனவே யியம்ப லாகும்.
938 சத்தியஞ் சபதமு மெய்யு மாகும்.
939 சத்திரங் குடையு மிரும்பும் வேள்வியும்
கைவேலுஞ் சத்திர சாலையும் வெண்குடையும்
சத்திரக் கருவியுஞ் சாற்ற லாகும்.
940 சத்தி சூலமு முமையுந் தாயும்
வலியுங் குடையும் வேலுங் கான்றலும்
துவசமு மிச்சையு மிசையுஞ் செய்யுளும்.
941 சதிதாள வொத்துங் கற்புடை யாளும்
சதிசெய் வானு முரோகணியும் வட்டமும்.
942 சந்தங் கவிதையு நிறமுஞ் சந்தனமும்
அன்பும் வனப்பு மறைய லாகும்.
943 சந்தி யந்தியுஞ் சதுக்கமு மிசையும்
மூங்கிலு மெனவே மொழிய லாகும்.
944 சந்தானந் தேவ தாருவுஞ் சந்தானமும்
945 சம்புவே சிவனு மாலு மயனும்
சூரியனு நரியு மோர்புல்லு நாவலும்
எனுமிச் சம்வச் சிரமு மியம்பும்.
946 சம்பஞ் சம்பீரமும் வயிரமு மாகும்.
947 சமித்தல் பொறுத்தலு நடத்தலு மாகும்.

948 சமழ்த்தல் நாணமுந் தாழ்த்தலும் வருத்தமும்.
949 சமனே யணித்தலு நடுவு நமனும்.
950 சயஞ் சருக்கரையு மாலையும் வெற்றியும்
பானுவு மல்லியும் பகர லாகும்.
951 சயித்தவங் குதிரையும் வரம்புந் தலையும்
இந்துப்பு மெனவே யியம்ப லாகும்.
952 சரபஞ் சிம்புள்ளும் [1]வெற்பாடு மாகும்.
953 சரணம் பாதமு நகரமுஞ் சார்பும்.
954 சரிதை பிச்சையுஞ் சரிதைத் தொழிலும்.
955 சரமுங்கின் காற்றுங் கணையு நாணலும்
பொருமணி வடமும் மலர்ச்சரமு மாகும்.
956 சரிசமமும் வழியுங் கைவளையு மழகும்.
957 சராவமே [ய]கலுஞ் சுத்திகையுஞ் சலாகையும்.
958 சருவே தெய்வ வுணவுஞ் சோறும்
அணங்கு மெனவே யறைய லாகும்.
959 சருவம் பானையுஞ் சட்டுவமு மாகும்.
960 சலமே நீரும் பொய்யு நடுக்கமும்
வயிரமுங் கோபமும் வழங்க லாகும்.
961 சலதரம் புயலும் வாவியு மாகும்.
962 சலாகை நன்மணியுஞ் சவள[மு] நாராசமும்.
963 சவுரி திருவு மாலுங் கன்னனும்
சனியும் யமனும் யமுனையு மாகும்.
964 சவிமணிக் கோவையுஞ் செவ்வையும் வலியும்
வனப்புங் காந்தியு மெனவகுத் தனரே.
965 சவமே பிணமு மூங்கிலு மாகும்.
966 சனியொரு வாரமுந் துக்கமு மாகும்.

---

(பிரதி) 1 வெற்பு.

சா

967 சாகம் வெள்ளாடுந் தேக்கும் வண்டும்
சாகினி யுந்தே னீயுஞ் சாற்றும்.
968 சாகினி சேம்புங் கீரையு மாகும்.
969 சாகரங் கடலுந் துயிலொழித் தலுமாம்.
970 சாகாடு பண்டியு மோர்நாளு மாகும்.
971 சாடி கூறையுந் தாழியுங் கோட்சொல்லும்.
972 சாதகம் வானம் பாடியும் பிறப்பும்
சாதனையும் பூதமுஞ் சாற்ற லாகும்.
973 *சாதனை பொய்சலஞ் சாதித்தலு மாகும்.
974 சாதி மூங்கிலும் பிரம்புங் கள்ளும்
தேக்குஞ் சீந்திலுஞ் சிறுசெண் பகமும்
தேனுஞ் சாதியுஞ் செப்ப லாகும்.
975 சாத மூண்மையுஞ் சாதமும் பூதமும்.
976 சாத்தன் காரியுஞ் சாத ரூபியும்
புத்தனு மருகனும் புகல லாகும்.
977 சாத்திரி நெல்லியு முள்ளியு மாகும்.
978 சாந்தாற்றி யால வட்டமும் பீலியும்.
979 சாந்தஞ் சந்தனமும் பொறுமையும் சாந்தமும்.
980 சாபஞ் சபித்தலும் வில்லு மசமும்.
981 சாமஞ் சாமமும் பச்சையுங் கருமையுஞ்
சாமவேதமு மிரவு மாகும்.
982 சாம்பல் கூம்புதலும் பழம்பூவுஞ் சாம்பலும்.
983 சாம்புதல் சாய்தலுங் கூம்புதலு மாகும்.
984 சாமி யாசானு மரசனும் தலைவியும்
வியாழமுந் தலைவனுஞ் சாமியும் வேளும்.
985 சாம்பு பொன்னும் பொறையுஞ் சாற்றும்.

---

* இது ஓர் பிரதியில் இல்லை.

986 சாயல் சரிவு மழகு மென்மையும்
மெய்ப்பாடு மொப்பும் விளம்ப லாகும்.

987 சாரல் யாழோசையும் மலையின் சாரலும்
மலையின் மென்பாலும் வழங்க லாகும்.

988 சாரிகை யசைச்சொல்லும் பூவையுஞ் சுங்கமும்
சுழற்காற் றும்மெனச் சொல்ல லாகும்.

989 சாரங்கஞ் சாதகப் புள்ளும் வண்டும்
மானு மெனவே வழங்க லாகும்.

990 சாரச மினிமையுஞ் சாரமு மாகும்.

991 சார்ங்க மாயோன் வில்லும்விற் பொதுவும்.

992 சாரே யிடமும் பற்றுஞ் சார்பும்.

993 சாரணர் சமண முனிவோரு மொற்றரும்.

994 சாலம் வலையுஞ் சவையு மாச்சாவும்
சாலகம் கூட்டமு மதிலும் விசாலமும்.

995 சாலி கள்ளுஞ் செந்நெல்லுங் கவசமும்
அருந்ததி யும்மென வறைய லாகும்.

996 சாலை குதிரைப் பந்தியுஞ் சோலையும்
கோயிலுஞ் சத்திரமுங் கூற லாகும்.

997 சாலகஞ் சாளர வாயிலும் வலையும்
பூமொட்டு மென்னப் புகல லாகும்.

998 சால்பு மாட்சிமையுஞ் சான்றாண் மையுமாம்.

999 [1]சாலே நீர்ச்சாலு முழுத சாலுமாம்.

1000 சாழல் [2]விளையாட்டுங் கரடியு மாகும்.

1001 சாறு கள்ளும் விழவுஞ் சாறும்
தருவின் குலையுஞ் சாற்ற லாகும்.

---

(பிரதி.) [1] சால்நீர்ச் சாலையு. [2] விளையாட்டியுங்.

1002 சானகி வேயுந் திருவுஞ சனகையும.

1003 சானம பொன்வாககமுந் தமிழு மாகும.

1004 சானு வெற்பு மதனபககமு முழந்தாளும.

1005 சானறு னருககனு முமமீனு மீககொளும.

சி

1006 சிகரந் தலையுந் திவலையுந் திரையும
கவரி மாவு மலையி னுசசியும
சிகரமுங[1] கரகமு மலையு மாகும்.

1007 சிக்கங குடுமியுஞ சீப்பு முசசியும்
சிறையு முறியு [2]மெலிவுஞ செப்பும.

1008 சிகிசிலம்பு மயிலுங கேதுவுந் தீயும.

1009 சிகணடி பாலை யாழி னோசையும
மஞஞையு மலியும வழுககு லாகும.

1010 சிகரி கோபுரமும வெற்பு நாரையும
சீறெலி யுமமெனச செப்ப லாகும.

1011 சிகழிகை மாலையு மயிரமுடியு மாகும.

1012 சிஙகல குனறலுங கெடலு மாகும.

1013 சிதலை நோயுந் துணியுஞ செல்லும்.

1014 சிதஞசெய முறலும வெள்ளையு ஞானமும்
திடனும விணமீனுஞ செப்ப லாகும.

1015 சிததிரஞ சிததிர கவியு மழகும
கோளும நடனமுங காடும பொயயும்
வியப்புங [3]கானு மோவியமு மாகும்.

1016 சிததங திடமுஞ சிததமு மாகும

(பிரதி.) [1] சுகரமுங. [2] மெலியுஞ. [3] கானு.

1017 சித்திர பானுவேர் ராண்டும் பானுவும்
தீயு மெனவே செப்ப லாகும்.

1018 சித்திர னேவனுந் தச்சனு மழகனும்.

1019 சிதாறு பதமுந் துணியும் திவலையும்
உறியு மெனவே யுரைக்க லாகும்.

1020 சிதடி சிச்சிலியுஞ் சிள்வீடு மாகும்.

1021 சிதடனந் தகனு மூடனு மாகும்.

1022 சித்து ஞானமும் செயமு மாகும்.

1023 சிந்துரம் புளியுஞ் சிவப்புந் திலதமும்
செங்குடையும் யானையும் வனப்புஞ் சிந்தூரமும்
வெட்சியு மெனவே விளம்ப லாகும்.

1024 சிந்து வாரம் நொச்சியுங் கடலும்.

1025 சிந்துமுச்சீரு நதியுங் குறளும்
கடலு நீருந் தேசமு மாகும்.

1026 சிமிலிசிள் வீடு முறியுங் குடுமியுஞ்
சிறிய வீயுஞ் செப்புவர் புலவர்.

1027 சிமையமலை யுச்சியுந் தென்றலும் வெற்பும்
குடுமியு மெனவே கூற லாகும்.

1028 சிரம் நெடுங்காலமு முறியுஞ் சென்னியும்.

1029 சிரை வானரமு நரம்பு மாகும்.

1030 சிரகங் கரகமுஞ் சென்னியிற் கோடும்
திவலையு மெனவே செப்ப லாகும்.

1031 சிலையோர் மரமு மலையும் வில்லும்
கல்லு மெனவே கழற லாகும்.

1032 சில்லை தூர்த்தையுஞ் சிள்வீடும் பகன்றையும்.

1033 சில்லிசிள் வீடுங் கீரையும் வட்டமு
தேருரு ளும்மெனச் செப்ப லாகும்.

1034 சிலம்பு மலையு மொலியுஞ் சிலம்புமாம்.
1035 சிலீமுக மூலைக்கண்ணு மம்பு மாகும்.
1036 *சில்லிகை கல்லாடை சின்வண்டு மாகும்.
1037 சிலதரா [1]ரியருஞ் சேடரு மாகும்.
1038 சிவமே நன்மையு முத்தியுங் குறுணியும்.
1039 சிவப்புச் சினமுஞ் சினக்குறிப்புஞ் சிவப்பும்.
1040 சிவை கொல்ல னுலையு மரவேரு மோரியும்
பார்ப்பதி யுமெனப் பகர லாகும்.
1041 சிறைநீர்க் கறையுங் காவலும் பக்கமும்
சிறகும் வேறிடமும் மதிலுஞ் செப்பும்.
1042 சிறுமை நோயுந் துயரமுந் துன்பமும்.
1043 சிறுபூ லகன்கா மனுக்கிப் பிலியும்
பூடு மெனவே புகல லாகும்.
1044 சினைமரக் கோடு முட்டையுங் கருவும்
உறுப்பு மெனவே யுரைக்க லாகும்.

சீ

1045 சீகரங் கவரி மாவுந் திவலையும்
மழையுங் காகமுஞ் செங்கையு மாகும்.
1046 சீதை யுழவு சாலுந் திருவும்
பொன்னுங் காணியும் புகல லாகும்.
1047 சீத்தைகீழ் மக்களும் [1]பதனழிவு மாகும்.
1048 சீதங் குளிரு மேகமு நீரும்
பனியு மெனவே பகர லாகும்.
1049 சீப்புதாழ்ப் பாளுஞ் சீப்புங் கங்கமும்
1050 சீர்சொல்லின் சீரும் செம்பொரு[ளு]மோசையும்
ஓல்கலுந் தண்டுஞ் செல்வமு மழகுஞ்
சீர்த்தியும் காத்தண்டுஞ் சிறப்பும் பாரமும்
தாள வொத்தும் பலவகை யியங்களும்.

---

(பிரதி.) * இது ஓர் பிரதியில் இல்லை. [1] ரிவருளுஞ்.
[2] தாளின் பெயரும்.

1051 சீரு ளாக்கமுஞ் செம்பு மீயமும்.
1052 சிலர் தண்டித்தலும் ஞானமும் குணமும்
தருமமு மொழுக்கமுஞ் சாற்ற லாகும்.
1053 சிவன் வியாழமு முயிரு மாகும்.
1054 சீவனியோர் மருந்துஞ் செவ்வழி யாழும்
உயிரு நீரு முரைக்க லாகும்.

சு

1055 சுகஞ்சுக் கிரீபமு நன்மையுங் கிளியுஞ்
சுங்கனு மின்பமுஞ் சொல்ல லாகும்.
1056 சுக்கை தாரகையு மாலையு மாகும்.
1057 சுங்கஞ் சிற்பமு மிறையு மாகும்.
1058 சுசி[யே] கோடையுஞ் சுத்தமுந் தீயும்.
1059 சுடர்முச் சுடரும் பொறியும் விளக்கும்
ஒளியுந் தளிரு முரைக்க லாகும்.
1060 சுட்டி நாவும் பட்டமும் சுட்டியும்
மயிர்முடி யுமென வழங்க லாகும்.
1061 சுட்டல் காட்டலும் பற்றலு மாகும்.
1062 சுடுமண் பாண்டமு மிட்டிகையு மாகும்.
1063 சுடிகை யுச்சியு[1] மகுடமுஞ் சுட்டியும்
மயிர்முடி யுமென வழங்க லாகும்.
1064 சுடர்க்கடை யென்பது மின்மினியு மயிலும்.
1065 சுண்டன் மூஞ்சூறுஞ் சதையமு மாகும்.
1066 சுண்டையோர் செடியுங் கள்ளு மாகும்.
1067 சுதை சுண்ணச் சாந்தும் வெண்மையு மமுதும்
உதைகாற் பசுவும் புதல்வியு முடுவும்
நீறு மெனவே நிகழ்த்த லாகும்.
1068 சுந்தரி மூஞ்சூறு மிந்திரன் றேவியும்
துர்க்கையு மம்பிகையுஞ் சொல்ல லாகும்.

---

(பிரதி) 1 ங்குடமும்.

1069 சம்மை நெற்போரு நாடு நகரும்
ஒலியுஞ் சுமையு முரைக்க லாகும்.
1070 சுரைபசு முலையு மம்புத் தலையும்
துளையுஞ் சுரையுங் கள்ளும் பசுவும்.
1071 சுருங்கை நுழைவாயிலுங் கரந்தகற் படையும்.
1072 சுரம்பாலை நிலமும் [1]தொனியும் வழியும்
காடுஞ் சுரமு மருநெறியு மாகும்.
1073 சுரர்குரு வென்பது வியாழமும் யோகியும்.
1074 சுரிகை யுடைவாளுங் கவசமு மாகும்.
1075 சுருதி வேதமு மொலியு மாகும்.
1076 சுரியலாண் மயிரும் பெண்பான் மயிரும்.
1077 சுரியே நரியுஞ் சுரியு மாகும்.
1078 சுரும்பு வண்டு மலையு மாகும்.
1079 சுவல்தோண் மேலும் மேடும் பிடரியும்
மாக்குசையு மயிருங் கோயிலு மாகும்.
1080 சுவாமி குமரனும் வியாழமு முனிவனும்
தலைவனு மாசானுஞ் சாற்ற லாகும்.
1081 சுவேதம் வெண்மையும் வேர்வையு மாகும்.
1082 சுள்ளி [2]குங்குமமுந் துரும்பு மாரமும்.
1083 சுப்புள்ளின் மூக்குஞ் சுவர்க்கமுஞ் சுண்டனும்.

சூ

1084 சூகை யானையுஞ் சூகை யாகும்.
1085 சூத மாமரமும் வண்டும் பிறப்பும்
[3]பாகரு மெனவே பகர லாகும்.
1086 சூதகம் பெண்முலைக் கண்ணும் பிறப்பும்
ஆசூசமும் பெண்பாற் பூப்பு மாகும்.

---

(பிரதி) [1] தோணியும். [2] ஞாழலு மாமரமு மாகும்.
[3] பாதரசமு.

1087 சூது தாமரையுஞ் சூது மாகும்.
1088 சூத்திரன் சாதியுந் தச்சனு மாகும்.
1089 சூர் அஞ்சாமையுந் தெய்வமும் வஞ்சமும்
நோயு மணங்கு மச்சமுந் துயரும்.
1090 சூரிமூ தணங்கும்[1] சூரியனு மாகும்.
1091 சூரன் வீரனு மாயுந் தீயும்
சூரிய னுமெனச் சொல்ல லாகும்.
1092 சூரியன் தீயுஞ் சூரியனு மாகும்.
1093 சூல்சூ ழுதலுஞ் சினையு மாகும்.
1094 *சூல மிரேவதியுஞ் சிவனு யுதமும்.
1095 சூலி சிவனுங் காளியு மாகும்.
1096 சூழி கரிமுக படாமுஞ் சுனையும்.
1097 சூழ்வோர் மந்திரியுஞ் சூழ்வோரு மாகும்.
1098 சூழல் விசாரமுஞ் சூழ்தலு மிடமும்.
1099 சூளை பொதுப்பெண்ணுஞ் சுன்னையு மாகும்.

செ

1100 செச்சை நீறுஞ் சோடுங் காடுங்
கொச்சை யேறும் வெட்சியுந் தேய்வையும்.
1101 செடிகுண மின்மையுஞ் செறிவு மொளியும்
பாவமு மெனவே பகர லாகும்.
1102 செட்டி குமரனுஞ் செட்டியு மாகும்.
1103 செண்டு செண்டுங் [2]குதிரைசெல் வீதியும்.
1104 செதுக்கு மந்தியும் சேறும் [3]பூதமும்.
1105 செந்து நிரையமு மோரியுஞ் சீவனும்
சிவப்பு மணுவுஞ் செப்ப லாகும்.

---

(பிரதி) புலவனு. *இது ஒரு பிரதியில் இல்லை. 2 கூர்மையுமாகும். 3 புதமும்.

1106 செப்பஞ் செவ்வையுந் தெருவும் நடுநிலையும்
நெஞ்சு மெனவே நிகழ்த்த லாகும்.
1107 செம்பு தாம்பிரமு நவ்வலும் பொன்னும்.
1108 செம்மை பெருமையுஞ் சிவப்புஞ் செவ்வையும்.
1109 செம்மல் சிவனும் வாரியுஞ் செம்மலும்
அருகனும் பெருமையு மிறைவரும் வீரரும்
பழம்பூவு மகனுஞ் சிறந்தவனு மாகும்.
1110 செம்புலம் பாலை நிலமும் படுகளமும்.
1111 செய்யல் செய்தொழிலுங் காவலுஞ் சேறும்
ஒழுக்கமு மெனவே யுரைக்க லாகும்.
1112 செயிரே குற்றமுஞ் சினவலு மாகும்.
1113 செயல்செய் தொழிலு மொழுக்கமு மாகும்.
1114 செய்வினை வயலும் ஏவல் வினையுமாம்.
1115 செருந்தி வாட்கோரையுஞ் செருந்திப் புதலும்.
1116 செல்செவ் வேலு மிடியு மேவலும்
சிதலையும் விண்ணு மேகமு மாகும்.
1117 செல்வஞ் சுவர்க்கமுஞ் செல்வமுங் கல்வியும்.
1118 செவ்வி யழகும் பருவமும் பொழுதும்.
1119 செவிலி முன்பிறந் தாளுந் தாதியும்.
1120 செவியே கேள்வியுங் காது மாகும்.
1121 செழுமை வளமுங் கொழுப்பு மாட்சிமையும்
அழகு மெனவே யறைய லாகும்.
1122 சென்னி தலையும் பாணனுஞ் சோழனும்.
1123 சென்னியர் செங்கதிர்க் குலத்து வேந்தரும்
பாணருங் கூத்தரும் பகர லாகும்.

சே

1124 சேகர மழகுஞ் சென்னியுஞ் சூதமும்.

1125 சேக்கை மிருகர்துஞ் சிடமும் முலையும்.
தழும்பும் பாயலுஞ் சாற்ற லாகும்.
1126 சேடு கட்டிளமையு நன்மையும் பெருமையும்
திரட்சியு மழகுஞ் செப்ப லாகும்.
1127 சேடி விஞ்சைய ரூரும் பாங்கியும்.
1128 சேட னல்லோனுஞ் சேடனு [1]மடிமையும்
பாங்கனு மனந்தனு மிளையோனு மாகும்.
1129 சேட்டை மூதேவியு முறமுஞ் சேட்டையும்.
1130 சேண்விண்ணு முயரமு மகலமுஞ் சேய்த்தும்
நீளமு மெனவே நிகழ்த்த லாகும்.
1131 சேது செய்கரையுஞ் சிவப்பு மாகும்.
1132 சேதகஞ் சேறுஞ் சிவப்பு மாகும்.
1133 சேத்துச் சிவப்பு மசைச்சொல்லு மையமும்
கருத்து மொப்புங் குறிப்பு மாகும்.
1134 சேதாரம் வெட்சியும் பொன்றேய் மானமும்
தேமா வுமெனச் செப்ப லாகும்.
1135 சேமம் இன்பமுங் காவலு மாகும்.
1136 சேய் செவ்வாயும் சிறுவனு மிளமையும்
தூரமுஞ் சிவப்பு முருகனு நீளமும்.
1137 சேலேகந் திலகமுஞ் சந்தனமு மாகும்.
1138 சேலேகா கோளியுஞ் சேலையு மாகும்.
1139 சேவல் காவலுஞ் சாவலுஞ் சேறும்
புள்ளா ணுமெனப் புகல லாகும்.
1140 சேவகம் வீரமும் யானைதுயி லிடமும்
துயிலு மெனவே சொல்ல லாகும்.

---
(பிரதி) [1] மானும்.

1141 சேறு தித்திப்பு சரகமுஞ் சாரமும்
விழவுங் கள்ளும் விளம்ப லாகும்.
1142 சேனை படையு மாயுதமு மாகும்.

### சை

1143 சையமோர் மலையும் வெற்பு மாகும்.
1144 சைவம் புராணமும் சிவனும் ஆகமமும்
இளமையுஞ் சைவ சமயமுஞ் சாற்றும்.

### சொ

1145 சொல்செந் நெல்லுஞ் சொல்லுங் கள்ளும்
புகழு மெனவே புகல லாகும்.
1146 சொர்க்க முலையுஞ் சொக்கமு மாகும்.

### சோ

1147 சோகங் குறங்குஞ் சோகமு மாகும்.
1148 சோங்கு நாவாயுங் குருகுங் குரங்கும்.
1149 சோதி சங்கரனு மாலு மிரவியுஞ்
சுடருஞ் சோதியும் விளக்கு முடுவும்.
1150 சோமன் புடவையுஞ் சந்திரனு மாகும்.
1151 சோர்வு கள்ளுங் காகமு மாகும்.
1152 சோனை விடாமழை யோணமு மாகும்.

சகர வருக்கம் முற்றிற்று.

---

## ஞகர வருக்கம்

1153 ஞமலி மயிலு நாயுங் கள்ளும்.
1154 ஞாங்கர் மேலும் பக்கமும் வேலும்
முன்பு மிடமு மொழித லாகும்.
1155 ஞாட்புப் படையும் பூசலுங் கூட்டமும்
பாரமு மெனவே பகர லாகும்.

1156 ஞாழல் துருக்கமு சாகமு மாகும்.
1157 ஞாளி கள்ளு நாயு மாகும்.
1158 ஞான நல்ல தத்துவ நூலும்
அறிவுங் கல்வியு மறைய லாகும்.
1159 ஞெகிழி நெருப்புறு கொள்ளியு நெருப்புஞ்
சிலம்புந் தீப்பொறியுஞ் செப்ப லாகும்.
1160 ஞெண்டு கர்க்கடகமும் ஞெண்டு மாகும்.
1161 ஞெமிர்தல் முறித்தலு முறிதலும் பரப்பும்.
1162 ஞெரேலெனல் விரைவு மொலியு மாகும்.
1163 ஞெள்ளல் வீதியு மேன்மையும் பள்ளமும்
பூசலு மிகுதியு முடன்பாடுஞ் சோர்வும்
ஒலியு மெனவே யுரைக்க லாகும்.
1164 ஞொள்கல் சோம்பு மிளைத்தலு நோயும்
அச்சக் குறிப்பு மறைந்தனர் புலவர்.

ஞகரம் முற்றிற்று.

---

## தகர வருக்கம்

### த

1165 தகைபீடு மழகு மன்பும் பண்பும்
தகைதலு மியல்பு [1] மிளைப்பு மாகும்.
1166 தகரம் நாற்றமு மயிர்ச்சாந்து மீயமும்
தகரு மெனவே சாற்ற லாகும்.
1167 தகடென்ற லைமையு மிலையு மாகும்.
1168 தகுதி பொறையு மாசாரமு மாகும்.
1169 தகர்மேடும் ஆடும் பூமியுந் தகர்த்தலும்.
1170 தகைமை மியல்பு மழகும் பெருமையும்.

(பிரதி) [1] பிழைப்பு.

1171 தசும்பு குடமு மிடாவும் பொன்னும்.
1172 தச்சன் தச்சனுஞ் சித்திரையு மாகும்.
1173 தஞ்ச மெளிமையுந் துணையும் பீடும்
பற்றுக் கோடும் பகர லாகும்.
1174 தடைமறு மனைவியுந் தடுத்தலுங் கவசமும்.
1175 தடம் தடக்கரையும் விரிவு மல்குலும்
பொய்கையுந் தடமும் யானைத் தண்டமுங்
கோணலும் விளையும் பெருமையும் பனையும்
மலையு மெனவே வழங்க லாகும்.
1176 தடிசா ரங்கமுந் தண்டு மின்னுந்
தசையு மூடும்பு முலக்கையும் வயலும்.
1177 தட்டலொற் றறுத்தலுந் தடுத்தலுங் கொட்டலும்.
1178 தட்டுத்தேர் நடுவுந் தடுத்தலும் பகுத்தலுந்
திரிகையுந் தட்டும் வட்டமு முட்டுங்
குற்றமும் பரிசையுங் கூற லாகும்.
1179 தட்டை தினைத்தாளும் வேயுந் தீயும்
மூண்டமுங் கவணுங் கிளிகடி கோலும்
கரடிகைப் பறையு முண்கலனுஞ் சின்னமும்.
1180 தடாரி மத்தளமும் பறையு மாகும்.
1181 தடறு பத்தனுந் தொண்டையு காரையும்
படையுறை யும்மெனப் பகர லாகும்.
1182 * தடவு துபக் காலும் பெருமையும் வளைவும்.
1183 தண்மை குளிர்ச்சியுந் தாழ்வு மெளிமையும்.
1184 தண்ணங் கட்பறையு மழுவுஞ் சாற்றுவர்.
1185 தண்ணுமை [1] முழவு முடுக்கையும் பறையும்.
1186 தணியே மலையுந் தண்மையு மாகும்.

---

* இது சில பிரதிகளில் இல்லை.

(பிரதி.) [1] மழுவு.

1187 தண்டு குழாயும் வீணையுந் தடியும்
ஒத்தியும் படையு மிதுனமுமவாவும்
சிவிகையுந் தண்டமுஞ் செப்ப லாகும்.
1188 தண்டங் குடைக்காலுந் தடியும் படையும்
தண்டித்தலும் யானை [1] சென்ற வழியும்.
வரம்புந் தண்டுஞ் சிவிகையு மாகும்.
1189 தண்ணடை நாடுங் காடு முடுக்கும்
மருத நிலத்தூரு மிலையு மாகும்.
1190 தத்தை முன்பிறந் தாளுங் கிளியும்.
1191 தந்து சாத்திரமு நூலு மாகும்.
1192 தபனன் சூரியனுந் தீயு மாகும்.
1193 தபுதல் கேடுஞ் சாவு மாகும்.
1194 தம்பந் தூணும் பற்றுக் கோடும்
கவசமு மெனவே கழற லாகும்.
1195 தமர மெழுகு மோசையு மாகும்.
1196 தமனிய னயனு மிரணியனு மாகும்.
1197 தமமே யிருளு மிராகுவு மாகும்.
1198 தமிழ் தமிழ் விகற்பமு நீர்மையு மினிமையும்
தவமுந் தட்பமு நல்லறமு மருளும்
கருமமு மியல்புங் கழற லாகும்.
1199 தரும ராசன் புத்தனு மருகனுந்
தருமனு மெனவே சாற்ற லாகும்.
1200 தரணி நிலமு மலையு மிரவியும்.
1201 தராவே மதுகமுஞ் சங்கமுஞ் சாற்றும்.
1202 தலந்தா ரணியு மிலையு மாகும்.
1203 தலையா காயமுந் தலைமையுஞ் சிரமும்
இடமு மாதியு மியம்ப லாகும்.

---

(பிரதி.) [1] சென்றாற்றுழியும்.

1204 தலையல் மழைவிடுதலும் புதுப்புனல் வரவும்.
1205 தவிசு பீடமுந் தடுக்கு மெத்தையும்
[1] இலகடமும் என்றே யியம்ப லாகும்.
1206 தவாவினை முத்தியு மலையு மாகும்.
1207 தவ்வை மூத்தாளுந் தாயு மூதேவியும்.
1208 தவவு மிகுதலுங் குறைதலு மாகும்.
1209 தழலே நெருப்புங் கிளிகடி கோலும்.
1210 தழை[யே] வளரிளங் கொம்புந் தழையும்
பீலிக் குடையும் பேச லாகும்.
1211 தளம்பொரு படையுஞ் சாந்துந் தாழியும்
நகரும் உப்பரி கையும் பூவிதழும்.
1212 தளிசம ரிடமுந் தளியுங் கோயிலும்.
1213 தளையாண் மயிருஞ் சிலம்பும் விலங்கும்
பிணைத்தலும் பூமுகையு முறுக்குத் தாரும்
தாற றளையுந் துழாயு மாகும்.
1214 தளிமம் அழகும் மெத்தையுஞ் சயனமும்.
1215 தன்னை செவிலியுந் தாயு மூத்தாளும்.
1216 தன்மை தமையுடைப் பொருளும் அழகும்
இயல்பு மெனவே யியம்ப லாகும்.
1217 தன முத்திறமும் பொன்னு முலையும்
[2] வருத்தமுஞ் சாந்தும் பசுவின் கன்றும்.
1218 தனஞ்சயன் வாயுவுந் தீயு மருச்சுனனும்.
1219 தன்ன மான்கன்று மற்பமு மாகும்.
1220 தனியொப் பின்மையுந் தமியு மாகும்.
1221 தனுத்தனு ராசியு நுட்பமும் வில்லும்
உடம்பு மெனவே யுரைக்க லாகும்.

தா

1222 தாசி யாளும் பரணி நாளுமாம்.

---

(பிரதி) [1] இலகுமடமும். [2] அருத்தமுஞ்.

1223 தாடு தலைமையும் வன்மையு மாகும்.
1224 தாணுத் தாணு நிலைபேறு மலையுஞ்
சங்கரனுங் குற்றியுஞ் சாற்ற லாகும்.
1225 தாண்டவ மாடலுந் தாவலு மாகும்.
1226 தாது பொன்முத லேழு மடிமையும்
தரணிமுத லைந்து மிரதாதி யேழுங்
காவிக் கல்லும் பூவின் றாதும்
மேதியு மெனவே விளம்ப லாகும்.
1227 *தாதை தகப்பனும் பாட்டனு மாகும்.
1228 தாதி யடிமையும் பரணி நாளும்.
1229 தாபரங் கோயிலு முடலு மலையும்
தருவு நிற்பனவும் பூமியு மாகும்.
1230 தாமம் பூவும் மணிவடமும் மலையும்
தந்தியு மூருந் தாருஞ் சாந்தமும்
கயிறுங் கொன்றையு மொழுங்கு மொளியும்
பொருகளமு மிடமும் புகல லாகும்.
1231 தாம்பு கயிறுந் தாமணியு மாகும்.
1232 தாமரை தாமரையும் புலியு மாகும்.
1233 தாய முரிமையுந் தங்குடித் தமரும்.
1234 தாரம் வெள்ளியு நாவும் வில்லுந்
தந்திரி யின்னோ ரிசையுந் தலைவியும்
அரும்பண் டமும்வல் லிசையு மாகும்.
1235 தார்பூவுந் தூசியுஞ் சதங்கையு மொழுங்கும்
மாலையு மாவுநூற் சுற்று மழகும்.
1236 தாரை கண்மணியு முடும் வழியுங்
கூர்மையு [1] மழையுஞ் சின்னமுந் தாரமும்
ஒழுங்கு [நீ]ரோட்டமு முரைக்க லாகும்.

---

* இது சில பிரதிகளில் இல்லை.

(பிரதி) [1] மறையுஞ்.

1237 தாலந் தரையும் பனையும் நாவும்
வட்டிலு மெனவே வழங்க லாகும்.
1238 தாழை தெங்குந் தாழையு மாகும்.
1239 தாழி கடலுந் தாழியு மாகும்.
1240 தாழ்தல் குறைவும் [1] வணங்கலுந் தங்கலும்.
1241 தாளி பனையுந் தாளிப் புல்லும்.
1242 தாளாண்மை [2] முயற்சியு முற்சா கமுமாம்.
1243 தாள்தா[ழ்]ப் பாழும் பாதமு முயற்சியும்.
1244 தாறுமுட் கோலுந் தருவின் குலையும்
விற்குதையு மெல்லையும் விளம்ப லாகும்.
1245 தானை யாயுதங்களும் படையுந் தூசும்.
1246 தானம் நீராடலுங் கொடுத்தலு முதவியும்
விண்ணு மதமுஞ் சாரிடமும் வேட்டலும்.
1247 தாவென் பதுவே வலியும் வருத்தமும்
கேடுந் தாவெனலும் பகையு மிடையீடும்.

தி

1248 திகையே திசையுஞ் சுணங்கு மாகும்.
1249 திகிரி மேவும் வெற்புந் தேருருளும்
ஆழியும் வட்டமுங் கோகமு மையுந்
தேரு மெனவே செப்ப லாகும்.
1250 திங்கள் அம்புலியு மாதமுந் திங்களும்.
1251 திட்டை மேடுந் திண்ணையு முரலும்.
1252 திட்டி கண்ணுந் திலதமுந் திட்டியும்.
1253 திணை அகத்திணையுங் குலமு நிலமும்
புறத்திணையு மொழுக்கமும் புகல லாகும்.
1254 திணி காசினியுந் திணியு மாகும்.
1255 திண்ணம் பொய்யு மெய்யும் வலியும்.

(பிரதி) [1] வழங்கலுந். [2] மூப்பு.

1256 இத்தி நூரங்கு மின்பழும் பையும்
இத்திப் பும்மெனச் செப்ப லாகும்.

1257 திதியே காத்தலு நிலைத்தலும் பக்கமும்.

1258 திமிர மிருளு நரகமு மாகும்.

1259 திரிதல் கெடலு முலாவலு மாகும்.

1260 திருக்குகம் புடவையு முற்றமு மாகும்.

1261 திரையிடு திரையுந் திரைத்தலுங் கடலும்
ஆலையும் பூமியு மலைந்தனர் புலவர்.

1262 திருவே கலையுஞ் செல்வமுஞ் சிறப்பும்.

1263 திலகம் புண்டரமுஞ் சுட்டியு மெள்ளும்
சிந்தூ ரமுமஞ் சாடியுஞ் செப்புவர்.

1264 திலமஞ் சாடியு மெள்ளு மாகும்.

1265 திவாவே பகலு மாதித் தனுமாம்.

1266 திளைத்த லனுபவமு நெருங்கலு நிறைதலும்.

தீ

1267 [1] தீத்தனு சானுந் தேவனு மாகும்.

1268 தீத்தம் விழாவுந் தீர்த்தமு மாகும்.

1269 தீர்த்தன் சிவனு மாசானு மருகனும்.

1270 தீயே நெருப்புந் தீங்கு மாகும்.

து

1271 துகளே குற்றமுந் தூளு மாகும்.

1272 துச்சி லொதுக்கிடமுஞ் சூடு மாகும்.

1273 துஞ்சல் சோம்புஞ் சாவுந் துயிலும்
செறிவு நிலைபேறுஞ் செப்ப லாகும்.

1274 துடர் சொற்றொடர்பும் விலங்கு மாகும்.

1275 துடி கூதாளியும் எலமும் பறையும்
கால நுட்பமுங் குமா னுடலும்
கணையு மிதமும் கட்டெதலுந் துள்ளலும்.

---

(பிரதி.) [1] தீத்தஞ் சானுந் தேவனு.

1276 துடவை காவுந் தோட்டமு முழவும்.
1277 துடிப்புக் கையு மிளமுலையு மாகும்.
1278 துணையொப்பு மளவுஞ் சகாயமுந் துணைவியும்
உபயமு மெனவே யுரைக்க லாகும்.
1279 துணிசோதி நாளுந் துண்டமுஞ் சீர்மையும்.
1280 துண்டம் வதனமு மூக்குந் துகிலும்
சாரைப் பாம்பு முறியும் புண்மூக்கும்.
1281 துணங்கு நன்னுளு விழவு மறலும்.
1282 துணங்கை யல்லும் விழவுமோர் கூத்தும்
ஒருநா ளும்மென வுரைக்க லாகும்.
1283 துணையறை தூக்கமுஞ் சேதுவு மாகும்.
1284 துணைவன் மந்திரியுந் தோழனு மாகும்.
1285 துண்டில் மூங்கிலுஞ் சூழலு மாகும்.
1286 துணை தனில் துணிமடற் பொருளுந் தெளியும்.
1287 துத்தம் துத்தமும் வயிறும் பாலும்
யாழி னரம்புஞ் [1]சுணங்கனு மோசையும்.
1288 துதியே யகிலுந் துதியு மாகும்.
1289 துத்தி நாளும் விழவும் தெய்யும்
தேமலுந் துணங்கை யாடலுந் துத்தியும்
படப்பொறி யும்மெனப் பகர லாகும்.
1290 துப்பு தெய்யும் பவளமுஞ் சுத்தமும்
பகையு மூற்றமு மரக்கும் வனமும்
அனுபவமும் வலியும் வண்ணமும் சோறும்
துணையு மாயுதங் களையுஞ் சொல்லும்.
1291 தும்பி வண்டுஞ் சுரையுங் கள்ளும்
யானையு மெனவே யறைய லாகும்.
1292 தும்பை போரும் வெற்றிலையுந் [2]தும்பையும்.
1293 தும்பு சிம்புளுந் தோடு நாளும்.

---

(பிரதி) 1 சுணங்கனு. 2 துலையும்.

1294 துரோணஞ் சிம்புளும் தும்பையும் [1]பதக்கும்
காரிப் பறவையும் வில்லுங் கருதுவர்.

1295 துருத்தி யாற்றிடைக் குறையுந் தோலும்
துட்டையு மிலங்கையுஞ் சொல்லுவர் புலவர்.

1296 துருக்கங் குங்குமமுங் கானு மரணும்
கத்தூரியுங் கலக்கமுங் கழற லாகும்.

1297 துரங்கங் குதிரையு நாவாயு மாகும்.

1298 துலையே துலாமுந் தோற்றமு மேற்றமும்.

1299 துவக்குப் பிணக்கமும் பற்றுதலு முடலும்
தோலு மெனவே சொல்ல லாகும்.

1300 துவ்வுத றுய்த்தலு மாற்பத[மு]மாகும்.

1301 துவர்சிவப்பு மிகலும் பவளமுங் காட்டமும்
துவர்ப்பு மாக்கமுஞ் சொல்ல லாகும்.

1302 துவறல் உண்டலுந் தின்றலு மாகும்.

1303 துவைப் பிண்ணாக்கும் புளிங்கறியு மோசையும்
இறைச்சியு மெனவே யியம்ப லாகும்.

1304 துழாயே புல்லுந் துளபமு மாகும்.

1305 துளிபல் துளியும் மழையின் றுளியும்
அடைத்த லும்பெண் ணாமையு மாகும்.

1306 துள்ளல் கூத்தும் பாவி னோசையும்
மசகமு மெனவே வழங்க லாகும்.

1307 துளும்பல் அலைதலுந் திமிறலு மாகும்.

1308 துனியே கோபமும் புலவி நீட்டமும்
அந்தியுந் துன்பமு நோயு மாகும.

1309 துன்னல் சேர்த்தலுஞ் செறிதலுங் கிடத்தலும்.

தூ

1310 தூக்குப் பாட்டுங் கூத்துந் துலாமும்
தொங்கலுங் குணமு மாராய்தலும் நிறுத்தலும்
தூக்கணமு முறியு மாசா ரியனும்.

(பிரதி.) [1] தேக்கும்.

1311 தூங்கல் தாழ்வும் யானையுஞ் சோம்பும்
துயிலு மோசையுந் தராசும் கூத்தும்.
1312 தூசு தூசிப் படையு மாடையும்
யானைப் புரசையு நவிற்றுவர் புலவர்.
1313 தூணி யாவமு முகத்தற் றூணியும்.
1314 தூணம் பகையுந் தூணு மாகும்.
1315 தூதுணம் புறவுந் தூக்கணங் குருவியும்.
1316 தூபம் தூபமு நீர்க்கடம்பு மாகும்.
1317 தூம்பு வேயுந் துளையுடைப் பொருளும்
மரக்காலும் பூளையும் சலதா ரையும்.
1318 தூய்மை மெய்ம்மையுஞ் சுத்தமு மாகும்.
1319 [1] தூரிய மிடமும் வாச்சியமுந் துகிலும்
எழுது கோலு முரசும் போரெருதும்
எறிபடையு மீயமு மியம்ப லாகும்.
1320 தூவி புள்ளிறகு மன்னத் தூவியும்
பசையுந் தசையும் பல தூவிகளும்.
1321 தூவல் திவலையு மாரியு மாகும்.
1322 தூளி யார்ப்புங் குதிரையும் புழுதியும்.
1323 தூவரித்த புலாலும் பற்றுக் கோடும்
தூய்மையும் பசுவும் பகையு மூனும்
வெண்மையுஞ் சிறகும் விளம்ப லாகும்.

### தெ

1324 தெக்கணந் தெற்கும் சூழ்தலு மாகும்.
1325 தெட்டி யானையுஞ் செட்டியு மாகும்.
1326 தெண்டிகை ஆர வாரமும் தெவ்வமும்
உள்ளமு மெனவே யுரைக்க லாகும்.
1327 தெய்யே [2] தெய்வமுங் கொலையு மாகும்.

(பிரதி) 1 தூரியமு. 2 தெவவமும்.

1323 தெயம் 1 வாசமும் புத்தேளு மாகும்.
1329 தெரிவை பெண்ணுங் கன்னி ராசியும்.
1330 தெவிட்ட னிறைதலுங் கான்றலு மொலித்தலும்
அடைத்தலு மெனவே யறைய லாகும்.
1331 தெவ்வே பகையுஞ் செருவுஞ் கொள்கையும்.
1332 * தென் னாளிகோரு மிசையும் வனப்பும்
கற்புந் தெற்குவ கழறினர் புலவர்.

தே

1333 தேள் விருச்சிகமு மனுட னாளும்.
1334 தேக்குத் தேக்கும் வெறுப்புங் கமுகும்
தெவிட்டலு மெனவே செப்ப லாகும்.
1335 தேசி பரியு னாயு மாகும்.
1336 தேசிக மழகுங் காந்தியுந் திசைச்சொல்லும்
கூத்தும் பொன்னும் கூற லாகும்.
1337 தேசிகன் றேசாந் திரியுங் குருவும்
வணிகனு மிறைவனும் வழங்க லாகும்.
1338 தேடல் பொன்னுந் தேடலு மாகும்.
1339 தேமென்ப விடமு நாற்றமுந் திசையும்
தித்திப்புந் தேசமுந் தேனுங் கள்ளும்.
1340 தேயம் விண்ணு முடலு நாடும்
களவு மெனவே கருதினர் புலவர்.
1341 தேர்த லாராய்தலுங் கொள்கையு மாகும்.
1342 தேவு தேறலுந் தெய்வமு மாகும்.
1343 தேனே வண்டு நறவு மாகும்.

தை

1344 தைத்தல் துன்னமுந் தைத்தலு மாகும்.

---

* இச் சூத்திரம் 'தேள்விருச் சிகமும்' என்பதன் பின்.
(பிரதி) 1. பாசமும்.

1345 தையல் பெண்ணு மழகு மாகும்.
1346 தைதை மாதமு மூலியுந் தைத்தலும்
அலங்கலுங் கள்ளு மறைய லாகும்.

## தொ

1347 தொங்கல் பீலியும் பீலிக் குடையும்
மாலையுங் குஞ்சமுந் தூக்கும் வெண்குடையும்
பங்கியுந் துக்கமும் பகர லாகும்.
1348 தொட்டி வாய்தலுந் தொட்டியுங் கள்ளும்.
1349 தொடி கங்கணமும் வளையுமொரு பலமும்.
1350 தொட்டல் கை தீண்டலுந் தோண்டலு மூண்டலும்.
1351 தொடுத்தல் வளைத்தலும் பிணித்தலும் பற்றலும்
சொற்கூட் டலுமெனச் சொல்ல லாகும்.
1352 தொடுப்பு கோணலு [1]முழவு மாகும்.
1353 தொடை பாவுறுப்பு மாலையுங் கணையுஞ்
சொல்லுந் தொடர்புந் தொங்கலு மாகும்.
1354 தொண்டு வழிபாடு மொன்பதுஞ் சுருக்கும்
பழமையு மடிமையும் பகர லாகும்.
1355 தொண்டை யானைத் துதிக்கையு மிடறும்
கொவ்வையு மெனவே கூற லாகும்.
1356 தொண்டிகை வாச்சியமு மணிகலனு மாகும்.
1357 தொத்து பூங்கொத்துந் தொண்டு மாகும்.
1358 தொய்யி லழகு முழவுஞ் சேறும்
துயருங் குழைவு மெழுதலு மின்பமும்
தொய்யிற் புதலுஞ் சொல்ல லாகும்.
1359 தொழுவி ரேபதியும் கோயு முழலையும்
தோழமுந் தொழுதி டென்றலுஞ் சொல்லும்.

---

(பிரதி.) [1] முளவு.

1360 தொழுதல் [1] வளைதலுந் தாழ்தலு மாகும்.
1361 தொழுதிப்புள் ளொலியுங் கூட்டமு மாகும்.
1362 தொறு ஆனிரையுந் தோழமுந் தொகுதியும்
அடிமையு மெனவே யறைய லாகும்.

தோ

1363 தோகை தொங்கலும் வாலு மயிலும்
பெண்ணுஞ் சுற்றாலும் பேச லாகும்.
1364 தோடு தொகுதியும் பூவி னிதழும்
[2] பனையி னிதழுங் குன்று மனையுமாம்.
1365 தோடிரியங் கூத்தும் வாச்சியமு மாகும்.
1366 தோட்டி யங்குசமுங் கபாடமுந் தோட்டியும்.
1367 தோணி நீருங் கடைகாலுந் தெப்பமும்
தொளியு மம்பு மதிலுறுப்பு மாகும்.
1368 ‡ தோண்டல் முகத்தலும் அகழ்தலு மாகும்.
1369 தோமரம் வாச்சியமு மோரா யுதமும்.
1370 தோரை கைவரையும் பொன்னூலும் வேயும்
நெல்லின் விகற்பமு மரிசியுந் தாம்பும்.
1371 தோல்தோற் பலகையுந் தோல்வியுந் துருத்தியும்
யானையும் வனப்புஞ் சொல்லு மாகும்.
1372 தோரணங் கவியு நிலைத்தேரு மாகும்.
1373 தோழி [3]யரக்கும் பாங்கியு மாகும்.
1374 தோள்புயமுந் துளையும் தூங்கிய கையும்.
1375 தோற்றல் வலியும் பிறப்புந் தோன்றுதலும்
தோல்வியும் புகழுஞ் சொல்ல லாகும்.
1376 தோற்ற முண்டாக்கலும் ஏற்றமும் பிறப்பும்
ஆற்றலு முயர்ச்சி[யுங்] காண்டலும் புகழும்.

---

(பிரதி.) [1] வளைத்தலுந் தாழ்த்தலு. [2] பனையுமிதழுங், [3] யறக்கும். ‡ இச் சூத்திரம் சில பிரதிகளில் இல்லை.

1377 தோன்றல் முல்லைத் தலைவருஞ் சேயும்
காதனு மெனவே நவில லாகும்.

தகரவருக்கம் முற்றிற்று.

---

## நகர வருக்கம்

### ந

1378 நகைபல்லு மகிழ்வு மொளியு மிகழ்ச்சியும்
சிரிப்பு முகமலர்ச்சியு முவகையு மாகும்.
1379 நகமரப் பேரு மலையு முகிரும்.
1380 நகுத லொளிர்தலு நகுதலு மாகும்.
1381 நகரே மனையு மூருங் கோயிலும்.
1382 நக்க னருகனு நிருவாணியுஞ் சம்புவும்.
1383 நக்கல் தீண்டலுந் தின்றலு நகைத்தலும்
நக்குதலு மகிழ்ச்சியு நவில லாகும்.
1384 நடையோர் கூத்தும் வாயிலும் நடையும்
செல்வமு மொழுக்கமும் வழியு மாகும்.
1385 நடலை வீம்பும் வஞ்சனையும் பொய்யும்
நடுங்கிடனு நடுக்கமு நவில லாகும்.
1386 நட்ட நடமுங் கேடு மாகும்.
1387 நடுநடுச் சொல்லு மிடையு நாப்பணும்.
1388 நதியே மலையு மாறு மாகும்.
1389 நத்த நகர்ப்புறனு மூரு மல்லும்
சங்கு மாக்கமு மூமையு மிரவும்.
1390 நந்தி பேரிகையு மிடபமுஞ் சிவனும்
செக்கா னுமெனச் செப்ப லாகும்.
1391 நந்தல் கேடு மாக்கமு மாகும்.

1392 நந்து நத்தையுஞ் சங்கு மாகும்.

1393 நயமே யின்பமு ஞாயமு நன்றியும்.

1394 நயந்தோன் கணவனு நண்பனு மாகும்.

1395 நரைவெண் பரியும் வெண்மையுங் கவரியும்
நாரையு மேறு நவில லாகும்.

1396 நரந்தங் காக்கையு மணமுங்கத் தூரியும்
நாரத் தையுமென நவில லாகும்.

1397 நலமுப காரமுந் தேனுஞ் சுகமும்.

1398 நவங்கார் காவலும் பூமியும் புதுமையும்
கூத்தும் பாம்பு மொன்பதுந் தொண்டும்
பழமையுங் கேண்மையும் பகர லாகும்.

1399 நவிலல் சொல்லுதலும் பண்ணுதலு மாகும்.

1400 நவிரம் மருதயாழ்த் திறமு மலையும்
புன்மையு மயிரு மலையி னுச்சியும்
உச்சியு மெனவே யுரைக்க லாகும்.

1401 நவிர்தக் கேசியு மாண்பான் மயிரும்
மருதயாழ்த் திறமும் வாளு மாகும்.

1402 நவியங் கோடாலியு மழுவு மாகும்.

1403 நவ்வி மரக்கலமு மானு மாகும்.

1404 நவமணி பொன்னு நவமணியு மாகும்.

1405 நள்ளியோர் வள்ளலு நண்டு மாகும்.

1406 நளினி செய்யாளும் வாவியும் பண்ணும்.

1407 நளியே குளிரும் வெறுப்பு நண்டும்
பெருமையுஞ் செறிவும் பேச லாகும்.

1408 நளமே [1]தாமரையு மகலு மாகும்.

---

(பிரதி.) [1] சிங்கமு.

1409 நறவந் தேனு நாகமு மாகும்.
1410 நனைபூ மொட்டுங் கள்ளு மதமும்.
1411 நனந்தலை நடுவு முச்சியு மாகும்.
1412 நனவு தெளிவு மகலமுங் களனும்.
1413 நன்று மிகுதியு நன்மையு மாகும்.
1414 நன்னி தவசமுஞ் சுக்கிலமு மாகும்.

நா

1415 நாகம் விண்ணுங் குரங்குந் தூசும்
பண்ணொரு மலையும் பாம்பும் யானையும்
புன்னையுங் காரீயமு மோசையு ஞாழலும்.
1416 நாகு விலங்கின் பெண்ணு மரையும்
மேதியு மீனு விளமையு நத்தையும்
நாகு மிள[மர]மு நீர்வாழ் சாதியும்
ஆரமு மெனவே யறைய லாகும்.
1417 நாஞ்சில் கலப்பையு மதிலு மாகும்.
1418 நாடி நாழிகையு நரம்பு நாசிகையும்.
1419 நாட்டங் கண்ணும் பண்ணும் வாளும்
ஆடலு மெனவே யறைய லாகும்.
1420. நாண்மாதர் மங்கல நாணு நாணமும்
கயிறு மெனவே கழற லாகும்.
1421 நாதன் சிவனுங் கோவு மூத்தோரும்
கேளு மெனவே கிளத்தினர் புலவர்.
1422 நாப்ப ணடுவுந் தேரின் றட்டும்
யாழுறுப் புமென நவில லாகும்.
1423 நாமம் பெயரு மச்சமும் பெருமையும்.

1424 நாரம் நீரு மம்பும் வாசியும்
ஈரமுங் கயிறு மன்பு மாகும்.
1425 நாரி பன்றுடையும் வில்லின் நாணும்
கறவும் பெண்ணு நவில லாகும்.
1426 [1]நால்வா யன்போ கியுமைங் கரனும்.
1427 நாவிதன் பூர நாளு மறுமீனும்
இரேபதி யுமயிர் வினைஞனு மாகும்.
1428 நாழியுட் டுளையும் பூரட் டாதியும்
நாழிகையும் படியு நவில லாகும்.
1429 நாளே செவ்வியு நாளு மலரும்
உடுவுங் காலையு முரைக்க லாகும்.
1430 நாளி நாயுங் கள்ளு மாகும்.
1431 நாற்றந் தோன்றலு நாறுதலு மாகும்.
1432 நாறு நாற்றமு செல்லு நாறும்.
1433 நானங் கத்தூரியு [2]மணமுங் கவரி
மாவும் பூசுவனவு நீராடலு மாகும்.
1434 நான்முக னருகனும் வேதனு மாகும்.

நி

1435 நிசியரி சனமும் பொன்னு மிரவும்
இருளு நீலமு மியம்ப லாகும்.
1436 நிசித மிகழ்ச்சியும் பொய்யுங் கூர்மையும்.
1437 நிதம்ப மல்குலும் மலையின் பக்கமும்.
1438 நிதிலைவப்பும் பொன்னு மிருவகை நிதியும்
கதையு மெனவே கழற லாகும்.
1439 நித்தியந் தினமு மழிவில் பொருளும்.

(பிரதி.) [1] நால்வாய்மாப். [2] ஞானமும்.

1440 நிமிர லுயர்வுஞ் சோறு மாகும்.
1441 நியமஞ் சுடுகாடுங் கோயிலும் வீதியும்
கடையு நிச்சயமு நகரமுந் தவமும்
நியமஞ் செய்தலு மொருபட்சியு மாகும்.
1442 நிருமித்தல் படைத்தலு மாராய் தலுமாம்.
1443 நிரப்புக் குறைபாடு மின்மையு மாகும்.
1444 நிலையே பொழுதுங் குணமு முறைமையும்
நிலைபெறு மாறு முத்தியு மாகும்.
1445 நிலவு சந்திரனு மொளியு மாகும்.
1446 நிவப்பு நிவத்தலுஞ் சேணு நீளமும்.
1447 நிழல்மரக் கொம்புஞ் செல்வமுங் குளிர்ச்சியும்
சாயையு நோயுங் கிருபையு மாகும்.
1448 நிழற்ற னிழற்செயலு நிழலு நுணுக்கமும்
நிரம்பா மென்சொல்லு நிகழ்த்தினர் புலவர்.
1449 நிறைநீர்ச் சாலு மாசையு முணர்வும்
துலாமு மழியா நிலையுஞ் சொல்லுவர்.
1450 நிறம்பிர காசமு நிறமு மார்பும்.

நீ

1451 நீக்கல் கொல்லலு நீக்கலு மாகும்.
1452 நீத்தம் வெள்ளமு நீரு மாகும்.
1453 நீப நீர்க்கடம்பு முத்திரட் டாதியும்
நிமித்தமு மெனவே நிகழ்த்தினர் புலவர்.
1454 நீலி சங்கரியு மாலுந் துர்க்கையும்
அவுரியுங் கறுப்பு மறைய லாகும்.
1455 நீலங் காலமு நீல நிறமும்
மணியு மிருளு நெய்தலும் பனையும்.
1456 நீல் நீலநிறமுங் காற்று மாகும்.

1457 நீவி யாடையு மிறகு மழித்தலும்
துடைத்தலுங் கொய்சகமுஞ் சொல்ல லாகும்.
1458 நீழ லொளியு நிழலு நகையும்
ஆற்பத முமென வறைய லாகும்.

நு

1459 நுணங்கு தேமலு நுண்மையு நுனியும்.
1460 நுணலை யெணுணு மோலையும் பிணியும்.
1461 நுதம்பு கள்ளு மமுது மாகும்.
1462 நுதலே நெற்றியும் புருவமுங் கருதலும்
புதலு மெனவே புகல லாகும்.
1463 நுரையே வெண்ணெயு நுரையு மாகும்.
1464 நுவனே திணைமாவு நுண்மையு நூலும்.
1465 நுனியே நுண்மையு நுனியு மாகும்.

நூ

1466 நூல் சாத்திரமு நூலுங் கொடியும்
இல்லை யெனலும் எண்ணலும் வேதமும்.
1467 நூலோ ரமைச்சரும் பார்ப்பாரும் புலவரும்.
1468 நூழில் செக்கும் யானையுங் கொடியும்
திரையும் நுண்பொடியுங் கோறலுஞ் செப்புவர்.
1469 நூன நிச்சயமுங் குறைவு மாகும்.

நெ

1470 நெகிழுஞ் சங்கிலியும் விலங்கு மாகும்.
1471 நெஞ்சு மார்பு மனமு மாகும்.
1472 நெடுமை பெண்மயிரும் வார்தலும் நெடுமையும்
நெட்டிா லுமமு நெட்டியு மாகும்.
1473 * நெட்டை நெடுமையு நெய்யு மாகும்.

* இது ஒரு பிரதியில் இல்லை.

1474 நெய்தல் கடற்சார்பு நெய்தற் பூவும்
சாபறையு நெசவுஞ் சாற்ற லாகும்.
1475 நெல்லே வாகையு நெல்லு மாகும்.
1476 நெற்றி படையுறுப்பு நெற்றியு மாகும்.
1477 நெறியே நீதியும் வழியு மாகும்.

நே

1478 நேத்திரம் கண்ணும் பட்டா டையும்.
1479 நேமி சக்கரமும் வட்டமு மூங்கிலும்
பூமியுங் கடலு நேமிப் புள்ளும்
சகுனமுந் தேர்க்காலுஞ் சாற்ற லாகும்.
1480 நேய மன்பு நெய்யு மெண்ணெயும்.
1481 நேர்தலைப் படலுஞ் சமனு மீதலும்
பாதியு நெடிலு மொப்பு நுட்பமும்
உடன்பாடு நேரு மஞ்சமுந் தனியும்
மிகுதியு மெனவே விளம்ப லாகும்.
1482 நேர்த லிசைதலு மெலிதலும் வேண்டலும்
எதிர்தலு மெனவே யியம்ப லாகும்.
1483 நேர லுடன்பாடு மண்டலு மாகும்.

நொ

1484 நொச்சி மதிலும் மதிலின் காவலுஞ்
சிற்றூரு நொச்சியுஞ் செப்ப லாகும்.
1485 நொடியே வார்த்தையுங் காதையு நொடியும்.
1486 நொறில் சீக்கிரமு மொடுக்கமு நுடக்கமும்.

நோ

1487 நோக்குப் பார்வையுங் காதல்தரு மாதரும்
அழகும் மெனவே யறைய லாகும்.
1488 நோற்றல் பொறையுந் தவஞ்செய் தலுமாம்.
1489 நோனமை பொறுமையுந் தவஞ்செய் யாமையும்.

1490 நோனர் தவமில் லோரும் பகைவரும்.
1491 நோன்மை வலியுந் தவமும் பொறையும்
எண்ணு மெனவே யியம்ப லாகும்.

நகரவருக்கம் முற்றிற்று.

---

## பகர வருக்கம்

### ப

1492 [1]பகவனே சிவனு மாலும் வேதனும
தியும் பரிதியும் புத்தனுஞ் செப்பும்.
1493 பகல் நுகத்தாணியும் ஒளியும் முகிர்த்தமும்
பானுவு நடுவும் பகலுஞ் செயலும்
[2]பிரிவும் பாணியு மிரவு நாளும்.
1494 பகையே யடித்தலுஞ் சார்தலும் பகையும்.
1495 பகங்கொக்கும் யோனியும் பகர லாகும்.
1496 பகழி யம்பும் அம்பின் குதையு மாகும்.
1497 பகுதி கூட்டமும் பகுதியு மாகும்.
1498 பக்கம் பாங்குந் திதியு மன்பும்
சிறகு நட்புஞ் செப்ப லாகும்.
1499 பகர்தல் விற்றலும் பேசலு மாகும்.
1500 பகடு [3]தோணியும் கடாவு மெருதும்
பெருமையும் யானையும் பேச லாகும்.
1501 பங்கந் திவினையும் பின்னமுஞ் சேறும்
திரையுந் தூசு முடமுங் குற்றமும்.
1502 பங்கியாண் மயிரும் பிறமயிரு மாகும்.
1503 பங்கய னருக்கனும் பிரமனு மாகும்.
1504 பங்கு முடமும் பாதியுஞ் சனியும்
பகுத்தலு மெனவே பகர லாகும்.

---

(பிரதி.) 1 பகவனுஞ். 2 பரிவு. 3 தெப்பமுங்.

1505 பச்சை மரகதமு மணமு மாலும்
புதனுந் தோலும் புந்தியு நிறமும்
பச்சையு மிலாபமும் பகர லாகும்.
1506 பசும்பை மயிரும் பசும்பையு மாகும்.
1507 பசுமை யெழுதமும் பசப்பு மாகும்.
1508 *பசையே லாபமும் ஆசையு மாகும்.
1509 பசுவறி விலாத பாவியும் பசுவும்
சிவனு மெருதுஞ் செப்ப லாகும்.
1510 பஞ்சஞ் சிறுமையும் ஐந்து மாகும்.
1511 பஞ்சரஞ் செருந்தியுங் கூடு மாகும்.
1512 படைபடைக் கலமுங் கலப்பையுந் தானையும்
பல்லணமும் படுக்கையும் பகர லாகும்.
1513 படரே நினைப்பும் வீரரும் பகையும்
பரிவும் புதலுங் கொடியுந் தூதரும்
கோவு நடையும் படர்ச்சியு மாகும்.
1514 படி சோபானமு முவமையு நாழியும்
பூமியும் பகையு மங்க வடிவும்
நீரு மெனவே நிகழ்த்த லாகும்.
1515 படகங் [1]கவரி மாவும் பணவையும்
பாணும் பண்ணு மொருவாச் சியமும்.
1516 படுவே நன்மையு நீர்நிலையுங் கள்ளும்
படுக்கையு மடுவு மரத்தின் குலையும்
வெள்ளியு முகரிமையும் விளம்ப லாகும்.
1517 படிவ நோன்பு முடலு மாகும்.
1518 படங்கு மேற்கட்டியுஞ் சீலைக் குடிலும்
கொடியு மெனவே கூற லாகும்.

---

* இச் சூத்திரம் சில பிரதிகளில் இல்லை.
(பிரதி.) 1 கரிவரி.

1519 பட்ட மாயுதமு மேலாம் பதமும்
தூசு யோடையும் பரிசையும் [1]வட்டையும்
மாச்சேக்கையுங் கவரி மாவு நுதலணியும்.
1520 பட்சி குதிரையும் பட்சியு மாகும்.
1521 படுத லொலியு முண்டா குதலும்
பூத்தலும் இன்றுகுதலும் புகுதலும் புகல்வர்.
1522 படலை பரந்தவாய்ப் பறையு மாலையும்
பரியின் [2]கோவையும் படர்தலு மாகும்.
1523 படலிகை பீர்க்கும் பரந்தகைம் மணியும்
பூத்தட்டும் வட்டமும் புகலுவர் புலவர்.
1524 [3]பட்டாரகர் தேவரு மருகரு மாகும்.
1525 படப்பை பசுநிறையுந் தோட்டமு நகரும்
காடு மெனவே நவிற்றினர் புலவர்.
1526 பட்டு சிற்றூரும் பட்டு மாகும்.
1527 படாமிடு திரையு மாடையு மாகும்.
1528 பட்டிகை கச்சும் பணையுந் தோணியும்
இரதமு மெனவே யியம்புவர் புலவர்.
1529 படுவி கள்ளுவிற் பாளுங் குண்டமும்.
1530 பட்டிமை களவும் வஞ்சமு மாகும்.
1531 படங்கட் செவியின் படமுந் தூசுஞ்
சித்திரப் படமுங் கரிமுக படாமுங்
கொடியு மெனவே கூறினர் புலவர்.
1532 படிறு பொய்யுங் களவும் வஞ்சமும்.
1533 பட்டி நாயுங் களவும் பிள்ளையும்.
1534 பணைபரிப் பந்தியும் வயலும் பருத்தலும்
வேயு முரசு மரக்கோடுமெ பிழைத்தலும்
படுத்தலும் பெருமையும் பணையும் போதியும்.

(பிரதி.) [1] தம்பட்டமும். [2] கோடையும். [3] பட்டாரகன்.

1535 பணிதோற் கருவியுஞ் சொல்லுந் தொழிலும்
பணிதலும் பாம்பும் பெருமையும் ஏவலும்.
1536 பண்டி சகட்டமும் யானையும் வண்டியும்
உரோகணி யுமென வுரைத்தனர் புலவர்.
1537 பண்பரிக் கலணையும் பண்ணும் பாட்டும்
பப்பு மாழமு மாதர் கூட்டமும்.
1538 பண்ணை மகளிர் விளையாடலும் வயலும்
மாதர் கூட்டமு மிருகத்துஞ் சிடமும்
மருத நிலமுந் தண்ணீர்த் தாழ்வும்
சபையுந் தண்ணடையுஞ் சாற்ற லாகும்.
1539 பணம்பொற் காசும் பாம்பின் படமும்
பணமும் பாம்பு மெனப்பகர்ந் தனரே.
1540 பண்ணவன் முனிவனுந் தேவனு மருகனும்
ஆசா னுந்திற லோனு மாகும்.
1541 பண்ணவர் துறந்தோருந் தேவரு மாகும்.
1542 பணவை கழுதும் பரணு மளவும்
புள்ளு மெனவே புகன்றனர் புலவர்.
1543 பண்டம் பணிகாரமும் பொன்னு மாகும்.
1544 பணிலஞ் சலஞ்சலமுஞ் சங்கு மாகும்.
1545 பதலை யுடுக்கு மொருகட் பறையும்
தாழியு மலையுஞ் சாற்றினர் புலவர்.
1546 பதுக்கை சிறுதிட்டையும் பரலுந் தூறும்
பாறையு மெனவே பகர்ந்தனர் புலவர்.
1547 பதங்கம் விட்டிலும் பறவைகளு மாகும்.
1548 பதம்பல் சிறப்பும் வழியும் பொதுவுஞ்
சோறு முணவுஞ் சொல்லும் பாதமும்
ஈரமுஞ் சேமமுங் காலமுந் தூசும்
இன்பமுஞ் செவ்வியுங் குழைவும் விழாவும்
அமைதலும் பாவின் பதமும் பதமும்.

1549 பதவி மேலாம் பதமும் வளமும்.
1550 பத்திரி காளியு மம்பு மிலையுங்
குதிரை யும்புட் பொதுவுங் கூறும்.
1551 பத்தி வழிபாடு மொழுக்கமு முறையும்
அடைப்பு மெனவே யறைந்தனர் புலவர்.
1552 பதிமூத் தோரு மன்னனும் பரமனுங்
குதிரையு மூருங் கணவனுஞ் செல்வனும்
பிறையு[ம்] பரவலும் பதித்தலு மாகும்.
1553 பத்திரம் வனப்பு நன்மையும் படையுஞ்
சிங்கா சனமு மிலையுஞ் சிறகும்
அத்திர மும்மென வறைந்தனர் புலவர்.
1554 பதணம் யானையு மரணு மாகும்.
1555 பதாகை கேதனமும் வல்லியும் பகரும்.
1556 பந்தங்கை விளக்கு மழகுங் கிளையும்
உண்டையுங் கட்டுப் பாடுறு தளையும்
பாசமு மிலையும் பகர்ந்தனர் புலவர்.
1557 பந்து கந்துகமு நீர்தூங் துருத்தியும்
கட்டும் பந்துங் கழறினர் புலவர்.
1558 பப்புப் பரப்பு மொப்பும் பகரும்.
1559 பம்பர மாடு பம்பரமு மேருவும்.
1560 பம்ப லெழுச்சியும் பொன்னும் பொலிவும்
துன்னலும் வலியுந் தொடர்தலு மாகும்.
1561 பயஞ்சுவை நீரும் பாலும் பயனும்
படையு மச்சமும் பொன்னுங் குளமும்.
1562 பயிர்விதந்து கட்டிய வழக்கும் பைங்கூழும்
ஒலியும் பயிலும் விலங்கி னொலியும்
பசும்பு லும்புள் ளொலியும் பகர்வர்.
1563 பயம்பு பள்ளமும் யானை வீழ் குழியும்.

1564 பயோதர முலையும் புயலுங் கடலும்.
1565 பயல் சிற்றாளும் பள்ளமும் பாதியும்.
1566 பரவை கடலும் திருமக ளாடலும்
பரப்பு மெனவே பகர்ந்தனர் புலவர்.
1567 பரித லறுத்தலு மிரங்கலு மன்பும்.
1568 பரம்பரிக் கலணையுங் கவசமும் பாரமும்
தேகமு மேலு மத்தியு முன்பும்.
1569 பராகம் காவாயு மலரின் றாளும்
வாணியு மிரேணுவு மெனவழங் கினரே.
1570 பராக்கிரமம் வலியும் வீரமு மாகும்.
1571 பரிபாது காத்தலும் வருத்தமுங் குதிரையும்
பருத்தியுஞ் செலவுஞ் சுமத்தலு வேகமும்
விரைவும் பெருமையுங் காழ்த்தலு மிகுதியும்.
1572 பரிகங் கிடங்கு மேடையுங் கணையமும்
மதிலு மெனவே வழங்கினர் புலவர்.
1573 பருவரல் துக்கமும் பொழுதுஞ் சுமேரமும்.
1574 பரிதி யாதித்தனும் பொன்னு மொளியும்
சக்கர மும்பரி வேடமும் வட்டமும்.
1575 பரும முயர்ச்சியு மேகலையும் பரியும்
தூசு மொழியும் பரிமேற் கலணையும்
சானமுங் கவசமுஞ் சாற்ற லாகும்.
1576 பரப்புக் கடலும் பரப்பு மாகும்.
1577 பரசு மூங்கிலு மழுவு மாகும்.
1578 பருப்பு மின்னும் பருப்பு மாகும்.
1579 பரிவு துன்பமு மின்பமு மன்பும்.
1580 பரதர் நுளையரும் வணிகரு மாகும்.
1581 பரத்தல் தொழிலும் பரத்தலு மாகும்.
1582 பரணி மருந்துச் செப்பும் பரணியும்.

1583 பரித்த லறுத்தலுந் தாங்கலு மாகும்.

1584 பரதம் பரதமு நடனமு மாகும்.

1535 பலமே சேனையுங் கிழங்கும் பயனும்
காயு நிறையும் பழமு மாகும்.

1586 பலிவெண் ணீறுஞ் சோறும் பூசையும்
[1]பிச்சையும் பலித்தலுந் தாருவுங் காகமும்
தேவுண வுமெனச் செப்பினர் புலவர்.

1587 பலிதம் காய்த்தருவும் நரையு மாகும்.

1588 பலாசு பச்சை நிறமு [2]மிலையும்
பலாசு மரமும் பகர்ந்தனர் புவவர்.

1589 பல்லியம் வாச்சியமுங் குதிரைப் பந்தியும்
தொங்கலும் பாணியு மென்பாலு மாகும்.

1590 பல்லமோர் சணக்கும் பாணமுங் கரடியும்
பரிமாவின் கலணையும் பகர லாகும்.

1591 பவமே பாவமுந் தோற்றமு மாகும்.

1592 பவித்திரம் தருப்பையுஞ் சுசியு மாகும்.

1593 பவனஞ் சுவர்க்கமு நாடும் பொழுதும்
கோயிலும் மனையும் பூமியுங் காற்றும்
இராசி யுமென வியம்ப லாகும்.

1594 பழமை முதுமையும் வேண்டற் பாடும்
யானையு மெனவே யியம்பினர் புலவர்.

1595 பழங்கண் ஒலியும் புன்கணும் பழுதும்
பயனின்மையு மாசும் பகர லாகும்.

1596 பழுது நிறைவும் பழுது மிடறும்.

1597 பள்ளி சிற்றூருங் கோயிலும் பாயலும்
பகைவ ரிடமும் துயிலிடமு மாகும்.

1598 பளிங்கு பார்க்கவனும் பளிங்கு மாகும்.

---

(பிரதி.) [1] மிட்சையும். [2] மலையும்.

1599 பறவை யிரவுண் டியும் பறவையு மிறகும்
பொழுது மெனவே புகன்றனர் புலவர்.
1600 பறம்பு வெற்பு மூலையு மாகும்.
1601 பற்றல் தொடலும் வளைதலும் பிணித்தலும்.
1602 பறை வாச்சியமும் வார்த்தையு மிறகும்.
1603 பன்னல் தேர்தலும் நெருக்கமும் பருத்தியும்
பேசசு மெனவே பேசினர் புலவர்.
1604 பனிசர் திரனுங் குளிரு மச்சமும்
பனியுந் துன்பமு நடுக்கமு மாகும்.
1605 பனையனுட னாளும் பனையு மாகும்.
1606 பனுவல் வார்த்தையுஞ் செய்யுளு நூலும்.

பா

1607 பாகன் புதனும் பாகனு மாகும்.
1608 பாகு பாலும் பகுப்பும் பாக்கும்
பாகனும் வெல்லமும் குழம்பும் பாணியும்.
1609 பாக்கு எதிர்காலத் திடைச்சொல்லும் பாக்கும்.
1610 பாகலே கார வல்லியும் பலாவும்
மூப்பா கலுமென மொழிந்தனர் புலவர்.
1611 பாகரம் புரிசையு ளுயர்த்திய நிலமும
பரிக முமெனப் பகர்ந்தனர் புலவர்.
1612 பாக்கம் நெய்த லூரு மூரும்
மருத வூரு மெனவழங் கினரே.
1613 பாகம் பாதியு மளவும் பதமும்
பட்டும் சர்க்கரையும் பலகூறு மாகும்.
1614 பாங்கர் பக்கமு மிடமும் பக்கமும்.
1615 பாங்கு பாலும் பக்கமும் பரிசும்
கன்மமுந் தோழியுங் கழற லாகும்.
1616 பாங்கன் பரிசும் பக்கமுந் தோழனும்.

1617 பாசு வேயும் பசுமையு மாகும்.
1618 பாச மூசித் துளையுங் கயிறும்
பேயு மன்பு நூலு மாகும்.
1619 பாசி மழையும் பாசியு மாகும்.
1620 பாசனம் உண்கலனும் பாண்டமுஞ் சுற்றமும்.
1621 பாடகஞ் சிவப்பும் பாடகமு நீழலும்.
1622 பாடு பெருமையு மொலியும் படுதலும்
பக்கமும் பண்பு மிடமும் பட்டும்.
1623 பாடி நகரும் நாடும் படையும்
பாசறையு மாய மூரும் பகர்வர்.
1624 பாடை யோரிசையு மாசந்தியு மாகும்.
1625 பாடலஞ் சேரன் பரியுஞ் சிவப்பும்
பாதிரியுஞ் சபதமு மூங்கிலு மாகும்.
1626 பாட்டி பாணிச்சியும் பாட்டியு நாயும்
பன்றியு நரியும் பாட்டிமையு மாகும்.
1627 பாணி பாட்டி னொலியுஞ் சோலையும்
பண்டமும் பாடலு மூரும் நீரும்
அழகுங் கையும் படையும் பற்றும்
நாடு நெடும்பொழுதுங் கானு மாகும்.
1628 பாண்டில் பரியங்கமும் வேயு மூர்தியும்
எறு மிடப ராசியும் வட்டமும்
கட்டிலும் தாளமும் விளக்கின் றகழியும்
வண்டிலு மெனவே வழங்கினர் புலவர்.
1629 பாண மேக வண்ணக் குறிஞ்சியும்
பட்டுங் கணையும் பகர்ந்தனர் புலவர்.
1630 பாதி சனியும் பாதியு மாகும்.
1631 பாதிரி மூங்கிலும் பாடலமு மாகும்.
1632 பாத்துப் பகுத்துண்டலுங் கஞ்சியுஞ் சோறும்.

1633 பாத்தி சிறுச்செய்யும் வீடும் பகுத்தலும்
பாண்டமும் பத்தியூர் பகர்ந்தனர் புலவர்.
1634 பாதவங் கிரியுந் தருவு மாகும்.
1635 பாம்பு வரம்பும் பாம்பின் விகற்பமும்.
1636 பாயசம் பாற்சோறும் பாற்குறண் டியுமாம்.
1637 பாயல் வீழ்தலு மெத்தையு மாகும்.
1638 பாய்மாப் புலியுங் குதிரையும் பகர்வர்.
1639 பாரி தூசும் பூமியுங் கட்டிலும்
கடலு மனைவியும் வள்ளலுங் கள்ளும்
பார மும்பா சறையும் பகர்வர்.
1640 பார் மறையோரும் பூமியும் புத்தனும்
கல்லின் பரப்புந் தேரின் பரப்பும்
உரோகணி யுமென வுரைத்தனர் புலவர்.
1641 பாரம் பொறையும் புவியும் வன்பாரமும்
கலனையுங் கவசமு நீர்க்கரையு நிறையும்
மரக்கல மும்விளை யாட்டும் வகுத்தனர்.
1642 பார்வை கண்ணு மதிப்புந் திவகமும்.
1643 பாராவாரங் கடலுங் கடற்கட் கரையும்.
1644 பாராட் டுக்கொண் டாடலு முலாவலும்.
1645 பாரதி தோணியும் பனுவ லாட்டியும்.
1646 பாரித்தல் தோற்றலும் பரப்புதலு மாகும்.
1647 பாலம் நீர்ப்பாலமு நெற்றியும் பரசும்.
1648 பாலே பக்கமும் பகுத்தலு மிடமும்
பாலுந் திசையும் வெண்மையு மியல்பும்.
1649 பாலி கள்ளும் பாலி யாறும்.
1650 பாலை வெம்மையும் புணர்ந்து போதலும்
பொருள்வயிற் பிரிதலும் பாடலும் பாலையும்
பாலைநிலப் பாட்டு[ம்] பிரிவு ணர்த்தலும்
[சொல்]புணர் பூசமுந் தருவுஞ் சுவையும்.

1651 பாலிகை யுதடும் பட்டவாள் மூட்டும்
வட்டமு மெனவே வழங்க லாகும்.
1652 பாவகன் தீயும் தீக்கட வுளுமாம்.
1653 பாவம் பாவனையும் மெய்யும் பாவமும்.
1654 பாவை பெண்ணும் பாவையு மாகும்.
1655 பாழி விண்ணுந் தவத்தோர் சாலையும்
ஊரும் படுக்கையு மொன்னல ரூரும்
பாயலும் விலங்கின் சேக்கையும் வலியும்
பாழு மலையின் முழையும் பகர்வர்.
1656 பாளிதம் பட்டும் கண்ட சருக்கரையும்
பாற்சோறுங் குழம்பும் பகர லாகும்.
1657 பானு வாதித்தனு மொளியும் பகலுமாம்.
1658 பானல் செய்யுங் கடலு நெய்தலும்
மருதமுங் கள்ளும் பரியும் வெற்றிலையும்.
1659 பாவே நூற்பா விகற்பமும் பனுவலும்
நூலும் பாத்தலும் பரவலும் பாம்பும்.

பி

1660 பிங்கலை யாக்கையு மோர்காற்று மாகும்.
1661 பிங்கலம் பொன்மையும் பொன்னு மாகும்.
1662 பிச்சமாண் மயிரும் பீலிக் குடையும்
வெண்குடை யுமென விளம்பினர் புலவர்.
1663 பிசிதம் நீறு மிறைச்சியும் வேம்பும்.
1664 பிசியரும் பொருளும் பொய்யும் சோறும்.
1665 பிசினன் பொய்யனுங் கோபனும் லோபனும்.
1666 பிஞ்ஞகம் பூளையும் குராற் பசுவு மாகும்.
1667 பிடகந் தந்திரமும் வேதமு மாகும்.
1668 பிணைபெண் விலங்கும் பிணையல் மாலும்
ஆசையுந் தொடர்பு மறைந்தனர் புலவர்.

1669 பிணியே நோயுங் கட்டு மாகும்.
1670 பிண்டந் திரளையும் பிச்சையும் யாக்கையும்.
1671 பிணாப்பெண் விலங்கும் பெண்ணு மாகும்.
1672 பிண்டி யசோகும் செல்வின் மாவும்
பிண்ணாக்குஞ் சோறு மோர்நாளு மாகும்.
1673 பிணர் [1]சர்ச்சரையுங் கோங்கு மாகும்.
1674 பிணிமுகம் புட்பொது வன்னமு மயிலும்.
1675 பிணவல் பெண்ணும் நாயும் பேசுவர்.
1676 பித்திகை சுவர்த்தலமும் கருமுகையு மாகும்.
1677 பிதிரே கதையு மொடித்தலுந் தூவலும்
பிதிருந் தெய்வமும் இளையும் விகற்பமும்.
1678 பிதாமும் மூர்த்தியு நாரையுந் தந்தையும்.
1679 பித்தன் தேரானும் பித்தனு மாகும்.
1680 பிப்பிலி யரசுந் திப்பிலியு மாகும்.
1681 பிரம்பு செய்யு மரிசியும் வேலையும்
தேர்[மு]ட்டியும் பிரம்புஞ் சொல்ல லாகும்.
1682 பிரசந் தேனுங் கள்ளுந் தேனீயும்
இறாலும் பிரமரமு மிசைத்தனர் புலவர்.
1683 பிரம சாரியர் வேதியரும் பெருந்தவரும்.
1684 பிரமம் மும்மூர்த்தி யும்பெரி யோரும்
வேதாந்தமும் வேள்வியு ஞானமும் வேதமும்
முத்தியுந் தருமமும் பூமியுந் தகரும்
மந்திர முஞ்சுடர் மூன்று மாகும்.
1685 பிலவங்கம் குரங்குந் [2]தேரையு மாகும்.
1686 பிள்ளை வயிரவனுங் காக்கையு மகனும்
இளமர முமென வியம்பினர் புலவர்.

---

(பிரதி)—1. சற்கரையுங். 2. தெரியு.

1687 பிளிறல் எழுத்திலா வோசையும் ஆர்ப்பும்.
1688 பிறங்கல் வெற்பு மிசையு மிகுதியும்
நிறைவும் பெருமையு முயர்வு மாகும்.
1689 பிறங்கடை மைந்தனு மருகனு மாகும்.
1690 பிறக்கை பாவமும் பவமு மாகும்.
1691 பிறழ்த லொளிவிடலு நடுக்கமும் பெயர்தலும்.
1692 பின் பின்றோன்றலும் பிற்றைப் பொழுதும்
தங்கையுந் திருவும் சாற்ற லாகும்.

## பீ

1693 பீடிகை தட்டும் பீடமுங் கடையும்.
1694 பீதகஞ் சாந்தும் பொன்னும் பொன்மையும்
பிங்கல மும்மிரு வேலியும் பேசும்.
1695 பீதம் பொன்னும் பொன்மையுஞ் சாந்தும்.
1696 பீர்முலைப் பாலும் பீர்க்கு மச்சமும்
பச்சிலையும் பசலையும் பகர லாகும்.
1697 பீருப் புருவமு மச்சமுள் ளோனும்.
1698 பீரம்பூ வரசும் பீர்க்கும் வாகையும்.
1699 பீலிசிறு சின்னமும் பொன்னும் வாச்சியமும்
கலாபமு மால வட்டமுஞ் சவளமும்
பெருவரை யுங்காற் பீலியு மயிலும்.
1700 பீனம் பெருமையும் பாசியு மாகும்.

## பு

1701 புகை யோசனையுந் தூமமு மாகும்.
1702 புகலடைக் கலமுங் குதிரு முடலும்
வென்றியுஞ் சொல்லும் விளம்ப லாகும்.
1703 புகர்சுக் கிரனுங் குற்றமு மடிசிலும்
புகர்நிற மும்மெனப் புகன்றனர் புலவர்.

1704 புகழே புகழும் புகழ்தலு மகத்தியும்
வ[ர]கையு மெனவே வழங்க லாகும்.
1705 புங்க முயர்ச்சியு மம்பு மற்றாசும்
அம்பின் குதையு மறைய லாகும்.
1706 புட்டங் காகமும் புடவையு நிறைவும்.
1707 புட்கரம் நீரு மாகாயமும் பொலிவும்
வாளுறை குருகுந் தீர்த்தமும் பதுமமும்
பாண்ட முகமும் யானைக்கைந் நுனியும்
உட்செறி தாழு முரைத்தனர் புலவர்.
1708 புணையே மூங்கிலுந் தெப்பமு மாகும்.
1709 புணர்ச்சி கலவியுஞ் சேர்தலு மாகும்.
1710 புணர்வு தோய்ந்திடலு மிசைப்பு மாகும்.
1711 புணரி கடலுந் திரையுங் கரையும்.
1712 புண்டரிகம் புற்றும் புலியுமோர் நோயும்
குடையுங் கவரியு மாயனும் பதுமமும்
ஒருதிக் கானையுங் கழுகுமோர் பூடும்
வண்டு மரியணையும் வாசவனு மாகும்.
1713 புதனே புதனும் புத்திரு மாகும்.
1714 புதவு கதவுமோர் புல்லு மாகும்.
1715 புத்தேள் புதுமையுந் தெய்வமு மாகும்.
1716 புதைதல கைத்தலமு மம்புக் கட்டுமாம்.
1717 புதைகணைக் கட்டும் புதுமையு மறைவும்
அம்பு மெனவே யறைந்தனர் புலவர்.
1718 புத்தன் மாலு மருகனும் புத்தனும்.
1719 புதலோர் புல்லும் புருவமும் பூடும்.
1720 புந்தி புதனு ஞானமு மாகும்.
1721 புயமே மொய்ம்பும் வலியு மாகும்.
1722 புரமே யுடலும் புரியு முன்னுமாம்.

1723 புரவலன் வள்ளலும் வேந்தனு மாகும்.
1724 புரையே இல்லமும் பழுதுங் குற்றமும்
துளையு முயர்வு முவமையு மாகும்
1725 புரையோர் மேலோருங் கீழோரு மாகும்.
1726 புரிவு விரும்பலும் வேறுபடலுஞ் செயலும்.
1727 புரத்தல் வணங்கலுங் காத்தலுங் கொடுத்தலும்.
1728 புரியே விரும்பலுஞ் செய்தலும் புரமும்
சங்குங் கயிறுங் கட்டு மாகும்.
1729 புலிங்கம் அனற்பொறியும் சடகமு மாகும்
1730 புலத்தல் புலத்தலும் பூத்தலு மாகும்.
1731 புலமே யிடமு கடுகமும் புந்தியும்
விளைநிலமுந் திக்கும் புலனுந் தனிமையும்.
1732 புலவே யென்பும் புலான்முடைப் பெயரும்.
1733 புல்லே புதலும் புணர்ச்சியும் புன்மையும்
புலியும் பனையு மனுடமும் வலியும்.
1734 புலி சிங்கராசியும் சிங்கமும் புலியும
சாந்து மெனவே சாற்றினர் புலவர்.
1735 புலவர் கூத்தரு மறிஞரும் புதனும்
தேவருஞ் சளுக்கி வேந்தரும் புலவரும்
பாடக ருந்துதிப் போரும் பொருநரும்.
1736 புலம்பு தனிமையு மொலியு ம[ச்]சமும்
புலம்பலு மெனவே புகன்றனர் புலவர்.
1737 புவன முலகமு நீரு மாகும்.
1738 புழைக்கை யாளியும யானையுந் தோலும்
1739 புள்ளுவன் வேடனும கள்ளியும் வஞ்சனையும்.
1740 புளகங் கண்ணடியுஞ் சோறு மயிர்பொடித்தலும்.
1741 புளித்தல் ஆம்பிரமுஞ் செறித்தலு மாகும்.
1742 புளிதித் திப்பும் புளியு மாகும்.

1743 புள்ளே வண்டு மவிட்டமும் புள்ளும்.
1744 புள்ளி நண்டும் புள்ளியு மாகும்.
1745 புறம்பணை குறிஞ்சியு முல்லையு மாகும்.
1746 புறவங் குறிஞ்சியு முல்லைப் பதியும்
புறவமுங் கானு முல்லையு மாகும்.
1747 புறணி குறிஞ்சியு முல்லை நிலமும்
புறம்பு[ந்] தோலும் புகல லாகும்.
1748 புறமே யிடமு முதுகும் வீரமும்
1749 புற்றே யெழுத்துந் தலையும் புற்றும்.
1750 புனிதன் சிவனுந் தூயோனு மாகும்.
1751 புனைவு வினைதலு மெழிலும் பொலிவும்
ஒப்பனை யுமென வுரைக்க லாகும்.
1752 புன்கண் நோயு மெலிவுந் துன்பமும்.

பூ

1753 பூகங் கமுகுஞ் சபையுந் திரட்சியும்.
1754 பூக்கங் கமுகு மூரு நாடுங்
கூந்தற் கமுகுங் கூறினர் புலவர்.
1755 பூங்கற்று வனப்பும் பூகமும் புகல்வர்.
1756 பூசை யர்ச்சனையும் பூனையு மாகும்.
1757 பூட்கை சிங்கமு[1] மேற்கோளு மாகும்.
1758 பூதஞ் சீவனும் புனிதமும் பூதமும்
பரணியு மிறந்த காலமு முள்ளானும்
ஆலுமைம் பூதமு மறைந்தனர் புலவர்.
1759 பூதிநாற் கந்தமுஞ் செல்வமும் புவியும்
நரகமு முடம்பும் பூழ்தியுங் கொடுமையும்
நீறுந் தசையு மூழலு மாகும்.
1760 பூதிகம் பூமியுந் தேகமும் புகல்வர்.

---

(பிரதி) 1. ஞ்சனியனு.

1761 பூப்புப் பொலிவும் பூத்தலு மாகும்.
1762 பூபாலர் வேந்தரும் [2]வேளாளரு மாகும்.
1763 பூமரம் பூத்திடு மரத்தின் பெயரும்
அறிகுறி யுமென வறைந்தனர் புலவர்.
1764 பூமன் நான்முகனுஞ் செவ்வாயு மா[கு]ம்.
1765 பூருவம் பழமையு முன்புங் கிழக்கும்.
1766 பூவை காயாவுங் கயிறுங் கிளியும்
நாகண வாயு நவின்றனர் புலவர்.
1767 பூழ்க்கை யானையும் யாளியுந் தோலும்.
1768 பூழிலே யகிலும் நீலப் பெயரும்.
1769 பூழி புழுதியுஞ் சேறு மாகும்.
1770 பூழியன் வழுதியுஞ் சேரனு மாகும்.
1771 பூவே மலரு மழகுங் கூர்மையும்
விளர்நிலமும் பொலிவும் பூமியுங் கணவனும்
தாமரையுங் கண்ணிற் சார்ந்த பூவும்
பிறப்பு மெனவே பேசினர் புலவர்.

பெ.

1772 பெட்டல் விரும்பலும் வேண்டலு மாகும்.
1773 பெட்பு மேன்மையும் விருப்பமு மாகும்.
1774 பெண்ணை யோராறும் பனையு மனுடமும்.
1775 பெண்டிர் அலியும் பெண்ணு மாகும்.

பே

1776 பேடு பேடியு மன்மத னுடலும்
பறவைப் பேடு மூரு மாகும்.
1777 பேணல் மிகுத்தலும் பேணிக் கொள்ளலும்.
1778 பேதை குருடனும் பெண்ணு மூடனும்.
1779 பேதி பேதமு மிரதமு மாகும்.

---

(பிரதி.) 2. ஈவோரு.

1780 பேயே பேயு மில்லை யென்னுமாம்.
1781 பேராள னென்பதோர் காளு மிகுத்தோனும்.
1782 பேரே புகழு நாமமும் பெருமையும்.

பை

1783 பைதல் [3] துன்பமு மற்பமு மாகும்.
1784 பைங்கூழ் பயிரு நோயு மாகும்.
1785 பைத்த லுருத்தலும் பசத்தலு மாகும்.
1786 பைம்பொன் பசும்பொன்னு மேருவு மாகும்.
1787 பையங் கூடையுங் கோரையு மாகும்.
1788 பையுள் சிறுமையு நோயு மாகும்.
1789 பைமெத் தெனவும் பையும் பட்டமும்
அழகும் பசுமையு மாகு மென்பர்.

பொ

1790 பொக்கம் பொய்யும் மிகுதியு மாகும்.
1791 பொகுட்டுத் தாமரைப் பூவின் கொட்டையும்
நீரி லெழுந்த குமிழியும் பொருப்பும்.
1792 பொங்கல் கொதித்தலு மிகுதியு மாகும்.
1793 பொங்கர் சோலையும் பொருப்பு மரக்கோடும்
இலவ மரமு மிசைத்தனர் புலவர்.
1794 பொச்சாப்பு மறவியுந் தீதும் புகல்வர்.
1795 பொதுளல் செறித்தலுந் தழைத்தலு மாகும்.
1796 பொதிர்ப்பு வெடித்தலு மெறிதலும் பொதிர்வும்.
1797 பொத்தகங் கோசமுஞ் சித்திரப் புடவையும்
பொத்த கமும்பொது மையும் புகல்வர்.
1798 பொதியே மூடையும் பொதியு மாகும்.
1799 பொம்மல் பொலிவுஞ் சோறு மிகுதியும்
பொய்யு மெனவே புகன்றனர் புலவர்.

---

(பிரதி.) 3. பொற்கென்றலு.

1800 பொய்மரப் பொந்தும் பொக்கமும் பொய்யும்.
1801 பொய்த்தல் பொய்த்தலுங் கணிகை விளையாட்டும்.
1802 பொருள்சொற் பொருளும் மதலையும் பொன்னும்
பண்புந் தலைமை யும்பல் பண்டமும்
வாய்மை யுமென வழங்க லாகும்.
1803 பொருநர் போர்த்தலைவருங் கூத்தரும் பாணரும்
புரவலரும் வீரரும் புகன்றனர் புலவர்.
1804 பொழிலே புவியும் பெருமையுஞ் சோலையும்.
1805 பொறை துறுகல்லும் பூமியுங் கருப்பமும்
பாரமும் பொறையும் மலையு மாகும்.
1806 பொறிபுள்ளி மாவும் வரியுமைம் புலனும்
இயந்திர முந்திரு வுந்தீப் பொறியும்
இலாஞ்சினையுந் தோணியுஞ் செல்வமு மறிவும்
எழுத்து மெனவே யியம்பினர் புலவர்.
1807 பொற்பு வனப்பும் பொலிவு மொப்பனையும்.
1808 பொற்றை மலையுந் தூறு மாகும்.
1809 பொன் பஞ்சலோகமும் வனப்பும் திருவும்
பொலிவும் வியாழமும் பொன்னும் பானுவும்
இரும்பு மெனவே யியம்ப லாகும்.

போ

1810 போகி யிந்திரனும் பாம்பு மாகும்.
1811 போகில் புட்பொதுவும் பூவி னரும்பும்
பொகுட்டெங் கொப்பூழும் புகன்றனர் புலவர்.
1812 போக லுயர்வு நீளமும் போதலும்.
1813 போக்கு போதலுங் குற்றமும் வழியும்
இளமரமு மெனவே யியம்பினர் புலவர்.
1814 போசர் காவியும் வினைக்குடை யாரும்.

1815 போதக மாவின் கன்று மப்பமும்
யானைக்கன்று ஞானமு மிளமையும்
இளம்பனை யுமென வியம்பினர் புலவர்.
1816 போதம் யானைக் கன்றும் ஞானமும்
அறிவு நாவாயு மறைந்தனர் புலவர்.
1817 போந்தை யிளம்பனையு [4]மனுட நாளும்
1818 போந்து பெருச்சாளியும் பல்லியு மெலியும்
பனையு மெனவே பகர்ந்தனர் புலவர்.
1819 போர்வை தோலு மீக்கோளும் போர்த்தலும்.
1820 போர்நெற் போருஞ் சமருஞ் சதையமும்.
1821 போலே யொப்பு மசைச்சொல்லு மாகும்.
1822 போற்றல் புகழ்தலு மொப்பலு மாகும்.

பௌ

1823 பௌவம் பரவையுங் கணுவுங் குமிழியும்
குருவுந் தலையுவா வுமெனக் கூறும்.

பகரவருக்கம் முற்றிற்று.

---

## மகர வருக்கம்.

ம

1824 மகமே யாகமும் பெருமையு மாகும்.
1825 மகரந்தங் கள்ளுந் தேனுமலர்த் தாதும்.
1826 மகரம் பூவின் றாதுஞ் சுறாமீனும்
காதலு மகர ராசியுங் கழறினர்.
1827 மக்கள் யானிடருஞ் சிறுவரு மாகும்.
1828 மகனே மைந்தனுஞ் சிறந்தோனு மாகும்.
1829 மங்குல் மேகமு மிருளுமா காசமும்.
1830 மங்களம் வேட்டலுஞ் சுபங்களு மாகும்.

---

(பிரதி) 4. யானையு மாகும்.

1831 மஞ்சு மாளிகைக் கொடியும் பூணும்
யானை முத்தும் பனியும் வலியும்
அழகு மேகமு முகடு மிளமையும்
மழையு மெனவே வகுத்தனர் புலவர்.
1832 மஞ்சரி பூங்கொத்து மாலையுந் தளிரும்.
1833 மடைபணிப் பூட்டு நீர்போ மடையும்
சோறு மடைத்தொழிலுஞ் சொல்லுவர் புலவர்.
1834 மடஞ்சத் திரமு முனிவருறை மடமும்
அறியா மையுமென வறைந்தனர் புலவர்.
1835 மடல்பனை யேடும் பூவி னிதழும்
மடலென் றுரைத்த பிரபந் தமுமாம்.
1836 மடியடங் குதலும் பொய்யுஞ் சோம்பும்
வயிறும் கோயும் புடைவையுந் தாழையும்
மடியுங் கேடுஞ் சோறுந் துன்பமும்
புடைவை யாதிகளை மடித்தலு மாகும்.
1837. மடங்கல் கூற்றும் சிங்கமு நோயும்
மடியு மிடியும் வடவையு மட்கலனும்
புகழு முடிவு மடங்குதலுந் தாழையும்.
1838 மட்டு நிறைதலுங் கள்ளு மெல்லையும்.
1839 மடுநீர் நிலையும் பூவரும்பு மாகும்.
1840 மணிநவ மணியும் அழகுங் கருமையும்
யானை மணியு நன்மையு மிசையும்.
1841 மண்கணை முழவ மோர்வாச் சியமுமாம்.
1842 மண்மே தினியு மணுவுங் கழுவலும்
முழவுமொப் பனையு மாட்சியு மாகும்.
1843 மணங்கலி யாணமும் வாசமுங் கூட்டமும்
மகிழ்ச்சியு மெனவே வழங்க லாகும்.
1844 மண்டலம் பூமியும் வட்டமுங் குதிரையும்.

1845 மண்ணை பேயு மிளமையும் பேதையும்.
1846 மண்டலி நாயும் பூமியும் பூனையும்
பாம்பு மண்டலீக மெனவும் பகர்வர்.
1847 மதலை கொன்றையும் பிள்ளையுங் கொடுங்கையும்
தூணு மரக்கலமுஞ் சொல்லுவர் புலவர்.
1848 மதுகர் தராவு மிருப்பையு மதுரமும்
அட்டியும் வண்டு மறைந்தனர் புலவர்.
1849 மதவு வனப்பும் வலியு மடமும்
மிகுதியு மெனவே விளம்பினர் புலவர்.
1850 மதமே செருக்கு மதமு மாகும்.
1851 மதன்மன் மதனும் வனப்பும் வலியும்
மாட்சிமை யுமென வகுத்தனர் புலவர்.
1852 மதரே வலியு மிடமும் வனப்பும்
மிகுதியு மெனவே விளம்பினர் புலவர்.
1853 மத்தக நெற்றியுஞ் சென்னியு மாகும்.
1854 மதுகரங் கள்ளும் வண்டு மாகும்.
1855 மதியமைச் சொல்லு மிந்துவும் புந்தியும்
மாதமும் பேரறி வோடும் வாரமும்.
1856 மதுவே நறவு மினிமையுந் தேனும்
வசந்த காலமு மெனவகுத் தனரே.
1857 மத்திகை மாலையும் விளக்குத் தண்டும்.
சம்மட்டி யுமெனச் சாற்றினர் புலவர்.
1858 மத்தன் மத்தமு மத்தின் விகற்பமும்.
1859 மந்திரம் விசாரமுங் கோவிலு மதுவும்
பரிக்குழாமும் வீடும் பகர்மந் திரமும்.
1860 மந்திரி யமைச்சனும் வெள்ளியும் பொன்னும்.
1861 மந்தாரஞ் செம்பரத் தமுமோர் மரமும்.
1862 மந்தி யாதித்தனுங் குரங்கும் வண்டும்.

1863 மந்தன மறலியுங் கரிமுக படாமும்.
1864 மந்தன் சனியும மந்த குணமும்.
1865 மயலே சேறும் மயக்கமும பேயும்.
1866 மயிலை இருவாட்சியு மீனு மாகும்.
1867 மயிர்மயிர்க் கருவியுங் கத்திரியு மஞ்சிகனும்.
1868 மயன்றெய்வத் தச்சனு வினைஞரு மாகும்.
1869 மருளே பேயு மையலும் பெண்ணும்
தீயுங் குறிஞ்சி யாழின் றிறமும.
1870 மரபு தொன்மையு முறைமையு மாகும்.
1871 மராளம் மாதளையும் பாம்பு மாகும்.
1872 மருந்து புதற்புல்லு மமுதமு மருந்தும்.
1873 மராமரம் போதியு மாசசாவுங் கடம்பும்.
1874 மரும கன்வழித் தோன்றலு மருகனும்
மைந்தனு மெனவே வழங்குவர் புலவர்.
1875 மரைதா மரையுந் தேரையு மிருகமும்.
1876 மருதம் வயலு மருதநிலப் பாடலும
மருத நிலமுமோர் மரமு மாகும்.
1877 மரக்கால் துர்க்கை யாடலுஞ் சோதியும்
அளவையு மாயோ னாடலு மாகும்.
1878 மருவே மணமு மருவு மாகும்.
1879 மல்கோ விந்த னாடலும் வளமும்
வலியுமோர் கூத்தும் வழங்க லாகும்.
1880 மல்லிகை தீபத் தண்டு மௌவலும்
புதலு மெனவே புகன்றனர் புலவர்.
1881 மலைத்தல் போரு மறுத்தலுஞ் சூடலும்.
1882 மலர்த லெதிர்தலுந் தோன்றலு மலர்தலும்.
1883 மல்லல் வலியும் வளமு மாகும்.
1884 மவுலி சடையுங் கிரீடமு மாகும்.

1885 மழையே கொண்மூவுங் குளிர்ச்சியு மாகும்.
1886 மள்ளர் குறவரும் வீரரு முழவரும்
திண்ணி யோருமெனச் செப்ப லாகும்.
1887 மறைபி ரகசியமு மறைவு மந்திரமும்
பரிசையும் வேதமும் பகர லாகும்.
1888 மற்றுவினை மாற்று மசைச்சொல்லு மாகும்.
1889 மறஞ்சே வகமும் பிணக்குங் கூற்றும்
சினமுங் கொலையுஞ் செப்புவர் புலவர்.
1890 மறலே பிணக்குங் கூற்றும் மறவியும்
மயக்கமு மெனவே வகுத்தனர் புலவர்.
1891 மறவர் வீரரும் வேடரு மாகும்.
1892 மறலி காலனுங் கூற்றனு மறப்பும்
அழுக்கா றுமென வறைந்தனர் புலவர்.
1893 மன்னொழி யிசையு மசைச்சொல்லும் வேந்தனும்
வழிதுகூறி இடைச்சொல்லும் பயனில்லாச் சொல்
செல்வத்தி னிலையுஞ் செப்புவர் புலவர். [லும்
1894 மன்றம் வெளியும் பொதுவும் வாய்மையும்.
1895 மன்னன் வேந்தனு முத்திரட் டாதியும்.
1896 மன்ற வெனுஞ்சொல் லிடைச்சொல்லுந் தேற்றமு
1897 மன்றல் பாலை யாழிசையு நாற்றமும் [ம்.
வதுவையு மெனவே வகுத்தனர் புலவர்.
1898 மனவு நன்மணியுஞ் சங்கு மாகும்.
1899 மனையே இல்லும் மனைவியு மாகும்.

மா

1900 மாசு குற்றமு மழுக்கு மற்பமும்
மழையு மேகமும் வகுத்தனர் புலவர்.
1901 மாசி மகமும் மாதமு மாகும்.
1902 மாஞ்சி யனுமனு மருந்தும் பெண்களும்.

1903 மாடு சீதனமும் பெண்ணும் பக்கமும்
மணியுஞ் செல்வமு நிரையும் வெற்றியும்.
1904 மாடகம் யாழு முறுக்கா ணியுமாம்.
1905 மாட முழுந்து மில்லு மாகும்.
1906 மாட்சி திருத்தமு [1] நன்மையு மாகும்.
1907 மாணி பிரம சாரியும் [2]வனிதையும்.
1908 மாதவந் தவமும் வசந்தமுங் கள்ளும்.
1909 மாதர் பெண்ணு மழகுங் காதலும்
இடைச்சொல்லு மெனவே யியம்ப லாகும்.
1910 மாதங்கம் யானையு மூவருங் கடலும்
இளமையு மெனவே யிசைத்தனர் புலவர்.
1911 மாதிரந் திசையும் வானமும் பூமியும்
மலையும் யானையும் வகுத்தனர் புலவர்.
1912 மாந்தல் வீதலுங் குடித்தலு முண்டலும்.
1913 மாபெலி யசுரனும் பூசையு மானிலையும்.
1914 மாயை வஞ்சனையுஞ் சத்திய மாகும்.
1915 மாய்வு மறைவுஞ் சாவு மாகும்.
1916 மாயம் பொய்யும் கருமையும் வஞ்சமும்.
1917 மாருதி யனுமனும் வாயுவும் வீமனும்.
1918 மாரி மேகமும் நோயும் வடுகியும்
கள்ளு மழையும் மரணமுங் கழறுவர்.
1919 மாலதி சாதியு மல்லிகையு மாகும்.
1920 மாலை யல்லு மியலு மொழுக்கமும்
பொன்னுதி மாலையும் பூமா லையுமாம்.
1921 மாலங் குங்குமமும் பேயு மாகும்.

---

(பிரதி.) [1] நற்குற்றமு மாசியும் - மானமு மமைதியு மொப்பு மாகும். [2] வணிதையும்.

1922 மாலே புதனும் பெருமையு மரியும்
மயக்கமும் நீரும் வரையு மாசையும்
சோழனுங் காற்றும் போகியும் பழமையும்
எணியுங் கருமையு மேகமும் பொற்பும்
கண்ருத் தியுமெனக் கழறினர் புலவர்.
1923 மாலர் புலையரும் வேடருங் கவசமும்.
1924 மாலி யிரவியும் கள்ளு மாகும்.
1925 மாழை யேருந் திரட்சியு மடமையும்
ஆயமு மோலையு முலோகக் கட்டியும்
ஈழமும் புளிமா வும்மிசைத் தனரே.
1926 மார்க்கஞ் சமயமும் வீதியும் வழியு
மறுதலை யுரையும் வழங்க லாகும்.
1927 மானம் விமானமும் பெருமையுங் குற்றமும்
அளவு மிலச்சையு மாகு மென்பர்.
1928 மாணி மாதருங் காதலு மாகும்.
1929 மானுத லிலச்சையு மயக்கமு மொப்பும்.
1930 மானே யுழையு மகர ராசியும்
வல்விலங் கின்பெயர்ப் பொதுவு மாகும்.
1931 மானவர் மனிதரு[1] மாண்மையுள் ளோருமாம்.
1932 மாவே தருவுங் கருமையுஞ் செல்வமும்
வண்டு மாடையு மிருகமு மானையும்
மாத்தருவும் நிறமும் [2] பீடு மோரளவையும்
வாசியு மேரும் வெறுப்பு மழைத்தலும்
நென்மாவுந் திருவு நிலமு மாகும்.

## மீ

1933 மிக்கவை ஞாய மன்மையும் அடிசிலும்
நிறைதலு மூனு நிகழ்த்த லாகும்.

---

(பிரதி.) 1 மாண்மையு மாகும். 2 பீடு மோணவையும்.

1934 மிகை வேதனையுந் துக்கமு மாகும்.
1935 மிச்சி லொழிபொருளு மெச்சிலு மாகும்.
1936 மிசைமேடு முணவு மீமிசைச் சொல்லும்.
1937 மிச்சை பொய்த்தலு மஞ்ஞானமு மிடி[த்]தலும்.
1938 மிஞ்சு வண்டு மிகுதியு மாகும்.
1939 மிடலே மதனும் வலியு மதியும்.
1940 மிதவை சோறுந் தெப்பமு மாகும்.
1941 மிழற்றல் சொல்லு மிரம்பா மென்சொலும்.
1942 மிளகாவற் காடு[1] மரணமு மாகும்.

மீ

1943 மீக்கூற்று கீர்த்தியுஞ் சொல்லின் செலவும்.
1944 மீளி திண்ணியனும் வலியும் மேன்மகனும்
பீடுங் கூற்றும் பூமனு மாகும்.
1945 மீன்விண் மீனுஞ் சித்திரையு மீனும்.

மு

1946 முகமா னனமுந் திசையு மிடமும்.
1947 முசலி யுடும்புந் தாழையு மோந்தியும்
முகுந்தற்கு மூத்தோன் பெயரு மாகும்.
1948 முச்சி மயிர்முடியு முச்சியு மாகும்.
1949 முடங்கன் மடங்கலுங் கைதையு மூங்கிலும்
ஓலையு மரங்கு நோயு மாகும்.
1950 முடுவல் பெண்ணாயுஞ் செந்நாயு மாகும்.
1951 முடிமயிர் முடியுங் கிரீடமு மாகும்.
1952 முடலை யுண்டையும் பீடுந் திரள்வடிவு
முருடுங் கழலையுங் குறடு மூற்றமும்
முடைநாற் றமுமென மொழிய லாகும்.

---

(பிரதி.) [1] மானமு.

1953 முண்டகர் தாழையும் யானை மத்தகமும்
கள்ளுநீர் முள்ளியுந் தாமரையு நெற்றியும்
கடலுமுள் ளூலமுங் கருத லாகும்.
1954 முத்த முதமெம் பிரியமு முத்தும்
மருதமு மெனவே வழங்கினர் புலவர்.
1955 முதலை செங்கிடையு முருந்து மாகும்.
1956 முந்து வெண்குருகு முந்தலு மாகும்.
1957 முருகு கள்ளு மிளமையு நாற்றமும்
விழாவு முருகனு மெலுமிச்சம் வனப்பும்
அகிலு மெழுச்சியும் வெறியாட் டாளனும்.
1958 முரணே வலியும் பகையு மாகும்.
1959 முருந்து வெண்குருத்து மிறகின் மூலமும்.
1960 முரம்பு பரலடுத்த நிலமும் பாறையும்
மேடு மெனவே விளம்பினர் புலவர்.
1961 முரசு பறையு முத்திரட் டாதியும்.
1962 முருகன் சேயும் வெறியாட் டாளனும்.
1963 முரசர் துரியமும் பணையு மாகும்.
1964 முருடு முருடு மியமு மாகும்.
1965 முல்லை முல்லையுங் கொற்றமு மிசையுங்
கான மல்லிகையு முல்லை நிலமும்
[கற்பு மெனவே கழறினர் புலவர்].
1966 முழவு குளிருங் குடமுழாவு மியமும்.
1967 முளரி தீயுங் காடும் விறகும்
முள்மரமும் சிறுமையுந் தாமரையு மாகும்.
1968 மூளையங் ஞூமு மூங்கிலும் பிள்ளையும்.
1969 முறைதிரு முறையு முறைமையுங் குணமும்
ஊழும் கோசமும் கூப்பிடு முறையும்.
1970 முற்று வளைத்தலு முற்றுதலு மாகும்.

1971 முறுவல் நகையும் பல்லு மாகும்.
1972 முற்குளம் பூராட நாளுமுறை குளமும்.
1973 முற்றல் சூழ்போதலு மூப்பு முடிவும்
வெறுத்தலு மெனவே விளம்புத லாகும்.
1974 முறமே சுளகும் விசாகமு மாகும்.
1975 முறியே தளிரு முறிதலு மிலையும்.
1976 முன்னல் நினைவு நெஞ்சு முரைப்பர்.
1977 முன்பு வலியு முன்பு மாகும்.
1978 முனிதவ முனிவரும் கும்ப முனியும்
யானைக் கன்றும் [1]அகத்தியும் தனுவும்.
1979 முனையே பகையும் வெறுப்புங் கூர்மையும்
முதன்மையும் வீரமும் மொழிய லாகும்.
1980 முன்னஞ் சிக்கரி[யு] முந்தின காலமும்
எண்ணமுஞ் சிங்கமு மியம்ப லாகும்.

மூ

1981 மூசல் சாவு மொய்த்தலு மாகும்.
1982 மூதிரை யீசனுந் திருவா திரையும்.
1983 மூரி யேறு மெருமையுஞ் சோம்பும்
உரனும் பீடு நெரிவுந் தொன்மையும்.
1984 *மூர்த்தி தலைவனும் உருவமும் ஆகும்.
1985 மூரல் சோறும் பல்லுஞ் சொல்லும்
நகையு மெனவே நவின்றனர் புலவர்.
1986 மூலம் வேரு மேதுவு முதலும்
மூல நோயும் மூல நாளும்
மாயனுங் கிழங்கும் வழங்கினர் புலவர்.

---

(பிரதி.) [1] விறகுச்.
* இச்சூத்திரம் ஒரு பிரதியிற் காணப்படவில்லை.

1987 மூழி சோறு [1]துழாவியு மகப்பையும்.
1988 மூழை சோறு மகப்பையு மாகும்.

மெ

1989 மெத்தை மெத்தையுஞ் சட்டையு மாகும்.
1990 மெய்மெய்ப் பொருளு முடலு முண்மையும்
ஒற்றெழுத்து ஞானமு முரைக்க லாகும்.

மே

1991 மேக்கு மேற்றிசையு மேலு மாகும்.
1992 மேகலை தூசு மணிமே கலையும்.
1993 மேடந் தகருங் கவசமு மேடமும்.
1994 மேதை தோலும் புதனு மிறைச்சியும்
அறிஞனும் அறிவும் மேமபாடு நரம்பும்
கள்ளு மெனவுங் கழறினர் புலவர்.
1995 மேல் பச்சிமமு மேலோரு மியல்பும்
விண்ணு [2]மேலும் விளம்ப லாகும்.
1996 மேழை காடியுங் [3]கஞ்சியு மாகும்.
1997 மேழகங் கவசமுந் தகரு மாகும்.
1998 மேனி யுடம்பு நிறமு மாகும்.

மை

1999 மைந்து மயக்கமும் வலியு மாகும்.
2000 மைந்தன் மைந்தனும் திறலோனு மாகும்.
2001 மைகொண் மூவுங் கண்ணிடு மையும்
இளமையு மலடுந் தகருங் கருமையும்
குற்றமு மெனவே கூற லாகும்.

மொ

2002 மொக்குள் பூமொட்டுங் குமிழியு மாகும்.

---

(பிரதி.) [1] வாவியு. [2] மேற்கும். [3] களுசியு.

2003 மொய்செருக் களமும் தாயும் யானையும்
[1]மூசலுந் திரளும் வண்டு மாகும்.
2004 மொய்த்தல் மூடுதலு [2]நெருங்கலு மாகும்.
2005 மொய்ம்பு வலியுந் தோளு மொழிவர்.

மோ

2006 மோடு வயிறும் மேடும் போழ்தலும்
பெருமையு மெனவே பேச லாகும்.

மகரவருக்கம் முற்றிற்று.

---

## யகர வருக்கம்.

ய

2007 யவனர் சோனகரும் சித்திர காரரும்
[3]கம்மா ளருமெனக் கழறினர் புலவர்.

யா

2008 யாணர் தேனும் புதுமையும் தச்சரும்
யாழ்கரு நன்மையுஞ் சித்திரக் காரரும்.
2009 யாப்புக் கவிதையுங் கட்டுதலு மாகும்.
2010 யாமம் தெற்கு மிரவுஞ் சாமமும்
பொழுது மெனவே புகல லாகும்.
2011 யாழே வீணையும் மிதுன ராசியும்
ஆந்தையு மசுபதி நட்சத் திரமும்.
2012 யானை மறைவீடும் ஊர்தியுந் தோணியும்.

யூ

2013 யூக முட்பொரு ளுணர்தலுந் தருக்கமும்
உடற்குறை யுங்கருங் குரங்குமோர் புல்லும்
யூகமுங் கோட்டா னுமுரைத் தனரே.

---

(பிரதி.) [1] புகலுங். [2] ங் கொடுத்தலு மிருத்தலும்.
[3] கண்வா ழருமெனக்

2014 யூபம் படைவகுப்பும் வேள்வித் தம்பமும்
உடற்குறை யுமெின உரைத்தனர் புலவர்.

யோ

2015 யோகங் கூட்டமுந் தியானமு முபாயமும்
முயற்சியும் யோகமு மொழிந்தனர் புலவர்.

யகரவருக்கம் முற்றிற்று.

---

## வகர வருக்கம்

வ

2016 வக்கிரங் கொடுமையு மடங்கலும் வட்டமும்
ஈனமும் போக்கு மியம்ப லாகும்.
2017 வங்கம் வெள்ளீயமுங் கருத்து நாவாயும்
வழுதலை யுமென வழங்கினர் புலவர்.
2018 வசியே கூர்மையும் நட்பும் வாளும்
[1]வடுவுந் திரட்சியும் வருட்டலுங் குற்றமும்.
2019 வசந்தன் மதனு மொருவா னரமும்
தென்றலு மெனவே செப்ப லாகும்.
2020 வசந்தம் புரந்தரன் மாளிகைப் பெயரும்
வசந்த காலமும் வழங்கினர் புலவர்.
2021 *வசித்தல் வாசமுந் தங்கலு மாகும்
2022 வச்சிரஞ் சதுரக் கள்ளியுங் குலிசமும்
வயிரமு மெனவே வழங்கினர் புலவர்.
2023 வசதி மனையும் வளம்பொரு மிடமும்
ஊரு மெனவே யுரைக்க லாகும்.

---

(பி-ம்.) [1] பொன்னு மணியு மறிவும் பழிப்புந்-தரையு மெனவே சாற்றினர் புலவர்.

* இச் சூத்திரம் ஒரு பிரதியில் இல்லை.

2024 வசுவக் கினியுந் தேவரும் பொன்னும்
ஆன்சன்றும் பொருளும் கிரணமு மாகும்.
2025 வஞ்சி மேற்செலவு மோரூரும் பாவும்
வல்லியும் பெண்ணும் வஞ்சிப் போனுமாம்.
2026 வஞ்சகம் பொய்யும் வாளுங் கபடமும்.
2027 வஞ்சனை மாயையும் பொய்யும வஞ்சகமும்.
2028 வடகஞ் சுண்டா[ங்]கியு மத்தவாளமும் தோலும்.
2029 வடவை பெண்ணெருமையும் பெண்குர கதமு
வடவைத் தீயும் பிடியானையுமாம்.
2030 வட்டி வட்டிலுங் கூடையும் வழியும்
புட்டிலு மெனவே புகல லாகும்.
2031 வட்கல் நாணுஞ் சமழ்த்தலுங் கேடும்.
2032 வடுகு [1]பாடையும் மருதயாழ்த் திறமும்
இந்தள மும்மென வியம்பினர் புலவர்.
2033 வட்டம் பரிசையும் பாரா வளையமும்
தூசுங் கைமணியுங் குட்டமுஞ் சாலும்
ஊர்கோளுந் தாழ்வும் வட்டமுந் திகிரியும்.
2034 வட்டணை [2]யறுத்தலு மொத்தலு மாகும்.
2035 வடுவே செம்புந் தழும்புங் கூர்மையும்
வடுவு மழகும் பிஞ்சுங் குற்றமும்.
2036 வடிவு நிறமு மழகு முறுப்பும்.
2037 வடமே யாலுங் கயிறு மணிவடமும்.
2038 வண்டு பூசமுங் குற்றமும் வளையும்
சங்கும் வாளியு மப்பமும் வண்டும்
பழுதையு நூலும் மாதர்விளை யாடலும்.
2039 வணங்கல் வளைதலுந் தாழ்தலு மாகும்.
2040 வணசை சந்தனமும் சாந்து மாகும்.

---

(பிரதி) [1] பண்ணும். [2] தாளமும் வட்டமு.

2041 வன்மை வளமையு மீகையும் வலியும்
வாய்மை[யும்] புகழும் வகுத்தனர் புலவர்.

2042 வண்டல் மணல்வண்டலு மாதர்விளை யாட்டும்.

2043 வண்ணஞ் சாந்தமும் வனைதலும் பண்பும்
கவியி னோசையுங் கழறினர் புலவர்.

2044 வதுவை கலியாணமு நாற்றமும் வாசமும்
புணர்வு மெனவே புகன்றனர் புலவர்.

2045 வந்திகை சுணங்கும் பூணுநூ லணியும்.

2046 வந்தி வழிபாடென் றிடலு மலடியும்.

2047 வம்பு புதுமையுங் கச்சு மணமும்
நிலையின்மையு மிடரு நிகழ்த்த லாகும்.

2048 வம்பலர் புதியோரு மயலோரு மாகும்.

2049 வயம்புட் பொதுவும் வலியு நீரும்
இரும்பு வாசியுந் தகருமா மாகும்.

2050 வயலே வயலும் வெளியு மருதமும்.

2051 வயிறு கயிறு முதரமு மாகும்.

2052 வயிரஞ் சேகு முரனுங் கூர்மையும்
குலிசமுங் கோபமும் வயிர மணியும்.

2053 வயவன் வலியானும் வேட்டனும் வீரனும்.

2054 வயாவருத் தங்களும் கருப்பமு நோயும்
விருத்தமு மெனவே விளம்பினர் புலவர்.

2055 வயமாக் குதிரையும் யானையுஞ் சிங்கமும்
புலியு மெனவே புகல லாகும்.

2056 வயின் வியங்கோளு மேவல் கொளலும்
கடிமனையு முதரமு மிடமு மாகும்.

2057 வரிவா ரிதியும் வழியுஞ் சுணங்கும்
எழுத்தும் பாட்டு மிறையு நெல்லும்
கண்ணின் வரியு நிறமும் வடிவும்
நீளமும் வண்டேந் தீயு மொழுக்கமும்
சந்தித் தெருவுஞ் சாற்றினர் புலவர்.

2058 வரம்பு வட்டியு மெல்லும் வரம்பும்.
2059 வரையே மணஞ்செ யென்றலு மெழுதலும்
வேயு மட்டு மலையுங் கைவரையும்
கரையு மெனவே கழறினர் புலவர்.
2060 வருட மழையு மாண்டு மாகும்.
2061 வரைத லெழுதல் நீங்கலுங் கொள்ளலும்.
2062 வருணம் வண்ணமுங் குலமும் புனலும்.
2063 வரித்தல் பொறித்தலும் பூசுதலு மாகும்.
2064 வலம்வலப் பாலு மிடமு[ம்] பக்கமும்
மேகமு மேலும் வெற்றியு மாகும்.
2065 வல்லை விரைவுங் காடும் வன்மையும்
மதிலு நோயும் வழங்குவர் புலவர்.
2066 வல்சூதும் விரைவும் வலியுங் கச்சும்.
2067 வல்சி கூழு முணவு மாகும்.
2068 வலவன் றேர்ப்பாகனு மாயனும் வீரனும்.
2069 வல்லியம் புலியும் படருறு கொடியும்.
2070 வலவை வல்லோனும் வஞ்சப் பெண்ணும்
வேலனும் வெறியாட் டாளனும் விளம்புவர்.
2071 வலம்புரி சங்கு நந்தியா வர்த்தமும்
ஒருமர முமென வுரைத்தனர் புலவர்.
2072 வல்லியாய்ப் பாடியும் வல்லிக் கொடியும்
மலையு நிகளமு மாதரு மாகும்.
2073 வல்லிகை யாழுங் காதிற் பணியும்.
2074 வலித்தல் பேசலும் வளைத்தலு நினைத்தலும்.
2075 வழியே மரபு மிடமுந் தொடர்ச்சியும்
மார்க்கமுஞ் சேயு மரமும் பின்னுமாம்.
2076 வழித்தோன்றல் மகனு மகளு மாகும்.
2077 வழுதலை புணர்த்தி லிட்டபொய்க் கழுவும்
வழுதுணை யுமென வழங்கினர் புலவர்.

2078 வழங்கல் கொடையுஞ் சொல்லலு முலாவும்.
2079 வழிபாடு வணக்கமு மர்ச்சனையு மாகும்.
2080 வள்ளையோர் பாட்டு வள்ளையு மாகும்.
2081 வள்ளியங் குழலு மிளகு மாகும்.
2082 வளைகை வளையுந் திகிரியுஞ் சங்கும்
முழையுமர வளையு மொழிய லாகும்.
2083 வள்ளிகை வளையுங் கூத்தும் வள்ளியும்
வல்லிக் கொடியும் பூணும் பெண்ணும்.
2084 வள்பற் றிரும்பும் வலியும் வாளும்
வாளி னுறையுங் கூர்மையுஞ் செறிவும்
வாருஞ் செவியும் வழங்கினர் புலவர்.
2085 வளமை யுபகாரமுங் கொழுப்பு மாட்சிமையும்.
2086 வளம் வளப்பாடும் பதவியும் பண்டமும்
வனப்பு மெனவே வழங்கினர் புலவர்.
2087 வள்ளம் மரக்காலும் வட்டிலும் வள்ளமும்.
2088 வள்ளூரம் ஊனின் வகையும் பசுத்தசையும்.
2089 வறிது குன்றலுஞ் சிறிது மறியாமையும்
பயனில் சொல்லும் பகர்ந்தனர் புலவர்.
2090 வன்னி தீயுங் கிளியுஞ் சமிதையும்
பிர[ம]சாரியு மெனப்பே சினரே.
2091 வனஞ்சுடு காடுந் துழாயு மிகுதியும்
காடு நீரும் வனப்புஞ் சோலையும்.

வா

2092 வாகு வனப்பும் புயமு மாகும்.
2093 வாகை யொருமரப் பெயருந் தவங்களும்
ஆள்வினை முதலாஞ் செய்கையு நலனுங்
கைவினை முதலாங் கல்வியும் புலமையும்
சால்பு முதலாம் பண்பு மீகையும்

ஒழுக்க முதலாந் தவமுமறத் துறையும்
ஒருவரி னொருவர் வென்றி மிகுதியும்.

2094 வாங்கல் வளைதலுங் கொள்ளலு நீங்கலும்.

2095 வாசந் தூசும் புள்ளி னிறகும்
பூவின் மணமு மிருப்பிடமு மாகும்.

2096 வாசி யங்கியமுங் குதிரையு மாகும்.

2097 வாஞ்சிதாம் வாரமு மகிழ்ச்சியும் விருப்பமும்.

2098 வாடை வடகாற்றுங் கலவையு காற்றமும்
மறுகுஞ் சிற்றூரும் வழங்கினர் புலவர்.

2099 வாணி. பாரதியும் வார்த்தையும் பகழியும்
கூத்து மெ[ன்]ன வுரைத்தனர் புலவர்.

2100 வாதுவர் கரிப்பாக ரும்பரிப் பாகரும்.

2101 வாதந் தற்கமு நோயுங் காற்றும்.

2102 வாமம் வனப்புங் குறளுமிடப் பாலும்
ஒளியுந் தொடையு முரைத்தனர் புலவர்.

2103 வாமனங் குறளு மாதிரத் தானையும்
ஓர்நூ லுமென வுரைத்தனர் புலவர்.

2104 வாயில் காரணமுந் துவாரமும் புலனுந்
தூதுந் திறலு நோயும் வாய்தலும்.

2105 வாய லசையு நுணுக்கமும் வாய்தலும்.

2106 வாய்வரு வாயுங் குழலு மிடமும்
வாய்மையும் வாக்கும் வாய்த்தலும் வாயும்.

2107 வாரம் பங்கும் புனலின் கரையும்
அன்புங் கடலும் மலைச்சாரலுங் கிழமையும்.

2108 வாரி வெள்ளமுங் கதவு நூலும்
மதிலுங் கடலும் வாய்தலு நீரும்
வருவாயும் வழியும் பகுதியுஞ் சுற்றும்
மடையும் விளைவும் யானைசே ரிடமும்.

2109 வார்கொண் மூவு நீளமு நேர்மையும்
வகிர்தலுங் கச்சு நீரும் வாரும்.
2110 வாரணங் கவசமுங் கோழியுஞ் சங்கும்
தந்தியும் பன்றியுந் தடுத்தலுங் கடலும்
காருங் குடையும் புரையுமுன் மத்தமும்.
2111 வாருணை மேற்கு நீரும் வாருதியும்.
2112 வாரிச மரைய நீர்ப்பூடு மாகும்.
2113 வாலே வெண்மையு மிகுதியுந் தூய்மையும்
வாலும் வாலதியு மிளமையு மாகும்.
2114 வாலி யாயுதனும் வாலியு மாகும்.
2115 வாவல் கடத்தலு மசையுந் தூரிஞ்சிலும்.
2116 வாழி வாழ்கெனலு மிடைச்சொல்லு மாகும்.
2117 வாழ்த்து வாழ்த்தலு மாசிடைச் சொல்லும்.
2118 வாள்கர வாளமும் ஒளியுங் கயிறும்
கச்சு நீருங் கழறினர் புலவர்.
2119 வாளி யம்புஞ் சோணையுஞ் சுற்றோட்டமும்.
2120 வானம் விசும்பு மழையுங் கனியும்
உலர்ந்த மரமும் ஓதினர் புலவர்.
2121 வானிமேற் கட்டியுந் துகிலின் கொடியுஞ்
சேனையு மெனவே செப்ப லாகும்.
2122 வான்கொண் மூவும் மழையும் விண்ணும்
பெருமையு நீரும் வலியு நீளமும்.
2123 வானவன் பிரமனுஞ் சேரனு மாகும்.

வி

2124 விசும்பு மேகமுந் துறக்கமும் விண்ணும்
திசையு மெனவே செப்பினர் புலவர்.
2125 விசாலங் கடம்பு மிடமு மாகும்.

2126 விசயம் வென்றியுஞ் சூரியன் வட்டமும்
வெல்லமு மெனவே விளம்பினர் புலவர்.
2127 விடர்கா முகருந் தூர்த்தரும் விடபும்
தவத்தோ ரிடமுங் கானு மாகும்.
2128 விடையெதிர் மொழியு மேறும் விடுத்தலும்
எகு தலுமென வியம்பினர் புலவர்.
2129 விடபம் விடையு மிடப ராசியும்
கிம்பு ரியுமரக் கொம்பு மாகும்.
2130 விடங்க மழகுங் கொடியுங் கொடுங்கையும்
ஆண்மையு முகடு மறைந்தனர் புலவர்.
2131 விடலை பாலைத் தலைவனும் விறலனும்.
2132 விடமொரு மரமுந் தேளு நஞ்சும்.
2133 விண்ணு காசமு மேகமுந் துறக்கமும்.
2134 விண்டு மாயோனும் வெற்பும் வேயுங்
காற்று மேகமுங் கழறினர் புலவர்.
2135 விதப்பு வலியு மதிலுறுப்பு மிகுதியுங்
கம்பித் முமெனக் கழறினர் புலவர்.
2136 விதவை கலன்கழி மகளிருஞ் சோறுங்
கைம்மணி யுமெனக் கழறினர் புலவர்.
2137 வித்தகர் கொல்லரு மாயரு மாகும்.
2138 விதிர்ப்பு நடுக்கமு மிகுதியுங் கம்பமும்.
2139 விதியே குணமு மியல்பு மயனும்
வினையு மூழும் விளம்பினர் புலவர்.
2140 வித்தம் பொன்னும் பழித்தலு ஞானமும்.
2141 விதம்புட் பொதுவும் விதமு மாகும்.
2142 விந்தம் வனசமும் வெற்பு மாகும்.
2143 விபுலம் பெருமையும் விரிவு மாகும்.
2144 விபுதர் முற்றத் துறந்தோரும் விண்ணவரும்.

2145 விபூதி குற்றமுங் கொடுமையுந் தசையும்
வெண்ணீ றைரகுஞ் செல்வமும் புனலும்
உக்கமு மெனவே உரைத்தனர் புலவர்.

2146 விம்ம லொலித்தலு மேங்குதலு மாகும்.

2147 வியங்கோள் வேொனு மழுவும் வில்லும்.

2148 வியப்புச் சினக்குறிப்பு மதிசயமு மாகும்.

2149 வியாளம் பாம்பும் புலியும் வியாழமும்.

2150 வியலே யகலமுங் காடுமேம் பாடும்
மரவட் டும்மென வழங்கினர் புலவர்.

2151 வியர்ப்பு மேவலும் பொருதலு மச்சமும்
செறிவு மெனவே செப்பினர் புலவர்.

2152 வியங்கோள் கொள[லு] மேவலு மாகும்.

2153 விரையே மணமுஞ் சாந்தும் வித்தும்
தூபமு மெனவே சொல்லினர் புலவர்.

2154 விரோதம் வேறு பாடு மிருளும்
மயிரு மெனவே வழங்கினர் புலவர்.

2155 விருத்தி தன்றொழிலும் வளர்ச்சியு மாளும்
விரிபொருளு மிலாபமும் விளம்பினர் புலவர்.

2156 விரைவு சீக்கிரமும் வெ[ம்]மையும் வேண்டலும்.

2157 விரணம் விழலு மூறும் விளம்புவர்.

2158 விரிவு விடபு மகலமும் விளம்புவர்.

2159 விருந்தஞ் சுற்றமும் மிருகக் குழாமும்.

2160 விருத்தமோர் கவிதையும் வட்டமு மூப்பும்.

2161 விலங்குகால் விலங்குங் குறுக்கு மிருகமும்.

2162 விலங்குத லேசெல விடுதலு நீங்கலும்
எறிதலு மெனவே யிசைத்தனர் புலவர்.

2163 வில்லே யொளியு மூலமும் வில்லும்.

2164 வில்லே ருழவர் வேடரும் வேந்தரும்.

2165 விலோதம் பெண்மயிர்ச் சுருளும் பதாகையும்.

2166 விழுமஞ் சிறப்புஞ் சீர்மையு மிடும்பையும்.

2167 விழவு மிதுன ராசியும் விழாவும்.
2168 விழைச்சுப் புணர்வும் [இளமையு மாகும்.]
2169 விழைந்தோன் கொண்கனும் வேட்டோனு மாகும்.
2170 விழைவு புணர்ச்சியுங் காதலு மாகும்.
2171 விளரி யிளமையும் யாழும் வேட்கையும்
யாழி னரம்பு மிகுதியு மாகும்.
2172 விளவு கமரு விளாமரமு மாகும்.
2173 விளிவு சாதலுங் கேடு மாகும்.
2174 விளக்கு விளக்கின் நிகழியும் ஒளியும்.
2175 விளரே கொழுப்பு மிளமையும் வெண்மையும்.
2176 விளையே யிளமையும் புலமு மாகும்.
2177 விறலே வலியும் வென்றியு மாகும்.
2178 விறப்பு வெஞ்சமருஞ் செறிவு மச்சமும்
வளமையும் பெருக்கமும் வெற்றியு மாகும்.
2179 விஞயக னைங்கரன் றனும் புத்தனும்
அருகனு மெனவே யறைந்தனர் புலவர்.

வீ

2180 வீங்கல் பெருமையு மேங்குதலு மாகும்.
2181 வீசல் பரத்தலு மெறிதலுஞ் சாதலும்
கொடுத்தலு மிருத்தலுங் கூறினர் புலவர்.
2182 வீதி தேரோடலும் வெருவலும் வீதியும்.
2183 வீதல் கெடுதலுஞ் சாவு மாகும்.
2184 வீரம் விறலு மோங்கலு மாகும்.
2185 வீரையோர் மரமும் துன்பமுங் கடலும்.
2186 வீபுட் பொதுவுஞ் சாவு நீக்கமும்
பூவு மெனவே புகன்றனர் புலவர்.

வெ

2187 வெகுளி மிஞ்சிடலுங் கோபமு மாகும்.
2188 வெடிவெள் ளிடியு மச்சமும் வெளியும்
பரிமளித்தலும் புகையும் பகர்ந்தனர் புலவர்.
2189 வெட்சி செச்சையு மிருநிரை கவர்தலும்.
2190 வெண்மை யறியா மையும் வெள்ளியும்.

2191 வெதிர் கீசகமுஞ் செவிடு மாகும்.
2192 வெப்பம் வேனிலுங் கோபமு மாகும்.
2193 வெய்யோன் கொடியனும் விருப்ப முடையோனும்
பானுவு மெனவே பகர்ந்தனர் புலவர்.
2194 வெயில் சூரியனுஞ் சுடர்களு மாகும்.
2195 வெள்ளை சங்கும் வெண்பாவுந் தகரும்
வெள்ளாடும் வெள்ளையும் வெளிறுங் கள்ளும்
முன்னுள ராமனு மொழிந்தனர் புலவர்.
2196 வெளிறு வெள்ளையு மறியா மையுமாம்.
2197 வெள்ளம் புனலும் வேலைக் கரையும்
கடலுமோ ரெண்ணும் மிகுதியு மாகும்.
2198 வெள்ளில் விளாவும் பாடையு மாகும்.
2199 வெளில்வெண் டயிரும் தயிரின் மத்தும்
பாடையு மணிலும் வேழத் தம்பமும்.
2200 வெள்ளி சுக்கிரனும் வெண்டாது மாகும்.
2201 வெறியணங் காடலும் அச்சமுங் கலக்கமும்
பேயு நோயும் வாசமுந் தகரும்.
2202 வெறுக்கை பொன்னும் வெறுப்புஞ் செல்வமும்
கனவும் விழுப்பொருளுங் கழறினர் புலவர்.

வே

2203 வேக முடலுங் கீழும் வேகமும்.
2204 வேங்கை பொன்னும் புலியும் வேங்கையும்.
2205 வேசரி கோவேறு கழுதையுங் கரமும்.
2206 வேடுவன் மகமும் வேடனு மாகும்.
2207 வேணி மயிர்ச்சடையும் விண்ணு நதியும்.
2208 வேதிகை பலகையுந் திண்ணையும் வீதியும்
வினையு மியலம்பும் வேதனு மாகும்.
2209 வேதண்டங் க[யி]லையும் வெற்பும் யானையும்.
2210 வேந்த னிந்திரனு மதியு மிரவியும்
வியாழமு மரசனும் விளம்பினர் புலவர்.
2211 வேதனை துயருஞ் சுடலும் விளம்பும்.
2212 வேய் [து]ளையுடைய பொருளு மூங்கிலும்
ஒற்றும் வினையு முரைத்தனர் புலவர்.

2213 வேரி கள்ளுந் தேனும் வாசமும்.
2214 வேல்வேல மரமும் படைக்கலப் பொதுவும்
மூங்கிலும வேலா யுதமு மொழிவர்.
2215 வேலி மதிலும் விளைநிலமுங் காவலும
ஊரும் வேலியு முரைததனர் புலவர்.
2216 வேலை கடற்கரையுங் கடலுங் காலமும்
தொழிலு மெனவே சொல்லினர் புலவர்.
2217 வேலன் முருகனும் வெறியாட் டாளனும்.
2218 வேலா வலையம் கடலும் பூமியும்.
2219 வேள்வி வேள்விக் குண்டமும் யாகமும
கொடையும் பூசையுங் கூறினர் புலவர்.
2220 வேழங் கொறுக்கையுங கரும்புந் தும்பியும்
மூங்கிலு மொலியும் வேழப் பூச்சியும்.
2221 வேள்மன் மதனுஞ் சளுக்கி வேந்தனுங்
குமரனு மெனவே கூறினர் புலவர்.
2222 வேளாளர் வள்ளலும் பொன்வா ணிபரும்
வேளா ளருமென விளம்பினர் புலவர்.
2223 வேளாண்மை வணிகமு முபகா ரங்களும்
மெய்ம்மையு மெனவே விளம்பினர் புலவர்.

வை

2224 வைகல்புலர் காலையு மிறந்த காலமும்
தங்கலு மெனவே சாற்றினர் புலவர்.
2225 வைகறை விடியலும் யாமமு மாகும்.
2226 வைய கூர்மையும் வைக்கோலும் புல்லும்.
2227 வையந் தேருஞ் சிவிகையும் புவியும்
வண்டிலு மூர்தியு முரோகணியு மாகும்.

வௌ

2228 வௌவல் பிடித்தல் வௌவால் பறவையாம்.

போதிகை நிகண்டு முற்றிற்று.

The B. N. Press, Educational Printers, Madras.

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

கல்லிடை நகர் சாமிநாத கவிராயர் இயற்றிய

# பொதிகை நிகண்டு



Pub No : 870
ISBN : 978-93-85165-25-2
பொதிகை நிகண்டு

200.00